# நன்னூல் உரைவளம்

4

## எழுத்தியல் - II

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-4)

# எழுத்தியல் - 2


பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Nannūl uraivaḷam (Vol. 4)**<br>**Eḻuttiyal -2** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 680 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 320 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 140/- (Rupees One hundred and forty only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathiya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை — 113

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின் வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக் கூட்டத்திடையே விண்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ். வரலாற்றுக்காலந் தொட்டங்கி இன்றளவும் தன்னேரில்லாத் தகைசால் சீர்மையுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப்புலவர், வை.மு.சடகோப ராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப் பணி யோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

கரு.அழ.குணசேகரன்

சென்னை – 113.

12.01.2011.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக் கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக்கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப்படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக்கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலை நாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமையானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரை வளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப்பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா, ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமை நூற்பாக்கள், நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரை வளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரை களையேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் *கரு. அழ. குணசேகரன்* அவர்களும், துணை இயக்குநர் *திரு.க.ந. வீரபாகு சுப்பிரமணியன்* அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக்கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை திருமதி **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.11.2010 **இரா.கண்ணன்.**

சென்னை-55

*******

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அவி | – | அவிநயம் |
| இ –ள் | – | இதன் பொருள் |
| இல – விள | – | இலக்கண விளக்கம் |
| உ – ம் | – | உதாரணம் |
| உணர் – ற்று | – | உணர்த்துதல் நுதலிற்று |
| எ– டு | – | எடுத்க்காட்டு |
| எ– று | – | என்றவாறு |
| எ– னின் | – | என் நுதலிற்றே எனின் |
| சுவாமி | – | சுவாமிநாதம் |
| சூ – ம் | – | சூத்திரம் |
| தொல், எழு | – | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல், சொல் | – | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல், பொருள் | – | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| தொன் | – | தொன்னூல் விளக்கம் |
| நச் | – | நச்சினார்க்கினியர் |
| ந.பா | – | நவநீதப் பாட்டியல் |
| நேமி | – | நேமிநாதம் |
| பா– டு | – | பாட வேறுபாடு |
| பொ– ரை | – | பொழிப்புரை |
| மா –அலங் | – | மாறனலங்காரம் |
| மு – வீ | – | முத்துவீரியம் |
| வீர | – | வீரசோழியம் |
| வெண், பாட் | – | வெண்பாப் பாட்டியல் |

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ,

ஃ - இவ்வெழுத்துக்கள் முறையே

a, ¡, i, ¢, u, £, e, ®, ai, o,
°, au, Á

எனவும்,

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் - இவ்வெழுத்துக்கள் முறையே

k, ´, s, µ, t, ¸, ¶, n, p,
m, y, r, l, v, ½, «, ¤, °, Á

எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

எழுத்தியல் (Orthography)

தொகுதி - 2

## குற்றியலுகரம்

93. நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

நெடிலோடு ஆய்தம் உயிர் வலி மெலி இடை
தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம்
அஃகும் பிற மேல் தொடரவும் பெறுமே.

netilōtu āyṭam uyir vali meli itai
ṭotarmoḷi iṛuṭi vaṉmai ūr ukaram
akhkum piṛa mēl ṭotaravum peṛumē.

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Shortened u

The letter 'u' which is combined with a final Hard consonant and is preceded by a single Long Vowel, or ***along with other letters*** by a Guttural or Vowel, or a Hard, Soft, or Medial Consonant, is shortened (in quantity).

## ஒப்புமைப் பகுதி

நெட்டெழுத்து இரும்பரும் தொடர்மொழி ஈற்றும் குற்றியலுகரம்
வல்லாறு ஊர்ந்தே

(தொல். எழு. : 36)

இடைப்படின் குறுகும் இடனுமார் உண்டே
கடப்பாடு அறிந்த புணரியலான

(தொல். எழு. : 37)

ஈரெழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகுமிடன்

(தொல். : 407)

அவற்றுள்
ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா

(தொல். : 408)

வல்லெழுத் தாறோ டெழுவகை இடத்தும்
உகரம் அரையாம்..................................

(அவிநயம்)

தொடர்நெடிற் கீழ்வன்மை மேலுகரம்..................
..............................................................................
..............................................................................குறுகும்

(நேமி. : 4: 1 – 3)

.................................... வன்மை மேலுகரம்
உறுவது நையுந் தொடர்மொழிப் பின்னு நெடிற்பின்னுமே

(வீ. : 2: 3–4)

தனிக்குறில் அல்லவற்று இறுதி வன்மை
ஊர்ந்துளிக் குறுகும் உகரம் என்ப

(தொன். : 15: 1–2)

நெட்டெழுத் திரும்பருந் தொடர்மொ ழியீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே

(மு. வீ. : 36)

வன்மை மென்மை யிடைமை யுயிர் ஆய்தம் என்றுஐந்
தொடர்க்கீழ் வல்லெழுத்தூருக் குறுகுங்....

(சுவாமி. : 18: 1)

## மயிலை நாதர்

எ – ன், குற்றியலுகரத் தோற்றம் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** நெட்டெழுத்தின் பின்னும், ஆய்தமே உயிரே வல்லெழுத்தே மெல்லெழுத்தே இடையெழுத்தே என்றிவை தொடர்ந்த மொழியீற்றில் நின்ற க ச ட த ப றக்களை [1]ஊர்ந்து வந்த உகரம் தன் மாத்திரையிற் சுருங்கி வரும். நெடில் முதலான இவ்வாறன் மேலும் ஒன்றும் பலவும் பிறவெழுத்துத் தொடரவும் பெறும், எ – று.

ஈரொற்றுத் தொடர்ந்தமொழிகள் வன்றொடரும் மென்றொடருமாய் அடங்குமெனக்கொள்க.

**வ–று.:**

நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, [2]தொள்கு, எனவும்; ஆகாது, பிண்ணாக்கு, சுண்ணாம்பு, இருபஃது, ஆமணக்கு, [3]ஆர்க்கு, வாழ்த்து, மொய்ம்பு எனவும் வரும். பிறவுமன்ன.

**"நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை**
**ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்**
**றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"**

என்னும் இவ்வேழிடத்து வருமென்பனவும் இவற்றுள்ளே யடங்கு மென்ப. இவ்வாறு ஏழிடங் கொள்வார்க்குச் சுண்ணாம்பு, ஆமணக்கு, பிண்ணாக்கு முதலானவும் ஆய்தந் தொடர்ந்தனவும் அடங்கா வென்றறிக, 'நெடிலோடு' எனப் பிரித்தோதினார், மூவெழுத்துக் கூடிய தொடர்மொழி அன்மையின்.

## சங்கர நமச்சிவாயர் - சிவஞான முனிவர்

**எ–னின், இடமும்** பற்றுக்கோடும் சார்ந்து குற்றியலுகரம் வருமாறு உணர்–ற்று.

**இ–ள்:** தனிநெடில் *ஏழுடனே ஆய்தம் ஒன்றும், மொழியிடை யீறுகளின் வரப்பெறாத ஔகாரம் ஒழித்து ஒழிந்த உயிர் பதினொன்றும், வல்லெழுத்து ஆறும், மெல்லெழுத்து ஆறும், வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் ஒழித்தொழிந்த இடையெழுத்து ஐந்துமாகிய முப்பத்தாறு எழுத்தினுள், யாதானும் ஒன்று ஈற்றுக்கு அயலெழுத்தாய்த் தொடரப்பட்டு*

---

பாட வேறுபாடு :- 1 .ஊர்ந்த 2 .தெள்கு 3.அரக்கு. ஈர்க்கு

*மொழியிறுதிக்கண் வல்லெழுத்துக்களுள் யாதானும் ஒன்று பற்றுக்கோடாக, அதனை ஊர்ந்துவரின்* அவ்வுகரம் தன்மாத்திரையில் குறுகும்; அது தன் மாத்திரையில் குறுகுதற்கும் மொழி நிரம்புதற்கும் காரணம், இவ்வோரெழுத்துத் தொடர் தன் மாத்திரையின் அமையாது, பிற எழுத்துக்களுள் ஒன்றும் பலவும் மேலே தொடரவும் பெறும், எ – று.

நெடிலை ஒடுக்கொடுத்துப் பிரித்தார், தனிநெடிலாதலின். உயிர் என்றது குற்றுயிர் நெட்டுயிர் இரண்டனையும். தொடர் என்னும் வினைத்தொகை வன்மையூருகரம் என்னும் செயப்படு பொருளோடு முடிந்தது.

பிற என்றது 'பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்' என்று வரையறுத்தவற்றின், இங்ஙனம் ஈற்றயலும் ஈறுமாகக் கூறிய இரண்டும் ஒழித்து ஒழிந்த ஏழும் ஐந்துமாய எழுத்துக்களை. தொடரவும் என்ற உம்மை இறந்ததுதழீஇ நின்றது. பெறுமே என்றது தனிநெடில் ஒழிந்த ஐந்து தொடரும், வன்மையூருகரம் குறுகுதற்கும் மொழி நிரம்புதற்கும் மேல் தொடர்தலும் இன்றியமையாமையின்.

உ – ம்:

நாகு, எஃகு, வரகு, பலாசு, கொக்கு, குரங்கு, அல்கு என வரும். பிறவும் அன்ன.

*இனி, இங்ஙனம் பிறமேற்றொடரவும் பெறுமே எனக் கூறாதொழியின், இவ் ஐவகை யெழுத்தும் ஈற்றெழுத்தும் கூடியே ஒரு மொழியாய் நிற்கும் எனவும்பட்டு, அது இது என்றற் றொடக்கத்தனவும் குற்றியலுகரமாவான் செல்லும் எனவும், ஆய்தமும் தனிமெய்யும் மொழிக்கு முதலாம் எனவும், தனிநெடிலை ஒடுக்கொடுத்து விதக்கவேண்டா எனவும்ம்* ஆசிரியர் தொல்காப்பியர்,

"நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும் குற்றிய
லுகரம் வல்லா றூர்ந்தே"

எனத் தொகுத்துக் கூறியவாறே கூறாது, எல்லா எழுத்தையும் கூறுவார், அவற்றையே ஆய்த முதல் ஐந்தாக வகுத்துத் தனி நெடிலோடு ஆறாகக் குற்றுகரத்தை அறுவகையான் வழங்குதற்கு இலக்கணம் தோன்றக் கூறினமையின் *அவ்வாறு எடுத்தாளுதற் பொருட்டு, எல்லா எழுத்தையும் குறியீடாக விதந்த ஆய்தம் முதலிய ஐந்தனுள் ஒன்று ஈற்றயலினின்று இறுதி*

வன்மையூருகரத்தைத் தொடர்தலே யன்றிப் பிற மேற்றொடர்தலும் குறுகுதற் கேதுவன்று எனவும் பொருள்படுமாறறிக இச் சூத்திரப்பொருள் முன்மொழிந்து கோடல் என்னும் உத்தி.

இனி, இவ்வாறன்பகுதித் தொடரும் இடமாதலின் இவ் இடவேற்றுமையால் குற்றியலுகரம் முப்பத்தாறு என்று மேற்கூறியவாறே வருமாறு காண்க.

இவ்வாறு கொள்ளாது, ஆசிரியர் ஈற்று அயலில் நின்ற எழுத்தை இடமாகக் கொண்டாற்போல, ஈற்று அயலில்நின்ற அசையை இடமாகக்கொண்டு, அவற்றுள் அது இது முதலிய முற்றுகரத்தை நீக்குதற்குக் குற்றெழுத்துத் தனியே வரும் அசை ஒன்றனையும் ஒழித்து, ஏனை ஏழு அசையினையும்,

"நெடிலே குறிலிணை குறில்நெடில் என்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

எனக் கூறினாரும் உளராலோவெனின்:- அவ்வாறு ஏழிடம் எனக்கோடும் என்பார்க்குப் பிண்ணாக்கு சுண்ணாம்பு பட்டாங்கு விளையாட்டு இறும்பூது முதலியனவும், ஆய்தம் தொடர்ந்தனவும், நெட்டொற்றிறுதி நெடிலிறுதிக் குற்றுகரம் முதலியனவும் குற்றொற்றிறுதிக் குற்றுகரமுமாய் அடங்குமேனும், போவது வருவது ஒன்பது முதலியன அடங்காமை அறிக. நெடில் முதலாயின ஈற்றயலில் நிற்றல் வேண்டுமென யாப்புறவின்மையின், முதற்கண் நிற்பினும் ஈற்றுகரம் அவற்றிறுதியாதல் அமையும் எனக் கொண்டு, போவது முதலியனவும் நெடிலிறுதி முதலியனவாய் அடங்கும் என்பார்க்கும், அங்ஙனம் பாகுபடுத்துக் கருவி செய்ததனால் போதப்பயனின்று என்பதாம். இது பிறர்நூற் குற்றங்காட்டல் என்னும் மதம்.

இனி, மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல் என்னும் உத்தியான், நுந்தை யென்னும் "முறைப்பெயர் மருங்கின் ஒற்றிய நகரமிசை" உகரமூர்ந்து மொழிமுதற்கண் நிற்பினும் குற்றியலுகரமாம் எனவும், அவ்வுகரம் செக்குக்கணை சுக்குக்கொடு எனப்

*புணர்மொழி யிடைப்படினும் தன் அரைமாத்திரையில் குறுகும் எனவும் கொள்க.*

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், குற்றியலுகரத் தோற்றம் கூறியது.

இ-ள்.: நெடிலொடு – **தனிநெடிலுடனே,** ஆய்தம் உயிர் வலி மெலி இடை – **ஆய்தவெழுத்தும் உயிரெழுத்தும் வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் இடையெழுத்தும்,** தொடர் மொழி இறுதி – **இவை தொடர்ந்தமொழிஈற்றின் கண்ணே நின்ற,** வன்மையூர் உகரம் – **வல்லினமாகிய க ச ட த ப றக்களை ஊர்ந்து வந்த உகரம்,** அஃகும் – **தன் மாத்திரை யிற் சுருங்கிக் குற்றிய லுகரமாம்,** பிற மேற் றொடரவும் பெறுமே – **பிற எழுத்துக்கள் மேலே தொடரவும் பெறும்,** எ-று.

உ-ம்.:

நாகு, காசு, காடு, காது, காபு, காறு, எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, வரகு, முரசு, மருது, துரபு, கவறு, நக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று; கொங்கு, மஞ்சு, வண்டு, பந்து, அம்பு, நன்று; தெற்கு, நொய்சு, நொய்து, நொய்பு, ஆகாது, மொய்ம்பு, ஈர்க்கு, வாழ்த்து, சுண்ணாம்பு, ஆமணக்கு, இருபஃது. இது பிற மேற்றொடர்ந்த குற்றியலுகரம்; பிறவுமன்ன.

## விசாகப் பெருமாளையர்

இது, குற்றியலுகரம் வருமாறு உணர்த்துகின்றது.

இ-ள்.: **நெடிலோடு**–தனி நெடிலோடுடனே, **ஆய்தம்**–ஆய்தமொன்றும், **உயிர்**–சொல்லுக்கு நடுவிலுங் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்றும், **வலி** – வல் லெழுத்தாறும், **மெலி** – மெல்லெழுத்தாறும், **இடை**– வல் லெழுத்துகளோடு தொடராத வகரம் நீங்கிய இடையெழுத் தைந்தும் ஆகிய முப்பத்தாறனுளொன்றால், **தொடர்** – ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடரப்பட்டு, **மொழியிறுதி** – சொல்லி னிறுதியில், **வன்மை** – வல்லெழுத்துகளுள் யாதாயினு மொன்றன் மேல், **ஊர்** – ஏறி வருகின்ற, **உகரம்** – உகார மானது, **அஃகும்** – தன் மாத்திரையிற் குறுகும், **பிற**–பிற வெழுத்துகளுளொன்றும் பலவும், **மேற்றொடரவும்**–குறுகுதற்கு மொழி நிறைதற்குங் காரணமாக மேலே தொடரவும், **பெறும்**–தனி நெடிலொழிந்த வைந்து தொடரவும் பெறும், **எ–று.**

உ-ம்.:

நாகு, காசு, நீறு — நெடிற்றொடர்,

எஃகு — ஆய்தத் தொடர்,

வரகு, பலாசு, கரிது — உயிர்த்தொடர்.

கொக்கு, கச்சு, பற்று — வன்றொடர்,

குரங்கு, மஞ்சு, கன்று — மென்றொடர்,

தெள்கு, சேர்பு, வீழ்து — இடைத்தொடர்,

எனவரும். பிறவுமிப்படியே வரும்,

இங்கே ஈற்றய லெழுத்தைக் கொண்டு ஆறு வகையாகச் சொல்லிப் பின்னே புணரியல் முதலான விடங்களிலே எடுத்தாளுதலால் **'முன்மொழிந்து கோடல்'** என்னுமுத்தி.

மொழிந்த பொருளோடவ்வயின் மொழியாததனையு **முட்டின்று முடித்த**லென்னு முத்தியால், 'நுந்தை' யென்னும் முறைப்பெயரின் முன்னின்ற நகர மெய்யிலிருக்கிற உகாரமுங் குறுகுமென்று கொள்க.

## ஆ. முத்துக்கும்பிப் பிள்ளை

*குற்றியலுகரமாவது யாது?*

**நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை**
**தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்**

**அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.**

**(நெடிலோடு ஆய்தம் உயிர் வலி மெலி இடை**
**தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம்**
**அஃகும் பிற மேல் தொடரவும் பெறுமே.)**

**இ - ள். நெடிலோடு** - தனி நெடிலுடனே, **ஆய்தம்** - ஆய்த மொன்றும், **உயிர்** - சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்றும், **வலி** - வல் லெழுத்தாறும், **மெலி** - மெல்லெழுத்தாறும், **இடை** - வல் லெழுத்துக்களோடு தொடராத வகர நீங்கிய இடைபெழுத் தைந்தும் ஆகிய முப்பத்தாறுனுள் ஒன்றினாலே, **தொடர்** - ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடரப்பட்டு,**மொழி இறுதி வன்மை ஊர் உகரம்** - சொல்லின் இறுதியில்

வல்லெழுத்துக் களுள் யாதாயினும் ஒன்றன் மேல் ஏறிவரும் உகரமானது, **அஃகும்** – தன் மாத்திரையிற் குறுகும், **பிற மேல் தொடரவும் பெறும்** – இவற்றுள் ஆய்தத் தொடர் முதலிய ஐந்து தொடரும். வன்மை யூருகரத்தை ஈற்றயலெழுத்துத் தொடர்தலே யின்றிப் பிறவெழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ்வீற்றயலெழுத்தின் மேலே தொடரவும் பெறும், **எ – று.**

*நெடிலோடு என நெடிலை ஒடு கொடுத்துப் பிரித்தது யாது பற்றி?*

நெடிலோடு என நெடிலை ஒடு கொடுத்துப் பிரித்தார்,பிற மேற்றொடர்தல் அதற்கில்லை யென்பது தோன்றுதற் கென்க,பிறமேற் தொடரின் உயிர்த்தொடர் எனப்படும்.உயிரென்றது குறில் நெடுல் இரண்டையும்.

**உ – ம்.**

**(1) நாகு, காசு, நீறு** என்பன நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

**(2) எஃகு, கஃசு, இருபஃது** என்பன ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.

**(3)** வரகு, **பலாசு, கயிறு, போவது, ஒன்பது, இறும்பூது** என்பன உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

**(4) கொக்கு, கச்சு, பற்று, பின்னாக்கு, விளையாட்டு,குருத்து** என்பன வன்றொடர் குற்றியலுகரம்.

**(5) கங்கு,பஞ்சு,அம்பு,கன்று,** பட்டாங்கு, **சுண்ணாம்பு** என்பன மென்றொடர்க் குற்றியலுகரம்.

**(6 )வெய்து,சால்பு,தெள்கு** என்பன இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியா தாதனையுமுட்டின்று முடித்தலென்னு முத்தியால், நுந்தை யென்னு முறைப்பெயரின் முன்னின்ற நகரமெய்யின் மேல் ஏறி நின்கும் உகரமும் குறுகு மெனக் கொள்க.

*நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழி எத்தனை எழுத்துமொழி?*

அதுமாத்திரம்,'நெடுலொடு' என்றமையான் ஈரெழுத்து ஒருமொழியாம்.

*குற்றியலுகர மெதனால் முப்பத்தாறாயின?*

தனிநெடிற்றொடர் ஏழும்,ஆய்த்தொடரொன்றும்,நடுவிலும் கடையிலும் வாராத ஔகார மொழித்தொழிந்த உயிர் பதினொான்றும் வன்றொடர் ஆறும்,

மென்றொடராறும், வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் ஒழிந்த இடையெழுத் தைந்தும் ஆகிய ஆறு தொடர்களானுங் கூடிய முப்பத்தாறுங் குற்றியலுகரமாம்.

*இவற்றை விட வேறு குற்றியலுகரமுண்டோ?*

நுந்தை யென்னு முறைப்பெயரிலே நகரத்தின் மேலிருக்கும் உகரமாம்.

*உயிரெழுத்தினது குறுக்கம் உயிரேயாகவும்,குற்றியலுகரமும் குற்றியலிகரமும் சார்பெழுத்தினுள் வைக்கப்பட்டது யாது பற்றி?*

புணர்ச்சி வேற்றுமையானும்,பொருள் வேற்றுமையானும், சீருந் தளையுஞ் சிதையுமிடத்து அலகு பெறாமையானும்,அவை உயிரின் வேறாய்ச் சார்பெழுத்தெனப்பட்டன.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது.** குற்றியலுகரம் வருமாறுணர்த்துகின்றது.

**இ-ள்.: நெடிலோடு** - தனிநெடிலுடனே. **ஆய்தம் உயிர்வலிமெலியிடை** - இந்த ஐந்தெழுத்தையும். **தொடர்** - தொடர்ந்த. மொழி **இறுதிவன்மை**- மொழியின் இறுதியிலே நின்ற வல்லொற்றை. **ஊர் உகரம்** - நடத்திய உகரமானது. **அஃகும்** - குறுகும். **பிற** - (இங்கே இறுதி யெழுத்திற்கு அயலெழுத்தாகச் சொன்ன தனிநெடிலொழிந்த ஐந்தெழுத்து மல்லாமல்) பிற எழுத்துக்களும். **மேற்றொடரவும் பெறும்** - மேலே தொடர்ந்து வரவும் பெறும். **எ - று.**

நெடிலோடு என நெடிலை ஓடுக் கொடுத்துப் பிரித்தது பிறமேற்றொடர்தல் அதற்கு இன்றென்பது தோன்றுதற்கு. உயிரென்றது. குறில் நெடில் இரண்டையும். பெறுமே என்றதற்கு வினைமுதல். தனிநெடி லொழிந்த ஐந்து தொடருமெனக் கொள்க. என்னெனின். உகரங் குறுகுதற்கும் மொழி நிரம்புதற்கும் பிற எழுத்துக்கள் மேலே தொடர்ந்து வாராமற் கூடாது ஆதலாலெனக.

**உதாரணம்.:**

*காகு,காசு,காடு,காது,காபு,காறு* - இவை **நெடிற்றொடர்.**

*எஃகு, கஃசு,கஃடு, இருபஃது. அஃபு. சுஃறு* - இவை **ஆய்தத்தொடர்.**

*வரகு. பலாசு. முருடு. எருது. துரபு. கயிறு* - இவை **உயிர்த்தொடர்**

*சுக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று - இவை*
***வன்றொடர்.***

*கங்கு, பஞ்சு,வண்டு, பந்து,அம்பு, கன்று - இவை*
***மென்றொடர்.***

*ஆய்கு, ஆய்சு, ஆய்து, ஆய்பு - இவை* ***இடைத் தொடர்.***

இடையொற்றுக்கள் ஆறையும் டகர றகரங்கள் தொடராது ஆதலால் இதனுள் நான்கே வருமெனக் காண்க.

ஆயின், முப்பத்தாறென்ற தென்னெனின், ஒருமதங் குறைந்த ஆனைமுகக் கடவுளை மும்மதத்தனென்றாற் போல **இலக்கணை யென்னும்** விதி பற்றிக் கூறினாரென்க. இனி ஈற்றுக்கு அயலெழுத்தை யிடமாகக் கொண்டு நெடில் ஏழும் ஆய்தமொன்றும் மொழியிடையிலும் இறுதியிலும் வாராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்றும் வல்லொற்றாறும் மெல்லொற்றாறும் வல்லெழுத்தோடு தொடராத வகர ஒற்றுநீங்கிய இடையொற்றைந்தும் - ஆகக் குற்றியலுகரம் முப்பத்தாறெனக் கூறவாருமுளர்.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார்,

***"நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்,***
***குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே"***

எனத் தொகுத்துக் கூறியவாறு கூறாமல், இவர் அறுவகையாக வகுத்துக் கூறியது. குற்றுகரத்தை அறுவகையாகப் புணரியல் முதலிய இடங்களிலே வழங்குதற்கு இலக்கணந் தோன்றலெனக் காண்க. இது **முன்மொழிந்து கோடலென்னும்** உத்தி.

அவ்வாசிரியர் நுந்தை யென்பதின் உகரத்தைக் குற்றுகர மென்றார். அது இவர்க்கு உடன்பாடல்லாததினாலே சொல்லா தொழிந்தார். இது **மறுத்தலென்னும்** மதம்.

ஒழிந்தன **உடன் படலென்**னும் மதம். இச் சூத்திரத்தை, உகரம் அஃகும் எனவும், ஐந்தொடரும் பெறும் எனவும் முடித்துக் கொள்க. தனிநெடில் பெறாது ஐந்தொடரும் பெறுமென நிற்றலால் தொடரவும் என்ற உம்மை எதிர்மறையும்மை பெயன்பதே தெளிவு, இதனை இறந்தது தழுவிய எச்சவும்மை யென்பாருமுளர்.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **நெடிலோடு** – தனிநெடில் ஏழுடனே, **ஆய்தம்** – ஆய்தம் ஒன்றும், **உயிர்** – (மொழிக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய) உயிர் பதினொன்றும், **வலி** – வல்லெழுத்து ஆறும், **மெலி** – மெல்லெழுத்து ஆறும், **இடை** – (வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் நீங்கிய) இடை யெழுத்து ஐந்தும் (ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றால்), **தொடர்** – (ஈற்றுக்கு அயலெழுத்தாகத்; தொடரப்பட்ட, **மொழிஇறுதி** – சொல்லினிறுதியில், **வன்மை ஊர் உகரம்** – வல்லெழுத்துக் களுள் யாதாயினும் ஒன்றன்மேல் ஏறிவருகின்ற உகரமானது, **அஃகும்** – தன்மாத்திரையில் குறுகும்; **பிற** – பிற எழுத்துக்களுள் ஒன்றும் பலவும், **மேல்தொடரவும்** – (குறுகுதற்கும் மொழிநிறை தற்கும் காரணமாக) மேலே தொடரவும், **பெறும்** – (தனிநெடி லொழிந்த ஐந்து தொடரும்) பெறும்.

**குறிப்பு :–**

குற்றியலுகரம் – ஒரு மாத்திரையினதாகிய உகரம் குறுகி அரைமாத்திரையினதாய் நிற்பது.

**உ–ம்:**

நாடு – நெடிற்றொடர் , பட்டு – வன்றொடர் இஃது – ஆய்தத்தொடர், பந்து – மென்றொடர் வயிறு – உயிர்த்தொடர், மார்பு – இடைத்தொடர்

'நெடிலோடு' என 'ஒடு' என்னும் இடைச்சொல் கொடுத்துப் பிரித்தது பிறமேற் றொடர்தல் நெடிற் றொடர்க்கு இல்லை யென்பது தோன்றற்கு. இங்கே, ஈற்றயலெழுத்தைக் கொண்டு குற்றிய லுகரத்தை ஆறு வகையாக்கியது புணரியல் முதலான இடங்களில் எடுத்தாளுதற் பொருட்டு; இது **முன்மொழிந்து கோடல்** என்னும் உத்தி.

**'மொழிந்த பொருளோடொன்ற அவ் வயின் மொழியாத தனையும் முட்டின்று முடித்தல்** என்னும் உத்தியால் 'நுந்தை' என்னும் முறைப்பெயரின் முன் நின்ற நகர மெய்யிலுள்ள உகரமும் குற்றுகரம் என்ப. இதனை இவ்வாசிரியர் கூறாதொழிந்தது **மறுத்தல்** என்னும் மதம்பற்றி யென்க.

குற்றியலுகரம் ஈற்றயலெழுத்தால் முப்பத்தாறாதல் காண்க. தொடரவும் – உம்மை எதிர்மறை; எச்சமென்பாருமுளர்.

குற்றியலுகரமும் குற்றியலிகரமும் செய்யுளில் அலகுபெற்றும் பெறாதும் வரும்.

தனித்தும் தனிக்குறிலைச் சார்ந்தும் வரும் வல்லின மெய்யின் மேலும், மெல்லின இடையின மெய்களின் மேலும் வரும் உகரம் குற்றியலுகரமாம்.

உ–ம்.

கு, து, நடு, தாணு, கதவு. இங்கு 'உயிர்' என்றது குறிலையும் நெடிலையும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்: நெடிலோடு –** தனிநெடிலேழுடனே, **ஆய்தம் –** ஆய்த மொன்றும், **உயிர் –** சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகார நீங்கிய உயிர் பதினொன்றும், **வலி –** வல் லெழுத்தாறும், **மெலி –** மெல்லெழுத்தாறும், **இடை –** வல் லெழுத்துக்களோடு தொடராத வகரம் நீங்கிய இடையெழுத் தைந்தும் ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றினாலே, **தொடர் –** ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடரப்பட்டு, **மொழி இறுதி வன்மை ஊர் உகரம் –** சொல்லினிறுதியில் வல்லெழுத்துக் களுள் யாதாயினும் ஒன்றன்மேல் ஏறி வரும் உகரமானது, **அஃகும் –** தன் மாத்திரையிற் குறுகும், **பிறமேல் தொடரவும் பெறும் –** இவற்றுள், ஆய்தத்தொடர் முதலிய ஐந்து தொடரும் வன்மையூருகரத்தை ஈற்றய லெழுத்துத் தொடர்தலே யன்றிப் பிறவெழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ் வீற்றய லெழுத்தின் மேலே தொடரவும் பெறும், **எ – று.**

நெடிலோடு என நெடிலை ஒடுக் கொடுத்துப் பிரித்தார், பிற மேற்றொடர்தல் அதற்கில்லை யென்பது தோன்றுதற் கென்க.

பிறமேற் றொடரின் உயிர்த்தொடர் எனப்படும். உயிரென்றது குறில் நெடில் இரண்டையும்.

உ – ம்.:

நாகு, காசு, நீறு என்பன நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

எஃகு, கஃசு, இருபஃது என்பன ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.

வரகு, பலாசு, கயிறு, போவது, ஒன்பது, இறும்பூது என்பன உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

கொக்கு, கச்சு, பற்று, பிண்ணாக்கு, விளையாட்டு, குருத்து என்பன வன்றொடர்க் குற்றியலுகரம்.

கங்கு, பஞ்சு, அம்பு, கன்று, பட்டாங்கு, சுண்ணாம்பு என்பன மென் றொடர்க் குற்றியலுகரம்.

வெய்து, சால்பு, தெள்கு என்பன இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

இங்கே ஈற்றயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை அறு வகையாகச் சொல்லியது பின்னே புணரியலில் எடுத்தாளுதற் பொருட்டென்க; இது **முன்மொழிந்து கோடலென்**னுமுத்தி.

**மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தலென்னு** முத்தியால், நுந்தை யென்னு முறைப்பெயரின் முன்னின்ற நகர மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமுங் குறுகுமெனக் கொள்க.

மெல்லின மெய்யின் மேலும், இடையின மெய்யின் மேலும் ஏறி நிற்கும் உகரமும், தனிக் குற்றெழுத்தினாலே தொடரப்பட்ட வல்லின மெய்யின்மேல் ஏறி நிற்கும் உகரமும், முற்றியலுகரமாம்.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். நெடிலோடு –** தனிநெடில் ஏழுடனே, **ஆய்தம் –** ஆய்தம் ஒன்றும், **உயிர் –** சொல்லுக்கு நடுவில் வராத ஔகாரம் நீங்கிய உயிர் பதினொன்றும், **வலி –** வல்லெழுத்தாறும், **மெலி –** மெல்லெழுத்தாறும், **இடை –** வல்லெழுத்துக்களோடு தொடராத வகரம் நீங்கிய இடையெழுத்தைந்தும் ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றால், **தொடர் –** தொடரப்பட்டு, **மொழி இறுதி வன்மை ஊர் உகரம் –** சொல்லின் இறுதியில் வல்லெழுத்துகளுள் யாதாயினும் ஒன்றின் மேல் ஏறி வரும் உகரமானது, **அஃகும் –** தன்னரை மாத்திரையிற் குறுகும், **பிறமேல் தொடரவும் பெறும் –** இவ்வறு வகைத் தொடருள் ஆய்தத் தொடர் முதலிய ஐந்து தொடரும் வன்மையூருகரத்தை ஈற்றயலெழுத்துத் தொடர்தலே யன்றிப் பிறவெழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ்வீற்றய லெழுத்தின் இடப்புறத்தே தொடரவும் பெறும், **எ–று.**

நெடிலோடு என நெடிலை ஒடுக்கொடுத்து வேறாக்கியது நெடிற்றொடர்க் குற்றியலுகரமொழி ஈரெழுத் தொருமொழியாயே வருமன்றிப் பிறமேற்றொடர்தல் அதற்கில்லை யென்பது தோன்றுதற்காம். மற்ற ஐந்து தொடர்க் குற்றியலுகர மொழிகளும் மூன்றெழுத்திற் குறையாது பலவெழுத்து மொழியாய் வருமென்பதும் அறிக. உயிரென்றது குற்றுயிர் நெட்டுயிர் இரண்டையும்.

உ—ம்.

நாகு, காசு, ஆறு, வீடு, தூது, ஏறு, ஐது, கோடு, கௌது என்பன **நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.**

எஃகு, கஃசு, இருபஃது என்பன **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.**

வரகு, பலாசு, கயிறு, போவது, ஒன்பது, இறம்பூது என்பன **உயிர்தொடர்க் குற்றியலுகரம்.**

கொக்கு, கச்சு, பிண்ணாக்கு, விளையாட்டு, குருத்து, ஒப்பு, பற்று, ஈர்க்கு, பீர்க்கு என்பன **வன்றொடர்க் குற்றியலுகரம்.**

கங்கு, பஞ்சு, நண்டு, பந்து, அம்பு, கன்று, பட்டாங்கு, சுண்ணாம்பு என்பன **மென்றொடர்க் குற்றியலுகரம்.**

வெய்து, மார்பு, சால்பு, தெள்கு என்பன **இடைத் தொடர்க்குற்றியலுகரம்.**

ஈர்க்கு, பீர்க்கு என ஈரொற்றுத் தொடர்ந்தாலும் ஈற்றயலெழுத்து வல்லினமாதலின் **வன்றொடரெனக்** கொள்க.

ஆசிரியர் தொல்காப்பியர்,

*"நெட்டெழுத்திம்பருந் தொடர் மொழியீற்றுங்,*

*குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே"*

எனத் தொகுத்துக் கூறியவாறு கூறாமல், இங்கே ஈற்றய லெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை அறுவகையாகக் கூறியது பின்னே புணரியலில் எடுத்தாளுதற் பொருட்டா மாதலின், இது முன்மொழிந்து கோடலென்னும் உத்தி.

*குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின்*

*ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்*

என்று தொல்காப்பியர் கூறிய **நுந்தை** என்னும் முறைப்பெயரின் முதலில் நகரமெய்யின் மேல் நிற்கும் உகரத்தையும் ***மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல்*** என்னுமுத்தியாற் குற்றியலுகரமென்று கொள்க.

குற்றியலுகரமல்லாத உகரமெல்லாம் முற்றியலுகர மென்றறிக. அவை மொழி முதலிலும் இடையிலும் ஈற்றிலும் வரும்.

**உ—ம்.**

உறி, உச்சி எனவும், அருள், பல்லுகம் எனவும், கடு, வேணு, கொள்ளு எனவும், முறையே காண்க.

குற்றியலுகரமும் ஈற்றில் வரும்; சில முற்றியலுகரமும் ஈற்றில் வருமாதலின் இவ்விரண்டினுக்கும் வேறுபாடு விரைவில் அறிதற்பொருட்டு ஈற்றில் வரும் முற்றியலுகரத்திற்கும் இலக்கணம் கூறப்படுவதாம்.

மொழியீற்றில் மெல்லின மெய்யின் மேலாவது இடையின மெய்யின் மேலாவது ஏறி நிற்கும் உகரமும், ஒரு குற்றெழுத்தின் பின்னின்ற வல்லினமெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் ஈற்று முற்றியலுகரமாம். இவற்றிற்கு உதாரணம் முன் பெறப்பட்டன.

பல்லுகம் – கரடி.

முற்றியலுகரமுங் குற்றியலுகரமும் ஒரு சொல்லில் வருதலுமுண்டு.

**உ—ம்.**

கரும்பு, கடுகு என்பனவற்றில் ஈற்றில் நிற்பன குற்றியலுகரமும் இடையில் நிற்கும் உகரம் முற்றியலுகரமுமாம் என்று தெளிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

இ—ள்.: **நெடிலோடு** – தனிநெடில் ஏழுடனே, **ஆய்தம்** – ஆய்தம் ஒன்றும், **உயிர்** – (சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய) உயிர் பதினொன்றும், **வலி** – வல்லின மெய் ஆறும், **மெலி** – மெல்லின மெய் ஆறும், **இடை** – (வல்லெழுத்துக்களோடு தொடராத வகரமெய் நீங்கிய) இடையின மெய் ஐந்தும், ஆகிய முப்பத்தா றெழுத்துக்களுள் ஒன்றினால்), **தொடர்** – (ஈற்றுக்கு அயலெழுத்தாகத்) தொடரப்பட்ட, **மொழி** – சொல்லின், **இறுதி** – ஈற்றில், **வன்மை ஊர் உகரம்** – வல்லெழுத்துக்களிலொன்றன் மேல்

ஏறி வருகின்ற உகரமானது (கு சு டு து பு று), **அஃகும்** – (தன் ஒரு மாத்திரையிற்) குறுகும்; **பிற** – பிற எழுத்துக்கள் ஒன்றும் பலவும், **மேல் தொடரவும்** – ஈற்றய லெழுத்துக்கு முன்னே தொடரவும், **பெறும்** – (நெடிற்றொட ரொழிந்த ஐந்து தொடர்களும்) பெறும்; **எ – று.**

'நெடிலோடு' என நெடிலை 'ஒடு' என்னும் உருபு கொடுத்துப் பிரித்தது நெடிற்றொடர் பிற மேல் தொடரப் பெறாமல் தனி நெடிலுடையதாகியே ஈரெழுத்தொருமொழியாய் வருமென்று தோன்றுதற்கு, 'உயிர்' என்றது, குறில் நெடில் இரண்டையும்.

| | | |
|---|---|---|
| **உ–ம்.:** | நாடு, சோறு | – **நெடிற்றொடர்.** |
| | கொக்கு, பட்டு | – **வன்றொடர்.** |
| | எஃகு, அஃது | –**ஆய்தத்தொடர்.** |
| | குரங்கு, பஞ்சு | – **மென்றொடர்.** |
| | வரகு, பலாசு | – **உயிர்த்தொடர்.** |
| | மார்பு, வீழ்து | – **இடைத்தொடர்.** |

புணரியலில் எடுத்தாளுதற் பொருட்டு இங்கே ஈற்றய லெழுத்தைக் கொண்டு ஆறுவகையாகச் சொன்னது, **முன் மொழிந்து கோடல்** என்னும் உத்தி.

முன் மொழிந்து கோடல் – முன்னே ஒன்றைச் சொல்லிப் பின்னே அதனை வேண்டுமிடத்து எடுத்துக் கொள்ளுதல்; அன்றி, பின்னே வேண்டுமென்ற காரணத்தால் முன்னே சொல்லி வைத்துக்கொள்ளுதல்.

ஈற்றயலெழுத்தை நோக்கிக் குற்றியலுகரம் முப்பத்தாறுதல் காண்க.

நாடு, ஈது, சூடு, ஏடு, ஐது, ஓடு, வௌபு; அஃது, வரகு, பலாசு, அரிது, இடையீடு, குருடு, இறும்பூது;இலேசு, இளைது, புரோசு,சுக்கு, கச்சு: பட்டு, பத்து, உப்பு, பற்று; சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று; வெய்து, மார்பு, சால்பு, வீழ்து, தெள்கு என ஈற்றயலெழுத்து நோக்கிய உதாரணங்களை முறையே காண்க. கோடிட்ட எகர ஒகர உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுக்கு உதாரணம் வருமிடத்துக் காண்டு கொள்க.

இனி, நெடிற்றொடர் முதலிய ஆறும் வல்லெழுத்து ஆறையும் ஈறாகக் கொள்ளக் குற்றியலுகரம்

முப்பத்தாறாகுமென்று கொள்வாரும் உளர்; 'அவர்க்கு– காகு, நாகு, காடு, காது, காபு, சோறு; எஃகு, கஃசு, கஃடு, அஃது, அஃபு, கஃறு, வரகு, பலாசு, முருடு, எருது, மரபு, கயிறு; சுக்கு, கச்சு, பட்டு பத்து, உப்பு, பற்று; சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று; செய்கு, பெய்து, மார்பு,– என்பன உதாரணமாம். சில வாராதிருக்கவும் முப்பத்தாறென்றல், 'உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு' என்றல் போலச் சுருங்கச் சொல்லலாகக் கூறிய தென்க.

'நுந்தை' என்னும் முறைப்பெயரின் முன்நின்ற நகர மெய்யின் மேலிருக்கின்ற உகரமும் குறுகு மென்றல், பழைய வழக்கு.

தனித்தும் தனிக்குறிலைச் சேர்ந்தும் வரும் வல்லின மெய்யின் மேலும், மெல்லின இடையின மெய்களின் மேலும் மொழியிறுதியில் வரும் உகரம் முற்றியலுகரம் எனப்படும்.

**உ–ம்.:**

கு, து, கடு, பெறு; தாணு, தும்மு; கதவு, நாலு.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். நெடிலோடு** – தனி நெடிலேழுடனே, **ஆய்தம்** – ஆய்தமொன்றும், **உயிர்** – (சொல்லுக்கு நடுவிலுங் கடையிலும் வாராத ஔகாரம் நீங்கிய) உயிர் பதினொன்றும், **வலி** – வல்லெழுத்தாறும், **மெலி** – மெல்லெழுத்தாறும், **இடை** –வல்லெழுத்துக்களோடு தொடராத வகர நீங்கிய இடையெழுத்தைந்தும் ஆகிய முப்பத்தாறனுள் ஒன்றினாலே, **தொடர்** – ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடரப்பட்டு , **மொழி இறுதி வன்மை ஊர் உகரம்** – சொல்லினிறுதியில் வல்லெபத்துக்களுள் யாதாயினும் ஒன்றன் மேல் ஏறி வரும் உகரமானது, **அஃகும்** – தன்மாத்திரையிற் குறும். **பிற மேல் தொடரவும் பெறும்** – (இவற்றுள், ஆய்தத் தொடர் முதலிய ஐந்து தொடரும், வன்மையூருகரத்தை ஈற்றயலெபத்துத் தொடர்தலேயன்றிப்) பிறவெழுத்துக்களுள் ஒன்றும் பலவும் அவ்வீற்றயலெழுத்தின் மேலே தொடரவும் பெறும், **எ–று**.

'நெடிலோடு' என நெடிலை ஒடுக் கொடுத்துப் பிரித்தார், பிறமேற் றொடர்தல் அதற்கில்லை யென்பது தோன்றுதற் கென்க; பிறமேற் றொடரின் உயிர்தொடரெனப்படும். உயிரென்றது குறில் நெடில் இரண்டையும்.

உ—ம்.

**நாகு, காசு, நீறு** என்பன **நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.**

**எஃகு, கஃசு, இருபஃது** என்பன **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.**

**வரகு, பலாசு, கயிறு, போவது, ஒன்பது, இறும்பூது** என்பன **உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.**

**கொக்கு, கச்சு, பற்று, பிண்ணாக்கு, விளையாட்டு, குருத்து** என்பன **வன்றொடர்க் குற்றியலுகரம்.**

**கங்கு, பஞ்சு, அம்பு, கன்று, பட்டாங்கு, சுண்ணாம்பு** என்பன **மென்றொடர்க் குற்றியலுகரம்.**

**வெய்து, சால்பு, தெள்கு** என்பன **இடைத்தொடர்க் குற்றியலுகரம்.**

இங்கே ஈற்றயலெழுத்தைக் கொண்டு குற்றியலுகரத்தை அறுவகையாகச் சொல்லியது பின்னே புணரியலில் எடுத்தாளுதற் பொருட்டென்க; இது 'முன் மொழிந்து கோடல்' என்னும் உத்தி.

'மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல்' என்னும் உத்தியால் நுந்தை என்னும் முறைப் பெயரின் முன்னின்ற நகர மெய்யின் மேல் ஏறி நின்றும் உகரமுங் குறுகுமெனக் கொள்க.

| | | |
|---|---|---|
| தனிநெடில் | ...... | 7 |
| ஆய்தம் .... | ...... | 1 |
| ஔகாரம் நீங்கிய உயிர் | ..... | 11 |
| வல்லினம் | ...... | 6 |
| மெல்லினம் | ...... | 6 |
| வகரம் நீங்கிய இடையினம் | ...... | 5 |
| ஆக | ....... | 36 |

ஆக இந்த முப்பதாறு எழுத்துக்களில் ஒன்று ஈற்றுக்கு அயலெழுத்தாகத் தொடர்வதால் குற்றியலுகரம் 36 ஆயது.

இவ்வாறன்றி நெடில், ஆய்தம், உயிர், வலி, மெலி, இடை என்னும் ஆறையும் தொடர்ந்து ஆறு வல்லெழுத்துக்களின் மேலும் ஏறி வருதலால் குற்றியலுகரம் 36 ஆயிற்றென்பது முண்டு.

மெல்லின மெய்யின் மேலும், இடையின மெய்யின் மேலும் ஏறி நிற்கும் உகரமும், தனிக்குற்றெழுத்தினாலே தொடரப்பட்ட வல்லின மெய்யின் மேல் ஏறி நின்றும் உகரமும், முற்றியலுகரமாம்.

## கா. நமச்சிவாய முதலியார்

**நெடிலோடு** – தனிநெடிலுடனே, **ஆய்தம்** – ஆய்தமும், **உயிர்** – உயிரெழுத்துக்களும், **வலி** – வல்லெழுத்துக்களும், **மெலி** – மெல்லெழுத்துக்களும், **இடை** – இடையெழுத்துக்களும் (ஆகிய எழுத்துக்களுள் ஒன்றால்), **தொடர்** (ஈற்றுக்கு அயலெழுத்தாகத்) தொடர்ந்து வருகின்ற, **மொழி இறுதி** – சொல்லினிறுதியில், **வன்மை ஊர் உகரம்** – வல்லெழுத்துக்கள் யாதாயினும் ஒன்றன்மேல் ஏறி வருகின்ற உகரமானது, **அஃகும்** – (தன் மாத்திரையிற்) குறுகும்; **பிற** – பிற வெழுத்துக்கள், **மேல் தொடரவும்** – மேலே தொடரவும், **பெறும்** – (தனி நெடி லொழிந்த ஐந்து தொடரும்) பெறும்;

'அஃகும் உகரம் ஆறாறு' என்று மேற் கூறியபடி, குற்றியலுகரம் முப்பத்தாறாக வருதற்கு உதாரணம் வெவ்வேறு விதமாகக் காட்டுவர். அவற்றுள்,ஈற்றயலெழுத்தினைத் தலைமையாகக் கொண்டு கூறுபவர்,

**உதாரணம்**

நாடு,ஈது,கூடு,ஏடு,ஐது,ஓடு,வெள – என நெடிற் றொடர்க்கும்,

அஃது – என ஆய்தத் தொடர்க்கும்,

வரகு, பலாசு, அரிது, இடையீடு, குருடு, இறும்பூது, இலேசு, இளைது, புரோசு என உயிர்த்தொடர்க்கும்,

சுக்கு, கச்சு, பட்டு, பத்து, உப்பு, பற்று என வன்றொடர்க்கும்,

சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று என மென்றொடர்க்கும்,

வெய்து, மார்பு, சால்பு, வீழ்து, தெள்கு என இடைத் தொடர்க்கும் உதாரணம் காட்டி, உயிர்த்தொடருள் எகர

ஒகரத் தொடர்கட்கு உதாரணம் வந்தவழிக் காண்க என்பர்.

இனி, நெடிற்றொடர் முதலிய ஆறும், ஈற்றில் வரும் வன்மையூர் உகரத்தைத் தலைமையாகக் கொண்டு குற்றியலுகரம் முப்பத்தாறாகும் எனக் கூறுவார்,

நாகு, காசு, காது, காடு, காபு, சோறு எனவும்,
எஃகு, கஃசு, கஃடு, அஃது, கஃபு, கஃறு எனவும்,
வரகு, பலாசு, முருடு, எருது, மரபு, கயிறு எனவும்,
சுக்கு, கச்சு, பட்டு, பத்து, உப்பு, பற்று எனவும்,
சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று எனவும்,
செய்கு, பெய்து, மார்பு எனவும் காட்டிச் சிலவற்றிற்கு உதாரணம் கிடையாமையால் முப்பத்தாறு என்றது, **சுருங்கச் சொல்லல்** என்னும் அழகு பற்றி என்பர்.

மேலே காட்டிய இரண்டுவகையுள்ளும் சிலவற்றிற்கு உதாரணம் காணாமையால், குற்றியலுகரம் முப்பத்தாறாதற்கு ஏற்குமாறு, ஒருவகையால் வழக்காறு பற்றி ஈண்டுக் காட்டப்பெறும் உதாரணம் வருமாறு:-

**நெடிற்றொடர்** : நாகு, காசு, நாடு, ஏது, வெளபு, நீறு.

**ஆய்தத்தொடர்** : எஃகு, கஃசு, கஃடு, அஃது, கஃபு, கஃறு,

**உயிர்த்தொடர்** : வரகு, பலாசு, பகடு, கரிது, மரபு, கயிறு,

**வன்றொடர்** : கொக்கு, கச்சு, பட்டு, பத்து, உப்பு, பற்று

**மென்றொடர்** : குரங்கு, மஞ்சு, வண்டு, பந்து, வம்பு, கன்று.

**இடைத்தொடர்** : செய்து, சார்பு, சால்பு, தெள்கு,

**'நெடிலோடு ஆய்தம் உயிர் வலி மெலி இடை'** எனவும், **'வன்மையூருகரம்'** எனவும் பொதுவகையிற் கூறினமையால், **ஏற்புழிக்கோடல்** என்னும் உத்தி கொண்டு ஈண்டு உதாரணங் காட்டலாயிற்று.

'நெடிலோடு' என நெடிலை ஒடு என்னும் உருபு கொடுத்துப் பிரித்தது, பிறமேற் றொடர்தல் அந் நெடிற்றொடர்க்கு இல்லை என்பது தோன்றுதற்காம். இங்கு உயிர் என்றது குறில் நெடில் ஆகிய இரண்டனையும்.

இங்கே ஈற்றயலெழுத்தைக் கொண்டு ஆறுவகையாகச் சொல்லிப் பின்னே புணரியல் முதலான இடங்களிலே எடுத்தாளுதலால் இது, **'முன்மொழிந்து கோடல்'** என்னும் உத்தி.

**'மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியாத தனையு முட்டின்றி முடித்தல்'** என்னும் உத்தியால், **'நுந்தை'** என்னும் முறைப்பெயரின் முன்னின்ற நகரமெய்யின்மேலிருகிற உகரமுங் குறுகுமென்று கொள்க.

நெடில், ஆய்தம், உயிர் ஆகிய மூன்றிற்கும் ஈறு பற்றியும், வலி மெலி ஆகிய இரண்டிற்கும் ஈறும் ஈற்றயலுமாகிய இரண் டிடங்களைப் பற்றியும், இடைத்தொடருக்கு ஈற்றயல் பற்றியும் வழக்காற்றின் வழியே உதாரணம் கொள்ளலாயிற்று. இவற் றுடன் வன்மையூர் உகரத்தொடு மயங்காத வகர இடைத் தொடர் ஒன்றினை நீக்கி, 'நுந்தை' என்னும் மொழியின் முன் னின்ற நகர மெய்யின் உகரத்தைக் கூட்ட, குற்றியலுகரம் முப்பத் தாறாதல் காண்க.

## மோசகு பொன்னையா

நெடிற்றொடர் மொழியிலும், ஆய்தம், உயிர், வலி, மெலி இடைத் தொடர் மொழிகளிலும் இறுதியில் வல்லெழுத்தை ஊர்ந்து வரும் உகரம் குறுகி ஒலிக்கும். முன்னதொழிய ஏனையவற்றைப் பிற எழுத்துக்கள் தொடர்தலும் அமையும், **எ—று.**

**எ—டு.**

நாடு, எஃகு, வரகு பலாசு, கொக்கு, நுங்கு, சார்பு எனவும்; ஒன்பஃது, ஒன்பது பிண்ணாக்கு, பட்டாங்கு, சுண்ணாம்பு எனவும் வரும்.

எழுத்துக்களால் ஆக்கப்படும்மொழி,

*ஒரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி*
*இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட*
*மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.*

**என மொழிநிலை மூவகைப்படும் என்பது பண்டு தொட்டு வந்தநெறி என்பது தொல்காப்பியர் கொள்கை.**

**அவ்வாறின்றி, மொழியானது எழுத்துத் தனித்து நின்று, பொருள் தரும் தனிமொழி எனவும், இரண்டு முதல் ஒன்பது வரை எழுத்துக்கள் தொடர்ந்து நின்று பொருள் தரும் தொடர் மொழி எனவும் இரு வகைப்படும் என்ற ஒரு கொள்கையும் நிலவியது.**

அக்கொள்கைப் படி, ஈற்றயல் எழுத்துக்களின் அடிப்படையில் குற்றியலுகரம் நெடிற் றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென் றொடர், இடைத்தொடர் என ஆறு தொடர்களாகப் பகுத்துணர்த்தப் பட்டது.

தொல்காப்பியரும்,

*ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்*

*இடையொற்றுத் தொடரு மாய்தத் தொடரும்*

*வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும்*

எனக் குறியிட்டாண்டுள்ளமையை நோக்குக.

அசையியல் அடிப்படையிலும் பிற்காலத்தவரால் குற்றியலுகரம் நெடில், குறிலிணை, குறினெடில், நெடிலொற்று, குறிலிணை யொற்று, குறினெடிலொற்று, குற்றொற்றுக் குற்றியலுகரங்கள் என ஏழாகப் பகுத்துணர்த்தப்பட்டது. இவ்விரண்டு வகைகளுள் ஒன்பது, போவது, வருவது முதலிய சொற்களில் வரும் குற்றியலுகரங்களையும் தழுவிக் கோடற்கு ஏற்றதும், இயற்றமிழ் நடைக்குப் பொருந்துவதுமான முன்னதைத் தழுவி இவ்வாசிரியர் நூற்பா செய்தார். நூலிலும், இடந்தோறும் தாம் கொண்டவாறே எடுத்தாண்டுள்ளார். தாம் தொடர்மொழி எனக் கொண்டாலும், பிற எழுத்துக்கள் தொடர்தல் இல்லை யாதலின், நெடிற்றொடரை ஒடு உருபு கொடுத்துப் பிரித்துக் கூறினார்.வீரசோழியம்,

*வன்மை மேலுகரம் உறுவது நையும்*

*தொடர்மொழிப் பின்னும்நெடிற் பின்னுமே*

என்றும்; நேமிநாதம்,

*தொடர்நெடிற் கீழ்வன்மை மேலுகரம் . . .*
*குன்றும்*

என்றும் கூறுவதால், அவற்றின் ஆசிரியன்மார் தொல்காப்பியர் மேற்கொண்ட 'மொழிநிலை மூவகை' என்னும் நெறியையே தழுவினர் என்பது போதரும்,

தொல்காப்பியர்,

*அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்*
*எல்லா இறுதியும் உகர நிறையும்,*

என்றும்,

*குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கின்*
*ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்*
*முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ*
*தம்பெயர் மருங்கின் நிலையிய லான*

என்றும் கொண்ட குற்றியலுகரங்கள் இவ்வாசிரியருக்கு உடன்பாடின்மையால் அவற்றைக் கூறாது விடுத்தார்.

மொழியின் ஈற்றில் வல்லொலி நிற்பது தமிழ் ஒலி மரபன்று. ஈறாகும் வல்லொலியை இசைக்கவே குற்றியலுகரம் ஒலித்துணை இழைவு இசையாக வருகிறது. ஈற்றில் உயிரொலிகளோ, குற்றியலுகர ஒலியோ, ஏனை நெகிழொ லிகளோ மட்டும் நிற்பது இனிமை சேர்ப்பதாகவும் முயற்சி எளிமை தருவதாகவும் உள்ளது. குற்றியலுகரம் ஞு உ ஞு ஒலியனின் மாற்றொலி என்பது முந்திய நூற்பாவின் உரையில் உரைக்கப்பட்டது.

ஆறுதொடரும் ஆறு வல்லொற்றுக்களொடு கூடக் குற்றியலுகரம் முப்பத்தாறாயிற்று என்பர்; மாற்றியும் உரைப்பர்.

(39)

## ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும்

**94. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்**
**நையு மௌவு முதலற் றாகும்.**

**தன் சுட்டு அளபு ஒழி ஐம் மூ வழியும்**
**நையும் ஔவும் முதல் அற்று ஆகும்**

ṭaṉ suttu aḷapu oḷi aim mū vaḷiyum
naiyum auvum muṭal aṟṟu ākum

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Shortened ai and au

(The letter) 'ai' unless it is used by itself, has (always) a shortened quantity in the three parts of a word; 'au' is likewise shortened, but only in the beginning (of a word).

## ஒப்புமைப் பகுதி

**மும்மையிடத் தையௌவுங் குன்றும்....**

(நேமி. 4:3)

**ஐத் தனித்து அளபெடுத்து அன்றி மூவிடத்தும்**
**ஔவும் முதலிடத்து அஃகும் என்ப**

(தொன். : 16)

மொழிமுத லிடைகடை மூவிடத் தினும் ஐ
அஃகு முதலிடத் தௌவு மற்றே

(மு. வி. : 37)

.................................. முதலிடைபின்

சொற்பொருள் ஐயே குறுகும் முன் ஔவே குறுகும்

(சுவாமி. : 18: 2)

## மயிலை நாதர்

எ–ன், ஐகார ஔகாரக் குறுக்கங்களாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: தன்னைச் சொல்லுதற்கண்ணும் அளபெடுத்தற் கண்ணு மல்லாதவழி வந்த ஐகாரம் மொழிமுதல் இடை கடை யென்னும் மூன்றிடத்தும் குறுகும். இவ்வாறு வரும் ஔகாரமும் மொழிமுதற்கண் அவ்வாறாம், எ–று.

வ–று.:

ஐப்பசி, மைப்புறம்; மடையன், உடைவாள்; குவளை,
தவளை, தினை, பனை எனவும், மௌவல் எனவும் வரும்.

"கல்லென் கௌவை", "ஒல்லென் பௌவம்" என்பன இடையே குறைந்தவை யென்பாருமுளர். அவை கௌவை, பௌவமென முதலிலே குறைந்த மொழிகள் நிலைமொழி களோடு புணர்ந்தன வென மறுக்க. அந்தௌ, அத்தௌ என்பன கடையிலே குறைந்தன வெனின், அவை ஒருபொருட் சிறப்புடைய வாய் நடப்பன வல்லவென மறுக்க.

## சங்கர நமச்சிவாயர் - சிவஞான முனிவர்

**எ—னின்,** ஐகார ஔகாரக் குறுக்கங்கள் வருமாறு **உணர் — ற்று.**

**இ—ள்.:** ஐகாரம் தன்னைக் கருதித் தன்பெயர் கூறுமளவில் குறுகாது, ஒழிந்த மொழிமுதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் முன்னும் பின்னும் இருமருங்குமாய எழுத்தின் தொடர்பால் தன்மாத்திரையில் குறுகும். ஔகாரமும் தன் பெயர் கூறுமளவில் குறுகாது, ஒழிந்த மொழிமுதற்கண் பின்வரும் எழுத்தின் தொடர்பால் தன்மாத்திரையில் குறுகும், **எ—று.**

சுட்டளபு என்பது வினைத்தொகை.

அளபு என்றார், எழுத்தின் சாரியை தொடரினும் குறுகும் என்பது கருதி. எனவே, ஒரெழுத்தொருமொழியாய் நிலைமொழி வருமொழியாய்த் தொடராது, தனித்து, ஒரோவிடங்களின் வரின் தன்மாத்திரை குறுகாது என்பதூஉம் பெற்றாம்.

**உ — ம்.:**

ஐப்பசி மைப்புறம் எனவும், வலையன் எனவும், குவளை எனவும், மௌவல் எனவும் வரும்.

இனி,

***அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ***
***உளதாம்ஒன்றரை தனிமையும் ஆகும்***

எனக் கூறினாரும் உளராலோவெனின்,தன்னியல்பாய இரண்டு மாத்திரையினின்றும் குறுகுதலில்லனவற்றை ஒழிப்பார் விகாரத்தான் மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையுமாய் மிக்கொலிக்கும் அளபெடையை ஒழிக்க வேண்டாமையின் அது பொருந்தாதென்க. இது **மறுத்தல்** என்னும் மதம். ஏனைய **உடன்படல்.**

இட வகையான் ஐகாரக் குறுக்கம் மூன்றும் ஔகாரக் குறுக்கம் ஒன்றும் வருமாறு காண்க.

*இனி, ஐகாரக்குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும் ஏனையிடங்களின் ஒரு மாத்திரையாயும், ஔகாரக் குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும் குறுகுமென்பது உய்த்துணர்ந்து கொள்க. அவ்வாறு உய்த்துணர்ந்து கொள்ளாக்கால்,*

*வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்*
*வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்*
*வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல்*
*வைகலை வைத்துணரா தார்"*

எனவும்,

*கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல்*
*பறியா நகும்*

எனவும்,

*ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்*

*எனவும் வரும் இலக்கியங்கட்கு இலக்கணம் இன்றாய் முடியும் என்க.*

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்,** ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஆமாறு கூறியது.

**இ-ள்.:** **தற்சுட்டு** - தன்னைச் சொல்லுதற்கண்ணும், **அளபு** - அளபெடுத்தற்கண்ணும், **ஒழி ஐ** - அல்லாத வழி வந்த ஐகாரம், **மூவழியும் நையும்** - மொழிந்த முதல் இடை கடையென்னும் மூன்றிடத்தும் குறுகும், **ஔவு முதல்** - ஔகாரம் மொழி முதற்கண்ணே, **அற்றாகும்** - அத்தன்மையை உடையவாகும் , **எ-று.**

**உ-ம்.:**

ஐப்பசி, மடையன்; குவளை என வரும் ஐகாரக் குறுக்கம் மூன்று. மௌவல் என வரும் ஔகாரக் குறுக்கம் ஒன்று.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஐகார ஔகாரக் குறுக்கங்கள் வருமாறு உணர்த்துகின்றது,

**இ-ள்.:** **ஐ**-ஐகாரம், **தற்சுட்டளபு** - தன்னைக் குறித்துத் தன்பெயர் சொல்லுமளவிற் குறுகாது, **ஒழி**-ஒழிந்த, **மூவழியும்** - சொல்லுக்கு முதலிடை

கடைகளிலே யெங்கே நின்றாலும், **நையும்** – தன்மாத்திரையிற் குறுகும், **ஔவும்** – ஔகாரமும், **முதல்** – சொல்லுக்கு முதலில், **அற்றாகும்** – தன்மாத்திரையிற் குறுகும், **எ – று.**

**உ–ம்.:**

ஐப்பசி, வலையன், குவளை–எனவும், மௌவல்–எனவும், வரும்.

இடைவகையால் ஐகாரக் குறுக்க மூன்றும் ஔகாரக் குறுக்கமொன்றும் வருதல் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*ஐகார ஔகார குறுக்கங்கள் வருமிடங் கூறுஞ் சூக்கிரம் யாது ?*

தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்

நையு மௌவு முதலற் றாகும்.

(தன் சுட்டு அளபு ஒழி ஐம் மூ வழியும்
நையும் ஔவும் முதல் அற்று ஆகும் )

**இ – ள். தற் சுட்டு அளபு ஒழி ஐ** – தன்னைச் சுட்டுதற் கண்ணும் அளபெடுத்தற்கண்ணும் அல்லாத வழி வந்த ஐகாரம், **மூ வழியும் நையும்**– – சொல்லுக்கு முதலிடை கடைகளிலே எங்கே நிற்பினும் தன் மாத்திரையிற் குறுகும், **ஔவும் முதல் அற்று ஆகும்** – ஔகாரமும் அவ்வாறே தன் பெயர் சொல்லுதற் கண்ணும் அளபெடைக்கண்ணும் குறுகாது சொல்லுக்கு முதலிலே தன் மாத்திரையிற் குறுகும், **எ–று.**

**உ – ம்.**

ஐப்பசி, இடையன், குவளை, எனவும்,

மௌவல் எனவும் வரும்.தன்பெயர் குறியாது பொருள் குறித்து வரும் ஐ, மை, கை, வௌ என்பனவும் குறுகும்.

*ஐகாரக்குறுக்கம் எங்கே வரும் ?*

தற்சுட் டளபொழி யைம்மூ வழியும் நையும்.

*ஐகாரக்குறுக்கம் எதனால் மூன்றாயின ?*

மொழிக்கு முதலிடை கடையாகிய மூன்றிட வகையாலும் வருதலின் மூன்றாயின.

*ஒளகாரக்குறுக்கம் எங்கே வரும் ?*

ஔவு முதலற் றாகும்.

*ஒளகாரக்குறுக்கம் எதனால் ஒன்றாயது ?*

மொழிக்கு இடை கடையில் வாராது முதலில் மாத்திரம் வருதலால் ஒன்றாயிற்று.

*ஐகார ஒளகாரங்கள் எங்கே குறுகா ?*

'தற்சுட்டு அளபு ஒழி' என்றதனால்,தம்பெயர் சொல்லுமிடத்தும் அளபெடைக் கண்ணும் குறுகா.

## முகவை இராமானுசக் கவிராயர்

இது ஐகாரக்குறுக்கம் வருமாறுணர்த்துகின்றது.

**இ–ள்.: தற்சுட்டளபு** – தன்னைக் குறிக்கும் அளவு, **ஒழிமூவழியும்** – ஒழிந்த (மொழி) முதல் இடை கடையென்கின்ற மூன்றிடத்தும், **ஐயும்**–ஐகாரங் குறுகும், **ஒளவு முதலற்றாகும்** – ஒளகாரமும் மொழிமுதலிலே அவ்வாறு குறுகும், **எ – று.**

அளவு என்றது – எழுத்தின் சாரியை, தொடரினுங் குறுகு மென்பது அறிவித்தற்கு, எனவே ஒரெழுத்தொரு மொழியாய்த் தனித்து வரின் ஒரோரிடங்களில் குறுகாதென்பது **அருத்தாபத்தியென்னு**ம் உத்தியாற் பெறப்பட்டது.

**உ–ம்.:**

ஐப்பசி, மைப்புறம் – எனவும்

இறைவன், பொறையன் – எனவும்,

குவளை, தினை – எனவும்,

மௌவல்–எனவும், ஐகார மூன்றிடத்தும் ஒளகாரம் மொழி முதலிலுங் குறுகுதலால் இடவகையால் மேற் கூறியவாறே ஐகாரக் குறுக்க மூன்றும், ஒளகாரக் குறுக்கம் ஒன்றும் வந்தவாறு காண்க.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :–**

**ஐ** – ஐகாரம், **தன் சுட்டு அளபு** – தன்னைக் குறித்துத் தன் பெயர்சொல்லும் அளவில் (குறுகாமல், **ஒழி** – ஒழிந்த, **மூவழியும்,**– சொல்லுக்குமுதல் இடை கடைகளில் எங்குநின்றாலும், **நையும்** – (தன் மாத்திரையில்) குறுகும்; ஔவும் – ஔகாரமும், (தன் பெயர்சொல்லுமளவில் குறுகாமல்), **முதல்** – சொல்லுக்கு முதலில், **அற்று ஆகும்** – அத்தன்மைபதாகும். (தன் மாத்திரையில் குறுகும்).

**குறிப்பு :–**

ஐகார ஔகாரக்குறுக்கங்கள் – இரண்டுமாத்திரையவாய ஐ ஔகுறுகி ஒருமாத்திரையவாய் நிற்பது.

**உ–ம்:–**

ஐப்பசி, இறைவன், குவளை – ஐ மூவழியுங் குறுகிற்று.

ஔவை – ஔ முதலில் குறுகிற்று.

இடவகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும் வருதல்காண்க. 'அளபு' என்றது எழுத்தின் சாரியை தொடரினும் குறுகும் என்பதை அறிவித்தற்கு; எனவே, ஓரெழுத்தொருமொழியாகிய வழியும் சிலவிடங்களில் குறுகாதென்பது அருத்தாபத்தியால் பெறப்பட்டது.

**அருத்தாபத்தி** – கூறுப்பட்ட பொருளின் குறிப்பால் கூறப்படாத மற்றொருபொருளையும் அறிவது.

இனி, இச் சூத்திரத்திற்குத் தன்பெயர் சொல்லுதலும், அளபெடுத்தலும் ஒழிந்த பிறவிடத்துக் குறுகுமென்பர் இலக்கண விளக்க நூலார்.

## ஆறுமுக நாவலர்

**இ – ள்.:** ஐ – ஐகாரம், **தற்சுட்டு அளபு ஒழி மூவழியும்** – தன்னைக் குறித்துத் தன்பெயர் சொல்லுமளவிற் குறுகாது ஒழிந்த சொல்லுக்கு முதலிடைகடைகளிலே எங்கே நிற்பினும், **நையும்** – தன்மாத்திரையிற் குறுகும்,

**ஒளவும் முதல் அற்று ஆகும்** – ஒளகாரமுந் தன்பெயர் சொல்லுமளவிற் குறுகாது சொல்லுக்கு முதலிலே தன்மாத்திரையிற் குறுகும், **எ – று.**

**உ – ம்.:**

ஐப்பசி, இடையன், குவளை, எனவும்; மௌவல், எனவும் வரும். இடவகையால் ஐகாரக் குறுக்க மூன்றும் ஒளகாரக் குறுக்க மொன்றும் வருதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ஐ – ஐகாரம், – தற்சுட்டு அளபு ஒழி மூவழியும் –** தன்னைக் குறித்துத் தன்பெயர் சொல்லும் அளவிற்குறுகாது சொல்லுக்கு முதலிடை கடைகளில் எங்கே நிற்பினும், – **நையும்** – தன் மாத்திரையிற் குறுகும், – **ஒளவும் முதல் அற்றாகும்** – ஒளகாரமும் தன்பெயர் சொல்லுமளவிற் குறுகாது சொல்லுக்கு முதலிலே தன் மாத்திரையிற் குறுகும். **எ–று.**

**உ–ம்.**

ஐப்பசி, இடையன், குவளை எனவும், ஒளவை, மௌவல் எனவும் வரும்.

இட வகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும் ஒளகாரக் குறுக்கம் ஒன்றும் வருதல் காண்க.

இச்சூத்திரத்திற்கு இலக்கணவிளக்க நூலார்,

"தன்னைச் சுட்டுதற் கண்ணும் அளபெடுத்தற் கண்ணும் அல்லாதவழி வந்த ஐகாரம் மொழி முதலிடைகடை யென்னும் மூன்றிடத்தும் குறுகும். அவ்வாறு வரும் ஒளகாரமும் மொழிமுதற்கட் குறுகும்"

என்றார். இவ்வுரைக்குச் சிவஞான முனிவர் கண்டன மெழுதினர். ஆயினும் விவேகிகள் குணதோஷங்களை ஆய்ந்து தெளியக்கடவர்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.:** ஐ–ஐகாரம், **தன் சுட்டு** – தன்னை(எழுத்தை)க் குறிக்குமிடமும், **அளபு**–அளபெடுக்குமிடமும், **ஒழி** – அல்லாத, **மூவழியும்**–

(சொல்லுக்கு) முதல் இடை கடைகளிலே எங்கே நின்றாலும், **நையும்**–(தன் இரண்டு மாத்திரையிற்) குறுகும்; **ஔவும்** – ஔகாரமும், **முதல்** – (சொல்லுக்கு) முதலில், **அற்று ஆகும்** – அவ்வாறாகும் (தன்னைக் குறிக்குமிடத்தும் அளபெடுக்குமிடத்தும் குறுகாமல் சொல்லில் வரும்பொழு தெல்லாம் குறுகும்)

ஐகார ஔகாரக் குறுக்கங்கள் – இரண்டு மாத்திரையாகிய ஐகார ஔகாரங்கள் குறுகி ஒருமாத்திரையாய் நிற்பன.

தனித்தும் மெய்யுடன்கூடி உயிர்மெய்யாயும் நிற்கின்ற ஐ ஔ என்பவை எழுத்தைக் குறிக்குமிடத்து மாத்திரம் குறுகாதிருக்குமே யன்றி வேறு பொருளைக் குறிக்குமிடத் தெல்லாம் குறுகு மென்பதைக் காட்டுதற்கு, 'தற்சுட்டொழி' என்றும், தன் மாத்திரையின் மிக்கு ஒலிக்கும் அளபெடையிற் குறுகா தென்ற இயல்பை விளக்குதற்கு 'அளபொழி' என்றும் கூறினரென்க.

**உ – ம்.:**

ஐப்பசி, இடையன், குவளை; ஔவை.

இடவகையால் ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும் வருதல் காண்க. ஔகாரம், மொழியிடை கடைகளில் வாராது.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ஐ** – ஐகாரம், **தற்சுட்டு அளபு ஒழி மூவழியும்** – தன்னைக் குறித்துத் தன்பெயர் சொல்லுமளவிற் குறுகாதுஒழிந்த சொல்லுக்கு முதலிடை கடைகளிலே எங்கே நிற்பினும், **நையும்** – தன் மாத்தியையிற் குறுகும். **ஔவும் முதல் அற்று ஆகும்** – ஔகாரமும் தன்பெயர் சொல்லுமளவிற் குறுகாது சொல்லுக்கு முதலிலே தன் மாத்திரையிற் குறுகும், **எ–று.**

**உ.–ம்.**

ஐப்பசி, இடையன், குவளை, மௌவல்.

இடவகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும் ஆதல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். ஐ** — ஐகாரம், **தற்சுட்டு அளவு** — தன்னைக் குறித்துத் தன் பெயர் சொல்லும் அளவில் (குறுகாது), **ஒழி** — ஒழிந்த, **மூ வழியும்**— (சொல்லுக்கு) முதல் இடை கடைகளிலே எங்கே நின்றாலும், **நையும்** — (தன்மாத்திரையில்) குறுகும்; **ஔவும்**—ஔகாரமும், **முதல்** — (சொல்லுக்கு) முதலில், **அற்று ஆகும்** —தன்மாத்திரையிற் குறுகும். **எ—று.**

**பொ—ரை.:**

ஐகாரம் தன்னைக் குறித்துத் தன் பெயர் சொல்லும் அளவில் ஒழிய, மற்றைச் சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்திலும், தன்மாத்திரையிற் குறுகும்; ஔகாரம் சொல்லுக்கு முதலில் அப்படியே குறுகும்.

**உ—ம்.**

ஐப்பசி, வலையன், குவளை; மௌவல்.

ஐகார ஔகாரக்குறுக்கங்களாவன, இரண்டு மாத்திரை யாகிய ஐகார ஔகாரங்கள் குறுகி ஒரு மாத்திரையாய் நிற்பன. உயிரும், உயிர்மெய்யுமாகிய ஐகார ஔகாரங்கள் எழுத்தைக் குறிக்குமிடத்து மாத்திரம் குறுகாதிருக்குமே யன்றி, வேறு பொருளைக் குறிக்குமிடத்தும், எழுத்தின் சாரியை தொடரு மிடத்தும் குறுகும்.

இனி, ஓரெழுத்தொருமொழியாய்த் தனித்து வரின் ஒரோ இடங்களில் குறுகாதெனவுங் கூறுவர்.

இடவகையால் ஐகாரக் குறுக்கம் மூன்றும், ஔகாரக் குறுக்கம் ஒன்றும் வருதல் காண்க, ஔகாரம், மொழி இடை கடைகளில் வாராது.

## கா. நமச்சிவாய முதலியார்

**ஐ**—ஐகாரம், **தற்சுட்டு அளபு** – தன்னை குறித்துத் தன்பெயர் சொல்லுமளவில் (குறுகாது), **ஒழி** – ஒழிந்த, **மூவழியும்,** (சொல்லுக்கு) முதல் இடை கடையிலே எங்கே நின்றாலும், **நையும்** – (தன் மாத்திரையிற்) குறுகும்; **ஔவும்** – ஔகாரமும், **முதல்** – (சொல்லுக்கு) முதலில், **அற்று ஆகும்** – அவ்விதம் (தன் மாத்திரையிற் குறுகும்.

'தற்சுட்டளபு' என்றது, எழுத்தின் சாரியை தொடர்ந்து ஐகாரம் ஔகாரம் ஐகான் ஔகான் என வரினும் என்றற்கு.

'தற்சுட்டு அளபு ஒழி ஐ ஔ' என்பதற்குத் தன்னைச் சுட்டுமிடத்தும் அளபெடுக்குமிடத்தும் நீங்கிய ஐகாரமும் ஔகாரமும் எனக் கூறினும் அமையும்.

**உதாரணம்**

ஐப்பசி, வலையன், குவளை; மௌவல்.

இடவகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும், ஔகாரக்குறுக்கம் ஒன்றும் ஆதல் காண்க.

## மோசகு பொன்னையா

எழுத்தாகத் தம்மைச் சுட்டினும், அளபெடுப்பினுமல்லாமல், மொழிப்படின், ஐகாரம் மொழி முதலிடை கடை என்ற மூவிடங்களிலும், ஔகாரம் முதலிலும் குறுகும், **எ–று.**

தற்சுட் டளபொழி ஐ என்றதனால், அது மொழிப்பட்டு நிற்பின் குறுகும் என்றார் என்பதாயிற்று. எனவே, கை, பை என ஓரெழுத்து ஒரு மொழியாய் நிற்பினும் அஃது ஒரு மாத்திரை யாகக் குறுகும் என்றே கொண்டார் என்பதுமாயிற்று.

**எ–டு.**

ஐப்பசி, மைப்புறம், வலையன்; குவளை; மௌவல்;

தொல்காப்பியர்,

***ஓரள பாகு மிடனுமா ருண்டே***

***தேருங் காலை மொழிவயி னான***

எனக் கூறுவதால், அவர் அவை மொழிப்பட்டு நிற்கும் இடமெல்லாம் குறுகும் எனக் கொள்ளாமல், மொழியின்கண் ஓர் அளபாகக் குறுகி நிற்கும் இடமும் உண்டு எனவே கொண்டனர் எனத் தெரிகிறது.

***வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்***

***வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்***

***வைகலும் வைகற்றம் வாழ்நாண் மேல்வைகுதல்***

***வைகலை வைத்துணரா தார்,***

எனவும்

***கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்***

***மெய்வேல் பறியா நகும்,***

எனவும்,

***ஔவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்***

***கேடு நினைக்கப் படும்,***

எனவும் முதற்கண் ஐகாரமும் ஔகாரமும் குறுகாது நின்று இவ் வாசிரியர் கொள்கையோடு முரணான வழக்குண்மையைப் புலப்படுத்துவதால், தொல்காப்பியர் கொள்கையே ஏற்புடையது என்பது புலனாகும். முதற்கண் அது நெடிலேபோல் அலகுபெற்று வரினும், ஒன்றரை மாத்திரை யளவாகவே குறுகி நிற்கின்றது எனக் கூறி, இவ்வாசிரியருக்கு ஆதரவு காட்டுவாரும் உளர். இணையுயிரொலிகளான ஐ (அஇ), ஔ (அஉ) என்பன நிறை யளவு நெடில்களாகப் பிறப்பதே இல்லை.

K.L. பைக் என்பார், ஒன்று மற்றதைவிட உயிர்த்திறன் மிக்கதான இரு உயிர்கள் இடை சிறிதுமின்றி இணைந்து ஓர் ஒலியனாக ஒலித்து நிற்பதே இணையுயிரொலி என்றும், அதன் உயிர்த்திறன் மிக்க ஒலி நிற்கும் இடம் பற்றி அஃது எழுச்சி அல்லது வீழ்ச்சி இணையுயிர் ஒலி எனப் பெயர் பெறும் என்றும், திறன்மிக்க ஒலியுள் மற்றையதுமங்கிவிட ஓரொலியாகவே அது கேட்கப் படுகின்றது என்றும் கூறுகின்றார். மரியோபெய் என்பார், ஓர் இணையுயிரொலியை ஒலிப்பதற்கு ஓர் இயல் உயிரை (குறில்) ஒலிப்பதற்கு எவ்வளவு காலக் கழிவு உண்டாகின்றதோ அவ்வளவு காலக்கழிவே உண்டாகின்றது என்கின்றார்.

அமெரிக்க ஒலியியலாரிற் பெரும்பாலோர் இணையுயி ரொலிகளில் ஓர் உயிரும் ஓர் மெய்யுமே உள்ளன என்னும் கொள்கையராக இருக்கின்றனர். இவற்றைக் கூர்ந்து நோக்கின்,

**அகர இகரம் ஐகாரம் ஆகும்**

**அகர உகரம் ஔகாரம் ஆகும்**

**அகரத்து இம்பர் யகரப்புள்ளியும்**

**ஐஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்**

என்ற தொல்காப்பியரின் கேள்வி ஒலியியற் புலமையும், மொழி நிலையில் கேட்கப்படும், ஐ, ஔ என்பவற்றின் ஒலி இயலொலியே யன்றிக் குறுக்க ஒலியன்று என்ற கொள்கை யும் நன்கு புலனாகும். உரையாசிரியன்மார் அவர் போலியின் இலக்கணம் உணர்த்தினார் என மயங்கியதன் விளைவே இவர் குறுக்கம் என்றதற்குக் காரணம் என்க.

இடவகையால் ஐகாரக்குறுக்கம் மூன்று, ஔகாரக் குறுக்கம் ஒன்று என்பர்.

மொழியியல் முறைப்படி ஐ, ஔ என்பவற்றைத் தனித்தனி ஒலியன்களாகக் கொள்வதில்லை. இணையுயிர்களான அவற்றில் இணைந்த உயிர்களின் கூட்டு வடிவங் களாகவே அவை கொள்ளப்படுதலின், அவ்வுயிர்களின் மாற்றொலிகளாகவே அவை கொள்ளப் படும்.

(40)

## மகரக்குறுக்கம்

95. ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.

ண ன முன்னும் வஃகான் மிசையும் மக் குறுகும்.

ṇa ṉa muṉṉum vaḵhkāṉ misaiyum mak kuṛukum.

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Shortened m**

(The Consonant) 'm' is shortened after ṇ and ṉ before v.

## ஒப்புமைப் பகுதி

அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை

(தொல். எழு. : 13)

னகாரை முன்னர் மகாரம் குறுகும்

(தொல். : 52)

மகரம் ளளக் கீழ்
வம் மேல் குறுகும்

(தொன். : 17)

மகரம் ணனக்கீழ் வம்மேற் குறுகும்

(மு. வீ. : 38)

........................................... ளளத்
திரிந்த ணனப் பின் வம்மென் மக்குறுகும்...

(சுவாமி. : 18: 3)

## மயிலை நாதர்

எ—ன், மகரக்குறுக்கமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: ளகர லகரந் திரிந்த ணகர னகரங்கண் முன்பும் வகர மிசையும் நின்ற மகரம் குறுகும், எ—று.

வ—று:

*பசுப்போல்வார் முற்பட்டாற் பாற்பட்ட சான்றோர்*
*முசுப்போல முள்காந் திருப்பார் – பசுத்தான்*
*வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி*

*மருளினு மெல்லா மருண்ம்*

*எம்மொடு தம்மைப் பொரூஉங்காற் பொன்னொடு*
*[1]கூவிள மொத்ததும் போன்ம்*

*வாழும் வளவன்*

என வரும்.

---

பாட வேறுபாடு.:

1. கூவிளம் பூத்ததும், கூவிளம் போர்த்ததும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** மகரக்குறுக்கம் வருமாறு **உணர் — ற்று.**

**இ—ள்.:** ணகார னகாரங்களில் ஒன்று நின்று தொடர்ந்திட அதன்முன் வரினும், வகாரம் வந்து தொடர்ந்திட அதன் மேல் நிற்பினும், மகரம் தன் அரை மாத்திரையில் குறுகும், **எ—று.**

**உ — ம்.:**

**பசுப்போல்வார் முற்பட்டாற் பாற்பட்ட சான்றோர்**
**முசுப்போல முள்காந் திருப்பர் — பசுத்தான்**

**வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி**

**மருளினும் எல்லா மருண்ம்** எனவும்,

**திசையறி மீகானும் போன்ம்** எனவும்,

**தரும் வளவன்** எனவும் வரும்.

**இனி,** ணகர னகரங்களின் முன்வந்த மகரம் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றீற்றது என்பதூஉம், அவ்வீற்றயல் உகரங்கெட அவ்வுகரம் ஊர்ந்த ளகர லகரங்கள் ஈற்று மகரத்தோடு மயங்காமையின் மயங்குதற்குரிய ணகர னகரமாய்த் திரிந்தன ஈண்டு நின்ற ணகர னகரம் என்பதூஉம், இவற்றுள் ஒன்றுடன் ஈரொற்றாய் மயங்கின் மகரம் குறுகும் என்பதூஉம், இவற்றின் முன் குறுகுதல் செய்யுட்கண்ணது என்பதூஉம், காணும் கூனும் என இயல்பாக நின்ற ணகர னகரங்கள் முன் இவ்வாறு வந்து மகரம் குறுகாது என்பதூஉம், பிறவும் மேல்வரும் சூத்திரங்க ளெல்லா வற்றையும் வேண்டிப் **பருந்தின் வீழ்வாய்** நின்ற இச்சூத்திரத்து உய்த்துணர்ந்து கொள்க. இஃது **உய்த்துணர வைப்பு** என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** மகாரக் குறுக்கம் ஆமாறு கூறியது.

**இ—ள்.: ண ன முன்னும்** – ளகார லகாரங்கள் திரிந்த ணகார னகாரத்தின் முன்னும், **வஃகான் மிசையும்** – வகாரத்தின் மேலும், **மக் குறுகும்** – நின்ற மகாரம் குறுகி மகாரக் குறுக்கமாம், **எ—று.**

உ–ம்.:

மருண்ம், போன்ம், வாழும் வளவன் என வரும். ஆக மகரக் குறுக்கம் மூன்று.

## விசாகப் பெருமாளையர்

**இது**, மகரக்குறுக்கம் வருமாறு உணர்த்துகின்றது,

**இ–ள்.: ணன** – ணகர னகரங்களி லொன்று நின்று தொடர, **முன்னும்–** அதன் முன்னின்றாலும், **வஃகான்** – வகரம் வந்து தொடர, **மிசையும்** – அதன் பின்னின்றாலும், **ம** – மகரம், **குறுகும்** – தன் மாத்திரையின் குறையும், **எ–று.**

உ–ம்.:

***வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி***

***மருளினு மெல்லா மருண்ம்*** எனவும்,

***திசையறி மீகானும் போன்ம்*** எனவும்,

***தரும் வளவன்*** எனவும் வரும்.

இவற்றுள் 'மருளும்' 'மருண்ம்' 'போலும்' போன்ம் என்றாதலால் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச்சொல்லிலே, ள– ல திரிந்த ண– ன வென்றறிக.

இச் சூத்திரக் கருத்தைப் பின்வருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால் இது '**உய்த்துணர வைப்பு**' என்னுமுத்தி.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*மகாரக்குறுக்கம் எங்கே வரும் ?*

ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.

(ண ன முன்னும் வஃகான் மிசையும் மக் குறுகும்.)

**இ – ள். ண ன முன்னும் –** ணகர னகரங்களில் ஒன்று நின்று தொடர அதன் முன் வரினும், **வஃகான் மிசையும்** – வகரம் வந்து தொடர அதன்மேல் நிற்பினும், **ம குறுகும்** – மகரம் தன் மாத்திரையிற் குறையும், எ – று.

*மகாரக்குறுக்கம் எதனான் மூன்றாயின ?*

இட வகையான் மூன்றாயின.

## முகவை இராமானுசக் கவிராயர்

இது, மகரக் குறுக்கம் வருமா றுணர்த்துகின்றது.

இ—ள்.: **ண ன முன்னும்** – ணகர னகரங்களி லொன்றின் முன்னும், **வஃகான் மிசையும்** – வகரத்தின் பின்னும், **மக் குறுகும்** – மகர வொற்றுக் குறுகும், எ – று.

**உதாரணம்.:**

*'மருளினுமெல்லாமருண்ம்'* எனவும்,

*'திலைசயறி மீகானும் போன்ம்'* எனவும்,

***தரும் வளவன்'*** எனவும் மகரக்குறுக்கம் இடவகையால் மூன்றாய் வந்தவாறு காண்க.

இனி, இந்த ணகர னகரங்களின் முன்வந்த மகரம் செய்யுமென்னும் வினைமுற்றின் இறுதி யென்பதும், அந்த ண னக்கள் மருளும், போலும் என்பதில் உகரங் கெட ளகர லகரங்கள் திரிந்து நின்றன என்பதும், ஈரொற்றுடனிலையாய் நிற்பின் மகரங் குறுகுமென்பதும், இவ்வாறு குறுகுதல் செய்யுளிடத்தென்பதும், பிறவும் மேல்வருஞ் சூத்திரங்க ளெல்லாவற்றையும் வேண்டிப் பருந்தின் வீழ்வாய் நின்ற இச் சூத்திரத்துள் உய்த்துணர்ந்து கொள்க. இது **உய்த்துணர் வைப்பென்னும்** உத்தி.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– ணன முன்னும்** – ணகர னகரங்களில் ஒன்றன் முன்னும், **வஃகான் மிசையும்** – வகரத்தின் பின்னும், **ம குறுகும்** – மகரம் (தன் மாத்திரையில்) குறையும்.

**குறிப்பு :–**

*மகரக் குறுக்கம்* – அரைமாத்திரையினதாகிய மகரம் குறுகிக் கால்மாத்திரையினதாய் நிற்பது.

**உ–ம்:–**

மருண்ம், போன்ம், தரும் வளவன் என்பன முறையே, 'மருளும்', 'போலும்' என்பவற்றின் விகாரங்கள்.

ஈரொற்றுட னிலையாய் நிற்பின் மகரம் செய்யுளிடத்துக் குறுகுமென்பதை உய்த்துணர்க.

இச் சூத்திரக் கருத்தைப் பின்வருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால் இது **உய்த்துணர வைப்பு** என்னும் உத்தி. இச் சூத்திரம், **பருந்தின் வீழ்வு.**

மகரக் குறுக்கம் இடவகையால் மூன்றாதல் காண்க.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: ண ன முன்னும்** – ணகர னகரங்களில் ஒன்று நின்று தொடர அதன்முன் வரினும், **வஃகான் மிசையும்** – வகரம் வந்து தொடர அதன்மேல் நிற்பினும், **மக் குறுகும்** – மகரந் தன் மாத்திரையிற் குறையும், எ—று.

உ—ம்.:

***வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி***
***மருளினு மெல்லா மருண்ம்***

எனவும்,

***திசையறி மீகானும் போன்ம்***

எனவும்,

***தரும் வளவன்.***

எனவும் வரும். இவற்றுள், மருளும் என்பது மருண்ம் எனவும், போலும் என்பது போன்ம் எனவும் வருதலால், செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச் சொல்லின் ஈற்றயலிலே உகரங் கெட நின்ற ளகர லகரந் திரிந்த ணகர னகரமே இங்கே சொல்லிய ணகர னகர மென்றறிக.

இச் சூத்திரக் கருத்தைப் பின் வருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால், இது **உய்த்துணர வைப்பென்னு** முத்தி. மருளும், போலும் என்பன செய்புமென் வாய்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றென்பது:

**பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்**

**செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே**

என்னுஞ் சூத்திரங் கொண்டும், முற்றிறுதி யுகரவுயிர் கெடுமென்பது,

*செய்யுமெ னெச்சவிற் றுயிர்மெய் சேறலுஞ்*

*செய்யுளு ளும்முந் தாகலு முற்றே*

*லுயிரு முயுர்மெய்யு மேகலு முளவே*

**என்னுஞ் சூத்திரங் கொண்டும், லகர ளகர மெய்களின் முன் மகர மயங்கா தென்பது,**

*லளமுன் கசப வயவொன் றும்மே*

என்னுஞ் சூத்திரங் கொண்டும், லகர ளகரங்கள் மகரத்தின் முன் முறையே னகர ணகரங்களாகத் திரியுமென்பது,

*லளவேற் றுமையிற் றடவு மல்வழி*

*யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி*

*மேவி னணவு மிடைவரி னியல்பு*

*மாகு மிருவழி யானு மென்ப.*

என்னுஞ் சூத்திரங் கொண்டும், இந்த ணகர னகரங்களுள் ஒன்றுடன் ஈரொற்றாய் மயங்கின் மகரங் குறுகுமென்பதும் இவைகளின் முன் குறுகுதல் செய்யுளினிடத் தென்பதும்,

*லளமெய் திரிந்த னணமுன் மகார*

*நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே*

என்னுஞ் சூத்திரங் கொண்டும் உய்த்துணரப்படும். இச் சூத்திரம் **பருந்தின்வீழ்வு.** மகரக் குறுக்கம் இடவகையால் மூன்றாதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ணன முன்னும்** – ணகர னகரவொற்றுக்களில் ஒன்று நின்று தொடர அதன்முன் வரினும், **வஃகான் மிசையும்** – உயிரொடு கலந்த வகரம் வந்து தொடர அதன் இடப்புறத்தே நிற்பினும், **மக் குறுகும்** – மகரவொற்றுத் தன்னரை மாத்திரையிற் குறுகும், **எ—று.**

**உ—ம்.**

*வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி*

*மருளினு மெல்லா மருண்ம்* எனவும்,

*திசையறி மீகானும் போன்ம்* எனவும்,

*தரும் வளவன்* எனவும் வரும்.

***போலும், மருளும்*** என்னுஞ் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச் சொல்லின் ஈற்றயலில் நின்ற உகரங் கெட அவ் வுகரமேறிய லகர ளகரங்கள் ஈற்று மகரத்தொடு மயங்காமையின் மயங்குதற்குரிய னகர ணகரமாய்த் திரிந்தனவே இங்கே நின்ற னகர ணகரமென்பதும்,

இவற்று ளொன்றுடன் ஈரொற்றாய் மயங்கின் மகரங் குறுகுமென்பதும்,

இவற்றின்முன் குறுகுதல் செய்யுளிடத்தென்பதும் மேல்வரும் பல சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வேண்டுதலால் இச்சூத்திரம் உய்த்துணரவைப்பென்னு முத்தியும் தூரத்தில் நின்ற சூத்திரக் கருத்தைப் பெறவேண்டுதலாற் பருந்தின் வீழ்வென்னு நிலையுமாம்.

போலும், மருளும் என்பன செய்யுமென்னும் வாய்பாட்டுத் தெரிநிலைவினை முற்றென்பது

*பல்லோர் படர்க்கை முன்னிலை*

*தன்மையிற்*

*செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே*

என்னுஞ் சூத்திரத்தாலும், முற்றிறுதியயல் உகரவுயிர் கெடுமென்பது

*செய்யுமெனெச் சவீற்று யிர்மெய் சேறலுஞ்*

*செய்யு ளுளும் முந்தா கலுமுற்றே*

*லுயிரு முயிர்மெய் யுமேகலு முளவே*

என்னுஞ் சூத்திரத்தாலும், லகர ளகர மெய்களின் முன் மகரம் மயங்காதென்பது

*'லளமுன்கசபவயவொன்றும்மே'*

என்னுஞ் சூத்திரத்தாலும், லகர ளகர மெய்கள் மகரத்தின் முன் முறையே னகர ணகரங்களாகத் திரியுமென்பது

*லளவேற் றுமையிற் றடவு மல்வழி*

*யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி*

*மேவின ணவுமிடை வரினி யல்பு*

*மாகு மிருவழி யானு மென்ப*

என்னுஞ் சூத்திரத்தாலும், இந்த னகர ணகரங்களுளொன்றுடன் ஈரொற்றாய் மயங்கின் மகரங் குறுகுமென்பதும் இவைகளின் முன் குறுகுதல் செய்யுளினிடத்தென்பதும்

*லளமெய் திரிந்த னணமுன் மகாரம்*

*நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே'*

என்னுஞ் சூத்திரத்தாலும் உய்த்துணரப்படும்.மகரக் குறுக்கம் இடவகையால் மூன்றாதல் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: ணன முன்னும்** – (ளகர லகரம் திரிந்த) ணகர னகர மெய்களில் ஒன்றன் முன்னும், **வஃகான் மிசையும்**–(வருமொழி முதலில் நின்ற) வகர வுயிர்மெய்யின் பின்னும், ம–மகரமெய், குறுகும்–(தன் அரை மாத்திரையிற்) குறுகும்; **எ—று.** இங்கு, முன் பின் என்பன இடம் பற்றியன.

மகரக்குறுக்கம் – அரை மாத்திரையாகிய மகரமெய் குறுகிக் கால் மாத்திரையாய் நிற்பது: ஆய்தக் குறுக்கமும் இவ்வாறே.

**உ—ம்.:**

***மருண்ம், போன்ம், தரும் வளவன்*** இவற்றுள், மருளும் என்பது 'மருண்ம்' என்றும், போலும் என்பது 'போன்ம்' என்றும் உகரங் கெட்டு மெய்திரிந்து நின்றன வென்று அறிக.

இச் சூத்திரக் கருத்தை இந்நூலிற் பின்வருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால், இது **உய்த்துணர வைப்பு** என்னும் உத்தி; (உய்த்து உணர வைப்பு – (சில விதிகளைக் கொண்டு, ஆராய்ந்து அறியும்படி ஒருபொருளை வைத்தல்.)

மகரக்குறுக்கம் இடவகையால் மூன்றாதல் காண்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். ண ன முன்னும்** — ணகர னகரங்களில் ஒன்று நின்று தொடர அதன் முன்வரினும், **வஃகான் மிசையும்** — வகரம் வந்து தொடர அதன்மேல் நிற்பினும், **ம குறுகும்** — மகரந் தன் மாத்திரையிற் குறையும். எ—று.

**உ—ம்.**

***வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி***

***மருளினு மெல்லா மருண்ம்***

***திசையறி மீகானும் போன்ம்***

***தரும் வளவன்.***

இவற்றுள், மருளும் என்பது மருண்ம் எனவும், போலும் என்பது போன்ம் எனவும் வருதலால், செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச் சொல்லின் ஈற்றயலிலே உகரங் கெட நின்ற ளகர லகரந் திரிந்த ணகர னகரமே இங்கே சொல்லிய ணகர னகர மென்றறிக.

இச் சூத்திரக் கருத்தைப் பின் வருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால், இது '**உய்த்துணர வைப்பு**' என்னும் உத்தி.

மருளும், போலும் என்பன செய்யுமென் வாய்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றென்பது.

***பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்***

***செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே***

என்னும் சூத்திரங் கொண்டும், லகர ளகர மெய்களின் முன் மகரம் மயங்காதென்பது,

***லளமுன் கசப வயவொன் றும்மே***

என்னும் சூத்திரங் கொண்டும்,

லகர ளகரங்கள் மகரத்தின் முன் முறையே னகர ணகரங்களாகத் திரியுமென்பது,

***லளவேற் றுமையிற் றடவு மல்வழி***

***யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி***

***மேவி னணவு மிடைவரி னியல்பு***

*மாகு மிருவழி யானு மென்ப*

என்னும் சூத்திரங் கொண்டும்,

இந்த ணகர னகரங்களுள் ஒன்றுடன் ஈரொற்றாய் மயங்கின் மகரங் குறுகுமென்பதும் இவைகளின் முன் குறுகுதல் செய்யுளினிடத்ததென்பதும்,

*ளளமெய் திரிந்த னணமுன் மகார*

*நைந்தீ ரொற்றஞ் செய்யு ளுள்ளே*

என்னும் சூத்திரங் கொண்டும் உய்த்துணரப்படும்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். ணன முன்னும்** – ணகர னகரங்களில் ஒன்று (நின்று தொடர) அதன் முன்னின்றாலும், **வஃகான் மிசையும்** – வகரம் வந்து தொடர (அதன்) பின்னின்றாலும், **ம குறுகும்** – மகரம் (தன்மாத்திரையில்) குறுகும், **எ—று.**

**பொ—ரை.:** ணகர னகர ஒற்றுக்களின் பின்னும் வகர ஒற்றின் முன்னும், வரும் மகர ஒற்றானது தன் மாத்திரையிற் குறையும்.

**உ—ம்.**

*வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி*

*மருளினு மெல்லாம் மருண்ம்.*

*திசையறி மீகானும் போன்ம்.*

*தரும் வளவன்.*

இவற்றுள் 'மருளும்' மருண்ம், 'போலும்' போன்ம், என்றாதலால் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச் சொல்லிலே, ள – ல திரிந்த ண – ன என்றறிக. மகரக் குறுக்கமாவது, அரைமாத்திரையாகிய மகரமெய் குறுகிக் கால் மாத்திரையாய் நிற்பது. ஆய்தக் குறுக்கமும் இவ்வாறே.இச் சூத்திரக் கருத்தைப் பின் வரும் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால், இது உய்த்துணர வைப்பு என்னும் உத்தி. (உய்த்து உணர வைப்பு– (சில சூத்திர விதிகளைக் கொண்டு ஆராய்ந்தறிய ஒரு பொருளை வைத்தல்.மகரக் குறுக்கம் இடவகையால் மூன்றாதல் காண்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**ண ன முன்னும்** – ணகர னகரங்களில் ஒன்று (நின்று தொடர அதன்) முன்னின்றாலும், **வஃகான் மிசையும்** – வகரம் வந்து தொடர (அதன்) பின்னின்றாலும், **குறுகும்** – மகரம் (தன் மாத்திரையிற்) குறையுட்

**உதாரணம்.**

***வெருளினு மெல்லாம் வெருளு மஃதன்றி***
***மருளினு மெல்லா மருண்ம்*** எனவும்,

***திசையறி மீகாமனும் போன்ம்*** எனவும்,

***தரும் வளவன்*** எனவும் வரும்.

இவற்றுள், மருளும்–மருண்ம், போலும்–போன்ம் என்றாதலால், செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றுச்சொல்லிலே ளகரம் ணகரமாகவும் லகரம் னகரமாகவும் திரிந்து வந்தன என அறிக.

ண ன முன் மகரம் குறுகுதல், 'செய்யும்' என்னும் வாய்பாட்டு முற்றில் வரும் புணர்ச்சி விகாரத்திலும், வஃகான் மிசை மகரங் குறுகுதல் தொடர்மொழியிலும் எனக் கொள்க.

இச் சூத்திரக் கருத்தைப் பின்வருஞ் சில சூத்திரங்களைக் கொண்டு உய்த்துணர வைத்தலால், இஃது '**உய்த்துணர வைப்பு**' என்னும் உத்தி.

## மோசகு பொன்னையா

ணகர னகரங்களில் ஒன்று நின்று தொடர அவற்றின் முன்னர் நிற்பினும், வகரத்தின் பின்னர் நிற்பினும், மகரம் தன் அளவிற் குறுகி ஒலிக்கும், எ–று.

குறுகுதல், கால் மாத்திரை அளவாகக் குறுகுதல்.

எ–டு.

***மருளினு மெல்லாம் மருண்ம்.***

***திசையறி மீகானும் போன்ம்.***

***தரும் வளவன்.***

***வரும் வண்ணக்கன்.***

மருளும், போலும் என்பன மருண்ம், போன்ம் என உகரங்கெட்டுத் திரிந்து நின்றன.

தொன்னூல் விளக்க முடையார்,

***மகரம் லளக்கீழ், வம்மேற் குறுகும்***

என்று விதிப்பது மிகப் பொருத்த முடையதாகும். செய்யுளில் போலும் என்னுஞ் சொல் போன்ம் என்றாகும் என்றும், அவ்வாறாங்கால் அம் மகரம் கால் மாத்திரை யளவாகக் குறுகும் என்றுமே தொல்காப்பியர் கூறினார். தம் காலத்தில் மருளும் என்பது மருண்ம் என்று ஆனமை நோக்கி, ணகர முன்னும் மகரங் குறுகும் என்றார்.

தற்கால மொழியியலார் கருத்துப்படி, மருண்ம், சென்ம் என அமையும் செற்களில், ***ண், ன் என்னும் மெய்கள் அசைநிலை பெறுகின்றன என்றே கொள்ளல் சாலும்.***

மகரக் குறுக்கம் ணகரத்தின் பின்னர், னகரத்தின் பின்னர், வகரத்தின் முன்னர் என்னும் இடவகையால் மூன்றென்பர். அவ்விடங்களில் அது ஞ ம் ஞ ஒலியனின் மாற்றொலியாக உள்ளது எனக் கொள்க.

**(41)**

## ஆய்தக் குறுக்கம்

### 96. லளவீற் றியைபினா மாய்த மஃகும்.

**லள ஈற்று இயைபின் ஆய்தம் அஃகும்.**

la ḷa īṟṟu iyaipiṉ āyṭam akhkum.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

**Shortened guttural**

The Guttural which is generated from the combination of (final) l and l with (an initial) 't' it is shortened (in quantity).

## ஒப்புமைப் பகுதி

**ஈறயல் மருங்கினும் இசைமை தோன்றும்**

(தொல். : 39)

**உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**
**மொழிக் குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா**
**ஆய்தம் அஃகாக் காலையான**

( தொல். : 40)

**அஃது ஈற்று ளத் இருந்துளி அஃகும்**

(தொன். : 13:2)

**ளவிறு புணர்ச்சியி னாய்த மஃகும்**

(மு.வீ. : 39)

**இன்னலள வலித்திரிபின் இடத்து ஆய்தங் குறுகும்**

(சுவாமி. : 18:3)

## மயிலை நாதர்

**எ—ன்.** ஆய்தக்குறுக்கமா மாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** லகர ளகர வீறு புணர்வுழி வரும் ஆய்தம் குறுகும், **எ — று.**

**வ — று.:**

கஃறீது, முஃடீது என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ — னின்,** ஆய்தக் குறுக்கம் வருமாறு **உணர் — ற்று.**

**இ—ள்.:** லகார ளகார வீற்றுப் புணர்ச்சியினால் வரும் 'குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம் ஆகவும் பெறூஉம்' என்ற ஆய்தம் இருமருங்குமாய எழுத்தின் தொடர்பால் தன் அரைமாத்திரையில் குறுகும், **எ—று.**

**உ—ம்.:**

கஃறீது முஃடீது என வரும்.

இது **முடிவிடங்கூறல்** என்னும் உத்தி. இவ் வாய்தம் குறுகாது எனக் காண்டல் விரோதம் கூறுவாரும் உளர்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** ஆய்தக் குறுக்கம் ஆமாறு கூறியது.

**இ—ள்.: லள வீற்று இயைபினாம்** – லகார ளகார ஈறு புணருமிடத்தே உண்டாகும், **ஆய்தம் அஃகும்** – ஆய்தம் குறுகி ஆய்தக் குறுக்கமாம், **எ—று.**

**உ—ம்.:**

கஃறீது, முஃடீது என வரும்.

ஆயுதக் குறுக்கம் ஆக இரண்டு.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஆய்தக் குறுக்கம் வருமாறு உணர்த்துகின்றது,

இ—ள்: **லள வீற்றியைபின் – லகார ளகார வீற்றுப் புணர்ச்சியில், **ஆம்** – ஆகின்ற, **ஆய்தம்** – குறில்வழி "லளத்தவ் வணையினாய்த மாகவும் பெறூஉ மல்வழியானே" என்னுமாய்தம், **அஃகும்** – தன்னரை மாத்திரையிற் குறுகும், **எ—று.**

**உ—ம்.:**

கஃறீது – முஃடீது, எனவரும்.

**இது முடிவிடங் கூறல்,** என்னு முத்தி.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*ஆய்தக்குறுக்கம் எங்கே வரும்?*

லளவீற் றியைபினா மாய்த மஃகும்

(ல ள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம் அஃகும்)

**இ - ள்.ல ள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம்** - லகார ளகாரவீற்றுப் புணர்ச்சியில் ஆகின்ற ஆய்தம். **அஃகும்** - தன்னரை மாத்திரையிற் குளுகும். எ - று.

**உ - ம்.**

கல் + தீது = கஃறீது

முள் + தீது = முஃடீது

என வரும்.

*ஆய்தக் குறுக்கம் எதனாலிரண்டாயின?*

இடவகையால் இரண்டாயின.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது**, ஆய்தக் குறுக்கம் வருமாறுணர்த்துகின்றது.

**இ—ள்.: லள வீற்று இயைபினாம்**—லகார ளகார வீற்றுப் புணர்ச்சியிலே வரும், **ஆய்தம் அஃகும்** – ஆய்தந் தன் அரை மாத்திரையிற் குறுகும், **எ—று.**

**உதாரணம்.:**

கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது – என வரும்.

இது **முடிவிடங்கூறலென்னும்** உத்தி; என்னெனின், மெய்யீற்றுப் புணரியலுள்,

***'குறில்வழி லளத்தவ் வணையின்'***

என்னுஞ் சூத்திரத்தை நோக்கிக் கூறுதலாலென்க. பிறப்பிலக்கண முற்றிற்று.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :–** லளஈற்று இயைபின் ஆம் – லகார ளகார ஈற்றுப்புணர்ச்சியில் ஆகின்ற, ஆய்தம் – ஆய்தமானது, அஃகும் – (தன் மாத்திரையில்) குறுகும்.

**குறிப்பு :–**

ஆய்தக் குறுக்கம் – அரை மாத்திரையினதாகிய ஆய்தம் குறுகிக் கால் மாத்திரையினதாய் நிற்பது.

**உ–ம்:–**

கல் + தீது = கஃறீது

முள் + தீது = முஃடீது

இது "குறில்வழிலள" என்னுஞ் சூத்திரம் நோக்கிக் கூறலால் **முடிவிடங் கூறல்** என்னும் உத்தி.

ஆய்தக் குறுக்கம் இடவகையால் இரண்டாதல் காண்க.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: ல ள ஈற்று இயைபின் ஆம்** – லகார ளகார வீற்றுப் புணர்ச்சியில் ஆகின்ற, **ஆய்தம்** – "குறில்வழி லளத்தவ் வணையி னாய்தமாகவும் பெறூஉ மல்வழி யானே" என்ற ஆய்தம், **அஃகும்** – தன்னரை மாத்திரையிற் குறுகும். **எ — று.**

**உ — ம்.:**

கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது என வரும். இது **முடிவிடங் கூறலென்னு** முத்தி. ஆய்தக் குறுக்கம் இடவகையால் இரண்டாதல் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். லள ஈற்று இயைபின் ஆம் ஆய்தம்** – லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியில் உண்டாகின்ற ஆய்தம், **அஃகும்** – தன்னரை மாத்திரையிற் குறுகும், எ—று.

**உ—ம்.**

கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது என வரும்.

லகார ளகாரவீற்றுப் புணர்ச்சியில் ஆய்தம் வருதலை

***குறில்வழி லகரத் தவ்வணை யினாய்த***

***மாகவும் பெறூஉ மல்வழி யானே'*** என்னுஞ் சூத்திரத்தாலறிக.

இது முடிவிடங்கூறலென்னுமுத்தி.

திரிந்த எழுத்து வகையால் ஆயுதக் குறுக்கம் இரண்டாதலறிக.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.: ல ள ஈறு இயைபின்** - (தனிக்குறிலடுத்த) லகர ளகர வீற்றுப் புணர்ச்சியில். **ஆம்** - (வருமொழி முதலில் தகரம் வரும் பொழுது) ஆகின்ற. **ஆய்தம் அஃகும்** - (தன் அரை மாத்திரையிற்) குறுகும். **எ-று.**

உ - ம்.

அல் + திணை = அஃறிணை; முள் + தீது = முஃடீது.

'லளவீற் றியைபி னாமாய்தம்' என்றது. **முடிவிடங்கூறல்** என்னும் உத்தி.

***குறில்வழி லளத்தவ்வணையி னாய்த***

***மாகவும் பெறூஉம் அல்வழி யானே***

என்னுஞ் சூத்திரத்தை நோக்கிக் கூறுதலால். முடிவு இடம் கூறல் - தான் சொல்லும் இலக்கணத்திற்கு விதி உள்ள இடத்தைச் சொல்லுதல். ஆய்தக் குறுக்கம் திரிபு வகையால் இரண்டாதல் காண்க.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். ல ள ஈற்று இயைபின் ஆம்** — லகார ளகார வீற்றும் புணர்ச்சியில் நின்ற, **ஆய்தம்** — ("குறில் வழி லளத்தவ் வணையி னாய்த — மாகவும் பெறூஉ மல்வழி யானே" என்ற 228—ஆவது சூத்திர விதிப்படி வந்த) ஆய்தம், **அஃகும்** — தன் அரை மாத்திரையிற் குறுகும், எ—று.

உ—ம்.

கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது. 'குறில்வழி லள' என்னும் சூத்திரத்தை நோக்கிக் கூறப்படுதலால், இது 'முடிவிடங்கூறல்' என்னும் உத்தி பற்றிக் கூறியதாகும். ஆய்தக் குறுக்கம் இடவகையால் இரண்டாதல் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். ல ள ஈற்று இயைபின் ஆம்** — லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியில் வரும், **ஆய்தம்** — ('குறில்வழி லளத்தவ் வணையினாய்த, மாகவும் பெறூஉ மல்வழி யானே" என்ற) ஆய்தம், **அஃகும்** — (தன்மாத்திரையில்) குறுகும். எ—று.

பொ — ரை.

லகர, ளகர ஒற்றெழுத்துக்களினுடைய ஈற்றுப் புணர்ச்சியினால் ஆகும் ஆய்தம் தன்மாத்திரையில் குறுகும்.

உ–ம்.

கல்+தீது–கஃறீது.

மு+தீது=முஃடீது.

இது முடிவிடங் கூறல் என்னும் உத்தி. (முடிவிடங் கூறல்–தான் சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியந் தோன்றும் இடத்தைச் சொல்லுதல்.) இலக்கணம் என்றது, "ளவீற்றியைபினா மாய்தமஃகும்" என்பதை. இலக்கியம் என்றது "குறில்வழி லளத்தவ்வணையி னாய்த, மாகவும் பெறூஉ மல்வழியானே" என்பதை ஆய்தக் குறுக்கம் இடவகையால் இரண்டாதல் காண்க.

## கா. நமச்சிவாய முதலியார்

*லள ஈற்று இயைபின் ஆம் - லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியில் வரும், ஆய்தம் - ஆய்தம், அஃகும் - (தன் மாத்திரையிற்) குறுகும்.*

*உதாரணம்*

கல்+தீது–கஃறீது.

*முள் + தீது = முஃடீது*

*'குறில்வழி லளத்தவ் வணையினாய்த மாகவும் பெறூஉ மல்வழி யானே' என்னும் புணரியல் விதியை நோக்கி ஈண்டுக் கூறுதலால், இது, 'முடிவிடங் கூறல்' என்னும் உத்தி.*

## மோசகூ பொன்னையா

லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சியால் ஆகும் ஆய்தம் தன் அளவில் குறுகும், எ–று.

எ–டு.

கல் + தீது = கஃடீது, முள் + தீது = முஃடீது.

ஆய்தம் தன்னாற் சாரப்பட்ட வல்லொலியை உரசொலியாக்கி நிற்கும் இயல்பினதே யாயினும், திரிபு

ஒலியாக அரை மாத்திரையின் மிக்கும் குறைந்தும் ஒலிக்கும் தன்மையது என்பது,

**உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**

**மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தி னியலா**

**ஆய்தம் அஃகாக் காலையான,**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் புலனாகிறது. அதனால், உரு இசை பற்றிய கஃறு, சுஃறு என்னும் சொற்களில் அது தன் மாத்திரையின் மிக்கு ஒலிப்பினும் வரிவடிவில் ஒரெழுத்தாகவே எழுதப்படும் என்பதும் புலனாகின்றது. ஆய்தம் கால் அளபாக அஃகும் என்று கொண்ட இவ்வாசிரியர், அதற்கு இடம் விதித்து இவ்வாறு நூற்பா செய்தார். பிற இலக்கண ஆசிரியர் ஆய்தக் குறுக்கம் பற்றிக் கூறிற்றிலர்.

தொல்காப்பியரும், பவணந்தியாரும் கூறியுள்ள வாற்றால் குற்றெழுத்தை யடுத்து வல்லெழுத்துக்கு முன்னராக அமையும் இடத்திலேயே ஆய்தம் அமையும் என்பதும், வ், ல், ள் என்பன அல்வழிப் பொருளில் ஒலிப்பில் அடைப்பொலிகளோடு புணரும் நிலையில் தம் நிலையிற் குன்றி ஆய்தமாகத் திரிகின்றன என்பதும், அந் நிலையில் அவை தம் குரலிசைப்பும் (வ்), நெகிழிசைப்பும் (ல், ள்) குன்றப்பெற்ற தோடமையாமல், ஆண்டுவரும் குரலிசைப்பில் அடைப்பொலியோடு இரண்டறக் கலப்பதால் அமையும் கலவை நிலையில் தோன்றும் உரசொலித்தன்மையின் குறியாகவே ஆய்தம் எழுதப்படுகின்றது என்பதும் போதரும். அவற்றுள் அரையுயிராம் வகரத்தின் திரிபாம் ஆய்தத்தை (அஃது, பஃது) இயல் ஆய்தம் என்றும் இசைமை பெற்ற மெய்களாம் ல ள என்பவற்றின் திரிபாம் ஆய்தத்தை ஆய்தக் குறுக்கம் என்றும் கொள்ளும் ஒரு மரபு இருந்தமை நன்னூலார் கொள்கையால் வெளிப்படுகின்றது. ஆய்தம் தமிழில் ஓர் ஒலியன் தகுதி பெறவில்லை. அது ஹு வ் ஹு, ஹு ல் ஹு, ஹு ள் ஹு ஆயவற்றின் கட்டில்லா மாற்றொலியாக அமைகின்றது எனக் கொள்க. இவ் வகையால் ஆய்தக்குறுக்கம் இரண்டென்பர்.

## எழுத்தின் உருவம்

**97. தொல்லை வடிவின வெல்லா வெழுத்து
மாண் டெய்து மெகர மொகரமெய் புள்ளி.**

தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகர மெய் புள்ளி.

ṭollai vativiṉa ellā eḷuṭṭum āṇtu
eyṭum ekara okara mey puḷḷi

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Form**

**The use of dot**

All letters have their original forms; and when so employed, e̲ and o̲ and the Consonants are sometimes dotted.

### ஒப்புமைப் பகுதி

உட்பெறு புள்ளி உரு ஆகும்மே
(தொல். : 14)

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
(தொல். : 15)

எகர ஒகரத்து இயற்கையும் அற்றே
(தொல். : 16)

எஒமெய் புள்ளிபெறும்....................
( நேமி. : 9: 2–3)

எகர ஒகரமெய் யிற்புள்ளி மேவும்
(வீ. : 3: 3)

ஊழ்மைத்த வடிவு எகர வொகர மெய்புள்ளியுமாம்
(சுவாமி. : 20:1)

**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையில்**
**இறுதியாகிய பதினெட்டு மெய்களு மேலே**

(மு. வீ. : 40)

**எகர ஒகரத் தியற்கையு மற்றே**

(மு. வீ. : 41)

**நீட்டல் சுழித்தல்**
**குறில் மெய்க்கு இரு புள்ளி**

(தொன். : 12)

## மயிலை நாதர்

எ—ன், நிறுத்தமுறையானே வடிவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** எல்லா வெழுத்தும் பழையதாக வருகின்ற வரிவடிவினவேயாம்; அவ்விடத்து எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளிபெற்று நிற்பனவாம், எ — று.

வ — று.:

எரி, எரி: [1]ஒளி, ஒளி; உல்கு, உலகு; மண்மகள், மணமகள்; கண்மணி, கணமணி எனக் கண்டுகொள்க.

'ஆண்டு' என்ற மிகையானே, தாது, ஏது என்றற் றொடக்கத்து ஆரியமொழிகளும், எட்டு, கொட்டு என்றற் றொடக்கத்துப் பொதுமொழிகளும், குன்றியாது, [2]நாடியாது, எட்டி யாண்டுளது என்றற் றொடக்கத்துப் புணர்மொழிப்பொருள் வேறுபாடு களும் அறிதற் பொருட்டுக் [3]குற்றுகரக் குற்றி கரங்களுக்கு மேற் புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க. உருவமுற்றும்.

## சங்கர நமச்சிவாயர்

எ — னின், நிறுத்தமுறையானேஉருவமாமாறு உணர்—ற்று.

**இ—ள்.:** எல்லா வெழுத்தும் பல வேறுவகைப்பட வரைந்து வழங்கும் பழைய வடிவினை உடையவாம்; அவ்வடிவினவாய் வழங்குமிடத்துத் தனித்தும்,

---

பாட வேறுபாடு.:

1. ஒதி. ஓதி 2. மாடி யாது

3. குற்றிகரக் குற்றுகரங்கட்கு

உடம்பூர்ந்தும் வரும் எகர ஒகரங்களும் தனி மெய்களும் இயல்பாய புள்ளியைப் பிற்காலத்து ஒழித்து வரைந்து ஏகார ஓகாரங்களோடும் உயிர்மெய்களோடும் ஐயப்பட வழங்கும் வழக்கினை யுடையவன்றித் துணியப்படும் தொல்லை வடிவினது உறுப்பாய புள்ளியைப் பெறும், எ – று.

**வரலாறு.:**

எ எ; ஒ ஒ; கெ் கெ; கொ் கொ; க் க என வரும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** நிறுத்திய முறையே எழுத்துக்களது வடிவிலக்கணம் கூறியது.

**இ–ள்.: தொல்லை வடிவின எல்லா வெழுத்தும்** – எல்லா வெழுத்தும் பழையதாக வருகின்ற வடிவினவேயாம், **ஆண்டெய்தும்** – அவ்விடத்துப் பொருந்தி நிற்பனவாம், **எகார மொகார மெய் புள்ளி** – எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளி பெற்று நிற்கும், **எ–று.**

**தொகையுரை:**

எழுத்தினது தன்மையும் எழுத்தினது வடிவும் நமக்கு உணர்த்தலாகாமையின் ஆசிரியர் ஈண்டு உரைத்திலரெனக் கொள்க. இங்ஙனம் கூறிய வடிவாவது கட்புலனாகியே நிற்கும் வரி வடிவு. அது வட்டம் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தால் உணரும் நுண்ணறி வில்லோரும் உணர்தற்கு எழுத்துகட்கு வேறு வேறு வடிவங் காட்டி எழுதப்பட்டு நடத்தலிற் கட்புலனாகிய வரிவடி வுடையவும் உடையவாயிற்று.

**உ–ம்.:**

எரி, எரி; ஒளி ஒளி; உலகு, உலகு; மண்மகள், மணமகள்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** நிறுத்தமுறையால் உருவமாமாறு உணர்த்தின்றது,

**இ–ள்.: எல்லா வெழுத்தும்**–எல்லா வெழுத்துகளும், **தொல்லை வடிவின** – பல்வேறு வகைப்பட வெழுதி வழங்கு பழைய வடிவினை யுடையவாம்,

**ஆண்டு** – அவ் வடிவை யுடையவாய் வழங்குமிடத்து, **எகரம்** – எகரமும், ஒகரம் – ஒகரமும், **மெய்** – மெய்களும், **புள்ளி** – புள்ளியை, **எய்தும்** – பெறும், **எ – று.**

**உ–ம்.:**

எ ஒ க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என
வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*உருவங் கூறுஞ் சூத்திரம் யாது?*

தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்

டெய்து மெகர மொகரமெய் புள்ளி.

(தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகர மெய் புள்ளி.)

**இ – ள். எல்லா எழுத்தும் தொல்லை வடிவின** – எல்லா வெழுத்துக்களும் நெடுங்கணக்கினுள் எழுதப்பட்டு வருகின்ற பழைய வடிவினை யுடையவாம். **ஆண்டு எகர ஒகரம் மெய் புள்ளி எய்தும்**–அவ்வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து எகர மும் ஒகரமும் மெய்களும் மேற் புள்ளியைப் பெறும். **எ – று.**

எல்லா எழுத்தும் நெடுங்கணக்கில் எழுதப்பட்டு வரும் பண்டை வடிவினையே வடிவாகவுடையன. நெடுங்கணக்கில் வரும் பண்டை வடிவாவது, உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முதலெழுத்துக்கள் முப்பதும்,தம்முட் புள்ளிபெறற்பாலன உளவாகவும் புள்ளியின்றி எழுதப்பட்டு வரும் வடுவாம். இந்நூலுள்ளும்,

***கம்முதன் மெய்ம் மூவாறென விளம்பினர் புலவர்***

எனவும்,

***வல்லினங் கசடதபற வெனவாறே***

எனவும் புள்ளியின்றி வழங்கப்பட்டவாறு காண்க.

புள்ளியும் தொல்லை வடிவேயாயினும் எகர ஏகாரங்கட்கும்,ஒகர ஓகாரங்கட்கும் தனிமெய் அகரமேறிய மெய்கட்கும் வடிவொப்புமை நோக்கி, அவை தம்முள் வேற்றுமை யெடுத்துக் கூறி அதனை வலியுறுத்து முகத்தான் அவ்வழக்கின்கண் மாணாக்கரை நிறுத்துமாறே,

ஆண்டெய்து மெகரவொகரமெய் புள்ளி என்றாரெனக் கொள்க.முற்காலத்தார் எகரத்துக்கிட்ட புள்ளியை இக்காலத்தார் விட்டுப்

புள்ளியில்லாத வடிவினையுடைய எ (ஏகாரத்தை ) எ என இவ்வாறு திரித்து எழுதுவர்.ஒ ஓவும் அப்படியே.

உ – ம்.

எரி,எரி (ஏரி),ஒடு,ஒடு (ஓடு),கெண்டை,கெழல் (கேழல்),கொண்டல், கொடை (கோடை),உல்கு, உலகு என எகரமும் ஒகரமும் தனிமெய்யும் புள்ளி பெற்று நின்றவாறு காண்க.

முன்னே 'புள்ளி விட்டவ்வொடு' என்னுஞ் சூத்திரத்தில் உருவு திரிந்துமெனக் கூறியது வருமாறு

தனிமெய்கள் மற்றைய உயிர்களோடு கூடுமிடத்து மேலும் கீழும் விலங்கு பெற்றுங்,கோடு பெற்றும்,புள்ளி பெற்றும், புள்ளியும் கோடுமுடன் பெற்று முருவந்திரியும்.கி,கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன.கெ,கே முதலியன கோடு பெற்றன.கா,ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியைப் பிற்காலத்தார் காலாக வெழுதினர். மகரத்திலுமிரண்டு புள்ளியுள் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர்.கொ,கோ,ஙொ,ஙோ முதலியன புள்ளியுங் கோடு முடன் பெற்றன.

ககர எகரத்தினது பண்டை வடிவு – ෙക

ககர எகரத்தினது புதிய வடிவு – கெ

ககர ஏகாரத்தினது பண்டை வடிவு – 1 க

ககர ஏகாரத்தினது புதியபண்டை வடிவு – கே

கா ஙா முதலியவற்றின் பண்டை வடிவு – க0, ங0

இவையே புள்ளி பெற்றன வெனப்பட்டன.

இப் புள்ளியைப் பிற்காலத்தார் – ா – இப்படிக் காலாக்கினர்

ககர ஒகரத்தினது பண்டை வடிவு – ෙക0

ககர ஒகரத்தினது புதிய வடிவு – கொ

ககர ஓகாரத்தினது பண்டை வடிவு – 1 க0

ககர ஓகாரத்தினது பண்டை வடிவு – கோ

இவையே புள்ளியுங் கேடுங் உடன் பெற்றனவாம்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது**, நிறுத்தமுறையே உருவிலக்கண முணர்த்துகின்றது.

**இ-ள்.: எல்லா வெழுத்தும் தொல்லை வடிவின** – எல்லா எழுத்துக்களும் பல வேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவையே யுடையனவாம், **ஆண்டு** – அவ்வாறு வழங்குமிடத்து, **ஏகார மோகார மெய்** – ஏகார ஒகாரங்களுந் தனிமெய்களும், **புள்ளி யெய்தும்**–பழைய புள்ளியைப் பெறும், **எ-று.**

இவ்வாறு, கூறுதலாற் பிற்காலத்தார் அந்தப் புள்ளியை நீக்கிச் சந்தேகப்பட வழங்கி வந்தன ரென்பதாயிற்று. **வரலாறு.:**

எ ஏ – ஒ ஓ – கெ கே – கொ கோ – க்க – ங்ங – என வரும். மற்ற உயிர்மெய்களுந் தனிமெய்களும் இவ்வாறே புள்ளிபெறுமெனக் காண்க.

தொல்லாசிரியர் முதலாயினோர்,

***பழையன கழிதலும் புதியன புகுதலும்***

***வழுவல கால வகையி னானே***

எனவும், இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல் எனவும் கூறினமையால் எகர மொகர மெய்புள்ளி பெறுமென்ற இச்சூத்திரத்தை ஏகார மோகார மெய்புள்ளி பெறுமெனத் திருப்பவேண்டிற்று; என்னெனின் இக் காலத்தார் ஏகார ஒகாரங்களுக்கே புள்ளியிட்டெழுதுவது பெருவழக்கா யினமையா லென்க .

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– எல்லா எழுத்தும்** – எல்லாவெழுத்துக்களும், **தொல்லை வடிவின** – (பலவேறு வகைப்பட எழுதி வழங்கும்) பழைய வடிவினை யுடையனவாம்; **ஆண்டு** – அவ் வடிவினை யுடையனவாய் வழங்குமிடத்து, **எகரம் ஒகரம்** – எகரமும் ஒகரமும், **மெய்** – மெய்களும், **புள்ளி எய்தும்** – புள்ளியைப் பெறும்.

**உ-ம்:-**

எ-ஒ- க்-ங்-ச்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன் என வரும்.

குறிப்பு :-

எகர ஒகரங்கள் புள்ளியெய்து மென்றது, அவை தமிழுக்குச் சிறப்பெழுத்தாதலினென்க. இக்காலத்தில் எகர ஒகரங்களைப் புள்ளியிட்டு எழுதுவதில்லை.

“ஏகார ஓகாரமெய்” என்று பாடமோதுவர் இராமாநுச கவிராயர்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: எல்லா வெழுத்தும் தொல்லை வடிவின** – எல்லா வெழுத்துக்களும் பலவேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவினை யுடையனவாம், **ஆண்டு எகரம் ஒகரம் மெய் புள்ளி எய்தும்** – அவ் வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளியைப் பெறும். **எ — று.**

**வரலாறு.:**

எ ஒ எனவும். க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனவும் வரும்.

எ ஒ புள்ளியிட்டெழுதும் வழக்கம் இப்போது இன்று.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ—ள். எல்லாவெழுத்தும் தொல்லை வடிவின** – எல்லா வெழுத்துக்களும் பல வேறுவகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவினை யுடையனவாம் , **ஆண்டு** – அப்படி வழங்குமிடத்து, **எகரம் ஒகரம் மெய் புள்ளி பெறும்** – எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளியைப் பெறும், **எ—று.**

**உ—ம்.**

அ ஆ, க கா, முதலியன தொல்லைவடிவின.

எ ஒ எ – ம் க்ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

எனவும் வரும். ஆயினும் இக்காலத்தில் எகர வொகரங்கள் எழுதப்படுதல் அவ்வாறன்றென வறிக.

பவணந்திமுனிவர் நன்னூற் செய்த காலத்தில் எகர ஏகாரங்களுக்குப் பேதந் தோன்றாமல் அவ்விரண்டையும் ஒரே வடிவாகவும், ஒகர ஓகாரங்களுக்குப் பேதந் தோன்றாமல் அவ்விரண்டையும் ஒரே வடிவாகவும், பதினெட்டு மெய்களுக்கும் அகரவுயிரோடு கலப்புற்ற பதினெட்டு உயிர்மெய்களுக்கும் பேதந் தோன்றாமல் முறையே அவ்வவற்றை ஒரே வடிவாகவும் எழுதி வழுவாக வழங்கும் வழக்கம் நிகழ்வுற்றதாதலின் அதனை நீக்கி, தடுமாற்றமின்றி வழங்குவித்தற் பொருட்டு எய்து மெகர வொகர மெய்புள்ளி மென்றார் .பேதந் தோன்றா தெழுதப்பட்டமையைப் பழைய கையெழுத்துப் பிரதிகளிலும், தற்காலக் கையெழுத்துக் கடித வாசகங்களிலும் மின்றுங் காணலாம். தற்காலத்தில் மெய்களுக்கும் அவ்வுயிர் மெய்களுக்கும் பேதந் தோன்ற மெய்கள் புள்ளியிடப்படுகின்றனவேனும் எகர வொகரங்கள் புள்ளியிப்படவில்லை.

எகர ஏகாரங் களுக்குப் பேதந் தெரிய ஏகாரத்தின் கீழிழிந்த கீற்றை இடப்புறத்தே சிறிது மடக்கி நீட்டியும், ஒகர ஓகாரங்களுக்குப் பேதந் தெரிய கீழிழிந்து மேனோக்கிய கீற்றைச் சுழித்தும் எழுதி வழங்குகின்றனர்.

ஆய்தத்தைச் சிறுபான்மை ஃ இவ்வுருவமாயும் வழங்குகின்றனர்.

பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல காலவகையினானே எனவும் இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல் எனவுங் கூறியிருத்தலால் இவ்வழக்கம் தள்ளப்படாது கொள்ளப்படும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: எல்லா எழுத்தும்** – எல்லா வெழுத்துக்களும், **தொல்லை வடிவின** – (பல வேறு வகைப்பட எழுதி வழங்கும்) பழைய வடிவை யுடையனவாம்; **ஆண்டு** – அவ்வாறு வழங்குமிடத்து, **எகரம் ஒகரம்** – எகர வுயிரும் ஒகரவுயிரும், **மெய்** – மெய்களும், **புள்ளி எய்தும்** – புள்ளியைப் பெறும்; **எ – று.**

உ—ம்.:

எ ஒ; க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என வரும்.

எகர ஒகரங்களைப் புள்ளியிட்டெழுதுதல், இக் காலத்தில் இல்லை.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். எல்லாவெழுத்தும் தொல்லை வடிவின** — எல்லாவெழுத்துக்களும் பலவேறு வகைப்பட எழுதி வழுங்கும் பழைய வடிவினை யுடையனவாம். **ஆண்டு எகரம் ஒகரம் மெய் புள்ளி எய்தும்** — அவ் வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளியைப் பெறும், **எ—று.**

**வரலாறு:**

எ ஒ — க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். எல்லா எழுத்தும்** — எல்லா எழுத்துக்களும், **தொல்லை வடிவின**— (பலவேறுவகைப்பட எழுதி வழங்கும்) பழைய வடிவினை யுடையனவாம்; **ஆண்டு** — அவ்வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து, **எகரம் ஒகரம்** — எகரமும் ஒகரமும், **மெய்** — மெய்களும், **புள்ளி எய்தும்** — புள்ளி பெறும். **எ—று.**

**பொ—ரை.:**

எல்லா வெழுத்துக்களும் (பலவேறு வகைப்பட எழுதிவழங்கும்) பழய வடிவினை யுடையனவாம்; அவ் வடிவினை யுடையவாய் வழங்குமிடத்து எகரமும், ஒகரமும், மெய்களும் புள்ளியைப் பெறும்.

**உ—ம்.**

எ ஒ; க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என வரும்.

## கா. நமச்சிவாய முதலியார்

**எல்லா எழுத்தும்** – எல்லா வெழுத்துக்களும், **தொல்லை வடிவின** – பழைய வடிவினை யுடையனவாம்; **ஆண்டு** – அவ்வடிவை யுடையவாய் வழங்குமிடத்து, **எகரம் ஒகரம் மெய்** – எகரமும் ஒகரமும் மெய்யெழுத்துக்களும், **புள்ளி எய்தும்** – புள்ளியைப் பெறும்.

**உதாரணம்**

எ ஒ க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

முன்னே, 'புள்ளிவிட்டவ்வொடு முன்னுருவாகியும்' (சூ-89) என்றதனால், மெய் புள்ளியோடு நிற்றல் தெளிவாம். ஆகலின், 'மெய்ப் புள்ளி' என்று பாடங்கொண்டு, எகர ஒகரங்கள் மெய்யின் புள்ளியைப் பெறும் எனப் பொருள் கூறுதலே ஏற்புடைத்தாம்.

## மோசகு பொன்னையா

எல்லா எழுத்துக்களும் பண்டையிற் பெற்றுள்ள வடிவினையே பெற்று விளங்கும்; அவ்விடத்து எகரமும் ஒகரமும், மெய்களும் புள்ளி பெற்று நிற்பனவாம், எ–று.

பண்டைத் தமிழ் எழுத்து மரபு பற்றித் தொல்காப்பியர் கூறுமிடத்து, குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் எகர ஒகர உயிர்கள் புள்ளி பெறுவன எனவும், மகரம் புறத்துப் புள்ளியோடு உள்ளும் புள்ளி பெற்று வரும் எனவும் உயிர் மெய்கள் உருவு திரிந்து நிற்பன எனவும் அறிவிக்கின்றார்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உயிர்மெய் மேலும் கீழும் விலங்கு பெற்றும் கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும் விளங்கின என்பர். தம் காலத்தில் பக்கத்தில் வரும் புள்ளி காலாக எழுதப்பட்டமையும், ஆய்தம் உள் வாங்கியிட்டு எழுதப்பட்டமையும் நச்சினார்க்கினியரால் புலப்படுத்தப்பட்டுள்ளன.

மகரம் உட்புள்ளி பெறுமென்று வீரசோழிய உரைகாரர் கூறினார். நேமிநாத உரைகாரர், அகரமல்லாத உயிரேறிய மெய், கொம்பும், காலும், கட்டும், வீச்சும் வேறுபடுதலின் வடிவு வேறுபடும் என்றார். இவ்வாறு தனி உயிர், தனி மெய்களின் வடிவொழித்து, ஏனை எழுத்துக்களின்

வடிவுகளெல்லாம் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன. முதலெழுத்துக்களின் வடிவம் அனைவருக்கும் ஒப்ப முடிந்ததாதலின், கூறாதொழிந்தனர் போலும், தாண்டவராய முதலியார் முற்காலத்தில் **க**$_0$ (கா), **கெ**$_0$ (கொ), **கெ11** (கௌ), உட்புள்ளி பெற்ற பகரம் ப் (ம) **உ01**, (ஊ) என்று எழுதப்பட்டதென்று கூறியதாகச் செல்வக்கேசவராய முதலியார் கூறியுள்ளார்.

இவ்வாறாகவும், நன்னூலார் எகர ஒகர மெய் என்பவற்றிற்குத் தாம் புதிதாக வடிவம் கூறுவார் போல், ஆண்டு, எய்தும் எகர ஒகர மெய் புள்ளி எனக் கூறியது ஏனெனப் புரியவில்லை. பண்டை வடிவில் இவை மட்டும் புள்ளி பெறுவன எனக் கூறி, புள்ளிபெறும் என முன்னோர் கூறிய பிற எழுத்துக்கள் தங்காலத்தில் புள்ளி இல்லாமல் எழுதப்பட்டமையால் பழையன கழிதலாக அவற்றை விடுத்து இவ்வாறு கூறினார் எனக் கொள்ளலாமெனின், அதுவும் உண்மைக்கு முரணானதாகவே படுகின்றது. இவ்வாசிரியர் காலத்துக்குப் பின்னர் வாழ்ந்து இந்நூலுக்கு உரை வகுத்த மயிலைநாதர் இந்நூற்பாவின் உரையில் ஆண்டு என்ற மிகையானே தாது ஏது என்றற் றொடக்கத்து ஆரிய மொழிகளும் குன்றியாது, நாடியாது, எட்டியாது, 'என்றற் றொடக்கத்துப் புணர்மொழிப் பொருள் வேறுபாடுகளும் அறிதற் பொருட்டுக் குற்றிகரக் குற்றுகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளர் எனக் கொள்க' எனக் கூறினமையும், தொல்காப்பிய உரையாசிரியராக, ஏறத்தாழப் பவணந்தியார் காலத்திலேயே வாழ்ந்த நச்சினார்க்கினியர் தம் காலத்தில் உள்வாங்கி யிட்டு மேல்கீழ் புள்ளியிட்டு ஆய்தத்தை எழுதி வந்தமையைக் குறிப்பிடுவதும், அக் காலத்தில் குற்றியலிகர உகரங்களும் ஆய்தமும் புள்ளி பெற்று வழங்கினமைக்குச் சான்று காட்டி நிற்கின்றன.

**வீரமாமுனிவர்** தொன்னூல் விளக்க உரையில்,மெய்யின் வடிவும், உயிர் மெய்யின் வடிவும் பலமுறை வேறுபடாமையானும், எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம், எப்போதும் ஒரு வடிவாகையானும், மயக்கம் நீப்பதுவேண்டி மேற்புள்ளி கொடுத்தார் புலவர். ஆகையால் குற்றெழுத்தின் மேல் நீண்ட புள்ளியும், ஒற்றெழுத்தின் மேற்சுழித்த புள்ளியும் வருமென்றுணர்க. (எரி, எரி, ஒதி, ஒதி)

என எழுதியுள்ளார். அவரே, பின்னர், ஏகார ஓகாரங்களை முறையே காலோடும் சுழியோடும், அவற்றின் குறில்களைப் புள்ளியில்லாமலும் எழுதும் முறையைத் தோற்றுவித்தார். அதுவே இன்றளவும் வழக்கில் இருந்து வருகிறது.

(43)

## 6. எழுத்தின் மாத்திரை

98. **மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே**
**குறிலோ டையௌக் குறுக்க மொற்றள**
**பரையொற் றிஉக் குறுக்க மாய்தம்**
**கால்குறண் மஃகா னாய்த மாத்திரை.**

மூன்று உயிர் அளபு இரண்டா நெடில் ஒன்றே
குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்று அளபு
அரை ஒற்று இ உக் குறுக்கம் ஆய்தம்
கால் குறள் மஃகான் ஆய்த மாத்திரை.

mūn̲ṛu uyir al̲apu iranṭā netil on̲ṛē
kuṛilōtu ai auk kuṛukkam oṛṛu al̲apu
arai oṛṛu i uk kuṛukkam āyṭam
kāl kuṛal̲ mak̲h̲kān̲ āyṭa māṭṭirai.

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Measure

### The Measure for letters

Three measures are assigned to Prolonged Vowels; two to long vowels; one to Short Vowels, short 'ai' short 'au' and prolonged

consonants; half to consonants short 'I' and short 'u' and the Guttural; and ***one-fourth*** to short 'm' and short Guttural.

## ஒப்புமைப் பகுதி

அஇஉ
எஒ வென்னும் அப்பால் ஐந்தும்
ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப

(தொல்.: 3)

ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஒள என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கம் நெட்டெழுத் தென்ப

(தொல்.: 4)

மெய்யோ டியையினும் உயிரியல் திரியா

(தொல்.: 10)

மெய்யின் அளபே அரையென மொழிப

(தொல்.: 11)

அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே

(தொல்.: 12)

அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை

(தொல்.: 13)

அளபெடை தனியிரண்டு அல்வழி ஐஒள
உளதாம் ஒன்றரை தனிமையு மாகும்

(அவிநயம்)

பதினெண் மெய்யு மதுவே மவ்வொடு
ஆய்தமும் அளபுஅரை தேய்தலும் உரித்தே

(அவிநயம்)

ஒற்றள பெழாவழிப் பெற்ற அல கிலவே

(அவிநயம்)

குறினெடில்கள் ஒன்றிரண்டு மூன்றளவு காலாம்
குறுகுமவ் வாய்தம் உயிர்மெய் – பெறுமுயிரே
மெய்யாய்தம் இஉக் குறுக்கமரை மென்மொழியாய்
ஐஒள அளவொன் றரை

(நேமி. : 5)

குற்றெழுத் தொன்று ஒன் றரையாகு மையௌ இரண்டு நெடில்,
ஒற்றெழுத் தாய்தம் இ உ அரை மூன்றளவு ஓங்குயிர்மெய்
மற்றெழுத் தன்னுயிர் மாத்திரை யேபெறும்.....

( வீர. : 5)

அஃகிய மவ்வும் ஆய்தமும் காலே
உஇக்குறள் ஒன்று ஆய்தம் அரையே
குறிலே ஐஔக் குறள் ஒற்றளபு ஒன்றே
நெடில் இரண்டு உயிரளபு ஒரு மூன்று என்ப

(தொன். : 19)

ஒன்றே குறினெடி லிரண்டள பாகும்

(மு. வீ. : 99)

ஐ ஔக் குறுக்கமொற் றளபெடை யொன்றே

(மு. வீ. : 100)

அஃகிய இஉ வாய்தமெய் யரையே

(மு. வீ. : 101)

அஃகிய மகரமும் மாய்தமுங் காலே

(மு. வீ. : 102)

ஓரெழுத் தொருமூன்று றொலிப்ப தின்றே

(மு. வீ. : 103)

அற்றநெடில் இரண்டு குறுகு ஐஔ முதல் ஈறு
ஒன்றரை இடையொன்றாம் குறில்ஒன்று
ஆய்தம் மெய்குற்றுகரம் குற்றிகரம் அரை
மவ்வாய்தக் குறுக்கமுங் கால்

(சுவாமி. : 20: 2– 3)

## மயிலை நாதர்

எ–ன், நிறுத்தமுறையானே எல்லா வெழுத்திற்கும் அளவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: உயிரளபெடை மூன்றும், நெட்டெழுத்து இரண்டும் குற்றெழுத்தும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் [1]ஒற்றளபெடையு மென்னு நான்கும் ஒரொன்று ஒன்றும், மெய்களும் குற்றியலிகரக் குற்றியலுகரங்களும் ஆய்தமும், ஒரொன்று அரையும் மகரக் குறுக்கமும், ஆய்தக் குறுக்கமும் ஒரொன்று[2]காலும் மாத்திரைகளளவாக வுடையவாம், எ–று.

அன்னவாதல் அவற்றிற்கு மேற்காட்டிய உதாரணங்களுட் காண்க.

## சங்கர நமச்சிவாயர் - சிவஞான முனிவர்

**எ—னின்,** நிறுத்தமுறையானே மாத்திரையாமாறு உணர் — ற்று.

**இ—ள்.:** உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம், நெடிலுக்கு மாத்திரை இரண்டாம்; குறிலுக்கும், ஐகாரக் குறுக்கத்திற்கும், ஔகாரக் குறுக்கத்திற்கும், ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றாம்; ஒற்றிற்கும், குற்றியலிகரத்திற்கும், குற்றியலு கரத்திற்கும், ஆய்தத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம்; மகரக்குறுக்கத்திற்கும், ஆய்தக் குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம், எ — று.

> உயிர்மெய்க்கு அளவு கூறாதொழிந்தார், மேல் 'உயிரளவாய்' என்றுரைத்தலின்; இஃது **உரைத்தாம்** என்னும் உத்தி.
>
> உயிரளபெடை நான்கு மாத்திரையவாதலும், ***ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஒன்றரை மாத்திரையவாதலும்*** ஆரிடத்துள்ளும் அவை போல்வனவற்றுள்ளும் அருகி வந்து செய்யுள் வழுவமைதியாய் முடிதலின், அவற்றை ஒழித்து, எல்லார்க்கும் ஒப்ப முடிந்து பயின்று வருவன மூன்று மாத்திரையும் ***ஒரு மாத்திரையுமே யாகலின்*** மூன்றுயிரளபு என்றும், ***ஒன்றே குறிலோடு ஐ ஔக் குறுக்கம் என்றும் கூறினார். குற்றியலுகரம் புணர்மொழி யிடைப்படின் குறுகிக் கான்மாத்திரை பெறுதல், உரையிற் கோடல் என்பதனாற் கொள்க.***

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** நிறுத்திய முறையே எழுத்துக்களது மாத்திரை ஆமாறு கூறியது.

**இ—ள்.: மூன்று உயிரளபு** — உயிரளபெடை மூன்று மாத்திரையும், **இரண்டா நெடில்** — நெட்டெழுத்து இரண்டு மாத்திரையும், **ஒன்றே குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்றளபு** — குற்றெழுத்தும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் ஒற்றள பெடையும், **ஒரோவொன்று** — ஒரு மாத்திரையும், **அரை ஒற்றியுக் குறுமை ஆய்தம்** — உடலெழுத்தும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் முற்றாய்தமும் ஒரோவொன்று அரை மாத்திரையும், **கால் குறள் மஃகான் ஆய்தம்** — மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் ஒரோவொன்று கால் மாத்திரையுமாம், **மாத்திரை** — மாத்திரை யென்றதை எல்லா எண்ணொடும் ஒட்டுக.

## விசாகப் பெருமாளையர்

**இது,** நிறுத்த முறையால் மாத்திரையாமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: மாத்திரை** – ஒலிக்குமளவு, **உயிரளபு** – உயிரளபெடைக்கு, **மூன் (றாம்)** – மூன்றாகும், **நெடில்** – நெட்டெழுத்திற்கு, **இரண்டாம்**–இரண்டாகும், **குறில்** – குற்றெழுத் திற்கும், **ஐக் (குறுக்கம்)** – ஐகாரக் குறுக்கத்திற்கும், **ஔக் குறுக்கம்** – ஔகாரக் குறுக்கத்திற்கும், **ஒற்றளபு** –ஒற்றள பெடைக்கும், **ஒன் (றாம்)** – தனித்தனி யொன்றாகும், **ஒற்று**–மெய்யெழுத்திற்கும், **இக் (குறுக்கம்)** – குற்றியலிகரத்திற்கும், **உக் குறுக்கம்** – குற்றியலுகரத்திற்கும், **ஆய்தம்** – ஆய்தத்திற் கும், **அரை (யாம்)** – தனித்தனி யரையாகும், **குறண் மஃகான்**– மகரக் குறுக்கத்திற்கும், **(குற) ளாய்தம்**–ஆய்தக் குறுக்கத்திற்கும், **கா(லாம்)** – தனித்தனி காலாகும், **எ – று.**

மேல் "உயிரளவாய்" என்று சொன்னதனால் இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை சொல்லவில்லை.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*எழுத்துக்களுக்கு மாத்திரைக் கூறும் சூத்திரம் யாது ?*

மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே குறிலோ டையௌக்
குறுக்க மொற்றள பரையொற் றிஉக் குறுக்க மாய்தம்
கால்குறண் மஃகா னாய்த மாத்திரை.

(மூன்று உயிர் அளபு இரண்டா நெடில் ஒன்றே
குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்று அளபு
அரை ஒற்று இ உக் குறுக்கம் ஆய்தம்
கால் குறள் மஃகான் ஆய்த மாத்திரை.)

**இ – ள். – உயிர் அளபு** ( மாத்திரை ) **மூன்று** – உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம்,**நெடில்**( மாத்திரை ) **இரண்டு ஆம்** – நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம், **குறிலோடு ஐ ஔக் குறுக்கம் ஒற்று அளபு** (மாத்திரை) **ஒன்றே** – குற்றெழுத்திற்கும் ஐகாரக் குறுக்கத்தி'ற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒற்றள பெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றாம்,**ஒற்று இ உக் குறுக்கம் ஆய்தம் அரை** – மெய் யெழுத்திற்கும் குற்றியலிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் ஆய்தத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம், **குறள் மஃகான் ஆய்த மாத்திரை கால்** – மகரக்குறுகத்திற்கும் ஆய்தக் குறுகத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம்.

*மூன்று மாத்திரை எழுத்து யாது?*

'(மாத்திரை) மூன்றுயிரளபு'

*இரண்டு மாத்திரை எழுத்து யாது?*

'(மாத்திரை) இரண்டாம் நெடில்'

*ஒரு மாத்திரை எழுத்துக்கள் எவை?*

'(மாத்திரை) ஒன்றே குறிலோ டையௌக்குறுக்க மொற்றளபு'

*அரை மாத்திரை எழுத்துக்கள் எவை?*

'(மாத்திரை) அரை ஒற்று இஉக்குறுக்க மாய்தம்'

*கால் மாத்திரை எழுத்துக்கள் எவை?*

(மாத்திரை) கால்குறண் மஃகான் ஆய்தம்

*இச் சூத்திரத்திலே மாத்திரை கூறப்படாத வெழுத்து யாது?*

உயிர்மெய்

*அதற்கு மாத்திரை கூறப்படாதது யாது பற்றி?*

முன்னே உயிர்மெய் யிலக்கணங் கூறிய சூத்திரத்திலே 'உயிரளவாய்' என்றதனால் ஈண்டுங் கூறப்பட்டிலது

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** நிறுத்தமுறையே மாத்திரை யிலக்கணங் கூறுகின்றது.

**இ–ள்.: மூன்றுயிரளபு** – உயிரளபெடைக்கு மூன்று மாத்திரை, **இரண்டா நெடில்** – நெட்டெழுத்திற்கு இரண்டு மாத்திரை, **ஒன்றே குறிலோடை யௌக் குறுக்க மொற்றளபு** – குற்றெழுத்திற்கும் ஐகார ஔகாரக் குறுக்கங்களுக்கும் ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை யொன்றாம், **அரை ஒற்று இ உக் குறுக்கமாய்தம்** – ஒற்றுக்களுக்கும் இகர உகரக் குறுக்கங்களுக்கும் ஆய்தத்திற்கும் தனித்தனி அரை மாத்திரையாம், **கால் குறள் மஃகான் ஆய்த மாத்திரை** – மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் தனித்தனி கால் மாத்திரையாம், **எ–று.**

மேலே உயிரளபா யென்றதினாலே இங்கே உயிர்மெய்க்கு அளவு கூறாதொழிந்தார், இது, **உரைத்தாமென்னும்** உத்தி.

> இனி உயிரளபெடை நான்கு மாத்திரையாய்ச் சிறுபான்மை வருதலும் உண்டு. அது செய்யுள் வழுவமைதியாதலால் மூன்றுயிரளபென்றார். இச் சூத்திரத்தை மூன்று, இரண்டு, ஒன்று, அரை, கால் என ஐந்து முடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :- மாத்திரை** – ஒலிக்கும் அளவு, **உயிரளபு மூன்று** – உயிரள பெடைக்கு மூன்றாகும்; **நெடில்** – நெட்டெழுத்திற்கு, **இரண்டு ஆம்** – இரண்டாகும்; **குறிலோடு** – குற்றெழுத்திற்கும், **ஐ ஔ குறுக்கம்** – ஐகார ஔகாரக் குறுக்கங் களுக்கும், **ஒற்றளபு** – ஒற்றளபெடைக்கும், **ஒன்றே** – (தனித்தனி) ஒன்றாகும்; **ஒற்று** – மெய்யெழுத்திற்கும், **இ உ குறுக்கம்** – இகர உகரக் குறுக்கங்களுக்கும் (குற்றியலுகரத்திற்கும் குற்றிய லுகரத்திற்கும்), **ஆய்தம்** – முற்றாய்த்திற்கும், (குறள்) **ஆய்தம்** – ஆய்தக் குறுக்கத்திற்கும், **கால்** – (தனித்தனி) காலாகும்.

குறிப்பு :-

'ஆம்' என்பதை மற்றவற்றோடுங் கூட்டுக. "புள்ளிவிட்டவ்வொடு" என்னுஞ் சூத்திரத்தில் "உயிரளவாய்" என்றதனால் இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை கூறுதொழிந்தார். இது உரைத்தாம் என்னும் உத்தி.

இனி, "செறா அஅய்வாழிய" என உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையினதாய் வருதிலுமுண்டு. 'ஐ ஔக்குறுக்கங்கட்கு மாத்திரை ஒன்றரை' என்றார் **புத்தமித்திரனார்.**

## ஆறுமுக நாவலர்

**இ –ள்.: உயிரளபு (மாத்திரை) மூன்று (ஆம்)** – உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம், **நெடில் (மாத்திரை) இரண்டு ஆம்** – நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம், **குறில் ஐ (க்குறுக்கம்) ஔக்குறுக்கம் ஒற்றளபு (மாத்திரை) ஒன்று (ஆம்)** – குற்றெழுத்திற்கும் ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்குந் தனித்தனி மாத்திரை ஒன்றாம், **ஒற்று இ(க் குறுக்கம்) உக் குறுக்கம் ஆய்தம் (மாத்திரை) அரை (ஆம்)** – மெய்யெழுத்திற்குங் குற்றிய லிகரத்திற்குங் குற்றியலுகரத்திற்கும் ஆய்தத்திற்குந் தனித்தனி மார்த்திரை அரையாம், **குறள் மஃகான் (குறள்) ஆய்தம் மாத்திரை கால் (ஆம்)** – மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்குந் தனித்தனி மாத்திரை காலாம், **எ – று.**

மேலே 'உயிரளவாய்' என்றதனால் இங்கே உயிர் மெய்க்கு மாத்திரை கூறாதொழிந்தார்; இது **உரைத்தாமென்னு** முத்தி.

"செறாஅஅய் வாழிய நெஞ்சு" என உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையினதாய் வருதலுமுண்டு.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். உயிரளபு** (மாத்திரை) **மூன்று** (ஆம்) - உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம், **நெடில்** (மாத்திரை) **இரண்டாம்** - நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம், **குறில் ஐ** (க்குறுக்கம்) **ஔக் குறுக்கம்** ஒற்றளபு (மாத்திரை) **ஒன்றே** (ஆம்) - குற்றெழுத்திற்கும் ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றாம், **ஒற்று இ**(க்குறுக்கம்) **உக்குறுக்கம் ஆய்தம்** (மாத்திரை) **அரை** (ஆம்) - மெய்யெழுத்திற்கும் குற்றிய லிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் முற்றாய்தத்திற்கும் தனித் தனி மாத்திரை அரையாம், **குறள் மஃகான்** (குறள்) **ஆய்தம் மாத்திரை கால்** (ஆம்) - மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம், **எ-று.**

மேலே 'உயிரளவாய்' என்றதனால், இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை கூறுாதொழிந்தார். இது உரைத்தாமென்னுமுத்தி.

> "செறாஅஅய் வாழிய நெஞ்சு" என்பதில் மூன்று மாத்திரையாய் வந்த அளபெடையெனக் கொள்ளின் செறா அய் என்பது புளிமா என்னுஞ் சீராகுமாதலின், பின்வந்த வாழிய என்னும் கூவிளம் ஆகிய சீருடனே கூடி நேரொன்றாசிரியத் தளையாய் வெண்பாவில் வெண்டளையல்லது பிறதளை வரலாகாது என்னும் விதிக்கு மாறாதலால், செப்பலோசை குறையாமைப் பொருட்டு நான்கு மாத்திரையாய் அளபெழுந்து வெண்டளை பிழையாது வந்தது. சூத்திரவுரையையு நோக்குக.
>
> மொழிமுதற்கண் ஐகாரக்குறுக்கம் ஒன்றரை மாத்திரையாயும், ஏனையிடங்களில் ஒரு மாத்திரையாயும், ஔகாரம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும் குறுகுமென்பது உய்த்துணர்ந்து கொள்க.
>
> அவ்வாறு உய்த்துணர்ந்து கொள்ளாவிடின்,
>
> ***வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்***
>
> ***வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்***
>
> ***வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்***
>
> ***வைகலை வைத்துணரா தார்*** எனவும்,
>
> ***கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்,***
>
> ***மெய் வேல் பறியா நகும்"*** எனவும்,

***ஔவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்***

***கேடு நினைக்கப் படும்*** எனவும் வரும் இலக்கியங்களுக்கு இலக்கணமின்றாய் முடியும்.

உயிரளபெடை நான்கு மாத்திரையவாதலும், ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஒன்றரை மாத்திரையவாதலும் ஆரிடத்துள்ளும் ஆரிடப் போலியுள்ளுஞ் சிறுபான்மை வந்து செய்யுள் வழுவமைதியாய் முடிதலின் அவற்றை யொழித்து, எல்லார்க்கும் ஒப்ப முடிந்து பெருவழக்காய் வருவன மூன்று மாத்திரையும் ஒரு மாத்திரையுமாதலின் '**மூன்றுயிரளபு**' என்றும் '**ஒன்றே குறிலோடை ஔக்குறுக்கம்**' என்றுங் கூறினார்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

இ-ள்.: **மாத்திரை** –, **உயிரளபு** – உயிரளபெடைக்கு, **மூன்று**– மூன்றாகும்; **நெடில்** – நெட்டெழுத்திற்கு, **இரண்டு ஆம்** – இரண்டாகும்; **குறிலொடு** – குற்றெழுத்திற்கும், **ஐக் குறுக்கம்** – ஐகாரக் குறுக்கத்திற்கும், **ஔக் குறுக்கம்** – ஔகாரக் குறுக்கத்திற்கும், **ஒற்றளபு** – ஒற்றளபெடைக்கும், **ஒன்றே** – (தனித்தனி) ஒன்றாகும்; **ஒற்று** – மெய்யெழுத்திற்கும், **இக் குறுக்கம்** – குற்றியலிகரத்திற்கும், **உக் குறுக்கம்** – குற்றியலுகரத்திற்கும், **ஆய்தம்** – முற்றாய்தத்திற்கும், **அரை** – (தனித்தனி) அரையாகும்; **குறள் மஃகான்** – மகரக் குறுக்கத்திற்கும், **குறள் ஆய்தம்** – ஆய்தக் குறுக்கத்திற்கும், **கால்** – (தனித்தனி) காலாகும்; எ–று.

மேல் "புள்ளிவிட்டவ்வொடு" என்ற சூத்திரத்தில், 'உயிரளவாய்' என்றதனால் உயிர்மெய்யின் மாத்திரை இவ்வளவென்று பெறப்பட்டமை பற்றி, இங்கே அதற்கு மாத்திரை சொல்லவில்லை; இது **உரைத்தாமென்றல்** என்னும் உத்தி.

**உரைத்தாம் என்றல்** – முன்னே சொன்னோமென்பது தோன்ற மீளவுஞ் சொல்லாது விடுதல். உயிர்மெய்க்கு மெய்ம்மாத்திரை யொழிய ஏறிய உயிர் மாத்திரையே மாத்திரை; உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரையும், உயிர்மெய்ந் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையு மாமென்க.

இனி, "செறாஅஅய் வாழிய நெஞ்சு", "இலாஅஅர்க்கில்லைத் தமர்" என உயிரளபெடை சிறுபான்மை (ஈரளபெடுக்குமிடத்து) நான்கு மாத்திரையினதாய் வருதலும் உண்டு.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். உயிரளபு** (மாத்திரை) **மூன்று** (ஆம்) – உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம், **நெடில்** (மாத்திரை) **இரண்டு ஆம்** – நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டாம், **குறில் ஐ** (க் குறுக்கம்) **ஔக்குறுக்கம் ஒற்றளபு** (மாத்திரை) **ஒன்று** (ஆம்) – குற்றெழுத்திற்கும் ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்குந் தனித்தனி மாத்திரை ஒன்றாம், **ஒற்று இ** (க்குறுக்கம்) **உக் குறுக்கம் ஆய்தம்** (மாத்திரை) **அரை** (ஆம்) – மெய்யெழுத்திற்கும் குற்றியலிகரத் திற்கும் குற்றியலுகரத்திற்கும் ஆய்தத்திற்குந் தனித்தனி மாத்திரை அரையாம், **குறள் மஃகான்** (குறள்) **ஆய்தம் மாத்திரை கால்** (ஆம்) – மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம், **எ–று.**

மேலே 'உயிரளவாய்' என்றதனால், இங்கே உயிர் மெய்க்கு மாத்திரை கூறாதொழிந்தார்; இது 'உரைத்தாம்' என்னும் உத்தி.

"செறாஅஅய் வாழிய நெஞ்சு" என உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையினதாய் வருதலுமுண்டு.

## கா. நமச்சிவாய முதலியார்

**மாத்திரை** – ஒலிக்கும் அளவு, **உயிரளபு மூன்று** (ஆம்) – உயிரளபெடைக்கு மூன்றாகும்; **நெடில் இரண்டு ஆம்** – நெட்டெழுத்திற்கு இரண்டாகும்; **குறில்** – குற்றெழுத்திற்கும், **ஐ** (குறுக்கம்) – ஐகாரங் குறுக்கத்திற்கும், **ஔ** (குறுக்கம்) – ஔகாரக் குறுக்கத்திற்கும், **ஒற்றளபு** – ஒற்றளபெடைக்கும், **ஒன்று** (ஆம்) – (தனித்தனி) ஒன்றாகும்; **ஒற்று** – மெய்யெழுத்திற்கும், **இ** (குறுக்கம்) – குற்றியலிகரத்திற்கும், **உ குறுக்கம்** – குற்றியலுகரத்திற்கும், **ஆய்தம்** – ஆய்தத்திற்கும், **அரை** (ஆம்) – (தனித்தனி); அரையாகும்; **குறள் மஃகான்** – மகரக் குறுக்கத்திற்கும், (குறள்) **ஆய்தம்** – ஆய்தக்குறுக்கத்திற்கும், **கால்** (ஆம்) – (தனித்தனி) காலாகும்.

'செறாஅஅய் வாழிய நெஞ்சு' என உயிரளபெடை சிறுபான்மை நான்கு மாத்திரையாய் வருதலுமுண்டு. மேல், 'உயிரளவாய்' (சூ-89) என்றதனால், இங்கே உயிர்மெய்க்கு மாத்திரை கூறாராயினார். இஃது, **'உரைத்தாம்'** என்னும் உத்தி.

## மோசகு பொன்னையா

உயிரளபெடைக்கு மூன்றும்; நெடிலுக்கு இரண்டும்; குறில், ஐகார ஔகாரக் குறுக்கங்கள், ஒற்றளபெடை இவற்றிற்குத் தனித்தனி ஒன்றும்; ஒற்று குற்றியலிகர வுகரங்கள், ஆய்தம் இவற்றிற்குத் தனித்தனி அரையும்; மகர ஆய்தக் குறுக்கங்களுக்குத் தனித்தனி காலுமாக மாத்திரை கொள்ளப்படும், **எ—று.**

உயிர்மெய்க்கு 'உயிரளபாய்' என்றவிடத்து மாத்திரை கூறப்பட்டது.

தொல்காப்பியர் அளபெடைக்கு அளபு வரையறை கூறவில்லை. அவர்,

*நீட்டம் வேண்டின் அவ்வள புடைய*

*கூட்டி எழுஉதல் என்பனார் புலவர்*

என்றே கூறிப் போந்தார். கூட்டி எழுப்பப்படும் அளபு ஒன்றுக்கு மேல் இருக்கலாம் என்பது மட்டும் 'அவ்வளபுடைய' என்று அவர் பன்மையாற் கூறியதால் நன்கு புலனாகிறது.திருவள்ளுவர்,

*உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் க*

*செறாஅஅய் வாழிய நெஞ்சு*

என்று செய்யுட் செய்து, அவ்வாறு எழுப்பப்படும் ஒலியளவை ஒன்றும் இரண்டுமாகக் கொண்டார். இஃதிவ்வாறாக வடமொழியில் மூன்று மாத்திரை அளவுள்ள **புலுதம்** என்ற ஓர் எழுத்துண்மையை அறிந்து, அப்புலுதமே தமிழ் அளபெடையாகும் என மயங்கியோரும் உண்டு. அன்னார் நெட்டெழுத்தின் அளபுகள் இரண்டோடு, எழுப்பப்படும் அளவு ஒன்றைக் கூட்டி, அளபெடை மூன்று மாத்திரை அளவுடைய ஓர் எழுத்தாகும் என்பர். யாப்பருங்கல விருத்தி உரையில்,

*குறிலொரு மாத்திரை நெடிலிரு மாத்திரை*

*யளபெடை மூன்றென் றறையல் வேண்டும்*

என்ற ஒரு மேற்கோள் பல்காய் நூற்பா என்று சுட்டப்படுகிறது. இவ்வாசிரியர் இந்நூற்பாவில், 'மூன்றுயிரளபு' என்றது அச்சார்பு பற்றிப் போலும்.

தொல்காப்பியர் அளபெடை யசைநிலையாகலும் உரித்தே என்றவிடத்து நெடிலோடு கூட்டி எழுப்பப்படும் ஒலியை மட்டும் அளபெடை என்றார் என்பதையும், இவ்வாசிரியர் நெடிலையும் கூட்டி எழுப்பப்படும் ஒலியையும் கூட்டாகக் கொண்டு அதனை அளபெடை என்று குறிப்பிட்டார் என்பதையும் மனங் கொள்க.

(44)

## 99. இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

இயல்பு எழு மாந்தர் இமை நொடி மாத்திரை.

iyalpu eḷu mānṭar imai noṭi māṭṭirai.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

### Measure defined

The (Standard) Measure of Quantity (of letter sounds) is the duration of a natural snap of the finger or twinkling of the eye.

**ஒப்புமைப் பகுதி**

**கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே**

(தொல். : 7)

**கண்ணிமை கைந்நொடி எனவே**

(அவிநயம்)

**கண்ணிமை கைந்நொடி காட்டும் மாத்திரை**

(தொன். : 19 : 1)

**இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை**

(மு. வீ. : 96)

**மட்டள வொடுமிதம் வரைமாத் திரையே**

(மு. வீ. : 97)

**உன்னல் காலே யூன்ற லரையே**
**முறுக்கன் முக்கால் விடுத்த லொன்றே**

(மு. வீ. : 98)

**குறித்து உணரிற் கண்ணிமைத்த**

**நொடித்தன் மாத்திரைதான்**

(சுவாமி. : 20 : 3)

## மயிலை நாதர்

**எ—ன்,** மேல் எழுத்திற்கு அளவு மாத்திரை யென்றார், ஈண்டு அம் மாத்திரையாவது இஃதென்பது உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** விகாரப்படாதே இயல்பாக எழாநின்ற மாந்தருடைய கண்ணிமையும் கைந்நொடியும் ஆண்டுச் சொன்ன மாத்திரைக்கு அளவாம், **எ—று.**

கட்புலனாகிய இமைக் காலமும் செவிப்புலனாகிய நொடிக்காலமும் கருதிக் [1]கோடற்கு இரண்டும் ஓதினாரென்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ — னின்,** எழுத்தொலி யெழுச்சி பலவற்றையும் அளந்து கோடற்குக் கூறிய ஒருமாத்திரை யென்னும் காலசங்கையினை **உணர் — ற்று.**

**இ—ள்.:** மாந்தருடைய இயல்பாக எழும் இமைப்பொழுதும், நொடிப்பொழுதும் ஒருமாத்திரை என்னும் வரையறைப் பொழுதாம், **எ — று.**

இமை என்றது இமைத்தலை; நொடி என்றது நொடித்தலை. இவை இரண்டும், ஆகுபெயராய்க் காலத்தை உணர்த்தி நின்றன. இயல்பெழும் என்னும் பெயரெச்சம் இமை நொடி என்னும் பெயர்களோடு முடிந்தது.

---

பாட **வேறுபாடு.:**

1. **கொண்டற்கு**

எழுத்தொலி முதலியவற்றை இயல்பு கெடுத்து ஒருவன் வேண்டியவாறே எழுப்பினும் அவ்வாறு எழாநிற்கும்; இமையும் நொடியும் இயல்பு கெடுத்து எழுப்ப வேண்டினும் அவ்வாறு எழாது இயல்பாகவே எழாநிற்கும் ஆதலின் இயல்பெழும் எனவும், மேலைச் சூத்திரத்து எழுத்தொலிகளை வேண்டிய வாறே எழுப்பாது இவ்வளவான் அளந்தெழுப்புக எனவும் கூறினார். **பின்னது நிறுத்தல்** என்னும் உத்தியான் இவ் அளவு கருவி பிற கூறப்பட்டது.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** மேற்கூறிய மாத்திரைக்கு அளவு கூறியது.

**இ—ள்.: இயல்பெழு மாந்தர்** – இயற்கையாக, எழாநின்ற மாந்தருடைய, **இமை நொடி** – கண்ணிமை இமைத்தலும் கைநொடி நொடித்தலும், **மாத்திரை** – மாத்திரை ஒன்றுக்கு அளபாம், **எ—று.**

**அரும்பதவுரை:**

கட்புலனாகிய இமைக்காலமும் செவிப்புலனாகிய நொடிக் காலமும் கருதிக் கோடற்கு இரண்டும் ஓதினார். அன்றி இரண்டும் கூடி ஒரு மாத்திரை அல்லவெனக.

## விசாகப் பெருமாளையர்

**இது,** ஒருமாத்திரை யென்னுங் காலவளவை உணர்த்துகின்றது.

**இ—ள்.: மாந்தர்**—மனிதருடைய, **இயல்பு**—இயல்பாக, **எழும்**—உண்டாகுகின்ற, **இமை**—கண்ணிமைப் பொழுதும், **நொடி**—கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை**—ஒரு மாத்திரை யென்னும் வரையறைப் பொழுதாம். **எ — று.**

இது **"பின்னது நிறுத்தல்"** என்னுமுத்தியால் மாத்திரை யினளவைப் பின்னாகச் சொன்னார்.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*மாத்திரையாவது யாது?*

இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை.

(இயல்பு எழு மாந்தர் இமை நொடி மாத்திரை.)

**இ-ள்.மாந்தர் இயல்பு எழும் இமை நொடி** – மனிதருடைய இயல்பாக உண்டாகின்ற கண்ணிமைப் பொழுதுங் கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை** – ஒரு மாத்திரை யென்னும் வரையறைப்பொழுதாம், எ – று.

ஒரு மாத்திரையாவது இரண்டிமையுந் தம்மிற் கூடி நீங்குங் காலம்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** மேற்சொல்லிய மாத்திரைக்கு அளவு கூறுகின்றது.

**இ-ள்.: மாந்த ரியல்பெழு மிமைநொடி மாத்திரை**–மனிதருடைய சுபாவத்தி லெழுகின்ற கண்ணிமைப்பொழுதுங் கைநொடிப்பொழுதும் தனித்தனி ஒருமாத்திரை யென்னுங் காலவரையறைப் பொழுதாம், எ – று.

இமைத்தலையும் நொடித்தலையுங் குறித்துக் காலத்தை யுணர நின்றதினாலே இமைநொடி யென்பன ஆகுபெயர். இவ்வளவு கருவியை முற்கூறாது பிற்கூறியது, **பின்னது நிறுத்தலென்னும்** உத்தி.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– மாந்தர்** – மனிதருடைய, **இயல்பு எழும்** – இயல்பாக உண்டாகின்ற, **இமை நொடி** – கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை** – ஒரு மாத்திரை யென்னும் வரையறைப் பொழுதாம்.

**குறிப்பு :–**

> இந்த அளவு கருவியை முற்கூறாது பிற்கூறியது **பின்னது நிறுத்தல்** என்னுமுத்தி. நெஞ்சால் நினைத்து நிகழாமையின் கைந் நொடியினும் கண்ணிமை சிறப்புடையது ஆனதுபற்றி அது முற்கூறப்பட்டது. "உன்னல் காலே உறுத்தலரையே முறுக்கல் முக்கால் விடுத்தலொன்றே" என்னும் இச்சூத்திரம் ஒரு மாத்திரை வருமாறு கூறுதலறிக. இமை, நொடி என்பன ஆகுபெயர்கள். எண்ணி அளத்தல் முதலிய எழுவகை அளத்தல்களுள் இது சார்த்தி அளத்தல் என அறிக.

## ஆறுமுக நாவலர்

**இ –ள்.: மாந்தர் இயல்பு எழும் இமை நொடி** – மனிதருடைய இயல்பாக உண்டாகுகின்ற கண்ணிமைப் பொழுதுங் கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை**– ஒரு மாத்திரை யென்னும் வரையறைப் பொழுதாம், **எ–று.**

இவ்வளவு கருவியை முற்கூறாது பிற்கூறியது **பின்னது நிறுத்தலென்னு** முத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். மாந்தர் இயல்பு எழும் இமை நொடி** – மனிதருடைய இயல்பாக வுண்டாகுகின்ற கண்ணிமைத்தற் பொழுதாவது கைந்நொடித்தற் பொழுதாவது, **மாத்திரை** – ஒரு மாத்திரை யென்னுங் கால வரையறையாம்.

இந்த அளவு கருவியை 'மூன்றுயிரளபு' என்னுஞ் சூத்திரத்திற்கு முற்கூறாது பிற்கூறியது **பின்னது நிறுத்த** லென்னுமுத்தி.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: மாந்தர்**–மனிதருடைய, **இயல்பு எழு** – இயற்கையாக உண்டாகின்ற, **இமை** – கண்ணிமைப் பொழுதும், **நொடி**– கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை**–(தனித்தனி) ஒரு மாத்திரை யென்னுங் காலவரையறைப் பொழுதாம்; எ–று.

இமை – ஒருமுறை கண்ணிமைத்தற்கு வேண்டும் பொழுது; நொடி – ஒரு முறை கைந்நொடித்தற்கு வேண்டும் பொழுது.

இந்த அளவு கருவியை "மூன்றுயிரளபு" என்னுஞ் சூத்திரத்துக்கு முன்னே கூறாமல் பின்னே கூறியது, **பின்னது நிறுத்தல்** என்னும் உத்தி. (பின்னது நிறுத்தல்– முன் வைக்க வேண்டியதைப் பின்னே வைத்தல்.) மாத்திரை – எழுத்து ஒலிக்கும் அளவு,

**மாத்ரா** – வடசொல்.

கட்புலனாகிய இமைக்காலமும், செவிப்புலனாகிய நொடிக்காலமும் கருதிக்கொள்ளுதற்கு ஓதினாரென்க. இந்த இரண்டு அளவுகளுள் நொடியினும் இமை

சிறப்புடையது; உள்ளத்தால் நினைத்து நிகழாமையின்; ஆனது பற்றி, அது முன்னே கூறப்பட்டது.

***"உன்னல் காலே யுறுத்தலரையே,***

***முறுக்கல் முக்கால் விடுத்தலொன்றே"***

என்னுஞ் சூத்திரத்தின் பொருளும் இங்கு அறியத்தக்கது.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். மாந்தர் இயல்பு எழும் இடை நொடி** – மனிதருடைய இயல்பாக உண்ாகுகின்ற கண்ணிமைப் பொழுதுங் கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை** – ஒரு மாத்ரையென்னும் வரையறைப் பொழுதாம். **எ—று.**

இவ் வளவுகருவியை முற்கூறாது பிற்கூறியது 'பின்னது நிறுத்தல்' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். மாந்தர்** – மனிதருடைய, **இயல்பு எழும்** – இயல்பாக உண்டாகின்ற, **இமை நொடி** – கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும், **மரத்திரை** – ஒருமாத்திரை என்னும் வரையரைப் பொழுதாம். **எ—று.**

**பொ—ரை.:**

மனிதரிடத்தில் இயற்கையாய் உண்டாகின்ற கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதுமே (தனித்தனி) ஒரு மாத்திரை என்னும் காலவரையறைப்பொழுதாம்.

இமை என்றது ஒருமுறை கண்ணிமைத்தற்கு வேண்டும் கால அளவை. கைந்நொடி என்றது ஒரு முறை கைந்நொடித்தற்கு வேண்டும் நால அளவை. இமை, நொடி என்பன ஆகுபெயர் அவற்றின் கால அளவை உணர்த்தலால். இவ் வளவு கருவியை "மூன்றுயிரளபு" என்னும் சூத்திரத்துக்கு முன்னே கூறாது பின்னே கூறியது, பின்னது நிறுத்தல் என்னும் உத்தி. (பின்னது நிறுத்தல்—ஒரு பொருளுக்குக் கருவியாக முன் வைத்தற் குரியது அங்கே வைத்தற்கு இடம் பெறாதாயின் (அப்பொருளின்) பின்னே அதனை வைத்தல்; மாத்திரை—எழுத்து ஒலிக்கும் அளவு.

## கா. நமச்சிவாய முதலியார்

**மாந்தர்** – மனிதருடைய, **இயல்பு எழும்** – இயல்பாக உண்டாகின்ற, **இமை நொடி** – கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும், **மாத்திரை** – ஒரு மாத்திரையென்னும் அளவாம்.

> **'பின்னது நிறுத்தல்'** என்னும் உத்தியால் மாத்திரையின் அளவைப் பின்னாகச் சொன்னார்.

## மோசசு பொன்னையா

இயல்பாக எழும் மாந்தரது இமைப்புப் பொழுதும், நொடிப்புப் பொழுதும் ஒரு மாத்திரைக்கு அளவாம், எ–று.

> இமை, நொடி என்பன ஆகுபெயராய்க் காலத்தை உணர்த்தி நின்றன. ஈண்டு இமை என்றது இமைத்தல் தொழிலையும், நொடி என்றது நொடியிற் பிறந்த ஒலியையும் எனக் கொள்க. உள்ளத்தால் நினைத்து நிகழாமையின், நொடியிற் கண்ணிமைத்தல் சிறந்தது; அதனை முன்னே அமைத்துக் கூறியதும் அச்சிறப்பாலேயே என்க. இது சார்த்தி அளத்தலாகும்.

(45)

**100. ஆவியு மொற்று [1]மளவிறந்து இசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற்று ஆதியின்.**

**ஆவியும் ஒற்றும் அளவு இறந்து இசைத்தலும்
மேவும் இசை விளி பண்டம் மாற்று ஆதியின்.**

āviyum oṟṟum aḻavu iṟantu isaiṭṭalum
mēvum isai viḻi paṇṭam māṟṟu āṭiyiṉ.

---

பாட வேறுபாடு.:

1. அளபிறந்து

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Exception to the measure**

Both Vowels and Consonants have also greatly increased measures in singing, calling, selling and other similar actions.

## ஒப்புமைப் பகுதி

**மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே**

(தொல். : 5)

**நீட்டம் வேண்டின் அவ்வள புடைய**
**கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்**

(தொல். : 6)

**ஓரெழுத் தொருமூன் றொலிப்ப தின்றே**

(மு. வீ. : 103)

**அளபெடை மூன்றன்மே லாமென மொழிப**

(மு. வீ. : 104)

**விற்கை புலம்பிசை விளியினு மிகுமே**

(மு. வீ. : 105)

**மற்றவிசை விளி பண்டமாற்று உறைமீட்டு**

**னாவலும் புலம்புங் குறிப்பு இசையும் வரைவில வந்திடுமே.**

(சுவாமி. : 20 :4)

## மயிலை நாதர்

**எ—ன்.** எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** உயிரும் ஒற்றுமென்னும் இருகூற்றெழுத்தும் தமக்குச் சொன்ன மாத்திரைகளின் மிக்கிசைக்கவும் பெறும், இசையும் விளியும் பண்டமாற்றும் முதலானவற்றின்கண், எ — று.

'ஆதி' என்றதனால், நாவலும் முறையீடும் புலம்பும் குறிப்பிசை முதலாயினவுங் கொள்க.

[1]"கஃஃறென்னுங் கல்லதரத்தம்"''' என்பது குறிப்பிசை. ஏனைய வந்துழிக் காண்க.

பாட வேறுபாடு.: 1. **கல்லென்னும்**

உயிர் பன்னிரண்டு மாத்திரையும் ஒற்றுப் பதினொரு மாத்திரையும் நீளுமென்றார் கந்தருவ நூலுடையார். அவை வந்தவழிக் காண்க. நாவல்– போர்க்கழைத்தல் மாத்திரை முற்றும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** தவளைப்பாய்த்தாய் ஒன்று இடையிட்டு நின்ற மேலதற்கோர் புறனடை **உணர்–ற்று.**

**இ–ள்.:** முதல் சார்பனைத்துமாய ஆவியும் ஒற்றும், மேற்கூறிய அளவிறந்து மிக்கொலித்தலையும் பொருந்தும், இசை விளி பண்டமாற்று முதலியவற்றின்கண், எ – று.

ஆதி என்றமையான், நாவல் குறிப்பிசை முறையீடு புலம்பலும் கொள்க.

இசையின் அளவிறந்திசைக்குங்கால், ஆவி பன்னிரண்டு மாத்திரை ஈறாகவும், ஒற்று பதினொரு மாத்திரை ஈறாகவும், இசைக்கும் என்றார் இசைநூலார். இது **பிறநூன் முடிந்தது தானுடன்படுதல்** என்னும் உத்தி. ஏனையவற்றின் அளவிறந் திசைக்குங்கால், உலகநடை பிறழாது இசைப்பதே வரையறை என்க. நாவல் என்பது நெற்போர் தெழிக்கும் பகட்டினங்களைத் துரப்பதோர் சொல்.

**“காவல் உழவர் கடுங்களத்துப் போரேறி
நாவலேஓஒ என்றிசைக்கு நாளோதை – மாவலவன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு”** என்பதனால் அறிக.

**“கஃஃஃஃறென்னும் கல்லத ரத்தம்”**

**“சுஃஃஃஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை”**

என்பன குறிப்பிசை. ஏனைய பொருள்தோன்றிக் கிடத்தலின், அளவிறந்திசைத்தல் வந்தவழிக் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்.:** மேலுரைத்த மாத்திரைக்கு ஓர் புறநடை உரைத்தது.

**இ—ள்.: ஆவியுமொற்றும்** – உயிரும் ஒற்றுமென்னும் இவ்விரு கூற்றெழுத்தும், **அளபிறந்து இசைத்தலும் மேவும்** – தத்தமக்குச் சொன்ன மாத்திரை கடந்து மிக்கிசைக்கவும் பெறும், **இசை விளி பண்டமாற்றாதியின்** – இசை கூறுமிடத்தும் விளக்கு மிடத்தும் பண்டமாற்று முதலானவற்றின்கண்ணும், **எ—று.**

## விசாகப் பெருமாளையர்

**இது,** "மூன்று யிரளபு" என்னுஞ் சூத்திர விதிக்குப் புறனடை உணர்த்துகின்றது.

**இ—ள்.: ஆவியும்** – முதலுஞ் சார்புமாகிய உயிரெழுத்துகளும், **ஒற்றும்** – அவ்விருவகை மெய்யெழுத்துகளும், **அளவிறந்து** – முன்சொன்ன அளவைக் கடந்து, **ஒலித்தலும்** – அதிகமாக ஒலித்தலையும், **மேவும்** – பொருந்தும், **இசை** – இராகமும், **விளி** – அழைத்தலும், **பண்ட மாற்று** – பண்டமாற்றலும், **ஆதியின்** – முதலானவைகளிடத்து, **எ – று.**

"ஆதி" யென்றதனால் புலம்பல் முதலானவைகளுங் கொள்க.

இராகத்தில் அதிகமாக ஒலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரை யீறாகவும்,

ஒற்றுப் பதினொரு மாத்திரை யீறாகவும் ஒலிக்குமென்பார் இசைநூலார்,

**"இது பிற நூன்முடிந்தது தானுடன்படுதல்"** என்னுமுத்தி.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஆவியு மொற்று மளவிறந்து இசைத்தலும்

மேவு மிசைவிளி பண்டமாற்று ஆதியின்.

(ஆவியும் ஒற்றும் அளவு இறந்து இசைத்தலும் மேவும் இசை விளி பண்டம் மாற்று ஆதியின்.)

**இ – ள். ஆவியும் ஒற்றும்** – முதலும் சார்புமாகிய உயிரெழுத்துக்களும் அவ்விருவகை மெய்யெழுத்துக்களும், **அளவு இறந்து**

**இசைத்தலும் மேவும்** – முன் சொன்ன அளவுக் கடந்து மிக்கொலித்தலையும் பொருந்தும், **இசை விளி பண்டம் மாற்று ஆதியின்** – இராகமும் அழைத்தலும் பண்டமாற்றலும் முதலியவைகளிடத்து, **எ – று.**

**உ – ம்.**

'*வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேஎளினி*' எனவும்,

'*தயிரோஒஒ தயிர்*' எனவும்,

'*கஃஃஃறென்னுங் கானத்துக் கல்ல தரத்தஞ்*

*சுஃஃஃ றென்னுந் தண்டோட்டுப் பண்ணை*'

எனவும் வரும். ழகராகாரமும்,ககர ஏகாரமும், ரகர ஒகாரமும் ஆய்தமும் இங்கே அளவிறந்திசைத்தல் காண்க.

*ஆதியென்றதனால் அடங்குவன யாவை?*

முறையீடு,புலம்பல்,குறிப்பிசை முதலாயின. மேற்காட்டிய உதாரணத்தில் சுஃஃஃறென்பது குறிப்பிசை.

## முகவை இராமானுசக் கவிராயர்

இது, மேலே மாத்திரை வரையறுத்துச் சொன்ன எழுத்துகட்குப் புறனடை யுணர்த்துகின்றது.

**இ–ள்.: ஆவியு மொற்றும்** – (முதல் சார்பு முழுவதுமாகிய) உயிரெழுத்தும் மெய்யெழுத்தும், **இசை** – இராகம் பாடலும், **விளி** – அழைத்தலும், **பண்டமாற்று** – விலை கூறுதலும், **ஆதியின்** – முதலியவைகளிலே, **அளபிறந்து** – மேற்சொல்லிய அளவைக் கடந்து, **இசைத்தலும்** – ஒலித்தலையும், **மேவும்** – பொருந்தும், **எ – று.**

ஆதியென்றதினாலே, நாவல் குறிப்பிசை முறையீடு புலம்பலுங் கொள்க. இராகத்திலே அளவிறந்து ஒலிக்குங்கால் உயிர் பன்னிரண்டு மாத்திரை வரையிலும் ஒற்றுப் பதினொரு மாத்திரை வரையிலும் ஒலிக்குமென்றார் இசை நூலுடையார். இது பிற **நூன்முடிந்தது தானுடம் படுதலென்னும்** உத்தி.மற்றையவற்றில் அளபிறந்து ஒலிக்குங்கால், உலகநடை பிறழாது ஒலிப்பதே வரையறை யெனக் கொள்க.

நாவல் என்பது, நெல்லின்போர் அடிப்போர் எருமைக் கடாக்களை அதட்டுவதோர் சொல்.

உ–ம்.:

*"காவலு ழவர்கடுங் களத்துப் போரேறி*

*நாவலோஒஒஒ வென்றிசைக்கு நாளோதை –*
*மாவலவன்*

*கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே*

*நல்யானைக் கோக்கிள்ளி நாடு".* இது நாவல்.

*''கஃஃஃஃ றென்னுங் கல்ல தரத்தஞ்*

*சுஃஃஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை''* இது – குறிப்பிசை. மற்றையவை பொருள்வெளிப்பட்டுக் கிடத்தலால் அளவிறந்து ஒலித்தல் வந்தவந்த இடங்களிற் கண்டு கொள்க.

இச்சூத்திரம் 'இயல்பெழு' மென்னுஞ் சூத்திரத்தைத் தழுவாமல் இடைவிட்டு அதற்கு முன்னின்ற 'மூன்றுயிரள' பென்னுஞ் சூத்திரத்தைத் தழுவி நின்றதினாலே **தவளைப் பாய்த்து..** மாத்திரையிலக்கண முற்றிற்று..

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– இசைவிளி** பண்டமாற்று **ஆதியின்** – இராகமும் அழைத்தலும் பண்டமாற்றலும் முதலானவைகளிடத்து, **ஆவியும் ஒற்றும்** – (முதலும் சார்புமாகிய) உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும், அளவு **இறந்து** – (முன்சொன்ன) அளவைக்கடந்து, **இசைத்தலும்** – (அதிகமாக) ஒலித்தலையும், **மேவும்** – பொருந்தும்.

குறிப்பு :–

'ஆதி' என்றதனால் நாவல், குறிப்பிசை, முறையிடுதல் புலம்பலுங் கொள்க. இராகத்தில் அளவிறந்து ஒலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரையீறாகவும் ஒற்று பதினொரு மாத்திரையீறாகவும் ஒலிக்குமென்றார் இசைநூலார்.

நாவல், குறிப்பிசை முதலியவற்றில் அளவிறந் தொலிக்கும்போது உலகநடை பிறழாமல் ஒலிப்பதே

அவற்றுக்கு அளவென்க. இது **பிறநூன் முடிந்ததுதானுடன்** படுதல் என்னு முத்தி. (நாவல்– நெற்போரடிப்போர் எருமைக் கடாக்களை அதட்டுவதோர் சொல்).

"இயல்பெழு" என்னுஞ் சூத்திரத்தைத் தழுவாமல், இடைவிட்டு அதற்கு முன்னின்ற "மூன்றுயிரளபு" என்னுஞ் சூத்திரத்தைத் தழுவி நின்றதனால் இச் சூத்திரம் **தவளைப் பாய்த்து.**

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ஆவியும் ஒற்றும்** – முதலுஞ் சார்புமாகிய உயிரெழுத்துக்களும் அவ்விருவகை மெய்யெழுத்துக்களும், **அளவு இறந்து இசைத்தலும் மேவும்** – முன் சொன்ன அளவைக் கடந்து மிக்கொலித்தலையும் பொருந்தும், **இசை விளி பண்டமாற்று ஆதியின்** – இராகமும் அழைத்தலும் பண்டமாற்றலு முதலியவைகளிடத்து, எ – று.

ஆதி யென்றதனால், முறையீடு புலம்பல் முதலியவைகளுங் கொள்க.

இராகத்தில் அளவிறந் தொலிக்கு மிடத்து, உயிர் பன்னிரண்டு மாத்திரை யீறாகவும், ஒற்றுப் பதினொரு மாத்திரை யீறாகவும் ஒலிக்கும் என்றார் இசைநூலார். இது **பிறநூன் முடிந்தது தானுடன் படுதலென்னு** முத்தி.

இச் சூத்திரம் 'இயல்பெழும்' என்னுஞ் சூத்திரத்தைத் தழுவாது அதற்கு முன் நின்ற 'மூன்றுயிரளபு' என்னுஞ் சூத்திரத்தைத் தழுவி நின்றதனாலே, **தவளைப்பாய்த்து.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ஆவியும் ஒற்றும்** – முதலுஞ் சார்புமாகிய உயிரெழுத்துக்களும் அவ்விருவகையான மெய்யெழுத்துக்களும், **இசை விளி பண்டமாற்று ஆதியின்** – இராகமும் அழைத்தலும் பண்டமாற்றக் கூறுதலு முதலியவைகளிடத்து, **அளவு இறந்து இசைத்தலும் மேவும்** – முன்னசொன்ன அளவைக் கடந்து மிக்கு ஒலித்தலையும் பொருந்தும். எ–று.

ஆதி யென்றதனால் முறையீடு, புலம்பம் முதலியனவுங் கொள்க.

இராகத்தில் அளவிறந்தொலிக்கும் போது உயிர் பன்னிரண்டு மாத்திரை யீறாகவும், ஒற்றுப் பதினொரு மாத்திரை யீறாகவும் ஒலிக்குமென்றார் இசை நூலார். இது **பிறநூன் முடிந்தது தானுடன் படுதலென்னுமுத்தி.**

இச் சூத்திரம் 'இயல்பெழும்' என்னுஞ் சூத்திரத்தைத் தழுவாது அதற்கு முன் நின்ற 'மூன்றுயிரளபு' என்னுஞ் சூத்திரத்தைத் தழுவி நின்றதினாலே தவளைப் பாய்த்து என்னுநிலை.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: இசை** – இராகமும், **விளி** – அழைத்தலும், **பண்டம்மாற்று** – பண்டமாற்றுலும், **ஆதியின்** – முதலான விடத்து, **ஆவியும் ஒற்றும்** – உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும், **அளவு இறந்து** – (முன்சொன்ன) அளவைக் கடந்து, **இசைத்தலும்** – (அதிகமாக) ஒலித்தலையும், **மேவும்** – பொருந்தும்; **எ—று.** பண்டம் மாற்று – பொருள்களை விற்றற்பொருட்டுப் பெயர்கூறிக் கூவுதல்.

முதலெழுத்தாகிய ஆவியும் ஒற்றும் கூறினதில், அவற்றைச் சார்ந்து பிறக்கும் உயிர்மெய் முதலியனவும் அடங்கும்.

'ஆதி' என்றதனால், முறையிடுதல் புலம்புதல் முதலியன கொள்க.

இராகத்தில் அளவிறந்து ஒலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரை வரையிலும், ஒற்றுப் பதினொரு மாத்திரை வரையிலும் நீண்டு ஒலிக்கு மென்றார் இசைநூலார்; அதனை இவ்வாசிரியர் உடன்பட்டது **பிறநூல் முடிந்தது தானுடன்படுதல்** என்னும் உத்தி.

பிறநூல் முடிந்தது தான் உடன்படுதல் – வேறு நூல்களிற் சொல்லப்பட்ட விதியைத் தான் அங்கீகரித்தல்.

மற்றவற்றில் அளவிறந்து ஒலிக்கும்பொழுது உலகநடை பிறழாமல் ஒலிப்பதே வரையறை யெனக் கொள்க. இச் சூத்திரம் – **தவளைப்பாய்ந்து;** "இயல் பெழு" என்னும் முற் சூத்திரத்தைத் தழுவாமல், இடைவிட்டு, அதற்குமுன் நின்ற "மூன்றுயிரளபு" என்னுஞ் சூத்திரத்தைத் தழுவி நின்றதனால்.

தவளைப் பாய்த்து – இடையிட்டுக் குதிக்கின்ற தவளையின் பாய்ச்சல் போலத் தனக்கு முன் நின்ற சூத்திரத்தைத் தழுவாமல் அதற்கு முன்நின்ற சூத்திரத்தைத் தழுவுதல்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ஆவியும் ஒற்றும்** – முதலுஞ் சார்புமாகிய உயிரெழுத்துக்களும் அவ்விரு வகை மெய்யெழுத்துக்களும், **அளவு இறந்து இசைத்தலும் மேவும்** – முன் சொன்ன அளவைக் கடந்து மிக்கொலித்தலையும் பொருந்தும், **இசை விளி பண்டமாற்று ஆதியின்** – இராகமும் அழைத்தலும் பண்ட மாற்றலும் முதலியவைகளிடத்து, **எ–று.**

ஆதியென்றதனால், முறையீடு புலம்பல் முதலியவை களுங் கொள்க.

இராகத்தில் அளவிறந்தொலிக்குமிடத்து, உயிர் பன்னிரண்டு மாத்திரை யீறாகவும், ஒற்றுப் பதினொரு மாத்திரை யீறாகவும் ஒலிக்கும் என்பர் இசை நூலார்.

இது '**பிறநூன் முடிந்தது தானுடன்படுதல்**' என்னும் உத்தி. பிறவற்றில் அளபிறந்து ஒலிக்குங்கால் உலகநடை பிறழாது ஒலிப்பதே வரையறை. இச் சூத்திரம் 'இயல்பெழும்' என்னும் மேற் சூத்திரத்தைத் தழுவாது அதற்கு முன் நின்ற 'மூன்றுயிரளபு' என்னும் சூத்திரத்தைத் தழுவி நின்றதனாலே, '**தவளைப் பாய்த்து**.'

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். இசை** – இராகமும், **விளி** – அழைத்தலும், **பண்டம் மாற்று** – மண்டமாற்றலும், **ஆதியின்** – முதலானவைகளிடத்து, **ஆவியும் ஒற்றும்** – (முதலும் சார்பும் ஆகிய) உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும், **அளவு இறந்து** – முன் சொன்ன அளவைக் கடந்து, **இசைத்தலும்** – அதிகமாக ஒலித்தலையும், **மேவும்** – பொருந்தும், **எ–று.**

**பொ–ரை.:**

இராகத்திலும் விளியிலும் பண்டமாற்று முதலான வைகளிலும் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் தமக்குச் சொன்ன அளவை கடந்து அதிகமாக ஒலிக்கும்.

விளி– அழைத்தல், பண்டமாற்று – பொருள்களை விற்கும் பொருட்டுப் பெயர் கூறிக் கூவுதல்.

ஆதி என்றது–முறையிடுதல் புலம்புதல் முதலியனவற்றை. இராகத்தில் அளவு கடந்து ஒலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரை ஈறாகவும் மெய் பதினொரு மாத்திரை ஈறாகவும் ஒலிக்கும் என்றார் இசை நூலார். அதனை இவ்வாசிரியர் உடன்பட்டது, **பிறநூல் முடிந்தது தானுடன்படுதல்** என்னும் உத்தி.

(பிறநூல் முடிந்தது. தான் உடன்படுதல் – பிறநூலிலே முடிந்த முடிபைத் தான் அங்கீகரித்தல்.)

இச் சூத்திரம் 'இயல்பெழு' என்னும் முற் சூத்திரத்தைத் தழுவாது இடைவிட்டு அதற்கு முன்னின்ற 'மூன்றுயிரளபும்' என்னுஞ் சூத்திரத்தைத் தழுவி நின்றதனாலே, **தவளைப்பாய்த்து**.

(தவளைப் பாய்த்து – நடுவே இடம் விட்டுக் குதிக்கின்ற தவளையினது குதித்தல் போலத் தனக்கு முன்னின்ற சூத்திரத்தைத் தழுவாமல் அதற்கு முன்னின்ற சூத்திரத்தைத் தழுவுதல்.)

## கா. நமச்சிவாய முதலியார்

**ஆவியும் ஒற்றும்** – உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும், **அளவு இறந்து** – (முன்சொன்ன) அளவைக் கடந்து, **இசைத்தலும்** – (மிக்கு) ஒலித்தலையும், **மேவும்** – பொருந்தும், **இசை விளி பண்டமாற்று ஆதியின்** – இராகம் அழைத்தல் பண்டமாற்றல் முதலானவைகளிடத்து,

'ஆதி' என்றதனால், புலம்பல் முதலானவைகளும் கொள்க.

இராகத்தில் அதிகமாக ஒலிக்கும்போது உயிர் பன்னிரண்டு மாத்திரை ஈறாகவும், மெய் பதினொரு மாத்திரை ஈறாகவும் ஒலிக்குமென்பார் இசைநூலார். இது, '**பிறநூன் முடிந்தது தானுடன்படுதல்**' என்னும் உத்தி.

இச்சூத்திரம் 'மூன்றுயிரளபு' என்னும் சூத்திரத்தை அடுத்து வருதல் வேண்டும்; அங்ஙனமின்றி, 'இயல்பெழு மாந்தர்' என்னும் சூத்திரம் இடையில் வர, இது பின்னிற்றலின், **தவளைப்பாய்த்து** என்னும் சூத்திரநிலையாம்.

## மோசகு பொன்னையா

பாட்டிலும், விளி கொள்ளுமிடத்தும், விலை கூறுமிடத்தும், அவை போன்ற பிறவிடங்களிலும், உயிரும் ஒற்றும் மேற்சொன்ன அளவை மிக்கு ஒலித்தலையும் பொருந்தும், **எ—று.**

தொல்காப்பியர், அளபிறந்து ஆவி உயிர்த்தலும், ஒற்று இசை நீடலும் இசையின் கண்ணே கொண்டாராக, இவ்வாசிரியர், விளி, பண்டமாற்று என்னும் இரண்டையும் கூறி, ஆதி என்றதனால் நெற்போர் தெளிக்கும் பகட்டினங்களைத் துரக்கும் சொல்லாகிய நாவல் என்பதன் கண்ணும் குறிப்பிசை, முறையீடு, புலம்பல் முதலியவற்றின் கண்ணும் உயிரும் ஒற்றும் அளபிறந்து இசைக்கும் எனக் கொள்ள வைத்தார்.

முன் ஒன்றுவிட்டு நின்ற நூற்பாவைத் தழுவிநிற்றலின்,இது **தவளைப்பாய்த்து** நிலை கொண்டதாம்.

**எ—டு.**

*காவ லுழவர் கடுங்களத்துப் போரேறி*

*நாவலோஒஒ வென்றிசைக்கு நாளோதை—*
*மாவலவன்*

*கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே*

*நல்யானைக் கோக்கிள்ளி நாடு*

— இது நாவல்.

*கஃஃஃ றென்னுங் கல்லத ரத்தம்*

*சுஃஃஃ றென்னும் தண்டோட்டுப் பெண்ணை.*

— இது குறிப்பிசை.

*நூறோஒஒஒநூ றென்பா னுடங்கிடைக்கு*
*மென்முலைக்கு*

*மாறோமா லன்றளந்த மண்.*

— இது பண்டமாற்று.

*உப்போஒஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்*

*கொப்போநீர் வேலி யுலகு.*

—இதுவும் பண்டமாற்று.

அளபிறந் திசைக்குங்கால் உயிர் பன்னிரண்டு மாத்திரை யீறாகவும், மெய் பதினொறு மாத்திரை யீறாகவும் இசைக்கும் என்பர் இசை நூலார்.

(46)

### 7. முதல்நிலை

**101. பன்னீ ருயிருங் கசதந பமவய**
**ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழி முதல்**

**பன்னீர் உயிரும் க ச த ந ப ம வ ய**
**ஞ ங ஈர் ஐந்து உயிர் மெய்யும் மொழி முதல்**

paṉṉīr uyirum ka sa ṭa na pa ma va ya
ña ṅa īr ainṭu uyir meyyum moḻi muṭal

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Initials**

**initial letters**

All the twelve Vowels, and the ten consonants k,c,t,n,p,m,v,y,ñ and n may be employed as Initials.

## ஒப்புமைப் பகுதி

**பன்னீ ருயிரும் மொழி முத லாகும்**

(தொல். : 59)

உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா

(தொல். : 60)

கதநபம எனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே

(தொல். : 61)

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ எனும் மூன்றலங் கடையே

(தொல். : 62)

காட்டும் உயிரும் கசதநப மவ் வரியும்க......
முன்னென் றயர் விலார் கட்டுரைத்தார் ஆய்ந்து.

(நே.மி.: 7 : 1 –3 –4 )

ஆவி யனைத்துங் கசத நபமவ் வரியும்

------------------------------

நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுதல் நன்னுதலே

(வீர. : 7 : 1ு 4)

உயிர் கசதப ஞநமவய முதற்கே

(தொன். : 10)

முன்நான் குயிரு மொழிமுத லாகும்

(மு. வீ. : 60)

பன்னீ ருயிரொடுங் கசத நபம வரும்

(மு. வீ. : 61)

வந்த வுயிர் கசதநபமவ் வில் என்பானான்கும்
-------------------------------------- முதற்காம்

(சுவாமி. : 21 :1 )

## மயிலைநாதர்

எ – ன், நிறுத்தமுறையானே மொழிக்கு முதலா மெழுத்தாவன உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** இச் சொல்லப்பட்ட இருபத்திரண்டெழுத்தும் பொது வகையால் மொழிக்கு முதலாம், எ – று.

வ–று.:

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடை, ஏடு,

ஐயம், ஒடு, ஓடு, ஔவியம் – எனவும்;

களி; காளி, [1]கிரி, கீரி, குளி, கூளி, கெடல், கேடு, [2]கைதை, கொவ்வை, கோவை, கௌவை

எனவும்;

சளி, சாரல், சிலை, சீலை, [3]சுளை, சூளை, செறி, [4]சேறி, சையம், [5]சொரி, சோரி, சௌரி

எனவும்;

தரை, தாரை, திரை, தீரை, துரை, [1]தூரை, தெரி, தேரை, தையல், தொய்யில், [2]தோயல், தௌவை

எனவும்;

நரை, நாரை, நிரை, நீர்மை, நுரை, நூறு, நெரி, நேர்மை, நைவு, [3]நொவ்வு, நோவு, நௌவி

எனவும்;

படை, பாடி, பிடி, பீடு, புடை, பூடு, பெடை, பேடு, பைதல், [4]பொய்தல், போதல், பௌவம் எனவும்

மலை, மாலை, [5]மிசை, மீசை, முளை, மூளை, மெருள், மேடு, மையல், மொழி, மோழை, மௌவல்

எனவும் வரும்.

இவை முழுதும் முதலாயின. ஒழிந்தவை தத்தம் சிறப்புவிதியிற் காட்டுதும்.

[6]வரிமுறையான் வையாது இதனுள் மயங்க வைத்தது வழக்குப் பன்மை பற்றி யென்க.

---

பாட வேறுபாடு:-

1. கிளி.
2. கைவை.
3. சுளி.
4. சேரி.
5. சொறி.
6. வரிசை முறையான். வரன்முறையான்

ஙகரம் மொழிக்கு முதலாமோவெனின்,

"கசதபஙவ்வே யாதியு மிடையும்,

டற விடை ணனரழ லளஇடை கடையே,

ஞநமய வவ்வே மூன்றிடமென்ப"

என ஙகரம் ஈரிடத்தும் நிற்கு மென்றார், ஆசிரியர் **அவிநயனாரு** மெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** நிறுத்தமுறையானே மொழிக்கு முதலாமாறு **உணர்—ற்று.**

**இ—ள்.:** பன்னிரண்டு உயிரும், உயிரூர்ந்த இப்பத்து மெய்யும் மொழிக்கு முதலாம், **எ — று.**

**உ — ம்.:**

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எனவும்,

களி, சவடி, தளிர்; நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும். பிறவும் அன்ன.

உயிர்போல் தனித்து முதலாந் தன்மையவல்ல ஆதலின் உயிர்மெய் என்றார். இஃது **இன்னதல்லது இதுவென மொழிதல்** என்னும் உத்தி.

---

பாட **வேறுபாடு** :-

7 (1) கசதப வாதி யிடையிட லிடையுள.

வயநமங ஞமூன் றிட மெனமொழிப.

(2) கசதப வாதி யிடையீ றவற்றுள.

வயநம ஞஙமூன் றிடமென மொழிப.

(3) கசதப வாதி யிடையுள டறவுள.

வயநம ஞஙக்கஞ மூன்றிட மென்ப.

(4) கசதப வாதி யிடையுண டவற்றுள.

வயந மஙஞ மூன்றிட மென்ப.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், நிறுத்திய முறையே மொழிக்கு முதல் வரும் எழுத்து இன்னதென உரைத்தது.

இ—ள்.: **பன்னீருயிரும்** – உயிர் பன்னிரண்டெழுத்தும், **க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்துயிர்மெய்யும்** – இப்பத்து உயிர்மெய் யெழுத்தும், **மொழி முதல்** – மொழிக்கு முதற்கண்ணே வரும், எ—று.

**உ—ம்.:**

அருள், ஆகம், இகல், ஈகை, உருவம், ஊசல், எது, ஏது, ஐயர், ஒள்வாள், ஓம், ஔவிய நெஞ்சு

எனவும்;

கண்டு, காடு, கிளி, கீரி, குளி, கூவல், கெடு, கேடு, கையறம், கொஞ்சம், கோலடி, கௌவை,

சதம், சாடு, சிறுமி, சீயம், சுவடு, சூகரம், செல்வம், சேது, சைவம், சொல், சோரன், சௌவுரியம்,

தந்தி, தாதை, திரு, தீனம், துருவை, தூது, தெய்வம், தேக்கு, தையல், தொந்தி, தோள், தௌவை,

நகரம், நாடு, நிலை, நீதி, நுனி, நூல், நெல், நேற்று, நைதல், நொறல், நோக்கம், நௌவி,

படு, பாடு, பிடி, பீடு, புடை, பூவை, பெண், பேதை, பையல், பொறி, போது, பௌவம்,

மலை, மாலை, மிசை, மீசை, முகம், மூர்த்தி, மெல்லியல், மேதை, மையல், மொண்டு, மோது, மௌவல் எனவும் வரும்.

இவை முழுதும் மொழி முதற்கண் வந்தன. ஒழிந்தன தத்தம் சிறப்பு விதியுட் காட்டுதும்.

## விசாகப் பெருமாளையர்

**இது**, நிறுத்த முறையால் மொழிக்கு முதலாமாறு உணர்த்துகின்றது.

**இ—ள்.: பன்னீருயிரும்** – பன்னிரண் டுயிரெழுத்துகளும், **க ச த ந ப ம வ ய ஞ ங** – ககரமுதல் ஙகர மீறாகச் சொல்லப்பட்ட, **ஈரைந்து** – பத்து, **உயிர்** –

உயிரேறிய, **மெய்யும்** – மெய்யெழுத்துகளும், **மொழி** – சொல்லுக்கு, **முதல்** – முதலாகும், எ – று.

**உ–ம்.:**

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம்,
ஒதி, ஓதி, ஔவியம் எனவும்;

களி, சவடி; தளிர்; நலம்; படை; மலை; வளம், யவனர்; ஞமலி;
அங்ஙனம் எனவும் வரும்

உயிர்போலத் தனித்து முதலாக மாட்டாமையால் "உயிர்மெய் என்றார்". இது **"இன்னதல்ல திதுவென மொழிதல்"** என்னு முத்தி.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழி முதல்

(பன்னீர் உயிரும் க ச த ந ப ம வ ய
ஞ ங ஈர் ஐந்து உயிர் மெய்யும் மொழி முதல்)

**இ–ள்.பன்னீர்உயிரும்**–பன்னிரண்டு யிரெழுத்துக்களும், **க ச த ந ப ம வ ய ஞ ஈரைந்து உயிர்மெய்யும்** – ககர முதல் ஙகர மீறாகச் சொல்லப்பட்ட பத்து வர்க்கத் துயிர்மெய் யெழுத்துக்களும், **மொழிமுதல்** – சொல்லுக்கு முதலாகும், எ – று.

உ – ம்.

அடை, ஆடை,இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம்,
ஒளி, ஓடை, ஓவியம் – எனவும்,

கலை, கார், கிளி, கீரி, குடி, கூழ், கெண்டை, கேழல்,
கைதை, கொண்டல், கோடை, கௌவை எனவும்,

சட்டி, சாந்து, சிற்றில், சீற்றம், சுரை, சூரல், செக்கு,
சேவல், சை, சௌரியம் எனவும்

தத்தை, தார், தித்தி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேன்,
தையல், தொண்டை, தோடு, தௌவை எனவும்,

நந்து நாரை, நிலம், நீத்து, நுகம், நைல், நெய்தல், நேயம்,
நைதல், நொச்சி, நோக்கம், நௌவி எனவும்

பனி, ஞால், பிடி,பீடு, புகழ், பூமி, பெடை, பேதை, பைதல், பொன், போது, பௌவம் எனவும்,

மலை, மாண்பு,மிடறு, மீளி, முயல், மூப்பு, மெலிவு, மேனி,மையல், மொழி, மோனை, மௌவல் எனவும் வரும்.

*இச்சூத்திரத்தினால் மொழிக்கு முதலாகாதவெழுத்து யாதென்பது பெறப்படுகின்றது?*

மெய்யெழுத்தென்பது.

*இச்சூத்திரத்திலே கசதநபம எனினுமாறெழுத்தையும் முறையிற் கூறி, வயஞங என்னு நான்கையும் முறைபிறழக் கூறியது யாது பற்றி ?*

முன்னையவாறும் பன்னிரண்டுயிரோடும் முதலா மென்பது கொள்ள வைத்தற்கு அவற்றை முறைப்படவும், பின்னைய நான்கும் சிலவுயிரோடு முதலாமென்பது பின்னரறிவித்தற்கு அவற்றை முறைபிழறவும் கூறிய படியாம்.

*இங்கே கசதநபமவயஞங வென்ற வெழுத்துக்கள் என்ன குறித்து நின்றன?*

தத்தம் வர்க்கத்தைக் குறித்து நின்றன. க என்பது, க, , கா, கி, மீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ என்னும் பன்னிரண்டிற்கும் குறியீடாம். இவ்வாறே மற்றையவுமாம்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது.** நிறுத்தமுறையே எழுத்துக்கள் மொழிக்கு முதலா மிலக்கண முணர்த்துகின்றது.

**இ-ள்.: பன்னீருயிரும்** - உயிர் பன்னிரண்டும், **கசதநபமவயஞங வீரைந் துயிர்மெய்யும்** - இப்பத்து உயிர்மெய்களும், **மொழிமுதல்** - மொழிக்கு முதலாம், **எ - று.**

**உ - ம்.:**

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடை, எடை, ஏடு, ஐவனம், ஒடை, ஓடை, ஔவியம் எனவும்; **கனி, சனி,** தனி, நனி, பனி, மனை, வனம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும், பிறவுமிவை போலவே காண்க. உயிர்போலே தனித்து முதலாந் தன்மையவல்ல ஆதலால் உயிர்மெய் யென்றார். இது **இன்னதல்ல திதுவென மொழிதலென்னும்** உத்தி.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– பன்னீருயிரும்** – பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், **க ச த ந ப ம வ ய ஞ ங** – ககர முதல் ஙகர யீறாகச் சொல்லப்பட்ட, **ஈரைந்து உயிர்மெய்யும்** – பத்து உயிரேறிய மெய்யெழுத்துக்களும், **மொழிமுதல்** – சொல்லுக்கு முதலாகும்.

**உ–ம்:–**

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எனவும்; களி, சழக்கு, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும்.

**குறிப்பு:–**

உயிர்போலத்தனித்து முதலாக மாட்டாமையால் 'உயிர்மெய்' என்றார். இது **இன்னதல்லதிதுவென மொழிதல்** என்னுமுத்தி.

க ச த ந ப ம க்கள் பன்னீருயிரோடுங்கூடி முதலாதலும், வ ய ஞ ங க்கள், அங்ஙன மின்றி முறையே எட்டுயிரோடும், ஆறுயிரோடும், நான்குயிரோடும், ஒருயிரோடுங்கூடி மொழி முதலாதலும் ஆகிய சிறப்பும் சிறப்பின்மையும் நோக்கி அவற்றை முறைப்படி வைத்தார் என்றறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பன்னீருயிரும்** – பன்னிரண் டுயிரெழுத்துக்களும், **க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்து உயிர் மெய்யும்** – ககரமுதல் ஙகரமீறாகச் சொல்லப்பட்ட பத்து உயிரேறிய மெய்யெழுத்துக்களும், **மொழி முதல்** – சொல்லுக்கு முதலாகும், **எ – று.**

**உ–ம்.:**

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எனவும்; களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம், எனவும் வரும்.

உயிர் போலத் தனித்து முதலாகமாட்டாமையால், உயிர்மெய் யென்றார்; **இது இன்னதல்ல திதுவென மொழிதல்** என்னு முத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். பன்னீருயிரும்** – பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், **க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்து உயிர்மெய்யும்** – உயிரேறிய ககர முதல் ஙகரமீறாகச் சொல்லப்பட்ட பத்து மெய்யெழுத்துக்களும், **மொழிமுதல்** – சொல்லுக்கு முதலாகும். எ—று.

உ—ம்.

அணி, ஆடை, இலை, ஈகை, உடல், ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம், எனவும்

கனி, காய், சனி, சாடி, தளிர், தாய், நலம், நாகம், படை, பால், மலை, மாலை, வனம், வாடை, யவனர், யானை, ஞமலி, ஞாலம், அங்ஙனம் எனவும் வரும்.

மெய்கள் உயிரொடு கூடியன்றி உயிர்போலத் தனித்து முதலாக மாட்டாமையால் உயிர் மெய்யென்றார்.

**இது இன்னதல்லதிதுவென** மொழிதலென்னு முத்தி.

ஈரைந்து என்பது உயிரென்பதைத் தொடராமல் மெய்யென்பதைத் தொடர்ந்து வந்தது.

எந்த எந்த மெய் எந்த எந்த உயிரோடு கூடி முதலாகு மென்பதைப் பின்வருஞ் சூத்திரங்களால் வரையறுக்கின்றார்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: பன்னீருயிரும்** – பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், **க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்து உயிர்மெய்யும்** – இப்பத்து உயிர்மெய் யெழுத்துக்களும், **மொழிமுதல்** – சொல்லுக்கு முதலாகும், எ – று.

உ—ம்.:

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊக்கம், எடு, ஏடு, ஐயம், ஒன்று, ஓடு, ஔவை எனவும்;

களி, சற்று, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம் எனவும் வரும்.

மெய்யெழுத்து உயிரெழுத்தோடு கூடி முதலாகுமே யன்றி உயிரெழுத்துப் போலத் தனித்து முதலாகமாட்டாமையால், 'உயிர்மெய்' எனறார்; உயிரேறிய மெய் என்க. இது, **இன்னதல்ல திதுவென மொழிதல்** என்னும் உத்தி.

இன்னது அல்லது இது என மொழிதல் – இதுவன்று இதுதான் என்று துணிந்து சொல்லுதல்)

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். பன்னீருயிரும்** – பன்னிரண்டுயிரெழுத்துக்களும், **க ச த ந ப ம வ ய ஞ ங ஈரைந்து உயிர்மெய்யும்** – ககர முதல் ஙகர மீறாகச் சொல்லப்பட்ட பத்து உயிரேறிய மெய்யெழுத்துக்களும், **மொழி முதல்** – சொல்லுக்கு முதலாகும், எ—று.

உ—ம்.

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம்.

களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி,

(அங்)ஙனம்.

உயிர்போலத் தனித்து முதலாகமாட்டாமையால், உயிர்மெய்யென்றார். இது '**இன்னதல்ல திதுவென மொழிதல்**' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ-ள். பன்னீருயிரும்** - பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், **க ச த ந ப ம வ ய ஞ ங** - ககர முதல் ஙகரம் ஈறாகச் சொல்லப்பட்ட, **ஈரைந்து உயிர் மெய்யும்** - பத்து உயிர் ஏறிய மெய்யெழுத்துக்களும், **மொழிமுதல்** - சொல்லுக்கு முதலாகும். **எ-று.**

பொ-ரை.:

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், ககர முதல் ஙகரம் ஈறாகிய பத்து உயிரேறிய மெய்யெழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வரும்.

உ-ம்.

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஒளவியம் என, மொழிக்கு முதலில் பன்னீருயிரும் வந்தன.

களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங் ஙனம் என, ககர முதல் ஙகரம் ஈறாகிய பத்துயிர் மெய்களும் மொழிக்கு முதலில் வந்தன.

மெய் யெழுத்து உயிரெழுத்தோடு கூடி முதலாகுமே யன்றி உயிரெழுத்துப் போலத் தனித்து முதலாக மாட்டாமையால் உயிர் மெய்யென்றார்.

இது, **இன்னதல்ல திது வென மொழிதல்** என்னும் உத்தி.

இன்னது அல்லது இது என மொழிதல் - சந்தேகிக்க நின்ற இடத்து இப்படிப்பட்டதல்லாதது இது வெனச் சொல்லுதல்; எனவே மெய் தனித்துச் சொல்லுக்கு முதலில் வருமா என்று சந்தேகிக்கின்ற இடத்து வாராது உயிரோடு கூடியே வரும் என்பதாம்.

இம் மெய்களுள் ககர முதல் மகரம் இறுதியாகிய ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலில் வரும். ஏனையவை சிற்சில உயிரோடுங் கூடி வரும். அவற்றைக் கீழ்ச் சூத்திரங்களுட் காண்க.

**ஒதி** - ஓர் மரம் (உதியமரம்).

**ஓதி** - மலை.

**கவடி** - பலகறை. **ஞமலி**-நாய்.

## கா. நமச்சிவாய முதலியார்

**பன்னீருயிரும்** – பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், **கசதநபமவயஞங** – க ச த ந ப ம வ ய ஞ ங ஆகிய, **ஈரைந்து உயிர்மெய்யும்** – பத்து உயிரேறிய மெய்யெழுத்துக்களும், **மொழிமுதல்** – சொல்லுக்கு முதலாகும்.

அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எனவும்;

களி, சண்டை, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, ஙனம் எனவும் வரும்.

மெய் தனித்து முதலாகாமையால், '**உயிர் மெய்**' என்றார். இஃது '**இன்னதல்ல திதுவென மொழிதல்**' என்னும் உத்தி.

## மோசசு பொன்னையா*

உயிர் பன்னிரண்டும் மெய்யுள் க் ச் த் ந் ப் ம் வ் ய் ங் ஞ் என்னும் பத்தும் மொழிமுதலாம். அவற்றுள் வகரமெய் உ ஊ ஒ ஓ என்ற நான்கும் அல்லாத எட்டு உயிருடனும், யகர மெய் அ ஆ உ ஊ ஓ ஔ என்ற ஆறு உயிருடனும் ஞகர மெய் அ ஆ ஏ ஒ என்ற நான்கு உயிருடனும், ஙகரம் சுட்டு, யகர ஆகார எகர வினாக்கள் ஆகிய இவற்றை அடுத்து அகர உயிருடனும் மொழி முதலாம், **எ-று**.

**எ-டு.**

**உயிர்** - அடை, ஆலை, இலை, ஈடு, உடை, ஊடல், எடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம்.

**மெய்** - களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம்.

**வகரம்** - வளி, வாளி, விரல், வீடு, வெளி, வேடன், வைகல், வெளவுதல்.

**யகரம்** - யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம்.

**ஞகரம்** - ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

**ஙகரம்** - அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்.

தொல்காப்பியர் மொழிக்கு முதலில் வாரா என்ற மெய்யொலிகளைப் பிற்கால இலக்கண நூலார் தம் கால வழக்கு நோக்கித் தழுவிக் கூறினர். சகரம் அ

* **இவ்வுரையாசிரியர், மொழிமுதலாகும் மெய்யெழுத்துக்கள் அனைத்தையும் தொகுத்துக்கூறும் முகத்தான் இந்நூற்பாப் பொருளொடு மொழிமுதலாகும் மெய்யெழுத்துக்கள் பற்றிய சிறப்பு விதிகளான இனி வரும் மூன்று நூற்பாக்களின் விளக்கங்களையும் ஈங்கே தொகுத்துக் கூறுகிறார்.**

ஐ ஔ என்னும் மூன்றோடு கூடி மொழிமுதலாகாது என்பது தொல்காப்பியர் கருத்து. இவ் வாசிரியரும், வீரசோழிய நேமிநாத ஆசிரியர்களும் அஃது எல்லா உயிர்களுடனுங் கூடி மொழி முதலாம் என்றனர்.

யகரம் ஆகாரம் ஒன்றுடன் மட்டும் மொழிமுதலாகும் எனத் தொல்காப்பியர் கொண்டாராக, இவ்வாசிரியரும் வீரசோழியமுடையாரும் அஃது அ ஆ உ ஊ ஒ ஓ என்னும் ஆறு உயிர்களுடனும் மொழிமுதலாகும் என்றனர்; நேமிநாத முடையார், அஃது ஆ ஊ ஓ என்னும் மூன்றுடன் மட்டும் மொழிமுதலாகும் என்றார்.

தொல்காப்பியர் ஞகரம் ஆ எ ஒ என்னும் மூன்று உயிர்களுடன் கூடி மொழிமுதலில் வரும் என்றார். நேமிநாதமுடையாரும் அவ்வாறே கூறினார். இவ்வாசிரியர் ஞமலி என்ற திசைச்சொல் வழக்கு நோக்கி, அகரத்தையும் கூட்டி அது நான்கு உயிர்களுடன் முதலாகும் என்றார். இலக்கண விளக்க ஆசிரியர் மட்டும் தொல்காப்பியர் விதித்ததே விதி எனக் கொண்டு அவர் வழிநின்று மொழி முதனிலை கூறினார்.

தொல்காப்பியர் கூறிய நுந்தையின் நகரமிசைக் குற்றியலுகரம் இவ்வாசிரியருக்கு உடன்பாடன்மையின் அதனை விடுத்தார். ஙகரப் பற்றி வேறுயாரும் ஏதுங் கூறாராக இவ்வாசிரியர், அது சுட்டு, யா, எகர வினாக்கள் இவற்றை ஒட்டி அகரத்துடன் மொழி முதலாகும் என்றார்.

ஙனம் என்ற சொல் உரையாசிரியர்களின் படைப்பு எனத் தெரிகிறது. ஆங்கனம், ஈங்கனம், யாங்கனம் என்பனவே பண்டை வழக்கு ஆதலின், கனம் என்பதே பழந்தமிழ் இயற்சொல் வடிவு எனக்கோடல் பொருந்தும். தொல்காப்பியர் மொழி முதலாகா என விடுத்த ஒலிகளைப் பெற்றுச் சமழ்பு, சவட்டு, சமன், சலம், ஞமலி, யவனர் முதலிய பல சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களிற் பயின்றுள்ளன.

**(47)**

## 102. உஊஒஓ வலவொடு வம்முதல்

உ ஊ ஒ ஓ அல ஒடு வம் முதல்

u ū o ō ala otu vam mutal

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

## Special rule for V

V as an initial cannot be combined with u, u,o,o and au.

## ஒப்புமைப் பகுதி

உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்
வவென் எழுத்தொடு வருதல் இல்லை

(தொல். : 63)

ஈட்டிய வவ்வரின் எட்டெழுத்து....

(நேமி.: 7:2)

..............................வவ்வில்
ஏவிய எட்டும்.......................

(வீர. : 7 : 1–2)

உ ஊ ஒ ஓ வலவொடு வவ்வரும்

(மு. வீ. : 64)

வஞய வெட்டாறு லாடவிற் சிலவு முதற்காம்

(சுவாமி. : 21 : 1)

## மயிலைநாதர்

எ – ன், பொதுவிதி மாற்றிச் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இந் நான்குமொழிந்த உயிரோடுங் கூடி வகரம் மொழிக்கு முதலாம், எ – று.

வ – று.:

வளி, வாளை, [1]விளி, [2]வீளை, வெளி, வேளை, வைகல்,
வெளவுதல் என வரும்.

பாட வேறுபாடு.:

1.விழி. விளை.

2.வீழி. வீணை.

## சங்கர நமச்சிவாயர்

எ — **னின்,** பொதுவிதியுள் சிறப்புவிதி **உணர் — ற்று.**

**இ—ள்:** இந் நான்கும் அல்லாத எட்டுயிரோடும் வகரம் மொழிக்கு முதலாம், எ — று.

**உ — ம்.:**

வளி, வாளி, விளி, வீளி, வெளி, வேளை, வைகல், வௌவு
என வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** வகாரத்துக்குப் பொது விதி மாற்றிச் சிறப்பு விதி கூறியது.

**இ—ள்.: உ ஊ ஒ ஓ அலவொடு** — உ ஊ ஒ ஓ என்னும் இந்நான்கு உயிருமல்லாத எட்டு உயிரெழுத்தோடும் கூடி, **வம் முதல்** — வகரம் மொழிக்கு முதலாம், எ—று.

**உ—ம்:**

வளம், வாவி, விளைவு, வீதம், வெண்பா, வேதம், வையம்,
வௌவுதல் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முதலாமென்ற மெய்களுட் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

**இ—ள்.: உ ஊ ஒ ஓ வலவொடு** — உ ஊ ஒ ஓ என்கின்ற நான்குமல்லாத எட்டுயிர்களோடும், **வ** — வகர மெய்யானது, **முதல்** — சொல்லுக்கு முதலாகும், எ — று.

**உ—ம்.:**

வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேளை, வைகல்,
வௌவு என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

***வகரமெய் எவ்வுயிர்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும்?***

உஊஒஓ வலவொடு வம்முதல்

(உ ஊ ஒ ஓ அல ஒடு வம் முதல்)

**இ –ள். உ ஊ ஒ ஓ அலவொடு** – உ ஊ ஒ ஓ என்னு நான்குமல்லாத எட்டுயிர்களோடும், **வ முதல்** – வகர சொல்லுக்கு முதலாகும், **எ – று.**

**உ – ம்.**

வளை, வாளை, விளை, வீடு, வெளி, வேர், வையம், வெளவல் என வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** மேற்கூறிய பொதுவிதிக்குச் சிறப்புவிதி கூறுகின்றது.

**இ–ள்.:** இந்த நான்கு உயிருமல்லாத எட்டு உயிர்களோடுங் கூடி வகரம் மொழிக்கு முதலாம், **எ – று.**

**உ–ம்.:**

வளி, வாளி, விளி, வீளி, வெளி, வேளை – வைக்கோல், வெளவால் என வரும்.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– உ ஊ ஒ ஓ அலவொடு** – உ ஊ ஒ ஓ என்கிற நான்குமல்லாத எட்டுயிர்களோடும், **வ முதல்** – வகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்.

**உ–ம் :–**

வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேளை, வைகல், வெளவால் என வரும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: உ ஊ ஒ ஓ வலவொடு** – உ ஊ ஒ ஓ என்னும் நான்குமல்லாத எட்டுயிர்களோடும், **வ முதல்** – வகரமெய் (சொல்லுக்கு) முதலாகும், **எ – று.**

**உ – ம்.:**

வளி,வாளி, விளி, வீறு, வெளி, வேளை, வைகல், வெளவு என வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். உ ஊ ஒ ஓ அல ஒடு** – உ, ஊ, ஒ, ஓ என்னு நான்கும் அல்லாத எட்டுயிரோடும், **வ முதல்** – வகரமெய் சொல்லுக்கு முதலாகும்.

**உ–ம்.**

வளி, வாழை, விடை, வீடு, வெளி, வேளை, வையம், வௌவால் எனவரும். உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிரொடும் வகரமெய் மொழிக்கு முதலாகமாட்டாதென்றறிக.

## வை.மு. சடகோபாராமாநுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.: உ ஊ ஒ ஓ அலவொடு** - இந் நான்கு மல்லாத எட்டு உயிரோடும் (கூடி), **வ முதல்** - வகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்; **எ-று.**

**உ-ம்.:**

வண்டு, வாழை, வினை, வீடு, வெளி, வேழம், வையம், வௌவால்.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள். உ ஊ ஒ ஓ அலவொடு** - உ ஊ ஒ ஓ என்னும் நான்குமல்லாத எட்டுயிர்களோடும், **வ முதல்** - வகர மெய் சொல்லுக்கு முதலாகும், **எ-று.**

**உ-ம்.**

வளி, வாளி, விளி, வீளு வெளி, வேளை, வைகல், வௌவு.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். உ ஊ ஒ ஓ அலவொடு** – உ ஊ ஒ ஓ என்கின்ற நான்கு மல்லாத எட்டுயிர்க ளோடும், **வ முதல்** – வகர மெய் (சொல்லுக்கு) முதலாகும், **எ–று.**

**பொ—ரை.:**

உகர முதலிய இந் நான்கும் அல்லாத எட்டு உயிர்களோடும் கூடி வகரம் மொழிக்கு முதலில் வரும்.

**உ—ம்.**

வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேளை, வைகல், வௌவால்.

வளி—காற்று,

வாளி—அம்பு,

வீறு—பெருமை,

வைகல்—நாள்.

## கா. நமச்சிவாய முதலியார்

**உ ஊ ஒ ஓ அலவொடு** – உ ஊ ஒ ஓ என்கிற நான்குமல்லாத எட்டுயிர்களொடும், **வ முதல்** – வகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்.

**உதாரணம்**

வளி, வாளி, விளி, வீறு, வெளி, வேலை, வைகல், வௌவால்.

**(48)**

## 103. அஆ உஊ ஓஔ யம்முதல்.

**அ ஆ உ ஊ ஓ ஔ யம் முதல்.**

a ā u ū ō au yam muṭal

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Special rule for y

Y is an initial (only) when combined with a, a, u, u, o and au o.

### ஒப்புமை நூற்பாக்கள்

ஆவோ டல்லத யகர முதலாவது

(தொல். : 65)

ஞயவின் மும்மூன்று....

(நேமி. : 7 : 3)

..................... யவ்வாறும் ..............

( வீர. : 7 : 2)

அஆ உஊ ஒஔ வோடு
யகர மொழி முத லாகு மென்ப

( மு. வீ. : 63)

வஞய வெட்டாறு ஆறு லாடவிற் சிலவு முதற்காம்

(சுவாமி. : 21 : 1)

### மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: இந்த ஆறு உயிரோடுங் கூடி யகரம் மொழிமுதலாம் எ – று.

வ – று.:

யவனர், யானை, யுகம், [1]யூகம், [2]யோகம், யௌவனம் என
வரும். மேலில் ஒடுவை வருவித்துக் கொள்க.

---

பாட வேறுபாடு :- 1. யூகி.

2. யோகி

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** இதுவும் அது.

**இ – ள்.:** இவ் ஆறுயிரோடும் யகரம் மொழிக்கு முதலாம், எ –று.

**உ – ம்.:**

யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம் என வரும். மேலை ஒடுவை வருவித்துக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** இதுவுமது.

**இ–ள்.:** **அ ஆ உ ஊ ஒ ஔ** – இவ்வாறு உயிரோடுங் கூடி, **யம் முதல்** – யகாரம் மொழிக்கு முதலாம், **எ–று.**

**உ–ம்.:**

யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம் என வரும்.

## விசாகப்பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: அ ஆ உ ஊ ஒ ஔ (வொடு)** – அ ஆ உ ஊ ஒ ஔ என்கிற ஆறுயிரோடும், **ய** – யகர மெய், **முதல்** – சொல்லுக்கு முதலாகும், **எ – று.**

முன் சூத்திரத்தின் 'ஒடு' வை வருவிக்கலாயிற்று.

**உ – ம்.:**

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*யகர மெய் எவ்வுயிர்களோடுமொழிக்கு முதலில் வரும்?*

அஆ உஊ ஒஔ யம்முதல்.

(அ ஆ உ ஊ ஒ ஔ யம் முதல்.)

**இ - ள். அஆஉஊஒஔ** - அ ஆ உ ஊ ஒ ஔ என்னும் ஆறுயிரோடும், **ய முதல்** - யகர மெய் சொல்லுக்கு முதலாகும். எ - று.

**உ - ம்.**

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் என வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ-ள்.:** இந்த ஆறு உயிரோடுங்கூடி யகரம் மொழிக்கு முதலாம், எ - று.

**உ-ம்.:**

யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம் என வரும்.

மேலைச் சூத்திரத்துச் சொன்ன ஒடுவை இச் சூத்திரத்தும் ஔவொடு யம் முதலெனக் கூட்டிக் கொள்க.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :- அஆ உஊ ஒஔ (ஒடு)** - அ ஆ உ ஊ ஒ ஔ என்கிற ஆறுயிரோடும், ய **முதல்** - யகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்.

**குறிப்பு :-** மேலைச் சூத்திரத்துள்ள 'ஒடு' வை இச் சூத்திரத்தும் 'ஔவொடு' ய முதல் எனக்கூட்டிப் பொருள் கொள்க. யகரமெய் ஆ வோடல்லது தமிழில் மொழிமுதலாகாது. "ஆவோடல்லது யகரமுதலாது" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தானுமுணர்க.

உ—ம்:—

யவனர், யானை, யுகம், யூகம், யோகி, யௌவனம் எனவரும்.

## ஆறுமுக நாவலர்

இதுவுமது.

**இ—ள்.: அ ஆ உ ஊ ஒ ஔ (வொடு)** – அ ஆ உ ஊ ஒ ஔ என்னும் ஆறுயிரோடும், **ய முதல்** – யகரமெய் சொல்லுக்கு முதலாகும், **எ — று.**

மேலைச் சூத்திரத்தின் 'ஒடு' இங்கே வருவிக்கப்பட்டது,

**உ—ம்.:**

யவனர், யானை,யுகம், யூகி, யோகி, யௌவனம் என வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். அ ஆ உ ஊ ஒ ஔ (ஒடு) - அ ஆ உ ஊ ஒ ஔ என்னும் ஆறு உயிரோடுங்கூடி, ய முதல் - யகரமெய் சொல்லுக்கு முதலாகும்.

மேலைச் சூத்திரத்தின் ஒடு இங்கே வருவிக்கப்பட்டது.

உ-ம்.

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம் எனவரும்.

இ, ஈ, எ, ஏ, ஐ, ஒ என்னும் ஆறுயிரோடும் யகரமெய் மொழிக்கு முதலாகாதென்றறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

இ—ள்.: அ ஆ உ ஊ ஒ ஔ – இந்த ஆறு உயிரோடும் (கூடி), யமுதல்—யகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்; எ—று.

**உ–ம்.:**

யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

**யவனர்** – ஒருதேயத்தார்.

**யூகம்** – கூட்டம்.

**யௌவனம்** – இளமை

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அ ஆ உ ஊ ஒ ஔ (வொடு)** – அ ஆ உ ஊ ஒ ஔ என்னும் ஆறுயிரோடும், **ய முதல்** – யகர மெய் சொல்லுக்கு முதலாகும், **எ–று.**

மேலைச் சூத்திரத்தின் 'ஒடு' இங்கே வருவிக்கப்பட்டது.

**உ–ம்.**

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். அ ஆ உ ஊ ஒ ஔ (ஒடு)** – அ ஆ உ ஊ ஒ ஔ என்கிற ஆறு உயிரோடும், ய **முதல்** – யகர மெய் (சொல்லுக்கு) முதலாகும். **எ–று.**

**பொ–ரை.:**

அகரமுதலிய இவ்வாறு உயிரோடும் கூடி, யகரம் மொழிக்கு முதலில் வரும்.

மேலைச் சூத்திரத்தின் (ஒடு) இங்கே வருவிக்கலாயிற்று.

**உ–ம்.**

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம்.

யவனர்–ஓர் தேயத்தார், யூகி–விவேகி, யௌவனம்– இளமை.

இவ்வாசிரியர் வட சொற்கள் பெரும்பாலும் தமிழில் வழங்குதல் பற்றி, **"ஆவோ டல்லது யகரம் முதலாது"**

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதை மறந்து இங்ஙனம் கூறினார்.

## கா. நமச்சிவாய முதலியார்

**அ ஆ உ ஊ ஒ ஔ** (ஒடு) – அ ஆ உ ஊ ஒ ஔ என்கிற ஆறு உயிரோடும், **ய முதல்** – யகரமெய் (மொழிக்கு) முதலாகும்.

முன் சூத்திரத்தின் '**ஒடு**' இங்கே வருவிக்கலாயிற்று

**உதாரணம்**

யவனர், யானை, யுகம், யூகி, யோகி, யௌவனம்.

**( 50 )**

## 104. அஆஎ ஒவ்வோ டாகு ஞம்முதல்

**அ ஆ எ ஒவ் ஓடு ஆகும் ஞம் முதல்**

a ā e ov ōtu ākum ñam muṭal

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rule for ñ**

ñ is initial (only) when combined with a, a e and o.

## ஒப்புமைப் பகுதி

**ஆ எ ஒ என்னும் மூஉயிர் ஞகாரத்து உரிய** (தொல். : 64)

**ஞயவின் மும்மூன்று.....** (நே.மி. : 7: 3)

ஞந் நான்கும்..............

(வீர. : 7: 2)

**அஆ எஔ வ்வோ டாகு ஞம் முதல்**

(மு. வீ. : 62)

**வஞய வெட்டாறு ஆறு லாடவிற் சிலவு முதற்காம்**

(சுவாமி. : 21 :1)

## மயிலை நாதர்

**இதுவுமது.**

**இ—ள்.:** இந் நாலுயிரோடுங் கூடி ஞகரம் மொழிக்கு முதலாம், எ — று.

வ—று.:

[1]ஞமன், [2]ஞாலம், [3]ஞெகிழ்ந்தது, ஞொள்கிற்று என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ — **னின்,** இதுவும் அது.

**இ—ள்.:** இந்நான்கு உயிரோடும் ஞகரம் மொழிக்கு முதலாம், எ — று.

**உ — ம்.:**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று என வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—**ம்,** இதுவுமது.

**இ—ள்.: அ ஆ இ எ ஒவ்வொடு** – இவ்வைந்து உயிரோடுங் கூடி, **ஆகுஞ் ஞம் முதல்** – ஞகரம் மொழிக்கு முதலாம், எ—று.

---

**பாட வேறுபாடு :-**

1. **ஞமலி,**
2. **ஞானம்,**
3. [illegible]

**உ–ம்.:**

ஞமண், ஞானம், ஞிமிறு, ஞெண்டு, ஞொள்கல் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: அ ஆ எ ஒவ்வோடு** – அ ஆ எ ஒ என்கின்ற நான்குயிரோடும், **ஞ** – ஞகரமெய், **முதலாகும்** – சொல்லுக்கு முதலாகும், **எ–று.**

**உ–ம்.:**

ஞமலி, ஞாலம் ,ஞெகிழி, ஞொள்கிற்று என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஞகர மெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலில் வரும்?

அஆஎ ஒவ்வோ டாகு ஞம்முதல்

(அ ஆ எ ஒவ் ஒடு ஆகும் ஞம் முதல்)

**இ – ள். அ ஆ எ ஒவ் ஒடு** – அ ஆ எ ஒ என்னும் நான்குயிரோடும், **ஞம் முதல் ஆகும்** – ஞகர மெய் சொல்லுக்கு முதலாகும், **எ – று.**

**உ – ம்.**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.:** இந்தநான்கு உயிரோடுங்கூடி ஞகரம் மொழிக்கு முதலாம், **எ – று.**

**உ–ம்.:**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல் என வரும்.
ஞொள்கல் – இளைத்தல்.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :–** அ ஆ எ ஒவ்வோடு – அ ஆ எ ஒ என்கிற நான் குயிரோடும், ஞ முதல் ஆகும் – ஞகரமெய் (சொல்லுக்கு) முதலாகும்.

**உ–ம் :–**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல் எனவரும்.

**குறிப்பு:–**

'ஞிமிறு' என்னும் இலக்கணப் போலி மொழியை நோக்கி ஞகரம் ஐந்துயிரோடு மொழிக்கு முதலாகும் எனக் கொள்வர் பிற்காலத்தார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அ ஆ எ ஒவ்வோடு –** அ ஆ எ ஒ என்னும் நான்குயிரோடும், **ஞ முதல் ஆகும்** – ஞகரமெய் சொல்லுக்கு முதலாகும், **எ – று.**

**உ–ம்.:**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று என வரும்.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். அ ஆ எ ஒவ்வோடு** – அ ஆ எ ஒ என்னும் நான்கு உயிரோடும், **ஞ முதல் ஆகும் –** ஞகரமெய் சொல்லுக்கு முதலாகும், **எ–று.**

**உ–ம்.**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று எனவரும்.இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் எட்டுயிரோடும் ஞகரமெய் மொழிக்கு முதலாகாதென்பது கருத்து. ஆயினும், **ஞிமிறு** என்னுஞ் சொல்லில் இரண்டாமெழுத்து முதலும் முதலெழுத்து இரண்டாவதுமாக நிலைமாறின. இலக்கணப் போலி மொழியாகிய ஞி**ஞிமி**று என்பதில் ஞகரம் மொழி முதலானது காண்க.

இயற்கையான சொற்களில் முதலாகும் ஞகர மெய்யொடு கூடுமுயிரெழுத்துக்களைக் கூறுமிடத்து இகரத்தைச் சேர்க்காது விட்டார். **ஞேயம்** என்னும் வடமொழியில் ஞகரம் ஏகாரத்தொடு முதலானதுங் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: அ ஆ எ ஒவ்வோடு** – இந்நான்கு உயிரோடும் (கூடி), **ஞ முதல் ஆகும்** – ஞகர மெய் (சொல்லுக்கு) முதலாகும்; **எ–று.**

**உ–ம்.:**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

ஞமலி – நாய்.

ஞாலம் – பூமி.

ஞெகிழி – கொள்ளிக்கட்டை.

ஞொள்கல் – இளைத்தல்.

பிற்காலத்தார் மிஞிறு என்பது எழுத்துநிலை மாறிய இலக்கணப் போலி மொழியாகிய ஞிஞிமிறு என்பதையும் கூட்டி , ஞகரம் ஐந்து உயிரோடு கூடி மொழிக்கு முதலா மென்பர்(ஞிஞிமிறு – வண்டு) அது, இயற்கை மொழியன் றாதலால் , இவ்வாசிரியரால் கொள்ளப்பட்டிலது.

ஞேயம் என்ற வடசொற் சிதைவும் அது.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். அ ஆ எ ஒவ்வோடு** – அ ஆ எ ஒ என்னும் நான்குயிரோடும், ஞ முதல் ஆகும் – ஞகர மெய் சொல்லுக்கு முதலாகும், **எ–று.**

**உ–ம்.**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

**'தவளைப் பாய்த்து'** என்பது 19–வது சூத்திரத்தாற் கூறப்படும் சூத்திர நிலைகளில் ஒன்றாம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். அ ஆ எ ஒவ்வொடு** – அ ஆ எ ஒ என்கிற நான்கு உயிரோடும், **ஞ முதல் ஆகும்** – ஞகரமெய் (சொல்லுக்கு) முதலாகும். **எ–று.**

**பொ—ரை.:**

அகர முதலிய இந் நான்கு உயிரொடும் கூடி, ஞகரம் மொழிக்கு முதலில் வரும்.

**உ—ம்.**

ஞமலி, ஞாலம, ஞெகிழி, ஞொள்கிற்று.

**ஞெகிழி** – தீக்கடைகோல்,

**ஞொள்கல்** – அலைதல்.

**கா. நமச்சிவாய முதலியார்**

**அ ஆ எ ஒவ்வோடு** – அ ஆ எ ஒ என்கிற நான்கு உயிரோடும், **ஞ முதல் ஆகும்** – ஞகர மெய் (சொல்லுக்கு) முதலாகும்.

**உதாரணம்**

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

**மிஞிறு** என்பது **ஞிமிறு** என இலக்கணப் போலியாக வருதலால், ஞகரம் இகரத்தோடும் மொழிக்கு முதலாதல் அறிக.

ஞமலி – நாய்; ஞாலம் – பூமி; ஞெகிழி – கொள்ளிக்கட்டை; ஞொள்கல் – இளைத்தல்.

(50)

## 105. [1]சுட்டியா வெகர வினாவழி யவ்வை ஒட்டி ஙவ்வு முதலா கும்மே.

**சுட்டி யா எகர வினா வழி அவ்வை**
**ஒட்டி ஙவ்வும் முதல் ஆகும்மே.**

பாட வேறுபாடு :-

1. சுட்டு யா

sutti yā ekara viṉā vaḷi avvai
otti ṅavvum muṭal ākummē.

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rule for n**

ñ is an initial (only) when combined with 'a', and preceded by the Demonstrative and (two) interrogatives 'yá' and 'e'.

**ஒப்புமைப் பகுதி**

**அந்தம் இவற்றைந்து ஙவ்வுஞ் சுட்டு வினாவினுமாம்**

(சுவாமி. : 21 : 2)

**மயிலை நாதர்**

**இதுவுமது.**

**இ—ள்.:** மூன்று சுட்டிற்கும் யாவும் எகரமுமாய வினாக்க ளுக்கும் வழியே [1]அகரத்தோடுங் கூடி ஙகரம் மொழிக்கு முதலாம், **எ—று.**

**வ—று.:**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்
என வரும். உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை.

*"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி*

*சளிசகடு சட்டை சவளி – சவிசரடு*

*சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்*

*வந்தனவாற் சம்முதலும் வை "*

*குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி,*

*னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்*

என ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வாறு
குற்றியலுகரம் மொழிக்கு முதலாமென்றாராலோ வெனின்,

*நுந்தை யுகரங் குறுகி மொழிமுதற்*

*கவந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும் – சந்திக் குயிர்முதலா [1]வந்தணையு மெய்ப்புணர்ச்சி யின் மயலணையு மென்றதனை மாற்று."*

இவற்றை விரித்துரைத்து விதியும் விலக்கும் அறிந்துகொள்க. மொழிமுதல் முற்றும்.

## சங்கர நமச்சிவாயர் - சிவஞான முனிவர்

எ – **னின்,** இதுவும் அது.

இ – ள்.: மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாய இடைச்சொற்களின் பின் அகரத்தை யொட்டி ஙவ்வும் மொழிக்கு முதலாம், எ–று.

உ – ம்.:

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என வரும். இவற்றை அங்கு எங்கு என்றாற் போல ஒரு மொழிகள் என்றால் என்னை யெனின்: – அஞ்ஞான்று எஞ்ஞான்று என்பன போலப் பிளவுபட்டு இடையே மெல்லொற்று மிக்கு வருதலின் தொடர்மொழிகளேயாம் என்க.

ஙனம் என்பது, இடத்தினையும், தன்மையினையும் உணர்த்தும் பலபொருள் ஒருசொல்லாய் வரினும், தனித்து வரும் தன்மையதன்றி **முடவன் கோலூன்றி** வந்தாற் போலச் சுட்டு வினாவாகிய இடைச்சொற்களை முன்னிட்டு வருதலான் வழி என்றும், ஏனைய மெய்கள் போல முதலாகாமையின் அவ்வோடு என்னாது ஒட்டி என்றும், ஒருவாற்றான் முதலாதலின் இழிவு சிறப்பாக ஙவ்வும் என்றும் கூறினார். இங்ஙனம் கூறலான் ஙகரம் மொழிக்கு முதலாகாது என்பார்க்கு **உடன்படலும் மறுத்தலுமாய்ப் பிறர்தம் மதமேற் கொண்டு களைவே** என்னும் மதம்படக் கூறினார் என்று உணர்க.

இனி முதலாம் என்ற பத்து உயிர்மெய்யுள் வகரம் முதலிய நான்கினையும் விதந்து கூறவே ஒழிந்த ஆறு மெய்யும் பன்னிரண்டு உயிரோடு முதலாம் என்பது, **அருத்தாபத்தியால்** பெற்றாம். ***இனி,***

*"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே*
*அ ஐ ஔஎனும் மூன்றலங் கடையே"*

*என்பது முதலாக இன்னோரன்ன சில எழுத்துக்களை மொழிக்கு முதலாகா என ஆசிரியர் தொல்காப்பியர் விலக்கினாராலோ வெனின், இவ் வடமொழிகளும் திசைச் சொற்களும் அக்காலத்து இவ்வாறு தமிழின்கண் பயின்று வாராமை பற்றி என்க.*

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்**, இதுவுமது.

**இ–ள்.: சுட்டியா எகர வினாவழி** – சுட்டெழுத்தின் பின்னும் யா வினாவின் பின்னும் எகர வினாவின் பின்னும், **அவ்வை ஒட்டி** – அகர உயிரோடுங் கூடி, **நவ்வு முதலாகும்மே** – ஙகரம் மொழிக்கு முதலாம், **எ–று.**

**உ–ம்.:**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ – ள்.: சுட்டு** – மூன்று சுட்டும், **யா (வினா)** – யா வினாவும், **எகர வினா** – எகர வினாவும் ஆகிய வைந்தனுடைய, **வழி** – பின்பு, **அவ்வை** – அகரத்தை, **ஒட்டி** – சேர்ந்து, **நவ்வும்** – ஙகர மெய்யும், **முதலாகும்** – சொல்லுக்கு முதலாகும், **எ – று.**

**உ–ம்.:**

அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் யாங்ஙனம் எங்ஙனம் என வரும்.

ஒருவிதத்தினாலே முதலாகையால் ஙவ்வும் என இழிவுசிறப்பும்மை கொடுத்துக் கூறினார் முதலாகாதென்பவர்க்கு உடன்படுதலு மறுத்தலுமாதலால் **'பிறர்தம் மதமேற் கொண்டு களைவு'** என்னுமதம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*நகரமெய் எங்கெங்கே எவ்வுயிரோடு மொழிக்கு முதலில் வரும்?*

சுட்டியா வெகர வினாவழி யவ்வை ஒட்டி நவ்வு
முதலா கும்மே.

(சுட்டு யா எகர வினா வழி அவ்வை
ஒட்டி நவ்வும் முதல் ஆகும்மே.)

**இ – ள்.சுட்டு யா எகர வினா வழி** – மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின், **அவ்வை ஒட்டி நவ்வும் முதல் ஆகும்** – அகரத்தைச் சேர்ந்து நகர மெய்யும் சொல்லுக்கு முதலாகும், **எ – று.**

**உ – ம்.**

அஙஙனம்,இஙஙனம்,உஙஙனம்,எஙஙனம்,யாஙஙனம் என வரும்.

ஙனமென்பது இடத்தையும் தன்மையையு முணர்த்தும் பலபொரு ளொருசொல்

## முகவை இராமானுசக் கவிராயர்

**இதுவுமது.**

**இ–ள்.: சுட்டு** – மூன்று சுட்டெழுத்தும், **யாவெகர வினாவழி** – யா வினா எகர வினாவுமாகிய இவற்றின் பின், **அவ்வை ஒட்டி** – அகரம் ஒன்றை மாத்திரஞ் சார்ந்து, **நவ்வுமுதலாகும்** – ஙகரமு மொழிக்கு முதலாம், **எ – று.**

**உ–ம்.:**

அஙஙனம் இஙஙனம் உஙஙனம் யாஙஙனம் எஙஙனம் எனவரும். இவற்றை அங்கு இங்கு என்றாற்போலத் தொடர்மொழிகளெனக் கொள்க.

ஙனம் என்பது இடத்தையும் தன்மையையும் உணர்த்தும் பலபொருளொரு சொல்லாய் வரினுந் தனித்து வருந் தன்மை யின்றி **முடவன் கோலூன்றி வந்தாற்** போலச் சுட்டு வினாவாகிய இடைச்சொற்களை முன்னிட்டு வருதலால் வழியென்றும், அவ்வை ஒட்டி யென்றும், ஒருவிதத்திலே முதலாதலால் இழிவுசிறப்பு உம்மை கொடுத்து நவ்வுமென்றுங் கூறினார். இவ்வாறு

கூறுதலால் ஙகர மொழிக்கு முதலாகா தென்பார்க்கு உடன்படலும் மறுத்தலுமாய், **பிறர்தம்மத மேற்கொண்டு களைவென்னும்** மதம்படக் கூறினாரெனக் காண்க.

இனி முதலாமென்ற பத்துயிர்மெய்யுள் வகர முதலிய நான்கையும் எடுத்துக் கூறவே ஒழிந்த ஆறுமெய்களும் பன்னிரண்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாமென்பது **அருத்தாபத்தி** யென்னும் உத்தியாற் கொள்ளக் கிடந்தமை காண்க. மொழிமுதலிலக்கண முற்றிற்று.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– சுட்டு** – மூன்று சுட்டும், **யா (வினா) எகர வினா** – யா வினாவும் எகர வினாவும் (ஆகிய ஐந்தனுடைய), **வழி** – பின்னே, **அவ்வை ஒட்டி** – அகரத்தைச் சேர்ந்து, **ஙவ்வும் முதல் ஆகும்** – ஙகரமெய்யும் (சொல்லுக்கு) முதலாகும்.

**உ–ம் :–**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என வரும்.

**குறிப்பு:–**

ஒருவிதத்தினாலே முதலாகையால் 'ஙவ்வும்' என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார். முதலாகாதென்பவர்க்கு உடன்படுதலும் மறுத்தலுமாதலால், இது **பிறர்தம் மதமேற் கொண்டு களைவு** என்னும் மதம்.

முதலாம் என்ற பத்துயிர் மெய்யுள் வகர முதலிய நான்கையும் எடுத்துக் கூறவே, ஒழிந்த க ச த ந ப ம என்னும் ஆறுமெய்களும் பன்னிரண்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாமென்பது **அருத்தாபத்தியாற்** கொள்ளக் கிடந்தமை காண்க.

## ஆறுமுக நாவலர்

**இ – ள்.: சுட்டு யா (வினா) எகர வினா வழி** – மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின், **அவ்வை ஒட்டி ஙவ்வும் முதல்**

**ஆகும்** – அகரத்தைச் சேர்ந்து ஙகர மெய்யுஞ் சொல்லுக்கு முதலாகும், என்றவாறு.

**உ–ம்.:**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என வரும், ஙனமென்பது இடத்தையுந் தன்மையையு முணர்த்தும் பலபொருளொரு சொல்.

ஒருவிதத்தினாலே முதலாகையால், ஙவ்வுமென இழிவுசிறப்பும்மை கொடுத்துக் கூறினார்.முதலாகா தென்பவருக்கு உடன்படதலு மறுத்தலு மாதலால் இது, **பிறர்தம்மதமேற் கொண்டு களை வென்னு** மதம்.

முதலாமென்ற பத்துயிர்மெய்யுள், வகர முதலிய நான்கினையும் விதந்து கூறவே, ஒழிந்த ஆறுமெய்யும் பன்னிரண்டுயிரோடும் முதலா மென்பது **அருத்தாபத்தியாற்** பெற்றாம்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். சுட்டு** – அ இ உ என்னும் மூன்று சுட்டிடைச் சொற்களுக்கும், **யா (வினா) எகர வினா** – யா என்னும் எ என்றும் வரும் வினாவிடைச் சொற்களுக்கும், **வழி** – பின், **அவ்வை ஒட்டி ஙவ்வும் முதலாகும்** – அகரத்தைச் சேர்ந்து ஙகரமெய்யுஞ் சொல்லுக்கு முதலாகும். **எ–று.**

**உ–ம்.**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என வரும். ஙனமென்பது இடத்தை யும், தன்மையையு முணர்த்தும் நாநார்த்த பதம்.

***நாநார்த்தம்*** – பலபொருள்.

அகரமல்லாத மற்றப் பதினொரு உயிர்களோடுங் கூடி ஙகர மெய் முதலாக மாட்டா தென்றறிக.

பத்து மெய்களுள் ஙகரம் மற்றவை போல முதலாகாமல் அ, இ, உ, யா, எ என்னும் ஐந்திடைச் சொற்களுள் ஒன்றன் பின்னாக அகரத்தொடு கூடி வருமொழியிலே முதலாகுதலால் ஙவ்வும் என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார்.

முதலாகா தென்பவருக்கு உடன்படுதலும், மறுத்தலு மாதலால், யகரம் ஆறுயிரோடும், ஞகரம் நான்குயிரோடும், ஙகரம் ஒருயிரோடும் கூடி மொழிக்கு முதலாகுமென்று வரையறை செய்தது போல் க, ச, த, ந, ப, ம என்னும் ஆறு மெய்களும் இன்னவுயிரொடு கூடி முதலாகு மென்று வரையறை செய்யாதது அவை பன்னிரண்டு உயிரொடுங் கூடி மொழிக்கு முதலாகுதலாலென்றறிக.

முறையிற் கூறாமல் ககரத்தின் பின்னிரண்டாவதாகக் கூறத் தகும் ஙகரத்தை ஈற்றில் வைத்தும், சகரத்தை யடுத்துக் கூறத் தகும் ஞகரத்தை ஈற்றயலில் வைத்தும், ஙகர ஞகர யகரங்களுக்குப் பின் வைக்கத் தகும் வகரத்தை அம் மூன்றற்கும் முன் வைத்தும் பிறழக் கூறியது அவை மொழி முதலாகும் போது கூடும் உயிரின் குறைவும் மிகுதியும் ஆகிய விசேடம் பற்றி யென்றுணர்க. எவ்வாறெனில்;

பன்னிரண் டுயிரொடு மொழிக்கு முதலாகுங் க ச த ந ப ம என்னும் ஆறு மெய்களையும் முந்தியும், எட்டுயிரோடு கூடி முதலாகும் வகரத்தை அவற்றின் பின்னும், ஆறுயிரோடு கூடி முதலாகும் யகரத்தை அதன் பின்னும், நான்குயிரோடு கூடி முதலாகும் ஞகரத்தை அதன் பின்னும், ஒருயிரோடு கூடி முதலாகும் ஙகரத்தை அதன் பின்னுமாக வைக்கப்பட்டமை யாம்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.:** **சுட்டு** – மூன்று சுட்டும், **யா எகர வினா** – யா வினாவும் எகர வினாவும் ஆகிய ஐந்தனுடைய, **வழி** – பின்னே, **அவ்வை ஒட்டி** – அகரத்தைச் சேர்ந்து, **ஙவ்வும் முதல் ஆகும்** – ஙகர மெய்யும் (சொல்லுக்கு) முதலாம், **எ – று.**

**உ—ம்.:**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்

**ஙனம்** – விதம்.

ஒரு விதத்தினாலே முதலாகையால், 'ஙவ்வும்' என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார். முதலாகா தென்பவர்க்கு ஒருவகையால் உடன்படுதலும் ஒருவகையால் மறுத்தலு மாதலால், இது, **பிறர்தம் மதம்மேற் கொண்டு களைவு** என்னும் தம்மதம். (பிறர்மதம் மேற்கொண்டு களைவு – பிறர்மதத்தை ஒருவாறு அங்கீகரித்து மற்றொரு வகையால் மறுத்தல்.

முதலாமென்ற பத்து உயிர்மெய்யுள் வகரம் முதலிய நான்கையும் எடுத்துச் சிறப்புவிதி கூறவே, மற்றைய க ச த ந ப ம என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாமென்பது அமைதல் காண்க.

**உ–ம்.:**

கனி, காய், கிளி, கீரை, குடம், கூடு, கெண்டை, கேள், கைதை, கொடை, கோடு, கௌவை;

சமர், சாந்து, சிறுமை, சீர், சுரை, சூது, செக்கு, சேவல், சையம், சொல், சோறு, சௌரியம்,

தந்தை, தாய், திணை, தீமை, துணி, தூது, தெற்கு, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை;

நன்மை, நாடு, நிலம், நீர், நுனி, நூல், நெஞ்சு, நேர், நைதல், நொச்சி, நோக்கம், நௌவி,

படை, பால், பிடி, பீடு, புகழ், பூண்டு, பெடை, பேடு, பைதல், பொன், போர், பௌவம்;

மனை, மாலை, மின்னல், மீன், முளை, மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி, மோடு, மௌவல்.

இங்ஙனம் க ச த ந பமக்கள் பன்னிரண்டு உயிரோடும், வகரம் எட்டு உயிரோடும், யகரம் ஆறு உயிரோடும், ஞகரம் நான்கு உயிரோடும், ஙகரம் ஒருயிரோடும் கூடி மொழிக்கு முதலாதல் பற்றியே, மேல் "பன்னீருயிரும்" என்ற சூத்திரத்தில் 'க ச த ந ப ம வ ய ங ஞ' என்று முறைப்படுத்தினரென அறிக.

உயிரெழுத்துப் பன்னிரண்டும், கசதநபமக்கள் பன்னிரண்டு உயிரோடு வருதலால் அவை எழுபத்திரண்டும், வகரம் எட்டு உயிரோடு வருதலால்

அவை எட்டும், யகரம் ஆறு உயிரோடு வருதலால் அவை ஆறும், ஞகரம் நான்கு உயிரோடு வருதலால் அவை நான்கும், ஙகரம் ஒருயிரோடு வருதலால் அது ஒன்றும், ஆக **நூற்று மூன்று எழுத்துக்களே** மொழிக்கு முதலாம்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். சுட்டு யா (வினா) எகர வினா வழி** – மூன்று சுட்டும் யா வினாவும் எகர வினாவுமாகிய இடைச்சொற்களின் பின், **அவ்வை ஒட்டி ஙவ்வும் முதல் ஆகும்** – அகரத்தைச் சேர்ந்து ஙகர மெய்புஞ் சொல்லுக்கு முதலாகும், **எ—று.**

**உ—ம்.**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்

ஙனம் என்பது இடத்தையுந் தன்மையையு முணர்த்தும் பலபொருளொரு சொல்.)

ஒருவிதத்தினாலே முதலாகையால், ஙவ்வுமென இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார். முதலாகாதென்பவருக்கு உடன்படுதலும் மறுத்தலு மாதலால், இது '**பிறர்தம் மதமேற் கொண்டு களைவு**' என்னும் மதம்.

முதலாமென்ற பத்துயிர் மெய்யுள், வகர முதலிய நான்கினையும் விதந்து கூறவே, ஒழிந்த ஆறுமெய்யும் பன்னிரண்டுயிரோடும் முதலாமென்பது **அருத்தாபத்தியாற்** பெற்றாம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். சுட்டு** – மூன்று சுட்டும், **யா எகர வினா** – யா வினாவும் எகர வினாவும் (ஆகிய ஐந்தனுடைய), **வழி** – பின்னே, **அவ்வை ஒட்டி** – அகரத்தைச் சேர்ந்து, **ஙவ்வும் முதல் ஆகும்** – ஙகர மெய்யும் சொல்லுக்கு முதலாகும், **எ—று.**

பொ—ரை.:

அ இ உ என்கிற மூன்று சுட்டும், யா வினாவும், எகர வினாவும் ஆகிய ஐந்தன் பின்னே அகரத்தைச் சேர்ந்து ஙகரமும் மொழிக்கு முதலில் வரும்.

உ—ம்.

அங் ஙனம், இங் ஙனம், உங் ஙனம், யாங் ஙனம், எங் ஙனம்.

ஙனம்—விதம்.

ஒருவிதத்தினாலே முதலாகையால் ஙவ்வும் என இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினார். முதலாகா தென்பர்க்கு உடன்படுதலும் மறுத்தலு மாதலால், இது பிறர்தம் மத மேற்கொண்டு களைவு என்னும் மதம். (பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு – பிறர் மதத்திற்கு உடன்பட்டுப் பின்பு மறுத்தல்.) ஙகரம் மற்றை மெய்யெழுத்தைப் போல முதலாகாமையால், 'அவ்வை ஒட்டி' என்றார்.

இங்ஙனம் கசதநபமக்கள் பன்னிரண்டு உயிரோடும், வகரம் எட்டு உயிரோடும், யகரம் ஆறு உயிரோடும், ஙகரம் ஒருயிரோடும் கூடி மொழிக்கு முதலால் அறிக.

## கா. நமச்சிவாய முதலியார்

**சுட்டு** – மூன்று சுட்டும், **யா எகர வினா** – யா வினாவும் எகர வினாவும் (ஆகிய ஐந்தனுடைய), **வழி** – பின்னே, **அவ்வை ஒட்டி** – அகரத்தைச் சேர்ந்து, **ஙவ்வும் முதல் ஆகும்** – ஙகர மெய்யும் (சொல்லுக்கு) முதலாகும்.

**உதாரணம்**

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்.

ஙனம் – இடம், தன்மை.

ஒருவிதத்தினாலே முதலாகையால், '**ஙவ்வும்**' என இழிவுசிறப்பும்மை கொடுத்துக் கூறினார். முதலாகாது என்பவர்க்கு உடன்படுதலும் மறுத்தலு மாதலால், இது, '**பிறர்தம் மத மேற்கொண்டு களைவு**' என்னும் மதம்.

முதலாமென்ற பத்து உயிர் மெய்யுள், வகர முதலிய நான்கிற்கும் சிறப்புவிதி கூறவே, ஒழிந்த க ச த ந ப ம

என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாமென்பது 'அருத்தாபத்தி' யாற் கொள்ளப்படும்.

(51)

## 8. ஈற்று நிலை

106. ஆவி ஞணநம னயரல வழளமெய்
சாயு முகர நாலா று மீறே.

ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்
சாயும் உகர நால் ஆறும் ஈறே.

āvi ña ṇa na ma ṉa ya ra la va ḻa ḷa mey
sāyum ukara nāl āṟum īṟē.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Finals**

**Final letters**

The following twenty-four letters may be used as Finals: the (twelve) Vowels, the Consonants, ñ, n, n, m, n, y, r, l, v, l, l and short u.

### ஒப்புமைப் பகுதி

உயிர் ஔ எஞ்சிய இறுதி ஆகும் (தொல். : 69)

கவவொடு இயையின் ஔவும் ஆகும் (தொல். : 70)

ஞணந மனயரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி இறுதி

(தொல். : 78)

உயிரின்கண் ஒன்பா னுடனும் மென்மை யின்மூன்
றயர்வில் இடையினங்கள் ஆறு – நயனுணர்ந்து
நன்மொழிகட் கீற்றெழுத்தாம் என்றுரைப்பர் ஞாலத்துச்
சொன் முடிவு கண்டோர் துணிந்து

(நேமி. : 8)

ஈறும் மகர ணகரங்க டாமும் இடையினத்தில்
ஏறும் வகரம் ஒழிந்தைந்தும் ஈரைந் தெழிலுயிரும்
வீறுமலி வேங்கடங் குமரிக்கிடை மேவிற்றென்று
கூறுந் தமிழினுக் கீற்றெழுத் தாமென்பர் கோல்வளையே

(வீர. : 8)

ஈராறா றுயிரு மிறுதியா மெனவே

(மு. வீ. 82)

அந்தமாம்,
ஞணநமனயரல வழளவே

(மு. வீ. : 82)

அந்தம் இவற்றைந்து ஙவ்வுஞ் சுட்டுவினா வினுமாம்

ஆவி ஞண நமன யரல வழள குற்றுகரக்கு
அந்தம் இருபானான்கும் இறுதிநிலை யெழுத்தாம்.....

(சுவாமி. : 21 : 2– 3)

## மயிலை நாதர்

எ–ன், நிறுத்தமுறையானே மொழிக்கு ஈற்றெழுத்தாவன உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இச் சொல்லப்பட்ட உயிரும் மெய்யும் குற்றுகரமுமாகிய இருபத்துநாலெழுத்தும் மொழிக்கு ஈறாவன வாம், எ – று.

வ – று.:

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஒள எனவும்; உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வேள் எனவும்,

[1]அஃகு என்வும் வரும், இவை பொதுவிதியாற் போந்தன. ஏனைய வருஞ் சூத்திரத் திற் பெறுதும்.

குற்றுகரமும் உயிராயடங்கு மெனினும் புணர்ச்சி முதலான வேறுபாடுண்மை நோக்கி வேறெடுத் தோதினாரென்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** நிறுத்தமுறையானே மொழிக்கு ஈறாமாறு **உணர்—ற்று.**

**இ—ள்.:** தனித்தும் ஒற்றோடும் வரும் ஆவி முதலாக இங்ஙனங் கூறிய இருபத்துநான்கு எழுத்தும் மொழிக்கு ஈறாம், **எ — று.**

**உ — ம்.:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும், சுட்டும் வினாவும் உவமவுருபடியுமாய ஒரெழுத்தொருமொழியாம் இடைச் சொல் லாகிய அ, இ, உ, எ, ஒ எனவும்; விள, பலா, கரி, குரீஇ, கடு, மரூஉ, சே, தை, கோ எனவும்; உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எனவும் வரும். காட்டாதொழிந்தன வருஞ் சூத்திரத்தால் காண்க.

குற்றுகரமும் உயிராயடங்குமேனும், புணர்ச்சி வேறுபாடு தோன்ற வேறெடுத்தோதினார் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** நிறுத்திய முறையே மொழிக்கு ஈறாம் எழுத்து இன்னதெனக் கூறியது.

**இ—ள்.: ஆவி** – உயிர் பன்னிரண்டு எழுத்தும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – இப்பதினோர் உடலெழுத்தும், **சாயுமுகரம்** – குற்றியலுகரம் ஒன்றும், **நாலாறும் ஈறே** – ஆக இருபத்து நாலெழுத்தும் மொழிக்கு ஈறாய் வரும், **எ—று.**

---

பாட வேறுபாடு :- 1. எஃகு

**உ—ம்.:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும் உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எனவும் வரும். இது பொதுவிதி யாற் போந்தன. ஒழிந்தன வரும் சூத்திரத்துள் காட்டுதும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** நிறுத்தமுறையான் மொழிக்கீறாமாறு உணர்த்துகின்றது.

**இ—ள்.: ஆவி** – தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு உயிர்களும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – இப் பதினொரு மெய்களும், **சாயுமுகரம்** – குற்றியலுகரமும் ஆகிய, **நாலாறும்** – இருபத்து நான்கெழுத்தும், **ஈறு**– மொழிக்கீறாகும், **எ – று.**

**உ—ம்.:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எனவும், விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ எனவும், உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எழுத்துக்கள் முற் கூறிய மாத்திரையின் மிக்கொலிக்கவும் பெறு மென்பதும் அது பெறுமிடம் இவை யென்பதும் கூறுஞ் சூத்திரம் யாது?

ஆவி ஞணநம னயரல வழளமெய்
சாயு முகர நாலாறு மீறே.

(ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்
சாயும் உகர நால் ஆறும் ஈறே.)

**இ – ள். ஆவி** – தனித்தும் மெய்யோடும் வரும் பன்னி ரண்டு உயிரும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – ஞ ண ந ம ன என்னும் மெல்லொற் றைந்தும், ய ர ல வ ழ ள என்னு மிடையொற்று ஆறுமாகிய பதினொரு மெய்களும்,**சாயும் உகரம்**– குற்றியலுகரமாகிய **நால் ஆறும் ஈறே** – இருபத்து நான்கு எழுத்தும் மொழிக்கீறாகும், **எ – று.**

**உ –ம்.**

ஆ, ஈ ஊ ஏ ஐ ஓ – எனவும்,

விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, நௌ – எனவும்,

உரிஞ், மண், பொருந், மரம், மொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு – எனவும் வரும்.

*மெல்லின மெய் ஆறனுள் எத்தனை மெய்கள் மொழிக்கீறாகும்?*

ஞண நமன என்னும் ஐந்துமாம்.

*மொழிக்கீறாகும் மெய்யெழுத்தெத்தனை?*

ஞண நமன யரலவ ழள என்னும் பதினொன்றுமாம்.

*மொழிக்கீறாத எழுத்துக்கள் எவை?*

வல்லின மெய் ஆறும் ஙகரமெய்யுமாம்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** நிறுத்தமுறையே எழுத்துக்கள் மொழிக்கு ஈறாமிலக்கண முணர்த்துகின்றது.

**இ–ள்.:** **ஆவி** – தனித்தும் மெய்யொடு கூடியும் வரும் உயிர் பன்னிரண்டும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – இந்தப் பதினோரொற்றும், **சாயுமுகரம்** – குற்றியலுகரமும், **நாலாறும்** – ஆகிய இருபத்து நான்கு எழுத்துக்களும், **ஈறு** – மொழி யிறுதியிலே வருமெழுத்துக்களாம்.

**உ–ம்.:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும் அ இ உ எ ஒ எனவும் வரும் இவை தானே நின்று ஈறாயின. இவற்றுள்

ஊ – இறைச்சி.

ஏ – அம்பு.

ஐ – அழகு.

ஓ – மதகுநீர் தாங்கு பலகை.

ஔ – அவ் என்னும் வகர வீற்றுச் சுட்டுப்பெயர்ப் பொருளை ஒப்புமையாற் காட்டி நிற்கும், அகர முதலிய மூன்றுஞ் சுட்டு இடைச் சொல், எகரம் – வினா விடைச்சொல், ஒகரம் ஒத்தான் என்னும் வினையில் முதனிலை.

விள, பலா, கரி, குரீ, கடு, மரூ, சே, தை, தோ எனவும் இவை மெய்யொடு கூடி யீறாயின; இவற்றுள் சே – எருது.

உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வாழ், வாள், அஃகு என வரும். இவை மெய்யீறு. இவற்றுள்

உரிஞ் – தேய்த்தல்.

பொருந் – ஒருவர் மற்றொருவர் போல வேடந் தரித்தல்.

காட்டா தொழிந்தன வருஞ் சூத்திரத்தாற் காண்க. குற்று கரமும் உயிரீறா யடங்கு மாயினும் புணர்ச்சி வேறுபாடு தோன்ற வேறெடுத்துக் கூறினாரெனக் காண்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஆவி** – (தனித்தும் மெய்யோடும்) வரும் பன்னிரண்டுயிர்களும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – ஞகரம் முதலிய இப்பதினொரு மெய்களும், **சாயும் உகரம்** – குற்றியலுகரமும் (ஆகிய), நாலாறும் இருபத்துநான்குமெழுத்தும், **ஈறு** – மொழிக்கு இறுதியில் வரும்.

**உ–ம் :–**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும், விள, பலா, கரி, தீ, கடு, பூ, தே, தை, நொ, போ, கௌ எனவும், உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், இஃது எனவும் வரும்.

குறிப்பு:–

காட்டாதொழிந்தன வருஞ்சூத்திரத்தாற் காண்க. குற்றுகரமும் உயிரீறா யடங்குமாயினும் புணர்ச்சி வேறுபாடு தோன்ற வேறெடுத்துக் கூறினார். முதலிலும் கடையிலும் வருமெழுத்துக்களிவை யெனவே அவ்விரண்டிடத்தும் வாராதன ட், ற் என்பனவாம்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: ஆவி** – தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு யிர்களும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – இப் பதினொரு மெய்களும், **சாயும் உகரம்** – குற்றியலுகரமுமாகிய, **நாலாறும் ஈறு** – இருபத்துநான்கெழுத்தும் மொழிக்கீறாகும், **எ – று.**

**உ – ம்.:**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ. எனவும், விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ. எனவும். உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃது, எனவும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ஆவி** – (தனித்தும் மெய்யொடு கூடியும் வரும்) பன்னிரண்டுயிர்களும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – இப்பதினொருமெய்களும், **சாயும் உகரம்** – குற்றியலுகரமுமாகிய, **நாலாறும் ஈறு** – இருபத்துநான்கெழுத்தும் மொழிக்கீறாகும், **எ—று.**

பின்வரும் புணர்ச்சியிலெடுத்தாளுதற் பொருட்டுக் குற்றியலுகரத்தை வேறாக எடுத்துத் தொகை கொடுத்தோதினார்.

**உ—ம்.**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, அ, இ, உ, எ, ஒ, எனவும் விள, பலா, கரி, தீ, கடு, பூ, சே, தை, கோ, கௌ, எனவும். உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு, எனவும். வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: ஆவி** – (தனித்தும் மெய்யோடு கூடியும் வரும்) பன்னிரண்டு உயிர்களும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – இப் பதினொரு மெய்களும், **சாயும் உகரம்** – குற்றியலுகரமும் ஆகிய, **நாலாறும்** – இருபத்து நான்கு எழுத்துக்களும், **ஈறு** – (மொழிக்கு) இறுதியாகும், **எ – று.**

உ–ம்.:

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ எனவும்; வீள, பலா, களி, தீ, விடு, பூ, சே, தே, பனை, நொ, போ, வௌ எனவும்,

உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், புகழ், வாள், அஃது எனவும் வரும்.

ஆ – பசு. ஊ–மாமிசம்,

ஏ – அம்பு, ஐ – அழகு,

ஒ – ஒத்தல், ஓ–மதகு நீர்தாங்கும் பல்கை.

ஔ – பற்றுதல், சே–எருது,

தே – தெய்வம், நொ – வருந்து,

உரிஞ் – உராய்தல், பொருந் – பொருந்துதல்; அல்லது, ஒரு வகைப் பாட்டு,

வேய் – மூங்கில், தெவ் – பகை.

குற்றியலுகரமும் உயிரீற்றில் அடங்குமாயினும், புணர்ச்சி வேறுபாடு பற்றி, வேறு எடுத்துக் கூறினார். எனவே, இங்கு 'ஆவி' என்றதில் அடங்கிய உகரம் முற்றியலுகரமாம். மற்றைய குறுக்கங்களை வேறு எடுத்துக் கூறாமைக்குக் காரணம் புணர்ச்சி வேறுபாடின்மை யென்க.

வல்லின மெய் ஆறும், ஙகர மெய்யும் மொழிக்கு ஈறாகா.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ஆவி** – தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு உயிர்களும், **ஞ ண நமன யரலவழள மெய்** – இப் பதினொரு மெய்களும், **சாயும் உகரம்** – குற்றியலுகரமுமாகிய, **நாலாறும் ஈறு** – இருபத்து நான்கெழுத்தும் மொழிக்கீறாகும், **எ–று.**

**உ–ம்.**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ; விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ: உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள்: அஃகு.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். ஆவி** – (தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு) உயிர்களும், **ஞ ண ந ம ன ய ர ல வழ ள மெய்** – ஞ ண ந ம ன முதலிய பதினொரு மெய்களும், **சாயும் உ கரம்** – குற்றிய லுகரமும் ஆகிய, **நாலாறும்** – இருபத்து நான்கு எழுத்தும், **ஈறு** – மொழிக்கு ஈறாகும். **எ—று.**

**பொ—ரை.:**

தனித்தும், மெய்யோடுகூடியும் வரும் பன்னிரண்டு உயிர்களும், ஞகர முதலாகிய பதினோரு மெய்களும் குற்றியல் உகரமும் ஆகிய இருபத்துநான்கு எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வரும்.

**உ—ம்.**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எ—ம்; அ, இ, உ, எ, ஒ எனவும்;

விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ எனவும்; உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள் எனவும்; அஃகு எனவும் வரும்.

ஆ—பசு, ஈ – ஓர் ஜெந்து,
ஊ – மாமிசம், ஏ – அம்பு,
ஐ – அழகு, ஓ– மதகுநீர் தாங்கும் பலகை,
ஔ – பற்றுதல் அல்லது அவை. ஒ – ஒத்தல்,

சேஎ – என்புழி அளபெடையில் எகரம் ஈறாயிற்று.

சே – இடபம், தே – தெய்வம், நொ – வருந்து,
உரிஞ் – உராய்தல், பொருந் – பொருந்துதல் அல்லது ஒருவகை பாட்டு.
வேய் –மூங்கில், தெவ் – பகை,
அஃகு – சுருங்குதல்

**குற்றியலுகரமும் உயிரீறாய் அடங்குமாயினும் மெய்யீறு போல உயிர் ஏற இடங் கொடுத்து நிற்கும் புணர்ச்சி வேறுபாடு தோன்ற வேறு எடுத்துக் கூறினார்.** எனவே

இங்கு ஆவி என்பதில் அடங்கிய உகரம் முற்றியலுகரமாம். மற்றைய குறுக்கங்களை வேறு எடுத்துக் கூறாமைக்குக் காரணம் புணர்ச்சி வேறுபாடு இன்மையென அறிக.

வல்லினமெய் ஆறும், ஙகர மெய்யும் மொழிக்கு ஈறாகா.

## கா. நமச்சிவாய முதலியார்

**ஆவி** – (தனித்தும் மெய்யோடும் வரும்) பன்னிரண்டு உயிர்களும், **ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்** – ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள ஆகிய பதினொரு மெய்களும், **சாயும் உகரம்** – குற்றியலுகரமும் (ஆகிய), **நாலாறும்** – இருபத்து நான்கெழுத்தும், **ஈறு** – மொழிக்கு ஈறாகும்.

**உதாரணம்**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும்;

விள, பலா, கறி, தீ, கடு, பூ, சே, எ, தே, தை, நொ, போ, கௌ எனவும்;

உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள் எனவும்;

அஃகு எனவும் வரும்.

குற்றுகரமும் உயிரீறா யடங்குமாயினும் புணர்ச்சி வேறுபாடு தோன்ற வேறு எடுத்துக் கூறினார்.

## மோசகு பொன்னையா

தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரு உயிர்களும், ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்ற பதினொரு மெய்களும், குற்றியலுகரமும் ஆகிய இருபத்து நான்கு எழுத்துக்களும் மொழிக்கு ஈறாகும், **எ—று.**

**எ—டு.**

உயிர் –விள, பலா, கிளி, தீ, வீடு, பூ, சே, தே, பனை, நொ, போ, வௌ.

மெய் – உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், புகழ், வாள்.

குற்றியலுகரம் – ஆடு, வரகு, பாட்டு, நுங்கு, மார்பு, கஃசு.

தொல்காப்பியர் உயிரும் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினொரு மெய்களும் மொழி இறுதியாகும் எனக் கூறினார். அவர் மொழிமுதற் குற்றுகரமென்று நகர மிசை உகரத்தைக் கூறினார். அது முற்றியலுகரத்தோடு பொருள் வேறுபடாது வருவது ஆதலின், அதனை மொழிமுதல் நிலையாகக் கொண்டதாகவும் அவரே கூறினார். அதனால், மொழி யீற்றுக் குற்றியலுகரம் இறுதிநிலை எனப்படாமைக்குக் காரணமும் ஆண்டே அவர் கூறினார் எனலாம். அவரொடு மாறுபட்டு,

**நுந்தை உகரங் குறுகி மொழிமுதற்கண்**

**வந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும் – சந்திக்**

**குயிர்முதலா வந்தணையு மெய்ப்புணர்ச்சி யின்றி**

**மயலணையு மென்றதனை மாற்று,**

எனக் கூறினாரும் இல்லாமற் போகவில்லை.

மொழி முதற் குற்றியலுகரத்தை விடுத்த இவ்வாசிரியர், சாயுமுகரம் மொழியீற்றில் வரும் எனக்கூறி அதனையும் கூட்டி யெண்ணித் தொகை கூறியது வியப்பாகவே உள்ளது. குற்றிய லுகரம் அளபு குறைந்த உகரமே யன்றி வேறன்று எனக் கொண்டு,முதலெழுத்தின் விகாரமாய் வரும் பிற எழுத்துக் களோடு அதனைக் கூட்டிச் சார்பெழுத்து என்று விதித்த இவ் வாசிரியர், குற்றியலுகரம் ஒன்றை மட்டும் மொழியிறுதியில் வரும் உயிர், மெய் எழுத்துக்களுடன் கூட்டியுரைத்து மொழி யிறுதியில் வரும் மகரக் குறுக்கத்தை விடுத்தது நெறியன்றாம். வீரசோழியமும், நேமிநாதமும் குற்றியலுகரத்தை மொழி யிறுதி எழுத்து எனக் கூறாமை நோக்கத்தக்கது. தொல்காப்பியர் கொண்டவாறே உகர உயிரினும் அது வேறுபட்டது என்று கூறாக் கால் புணர்ச்சி வேறுபாட்டை விளக்கியுரைத்தல் கூடாமையின் இவ்வாறு கூறினார் போலும்.

(52)

**107. குற்றுயி ரளபி னீறா மெகரம்
மெய்யோ டேலா தொந்நவ் வொடா[1]மௌ
ககர வகரமொ டாகு மென்ப.**

குற்று உயிர் அளபின் ஈறு ஆம் எகரம்
மெயோடு ஏலா ஒ நவோடு ஆம் ஔ
ககர வகரமொடு ஆகும் என்ப.

kuṟṟu uyir aḻapiṉ īṟu ām ekaram
meyōtu ēlā ō navōtu ām au
kakara vakaramotu ākum eṉpa.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

**Special Rule**

(of the finals), short vowels are finals (by themselves) in vowels prolongations; 'e' cannot be combined with a Consonant; 'o' can be combined only with 'n', and 'au', only with 'k' and 'v'.

**ஒப்புமைப் பகுதி**

எஎன வருமுயிர் மெய் ஈறாகாது

(தொல். : 71)

ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே

(தொல். : 72)

கவ வொடு இயையின் ஔவும் ஆகும்

(தொல். : 70)

பாட வேறுபாடு :-

1. ஔக் ககர

**அளபிற் குற்றுயி ரந்த மாகும்**

(மு. வீ. : 83)

**எகரம் புள்ளியோ டிணைந்தீறாக**

(மு. வீ. : 84)

**ஒகர நகரமெய் யோடிறு வாகும்**

(மு. வீ. : 85)

**ஔகான் ககர வகரமோ டன்ன**

(மு. வீ. : 86)

## மயிலை நாதர்

**எ – ன்.:** குற்றுயிர்க்குப் பொதுவிதி மாற்றிச் சிறப்புவிதியும், எல்லா வுயிர்க்கும் பொதுவிதியின் மேற் சிறப்புவிதியும் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** குற்றுயிர் அளபின் ஈறாம் என்பது, குற்றுயி ரைந்தும் தாமே நின்று ஈறாகா, அளபெடுப்புழி ஈறாம், எ – று.

**வ – று.:**

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என வரும். எகரம் மெய்யோடு ஏலாது என்பது, எகரம் மெய்களோடு கூடி நின்று ஈறாகாது, எ – று.

ஒ நவ்வொடு ஆம் என்பது, ஒகரம் நகர மொன்றுடனே கூடி நின்று ஈறாம், எ – று.

**வ – று.:**

நொ என வரும்.

ஔ ககர வகரமொடு ஆகும் என்பது, ஔகாரம் ககரத்தோடும் வகரத்தோடுங் கூடி நின்று ஈறாம், எ – று.

**வ – று.:**

கௌ, வௌ என வரும்.

என்ப என்பது, என்று சொல்லுவர் புலவர், எ – று.

எனவே, உயிர்கள் தாமே நின்றும் அளபெடுப்புழி நின்றும் ஈறாதலே யன்றி, ஒகரம் நகரத்துடனும், ஔகாரம் ககர வகரங்களுடனும், எகர மொழிந்த ஏனைய ஒன்பதுயிரும் தமக்கேற்ற மெய்களுடனும் கூடி நின்று ஈறாம், எ – று.

எகர ஒகர ஔகாரங்களை விதந்தோதினமையான், ஏனை உயிர்கள் தமக்கேற்ற மெய்களோடு ஈறாமென்பது தாமே போதருமெனக் கொள்க.

**வ—று.:**

வாழ்க,[1]ழுங்கா, [2]பெருங்கி, [3]பெருங்கீ, [4]பங்கு, [5]கூ, எங்கே, எங்கை, எங்கோ என வரும். இவ்வாறே ஏற்கும் பிற மெய்களோடும் ஒட்டிக் கொள்க. ஏற்குமென்பது எற்றாற் பெறுதுமோ வெனின், சூத்திரத்து **எடுத்தோதாது ஞாபக வகையாற் சொற்றமையாற்** பெறுதும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ —னின்,** குற்றுயிர்க்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும், எகரத்திற்கு எய்தியது ஒருமருங்கு விலக்கலும், ஒகரத்திற்கும் ஔ காரத்திற்கும் எய்தியவற்றுள் சிறப்புவிதியும், **உணர்—ற்று.**

**இ—ள்.:** குற்றுயிர் அளபெடையின்கண் வரிவடிவின் அறிகுறியாய்த் தனித்து ஈறாம்; எகரம் மெய்யோடு ஈறாகாது; ஒகரம் நகரமொன்றுடன் ஈறாம்; ஔகாரம் ககர வகரங்கள் இரண்டுடனும் ஈறாம் என்று சொல்லுவர் புலவர், **எ — று.**

**உ — ம்.:**

**ஆஅ வளிய அலவன்** – எனவும்

**நொ** – எனவும்

**கௌ.வௌ** – எனவும் வரும்.

நெடில் அளபெடுப்புழி நெட்டெழுத்துத் தனியே வந்த நேரசை குற்றெழுத்துத் தனியே வந்த நேரசை என்று கொள்ள நிற்றலின் குற்றுயிர் அளபின் ஈறாம் என்றார்.

எகர ஒகர ஔகாரங்களை விதந்தோதவே, ஏனை யுயிர்கள் தமக்கேற்ற மெய்களோடு ஈறாம் என்பது பெற்றாம்.

---

பாட வேறுபாடு.:

**1.பூங்கா** **2. (1) பருங்கி (2) பிருங்கி,**

**3. 'பெருகீ** **4. பெருகு**

**5. (1) பெருகூ (2) பங்கூ**

முதலும் சார்புமாய் வகுத்து விரித்துக் கொண்ட எல்லா எழுத்தும் உயிரும் மெய்யும் ஆய்தமுமாய் அடங்கலின் முதலும் ஈறுமாகாத ஆய்தத்தை ஒழித்து, ஒழிந்த உயிரும் மெய்யுமாய இரண்டனையும் உயிர்முதல் மெய்ம்முதல் உயிரீறு மெய்யீறு என வகுத்துக் கொண்டார், மேல் வரும் புணர்ச்சி விதி அடங்குதற் பொருட்டு எனக் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்,** குற்றுயிருக்குப் பொதுவிதி மாற்றிச் சிறப்பு விதியும் எல்லா உயிருக்கும் பொது விதிமேற் சிறப்பு விதியும் கூறியது.

**இ-ள்.: குற்றுயிர் அளபின் ஈறாம்** – குற்றுயிர் ஐந்தும் தானே நின்று ஈறாகா, அளபெடுப்புழி ஈறாம்.

**உ-ம்.:**

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ.

**எகரம் மெய்யொடு ஏலாது** – எகரம் மெய்களோடு கூடி வந்து ஈறாகாது.**ஒ நவ்வொடு ஆம்** – ஒகரம் நகரம் ஒன்றுடனே கூடிநின்று ஈறாம்.

**உ-ம்.:**

நொ

**ஔ ககர வகரமோடு ஆகும்** – ஔகாரம் ககரத்தோடும் வகரத்தோடும் கூடி நின்று ஈறாம்.

**உ-ம்.:**

கௌ, வௌ.

**என்ப** – என்று சொல்லுவர் புலவர், **எ – று.** ஒழிந்த ஒன்பது உயிரும் தத்தமக்கேற்ற மெய்களோடுங் கூடி ஈறாமென்பது சொல்லாமற் போந்தது.

**உ-ம்.:**

வருக, பூங்கா, வீக்கி, புகீ, செகு, புகூ, இங்கே, மங்கை,
எங்கோ, உச, உசா, விசி, சீ, முசு, சூ, சே, கச்சை, சோ;
உரிஞ், உரிஞா, உரிஞி, உரிஞீ, உரிஞு, உரிஞூ, மஞ்சை,
உரிஞோ, தட்ட, தடா, மடி, பிடீ, மடு, மடூ, அடே, பட்டை,
அடோ, பண்ண, எண்ணா, கண்ணி, உண்ணி, கணு,
கண்ணூ, இணே, பண்ணை, கண்ணோ, அத, உதா, புதி,

பதீ, அது, தூ, அதே, தந்தை, அந்தோ; பொருந, நா, நீ, நே, நை, நொ, தப, துப்பா, தம்பி, ஆப்பீ, தபு, பூ, பே, பெதும்பை, போ; கம, மா, அம்மி, மீ, செம்மு, கொண்மூ, மே, ஆமை, வம்மோ; செய, காயா, ஆயி, மொயி, வாயு, கொய்யூ, அய்யே, ஐயை, ஐயோ; அவர, தரா, புரி, புரீ, சரு, வெரூ, நரை, அரோ, சில, பலா, வலி, வலீ, வலு, கொலூ, வல்லே, கலை, கொலோ; தவ, அவா, தவி, வீ, கதவு, வே, வை, தொழ, விழா, நழி, வழி, மழு, எழூ, ஊழே, வாழை, உழோ, உள, உள்ளா, உள்ளி, குளீ, உள்ளு, எள்ளே, அளை; கற்ற; கற்றா, உறி, உறீ, கற்று, கற்றூ, அற்றே, காறை, எற்றோ; நன, கனா, வனி, துனீ, முன்னு, துன்னூ, என்னே, அன்னை, அன்னோ.

## விசாகப் பெருமாளையர்

இது, முன்னீறாமென்ற வெழுத்துட் சிலவற்றிற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

**இ–ள்.: குற்றுயிர்** – அ இ உ எ ஒ என்கிற குற்றுயிரானவை, **அளபின்–** அளபெடையிலே, **ஈறாம்** – வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறாகும், **எகரம்** – எகரமானது, **மெய்யொடேலாது** – மெய்யோடீறாகாது, **ஒ** – ஒகரமானது, **நவ்வொடாம்** – நகரமெய்யொன் றுடனீறாகும், **ஔ** – ஔகாரமானது, **ககர வகர மோடாகும்** – ககர வகரங்களிரண்டு மெய்களுடனீறாகும், **என்ப** – என்று சொல்லுவர்புலவர்,எ – று.

**உ–ம்.:**

பலாஅ – தீஇ – பூஉ – சேஎ – கைஇ – கோஒ – கௌஉ – எனவும், நொ– எனவும்,கௌ – வௌ – எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*உயிரெழுத்துக்களுள் இவை இவை இன்னவிடத்தீறாமெனச் சிறப்பு விதி கூறும் சூத்திரம் யாது?*

குற்றுயி ரளபி னீறா மெகரம்

மெய்யோ டேலா தொந்நவ் வொடாமௌ

ககர வகரமொ டாகு மென்ப.

(குற்று உயிர் அளபின் ஈறு ஆம் எகரம்

மெய்யோடு ஏலா ஒ நவோடு ஆம் ஔ

ககர வகரமொடு ஆகும் என்ப.)

**இ – ள். குற்று உயிர் அளபின் ஈறு ஆம்** – அ இ உ எ ஒ என்னும் குற்றுயிர்கள் அளபெடையிலே வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறாகும், **எகரம் மெய்யோடு ஏலாது** – எகரம் மெய்யோடு ஈறாகாது, **ஒ நவோடு ஆம்** – ஒகரம் நகரமெய் ஒன்றுடன் ஈறாகும், **ஔ ககர வகரமொடு ஆகும் என்ப** – ஔகாரம் ககர வகரங்களிரண்டு மெய்களுடன் ஈறாகும் என்று சொல்லுவர் புலவர், **எ – று.**

**உ – ம்.**

பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇர கோஒ, கோ, கௌ,
எனவும் , நொ – எனவும், கௌ, வௌ
எனவும் வரும்.

நொ – துன்பப்படு.

கௌ – வாயாற் பற்று.

வௌ – கொள்ளையிடு.

*இச் சூத்திரத்திற் பெறப்படும் பொருள் யாது?*

"குற்றுயிரளபி னீறாம்" என்றமையால்நெட்டெழுத்தேழும் தாமே நின்று ஈறாமென்பதும்,அவற்றுள்ளும் ஔகாரம் வகரமோடாகும் என்றமையால் ஔகாரம் ஏனை மெய்களோடு கூடியேனும் தானே தனித்தேனும் நின்று ஈறாகாதென்பதும் எகர ஒகர ஔகாரம் மூன்றும் வரையபறுக்கப்பட்டமையின் ஒழிந்த ஒன்பது உயிரெழுத்துக்களும் தமக்கேற்ற மெய்களோடு கூடி நின்று ஈறாமென்பதும் பெறப்படும் பொருளாம்.

*குற்றெழுத்துக்கள் எங்கே ஈறாகும்?*

"குற்றுயிர் அளபீறாம்"

*மெய்களோடு மீறாகாத உயிரெது?*

"எகரம் மெய்யொடேலாது"

*ஒகரம் எம் மெய்யோடு ஈறாகும்?*

"ஒநவ்வொடாம்"

*ஔகாரம் எம்மெய்களோடு ஈறாகும்?*

"ஔக் ககர வகரமோ டாகு மென்ப"

**இது**, குற்றுயிர்க்கும் ஒகரத்திற்கும் ஒளகாரத்திற்கும் எய்தியதன் மேற் சிறப்பு விதியும், எகரத்திற்கு எய்தியது ஒருபுறம் விலக்குதலு முணர்த்துகின்றது.

**இ—ள்.: குற்றுயிரளபின் ஈறாம்** – குற்றுயி ரைந்தும் நெட்டுயிர் அளபெடுக்கும் போது (வரிவடிவிலே அறிகுறியாகத்) தனித்தும் ஈறாகும், **எகர மெய்யோடு ஏலாது**—எகர மெய்யோடு கூடி யீறாகாது, **ஒந் நவ்வோடாம்** – ஒகரம் நகர மொன்றுடனே கூடி யீறாகும், **ஒள ககர வகரமோடு ஆகுமென்ப** – ஒளகாரம் ககரத்தோடும் வகரத்தோடுங் கூடி யீறாகுமென்று சொல்லுவர் புலவர், **எ — று.**

**உ—ம்.:**

ஆஅவளிய, ஈஇரிரை, தூஉந்திரை, மேஎவலை, ஒவுழக்கும் – எனக் குற்றுயிரைந்தும் (தானேநின்றும் மெய்யொடு கூடியும் ஈறானதுமன்றி) அளபெடுக்கும் போதும் ஈறாயின.

நொ – என ஒகரம் நகரமோடு கூடி யீறாயிற்று.

கௌ, வௌ – என ஒளகாரம் ககர வகரங்ளோடு கூடி யீறாயிற்று.

நொ கௌ வௌ என்பன முறையே, நீ துன்பப்படு ,வாயாற் பற்று, கொள்ளையிடு என்னும் ஏவல் வினைகள்.

எகர ஒகர ஒளகாரங்களை யெடுத்துச் சொல்லவே மற்ற உயிர்கள் தமக்கேற்ற மெய்களோடு கூடி யீறாகுமென்பது தானே கிடைத்தது.

இனி முதல் சார்பு என எடுத்துக்கொண்ட எல்லா வெழுத்துகளும் உயிர் மெய் ஆய்தமென மூவகையாயடங்கு தலால் இவற்றுள் முதலும் ஈறுமாகாத ஆய்தத்தை யொழித்து நின்ற இரண்டையும் உயிர்முதல்,மெய்முதல் – உயிரீறு , மெய்யீறு என வகுத்துக் கொண்டார், இனி வரும் புணர்ச்சி விதி யடங்குதற் பொருட்டெனக் காண்க.

இச் சூத்திரத்துள் புலவரென்பது குறைந்து நின்றது ஆதலால் ஈறாம் ஏலாது ஆம் ஆகும் என்ற நான்கு வினைகளையும் என்ப வென்னு முற்றுவினைச் சொற்குத் தனித்தனி அடையாக்கிப் புலவரென்னும் பயனிலை கூட்டி முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **குற்றுயிர்** – (அ இ உ எ ஒ என்கிற) குற்றுயிர்கள், **அளபின்** – அளபெடையிலே, **ஈறு ஆம்** – (வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து) ஈறாகும்; **எகரம்** – எகரமானது, **மெய்யொடு ஏலாது** – மெய்யோடு ஈறாகாது; **ஒ** – ஒகரமானது, **நவ்வொடு ஆம்** – நகரமெய் ஒன்றுடன் ஈறாகும்; **ஔ**– ஔகாரமானது, **ககரவகரமோடு ஆகும்** – ககர வகரங்களிரண்டு மெய்களுடன் ஈறாகும்; **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்)

**உ–ம் :–**

பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ எனவும்,
நொ எனவும், கௌ, வௌ எனவும் வரும்.

**குறிப்பு:–**

எகரம் அளபெடையில் மாத்திரம் அறிகுறியாகவரும்.

## ஆறுமுக நாவலர்

**இ – ள்.:** **குற்றுயிர் அளபின் ஈறு ஆம்** – அ இ உ எ ஒ என்னுங் குற்றுயிர்கள் அளபெடையிலே வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறாகும், **எகரம் மெய்யொடு ஏலாது** – எகரம் மெய்யோடீறாகாது, **ஒ நவ்வொடு ஆம்** – ஒகரம் நகர மெய்யொன்றுடன் ஈறாகும், **ஔக் ககர வகரமோடு ஆகும்** – ஔகாரங் ககர வகரங்களிரண்டு மெய்களுடன் ஈறாகும், **என்ப** – என்று சொல்லுவர் புலவர், எ – று.

**உ – ம்.:**

பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ, எனவும்,
நொ எனவும்,

கௌ, வௌ எனவும் வரும்.

நொ–துன்பப்படு, கௌ – வாயாற் பற்று. வௌ – கொள்ளையிடு.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள். குற்றுயிர் அளபின் ஈறாம்** – குற்றுயிரைந்தும் (நெட்டுயிர்) அளபெடுக்கும் போது (வரிவடிவிலே அறிகுறியாகத்) தனித்து ஈறாகும், **எகரம் மெய்யொடு ஏலாது** – எகரயிர் மெய்யொடு கலந்தீறாகாது, **ஒ நவ்வொடு ஆம்**

– ஒகரம் நகரமெய்யொன்றுடன் கலந்து ஈறாகும், **ஔ ககர வகரமோடு ஆகுமென்ப** – ஔகாரம் ககரமெய்யொடும் வகரமெய்யொடுங் கலந்தீறாகும் என்று சொல்லுவர் புலவர், எ–று.

**உ–ம்.**

ஆ அ வளிய, ஈ இ ரிரை, தூஉந்திரை, மே எ வலை, ஒ ஒ வுழக்கும் எனக் குற்றுயிரைந்தும் அளபெடையில் அறிகுறியாயீறாயின. இவற்றை,

***ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ***

***டீஇ ரிரையுங் கொண்டீரளைப் பள்ளியுட்***

***டூஉந் திரையலைப் பத்துஞ்சா திறைவன்றோள் மேஎ வலைப்பட் டநம்போன்று நுதால்***

***ஓஒ வுழக்குந் துயர்***

என்னுங் கவியிற் காண்க. நொ, கௌ, வௌ, எனவரும்.

நொ – துன்பப்படு, கொ – வாயாற் பற்று. வௌ – கொள்ளையிடு.

**இன்னும் ஏ ஒ எனுமுயிர் ஞகாரத்தில்லை.**

**இ – ள்.** ஏ ஒ என்று சொல்லப்படு முயிர்கள் ஞகரமெய்யொடு கூடி யீறாக மாட்டா என்பது என்றும் ஊகாரம் நகர வொற்றோடும் வகர வொற்றோடும் ஈறாகாது என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய சில வரையறைகளையு நோக்கி உலகவழக்குச் செய்யுள் வழக்குக்களையு மாராய்ந்து ஈறாகும் உயிர்களுள் வரையறை பெறாதன தத்தமக்கேற்ற மெய்களோடு கூடியீறாகு மென்று அறிக. தாமே யீறாதலன்றிக் குற்றுயிர் அளவினுமீறாம் என்று உம்மை கொடா தொழிந்தார் அறிகுறி மாத்திரமாய் நின்ற இவற் றொடு தனித்தீறாயொலிக்கும் அவற்றைச் சேர்த்தெண் ணுதல் தகுதியன்றென்பது கருதி. முதல் சார்பு என எடுத்துக் கொண்ட எல்லா எழுத்துக்களும் உயிர், மெய், ஆய்தமென மூ வகையாய் அடங்குதலால் இவற்றுள் முதலுமீறுமாகாத ஆய்தத்தை ஒழித்து நின்ற இரண்டையும் உயிர் முதல் மெய்ம் முதல் உயிரீறு மெய் யீறு என வகுத்துக் கொண்டார் இனி வரும் புணர்ச்சி விதி யடங்குதற் கென்றறிக.

## வை.மு. சடகோபராமனுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.: குறு உயிர** - (அ இ உ எ ஒ என்கின்ற) உயிர்க் குற்றெழுத்துக்கள், (ஒரெழுத்தொரு மொழியாய் ஈறாத லன்றி) **அளபின்** - அளபெடையிலும், **ஈறு ஆம்** - (வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து) ஈறாகும், **எகரம்-, மெய்யொடு ஏலாது**-மெய்யோடு கூடி ஈறகாது; **ஒ** - ஒகரம், **நவ்வொடு ஆம்** - நகர மெய்யொன்றுடனே கூடி ஈறாகும்; **ஔ** - ஔகாரம், **ககர வகரமோடு ஆகும்** - ககர வகர மெய்க ளிரண்டுடன் கூடி ஈறாகும், **என்ப**- என்று சொல்வர், (அறிவுடையோர்), **எ-று.**

**உ-ம்.:**

பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ, எனவும்
நொ எனவும்; கௌ, வௌ எனவும் வரும்.

கௌ - வாயினாற் பற்று. வௌ-கொள்ளை யிடு.

எகர ஒகர ஔகாரங்களை எடுத்துச் சொல்லவே, மற்றை உயிர்கள் தமக்கு ஏற்ற மெய்களோடும் கூடி ஈறா மென்பது விளங்கும்.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள். குற்றுயிர் அளபின் ஈறு ஆம்** - அ இ உ எ ஒ என்னுங் குற்றுயிர்கள் அளபெடையிலே வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து ஈறா.

நூலுக்குரிய மதம் எழுவகைப்படும். அவை 11-வது சூத்திரத்திற் கூறப்பட்டுள்ளன.

**எகரம் மெய்யொடு ஏலாது** - எகரம் மெய்யோடு ஈறாகாது. **ஒ நவ்வொடு ஆம்** - ஒகரம் நகரமெய்யொன்றுடன் ஈறாகும். **ஔ ககர வகர மோடு ஆகும்** - ஔகாரம் ககர வகரங்களிரண்டு மெய்களுடன் ஈறாகும், **என்ப** - என்று சொல்லுவர் புலவர், **எ-று.**

**உ-ம்.**

பலாஅ, தீஇ, சேஎ, கைஇ, கௌஉ; நொ: கௌ, வௌ,

**நொ** - துன்பப்படு.

**கௌ** - வாயாற் பற்று.

**வௌ** - கொள்ளையிடு.

## கா. நமச்சிவாய முதலியார்

**குற்றுயிர்** – (அ இ உ எ ஒ என்னும்) குற்றுயிர்கள், **அளபின்** – அளபெடையில், **ஈறு ஆம்** (வரிவடிவில் அறிகுறியாகத் தனித்து) ஈறாகும்; **எகரம்** – எகரமானது, **மெய்யொடு ஏலாது** – மெய்யோடு ஈறாகாது; **ஒ** – ஒகரமானது, **நவ்வொடு ஆம்** – நகர மெய்யுடன் ஈறாகும்; **ஔ** – ஔகாரமானது, **ககர வகரமோடு ஆகும்** – ககர வகரங்கள் ஆகிய இரண்டு மெய்களுடன் ஈறாகும், **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்).

**உதாரணம்**

பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கைஇ, கோஒ, கௌஉ எனவும்;
நொ எனவும்; கௌ, வௌ எனவும் வரும்.

## மோசகு பொன்னையா

அ இ உ எ ஒ என்னும் குற்றுயிர்கள் ஐந்தும் அளபெடையின் இசை நிறைவுகளாய் நின்று மொழிக்கு ஈறாகும்; எகரம் மெய்யொடுகூடி மொழிக்கு ஈறாகாது; ஒகரம் நகர மெய் ஒன்றுடன் கூடியும், ஔகாரம் ககர வகர மெய்களுடன் கூடியும் மொழிக்கு ஈறாகும்என்பர், **எ–று.**

**எ–டு.**

அளபெடை – ஆஅ வலிய வலவன் – முதலியன

பிற – நொ, கௌ, வௌ.

நெடில் அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே என்றவர், எழுப்பப்படும் ஒலி நெடிலின் எச்ச ஒலி, இசை நிறைவாகும், குற்றெழுத்தே எழுத்து என்பாரே போல் குற்றுயிர் அளபின் ஈறாம் என்றது உண்மை நோக்கி 'மூன்றுயிரளபு' என்ற தங்கோள் விடுத்துத் தொல்காப்பியர் கோளை ஏற்றுக் கூறிய கூற்றேயாம்.

**(53)**

108 நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே.

நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே

ninṟa neṟiyē uyirmey mutal īṟē

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**The first and last of a letter**

In Vowel-consonants, the Consonant is first and the vowel last according to pronunciation.

ஒப்புமைப் பகுதி

உயிர் மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்றே

(தொல். : 107)

ஒற்றுமுன் னுயிர்பின் னுறுமுயிர் மெய்யே

(மு. வீ. : 93)

மயிலை நாதர்

எ – ன், உயிர்மெய் முதலும் ஈறுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: ஒற்று முன்னும், உயிர் பின்னுமாய் நிற்றலின் உயிர்மெய்யானது மெய்முதல் மொழியென்றும் உயிரீற்று மொழி யென்றுமாவதன்றி உயிர்மெய் முதலென்றும் உயிர்மெய் ஈறென்றும் வழங்கப்படாது, எ – று.

ஈறு முற்றும்.

சங்கர நமச்சிவாயர்

எ – னின், எழுத்தினது முதலும் ஈறும் ஆமாறு உணர்–ற்று.

இ–ள்.: உயிர்மெய்யினது முதல் யாது அதன் ஈறு யாது எனின், ஒற்று முன்னும் உயிர் பின்னுமாய் ஒலித்து நின்ற நெறியே மெய் அதன் முதலாம்; உயிர் அதன் ஈறாம், எ– று.

எனவே உயிரும் ஒற்றும் ஆய்தம் முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஒரெழுத்தாகலின் அவற்றிற்கு முதலும் ஈறும் அவையே யாம் என்பது **அருத்தாபத்தியால்** கூறினார். இஃது **எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்** என்னும் உத்தி. இத் தொடக்கத்தன வல்லன **சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்** என்னும் உத்தி.முன்னர் மொழிக்கு முதலீறு என்றவற்றுள்ளும், பின்னர் இடைநிலை போலி பதம் புணர்பு என்பவற்றுள்ளும், உயிர்மெய்யைப் பிரித்துத் தனிமெய்யும் தனியுயிரும் போல வைத்து இலக்கணம் கூறலின், மொழிக்கு முதலும் ஈறும் கூறுதலன்றி எழுத்திற்கு முதலும் ஈறும் கூறினார் என்று உணர்க. இச் சூத்திரம் **சிங்கநோக்கம்.** அற்றன்றி ஆற்றொழுக்காய் முன்னின்ற மொழி முதல் ஈறு உரைக்கும் சூத்திரங்களையே தொடர்ந்து வந்தது என்பாரும் உளர்; பின் 'ஙம்முன் கவ்வாம்' என்றும், 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்' என்றும், உயிர்மெய்யின் உயிரையும் மெய்யையும் வேறு பிரித்தோதுவது இலக்கண மன்றாய் முடியுமாதலின் அது பொருந்தா தென்க.எண்ணதிகாரத்துள் உயிர்மெய்யை ஒரெழுத்தாக எண்ணினார் ஈண்டு இரண்டாக வைத்து இலக்கணம் கூறுவது என்னை யெனின்:– **அப்பொடு பெய்த உப்பே போல** உயிரொடு புணர்த்திய மெய், தன்னளவு தோன்றாது ஒன்றாய் நிற்றலின் ஒன்றுமாய், ஒற்று முன்னும் உயிர் பின்னுமாய் ஒலித்து நின்ற நெறியான் இரண்டுமாய் நிற்றலின் என்று உணர்க. இவ்வாற் றான் உயிர்மெய் என்னுஞ் சொல் மாத்திரை வகையான் உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யாகவும், ஒலிவகையான் உம்மைத்தொகை யாகவும் கொள்ளப் படும்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** உயிர்மெய் யெழுத்துக்கு முதலும் ஈறும் ஆமாறு உரைத்தது.

**இ–ள்.: நின்ற நெறியே உயிர்மெய்** – உயிர்மெய்யானது ஒற்று முன்னும் உயிர் பின்னுமாய் நின்ற முறைமையே, **முதலீறே** – மெய் முதல் மொழி யென்றும் உயிர் ஈற்று மொழி யென்றும் ஆவதல்லது உயிர்மெய் முதலென்றும் உயிர்மெய் ஈறென்றும் கொள்ளப் படா, **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

**இது,** எழுத்தினது முதலுமீறுமாமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.: நின்றநெறியே** – மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நின்றவழியே, **உயிர்மெய்** – உயிர் மெய்க்கு, **முதல்** – மெய் முதலாகும், **ஈறு** – உயிரீறாகும், **எ–று.**

> எனவே உயிரும் ஒற்றும் ஆய்த முதலிய ஒன்பது சார்பெழுத்துகளும் ஒரெழுத்தாகையால் அவற்றிற்கு முதலுமீறும் அவையேயா மென்பதை **அருத்தாபத்தியாற்** கூறினார். இது **'எஞ்சியசொல்லி னெய்தக்கூறல்'** என்னுமுத்தி. இப்படிச் சொல்லாதவை யெல்லாம் **"சொல்லின் முடிவினப்பொருண் முடித்தல்"** என்னுமுத்தி.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*உயிர் முதலும் உயிர்மெய்யீறு முளவாகவும் மொழிக்கு முதலும் ஈறும் எம்முறையாற் கொள்ளப்படும்?*

நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே.

(நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே)

**இ – ள். நின்ற நெறியே** – மொழியின்கண்ணே முதலிலுங் கடையிலும் எழுத்துக்கள் ஒலித்து நின்ற முறையே, **உயிர்மெய் முதல் ஈறே** – உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் முதலும் ஈறுமாம், **எ – று.**

ஒருமொழின்கண்ணே எவ்வெழுத்து முதலிலும் கடையிலும் ஒலிக்குமோ அவ்வெழுத்தே அதற்கு முதலும் ஈறுமாம் என்பது கருத்து.

மெய்ம்முதன் மொழியென்றும் உயிரீற்று மொழியென்றும் வழங்குவதல்லது உயிர்மெய் முதலென்றும் உயிர்மெய் ஈறென்றும் வழங்குதலில்லை.

*மேற்போந்த முதனிலை இறுதிநிலைகளால் எத்தனை வகை மொழி பெறப்படும்?*

உயிர் முதன்மொழி மெய்ம்முதன்மொழி, உயிரீற்று மொழி,மெய்யீற்றுமொழி என நான்கு.

*ஒரெழுத்துமொழிகளுக்கு முதலீறு கொள்வதெங்ஙனம்?*

ஆ, ஈ என்பன போலும் ஒரெழுத்துயிர் மொழிக்கு அவ்வுயிரே முதலுமீறுமாகவும்,

கோ, போ, வா, நீ என்பனபோலும் ஓரெழுத்துயிர்மெய் மொழிகளுக்கு மெய்யெழுத்து முதலும் உயிரெழுத்து ஈறுமாக வும் கொள்ளப்படும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** எழுத்தின்முதலும் ஈறுமாவதுணர்த்துகின்றது.

**இ—ள்.: உயிர்மெய்முதலிறு** — உயிர்மெய்க்கு முதலும் ஈறும், **நின்றநெறியே**—ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக அது ஒலித்து நின்றநெறி யேயாம், எ — **று.**

எனவே மெய்முதலும் உயிரீறுமாமென்பதாயிற்று. ஆகவே உயிரும் ஒற்றும் ஆய்தமுதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஓவ்வோரெழுத் தென்பதும் அவற்றிற்கு முதலுமீறும் அவையேயாமென்பதும் **அருத்தாபத்தியாற்** கூறினாராயிற்று. இது **எஞ்சிய சொல்லினெய்தக் கூறலென்னும்** உத்தி. இத்தொடக்கத்தன அல்லன வெல்லாம் — **சொல்லின் முடிவி னப்பொருண்முடித்த** லென்னும் உத்தி.

முன்பு மொழிக்கு முதலும் ஈறுங் கூறியவற்றுள்ளும் பின்பு இடைநிலை, போலி, பதம், புணர்பு என்பவற்றுள்ளும் உயிர்மெய்யைப் பிரித்துத் தனிமெய்யுந் தனியுயிரும் போல வைத்து இலக்கணங் கூறலால் மொழிக்கு முதலுமீறுங் கூறிய தன்றி எழுத்திற்கும் முதலும் ஈறுங் கூறினாரெனக் காண்க. இச்சூத்திரம் **சிங்கநோக்கம்.**

எண்ணிலக்கணத்துள் உயிர்மெய்யை ஓரெழுத்தாக எண்ணி இங்கே யிரண்டெழுத்தாக வைத்து இலக்கணஞ் சொன்ன தென்னெனின், அப்பொடு சேர்ந்த உப்பே போல் உயிரோடு புணர்ந்த மெய் தன்மாத்திரை தோன்றாமல் ஒன்றாய் நிற்றலின் ஒற்றுமர்கி ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி யொலித்தலால் இரண்டுமாகி நிற்பதினாலே யென்க. இதினாலே உயிர்மெய் யென்னுஞ் சொல் மாத்திரை வகையால் உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகவும் ஒலிவகையால் உம்மைத்தொகையாகவும் கொள்ளப்படு மென்க. மொழியிறுதி யிலக்கண முற்றிற்று.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :- நின்ற நெறியே** - (மெய்முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து) நின்றவழியே, **உயிர்மெய்** - உயிர்மெய்க்கு **முதல்** - (மெய்) முதலாகும்; **ஈறு** - (உயிர்) ஈறாகும்.

குறிப்பு :-

எனவே உயிரும், மெய்யும், ஆய்தம் முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஒரோழுத்தாகையால் அவற்றிற்கு முதலும் ஈறும் அவையேயாமென்பது பெறப்பட்டது. இது **எஞ்சிய சொல்லினெய்தக் கூறல்** என்னும் உத்தி. இப்படிச் சொல்லாதவை யெல்லாம் **சொல்லின் முடிவினப் பொருண் முடித்தல்** என்னும் உத்தி.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: நின்ற நெறியே** - மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நின்ற வழியே, **உயிர்மெய் முதல் ஈறு** - உயிர்மெய்க்கு மெய் முதலாகும் உயிரீறாகும், **எ-று.**

எனவே, உயிரும் ஒற்றும் ஆய்த முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஒரெழுத்தாகையால், அவற்றிற்கு முதலுமீறும் அவையேயா மென்பது **அருத்தாபத்தியாற்** கூறினார்; இது **எஞ்சிய சொல்லி னெய்தக் கூறலென்னு** முத்தி. இப்படிச் சொல்லாதவை யெல்லாஞ் சொல்லின் **முடிவினப் பொருண் முடித்த** லென்னுமுத்தி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். உயிர்மெய் முதலீறு** - உயிர்மெய் யெழுத்திற்கு முதலும் ஈறும், **நின்ற நெறியே** - ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக அது ஒலித்து நின்ற நெறியேயாம், **எ-று.**

'புள்ளிவிட்டவ்வொடு' என்னுஞ் சூத்திரத்தில் 'ஒற்றுமுன்னாய் வருமுயிர்மெய்' என்று முற்கூறினாராதலின், நின்றநெறியே என்றார்.

மெய் இடப்புறமாய் முன்னும் உயிர் வலப்புறமாய்ப் பின்னும் நின்று கலந்த போது உண்டாயினது உயிர்மெய் யென்பது பிரத்தியக்ஷமாய் விளங்குதலால் நின்ற நெறியே யென்றாரெனினுமாம்.

கலப்புற்ற உயிர்மெய்க்கு முதலீறு இவ்வாறாமெனவே உயிரும் ஒற்றும் ஆய்த முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் கலப்புறாத தனித்தனி யெழுத்தாதலால் அவற்றிற்கு முதலுமீறும் அது அதுவே யென்பதும் அருத்தாபத்தியாற் கூறினாராம். இது, **எஞ்சிய சொல்லினெய்தக் கூறல்** என்னுமுத்தி. இப்படியன்றி விளங்கச் சொல்லப்பட்டனவெல்லாம் **சொல்லின் முடிவினப் பொருண்முடித்த** லென்னுமுத்தி.

முன்பு மொழிக்கு முதலு மீறுங் கூறியவற்றுள்ளும், பின்பு இடைநிலை, போலி, பதம், புணர்பு என்பவற்றுள்ளும் உயிர் மெய்யைப் பிரித்துத் தனிமெய்யுந் தனியுயிரும் போல வைத்து இலக்கணங் கூறலால் மொழிக்கு முதலுமீறுங் கூறியதன்றி எழுத்திற்கும் முதலுமீறுங் கூறினாரெனக் காண்க.

எண்ணிலக்கணத்துள் இயைபு பற்றி ஒரெழுத்தாக மதித்துக் கூறிய உயிர் மெய்யை இங்கே இரண்டெழுத்தாக வைத்து இலக்கணஞ் சொன்ன தென்னெனின், ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி யொலிக்கும் வேறுபாடு கருதி யென்க.

இச் சூத்திரம் **சிங்கநோக்கம்.**

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.: நின்ற நெறியே** – (மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து) நின்ற வழியே, **உயிர்மெய்** – உயிர் மெய்க்கு, **முதல்** – (மெய்) முதலாகும்; **ஈறு** – (உயிர்) ஈறாகும்; **எ–று.**

எனவே உயிரும் மெய்யும் உயிர்மெய் யொழிந்த ஆய்தம் முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஒரெழுத்தாகையால் அவற்றிற்கு முதலும் ஈறும் அவையேயா மென்பது பெறப்படும்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். நின்ற நெறியே** — மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நின்ற வழியே, **உயிர்மெய் முதல் ஈறு** — உயிர்மெய்க்கு மெய் முதலாகும் உயிர் ஈறாகும், எ—று.

எனவே, உயிரும் ஒற்றும் ஆய்த முதலிய ஒன்பது சார்பெழுத்துக்களும் ஒரெழுத்தாகையால், அவற்றிற்கு முதலு மீறும் அவையே யாமென்பது அருத்தாபத்தியாற் கூறினார்; இது **'எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்'** என்னும் உத்தி. இப்படிச் சொல்லாதவை யெல்லாம் **'சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்'** என்னும் உத்தி.

## கா. நமச்சிவாய முதலியார்

**நின்ற நெறியே** – (மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து) நின்ற வழியே, **உயிர்மெய்** – உயிர்மெய்க்கு, **முதல்** – (மெய்) முதலாகும், **ஈறு** – (உயிர்) ஈறாகும்.

எனவே, உயிரும் ஒற்றும், ஆய்தம் முதலிய ஒன்பது சார் பெழுத்துக்களும் தனியெழுத்துக்களாகையால் அவற்றிக்கு முதலும் ஈறும் அவையே யாம் என்பதை **அருத்தாபத்தியாற்** கூறினார். இஃது **எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்** என்னும் உத்தியாம். இப்படிச் சொல்லாதவை யெல்லாம் **சொல்லின் முடிவின் அப்பொருண் முடித்தல்** என்னும் உத்தி.

## மோசகூ பொன்னையா

உயிர்மெய்யானது மெய் முதலும் உயிர் பின்னுமாக ஒலித்து நிற்கும்; அம் முறைப்படியே மெய் முதலும் உயிர் ஈறுமாகக் கொள்ளப்படும், **எ—று.**

ஒற்றுமை நயம்பட உயிர்மெய்யை ஒரெழுத் தென்றவர் வேற்றுமை நயம்பட இரண்டென்றார். இரண்டுங் கூடி ஒன்றாக நிற்பினும், இரண்டே யன்றி ஒன்றாகாது என்பது உயிர்மொய் ஒரெழுத்தென்ற இவ்வாசிரியருக்கும் உடன்பாடாதல் புலனாகும்.

**109. கசதப வொழித்தவீ ரேழன் கூட்டம்**
**மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்**
**டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை**
**மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.**

க ச த ப ஒழித்த ஈர் ஏழன் கூட்டம்
மெய்ம்மயக்கு உடன்நிலை ர ழ ஒழித்து ஈர் எட்டு
ஆகும் இவ் இருபான் மயக்கும் மொழி இடை
மேவும் உயிர்மெய் மயக்கு அளவு இன்றே

ka sa ṭa pa oḷiṭṭa īr ēḷa<u>n</u> kūttam
meymmayakku uta<u>n</u>nilai ra ḷa oḷiṭṭu īr ettu
ākum iv irupā<u>n</u> mayakkum moḷi itai
mēvum uyirmey mayakku a<u>ḷ</u>avu i<u>n</u>ṟē

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

## DOUBLING AND COALESCING LETTERS

With the exception of k, c, t and p, the remaining fourteen consonants may coalesce with one another; and with the exception of r and l, the remaining sixteen consonants may double themselves. These changes occur in the middle of words. For the coalescing of Vowels and Consonants, there is no rule.

ணன........................................................ (தொல். : 30)

வேற்றுநிலை கசதப வல்லன மெய்பதி
னான்கு மென்மனார் நற்றமிழ் வல்லார்

(மு. வீ. : 65)

ரழ வல்லன வுடனிலை யென மொழிப (மு. வீ.: 78)

**உயிர்மெய் மயக்கிற் கோரள வின்றே**

**(மு. வீ. : 79)**

**......... கசதப நீத்து**
**ஈரெழுமெய் மயக்கமாம்**
**ரழ நீத்து**
**இந்திரண்டெட்டு உடநிலையாம்.....**

(சுவாமி. : 21 : 3–4)

## மயிலை நாதர்

**எ–ன்,** நிறுத்தமுறையானே இடைநிலையாமாறு உணர்த்து வானெடுத்துக் கொண்டார். அவற்றுள் இச் சூத்திரம், பொதுவகையால் [1]மெய்ம்மயக்கமும் உடனிலைமயக்கமும் ஆமாறும்' [2]அவற்றதெண்ணும் அவை நிற்குமிடமும் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:**

மெய் பதினெட்டுள்ளும் க ச த ப வென்னும் நான்கும் ஒழித்து நின்ற பதினாலு மெய்யும் ஒன்றன் பினொன்று மாறி வந்து ஒன்றுவது **மெய்ம் மயக்கமாம்**; ரகர ழகர மொழித்து நின்ற பதினாறு மெய்யும் தம் முன்னர்த் தாம் வந்தொன்றுவது **உடனிலை மயக்கமாம்.** இச் சொல்லப்பட்ட இருகூற்று முப்பது மயக்கும் மொழியிடையிலே யாம். உயிர்மெய் மயக்கம் இன்னதன் பின்னர் இன்னதா மென்னும் வரையறை யில்லை, எ – று.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** நிறுத்தமுறையானே மொழிக்கு இடைநிலை யாமாறு உணர்த்துங்கால் உயிருடன் உயிர் மயங்கலும், மெய் யுடன் மெய் மயங்கலும், இவ்விரண்டும் மாறி மயங்கலும் என மூன்றாக வகுக்கப்படும்; இவற்றுள் உயிருடன் உயிர் மயங்கும் தன்மையின்மையின் அதனை யொழித்து ஏனை யிரண்டனையு முணர் – ற்று.

**இ – ள்.:** மெய் பதினெட்டனுள் க ச த ப என்னும் நான்கை யும் ஒழித்த பதினான்கு மெய்யும் பிற மெய்களோடு கூடுங் கூட்டம் **வேற்றுநிலை மெய்ம் மயக்கமாம்**; ரகார ழகாரம் என்னும் இரண்டனையும் ஒழித்து ஒழிந்த பதினாறு

பாட வேறுபாடு.:

1. மெய்ந்நிலை மயக்கமும்
2. அவற்றிற் கெண்ணும்

மெய்யும் தம்மொடு கூடும் கூட்டம் **உடனிலை மெய்ம் மயக்கமாம்.** இவ் விரண்டு பகுதி மயக்கமும் மொழிக்கு இடையே வரும். இவ்வாறு மெய்யுடன் மெய் மயங்குதலன்றி, உயிருடன் மெய்யும், மெய்யுடன் உயிரும் மாறி உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை யின்று; வேண்டியவாறே மயங்கும், எ — று.

கூட்டம் எனினும் மயக்கம் எனினும் ஒக்கும். உடனிலை என்பதனால் பிறமெய் என்பது பெற்றாம்.

மொழி என்றது ஒருமொழி, தொடர்மொழி என்னும் இரண்டனையும்.

உயிரும் மெய்யும் மயங்குதற்கு இடம் விதந்து கூறாது பொதுப்படக் கூறினார், மொழியினும் உயிர்மெய் என்னும் ஒரெழுத்தினும் வருதலின்.

இச் சூத்திரத்தான், மெய்யுடன் மெய்மயங்குங்கால், க ச த ப என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்கும் எனவும், ர ழ என்னும் இரண்டும் தம்மொடு பிறவே மயங்கும் எனவும், ஒழிந்த பன்னிரண்டு மெய்யும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கும் எனவும் பெற்றாம்.

உயிரும் மெய்யும் மயங்குதற்கு உதாரணம்: அல், வில் எனவும்,கா எனவும் மொழிக்கண் மயங்கின; க என எழுத்தின்கண் மயங்கின.

மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம் மேல்வரும் சிறப்புச் சூத்திரங்களில் காண்க.

இவ் விடைநிலையை ஒருமொழி, தொடர்மொழி என்னும் இரண்டினும் கொள்ளாது ஒருமொழிக்கே எனக் கொள்வாரும் உளர். எவ்விடத்து வரினும் இரண்டெழுத்து இணங்கிப் பொருந்தும் பொருத்துவாயை இடைநிலை என்று ஓதலானும், இணங்காதன வரின் விகாரப்படுதலானும் அது நூற்கருத் தன்றென்க.

இனி, உயிர்மெய் மயக்களவின்று என்பதற்கு, உயிர்மெய் முன் உயிர்மெய் மயங்குதல் வரையறை யின்று எனப் பொருள் கூறுவாரும் உளர். இங்ஙனம் உயிர்மெய்யை இரண்டெ ழுத்தாகப் பிரித்து மயக்கவிதி கூறுவார் அதனையே ஒன்றாக வைத்து மயக்கவிதி கூறார் ஆதலானும், கூறினும் இடைநிலை மயக்கம் முழுவதும்

இச்சூத்திரத்து அடங்காமையானும், அது பொருந்தாது என்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** நிறுத்திய முறையே மொழிக்கு இடையெழுத்து இன்னதெனக் கூறியது.

**இ—ள்.: க ச த ப ஒழித்த** – க ச த ப என்னும் நான்கு மெய்யும் ஒழித்து நின்ற, **ஈரேழ் கூட்டம்** – பதினான்கு மெய்யும் ஒன்றன் பின் ஒன்று மாறி வந்து ஒன்றுவது, **மெய் மயக்கு** – இன மெய்மயக்கமும் பிற மெய்மயக்கமுமாய், **உடனிலை** – தன் முன்னர்த் தாம் வந்தொன்றும் உடனிலை மய்க்கமாவது, **ர ழ ஒழித்து ஈரெட்டாகும்** – ரகார ழகாரம் ஒழித்து ஒழிந்து நின்ற பதினாறு மெய்யுமாம், **இவ்விருபான் மயக்கும்** – இன மெய் பிறமெய் கூடிய மெய்மயக்கமும் தன் முன்னர்த் தான் மயங்கும் உடனிலை மயக்கமும் என்னும் இவ்விரு கூறு மயக்கமும், **மொழியிடை மேவும்** – மொழிக்கிடையிலே பொருந்தும், **உயிர்மெய் மயக்கு** – உயிர்மெய்யும் உயிர் மெய்யும் கூடிய மயக்கமும், **அளவின்றே** – இன்னதன் பின் இன்னது வருமென்னும் வரையறை இல்லை என்றது.

## விசாகப் பெருமாளையர்

இது நிறுத்த முறையாலே மெய்யுடன் மெய்ம் மயங்கலும் உயிருமெய்யு மாறி மயங்கலும் ஆகிய இடைநிலை மயக்க மாமாறு உணர்த்துகின்றது.

**இ—ள்.: க ச த ப** – க ச த பவென்னு நான்கையும், **ஒழித்த** – நீக்கிய; **ஈரேழன் கூட்டம்** – பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடுங் கூட்டம், **மெய்ம் மயக் (காகும்)** – வேற்று நிலை மெய்ம் மயக்கமாகும், **ர ழ** – ர ழ வெனு மிரண்டனையும், **ஒழித்து** – நீக்கி, **ஈரெட்டு** – மற்றைப் பதினாறு மெய்களும், (கூட்டம்) தம்மோடு கூடுங் கூட்டம், **உடனிலை (மெய்ம்மயக்) காகும்** – உடனிலை மெய்ம்மயக்கமாகும், **இவ்விருபான் மயக்கும்** – இவ் விருவகை மயக்கமும், **மொழி** – ஒரு மொழிக்குந் தொடர்மொழிக்கும், **இடை** – நடுவில், **மேவும்** – வரும், **உயிர்மெய்** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும், **மயக்கு** – மாறி மயங்கு மயக்கத்திற்கு, **அளவின்று** – அளவில்லை, வேண்டியவாறே மயங்கும், **எ – று.**

'கூட்டம்' என்றாலும் 'மயக்கம்' என்றாலும் 'சையோகம்' என்றாலும் ஒரு பொருள். பின் 'உடனிலை' என்றதனால் முன் 'பிறமெய்' என்பது கொள்ளப்பட்டது. உயிர்மெய் மயங்குதற்கு உதாரணம் – அல், வில் எனவும், கா எனவும் வரும். மற்றவைகளுக்கு உதாரணம் பின்வருஞ் சிறப்புச் சூத்திரங்களுட் காண்க.

# ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

கசதப வொழித்தவீ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவு முயிர்மெய் மயக்கள வின்றே.

(க ச த ப ஒழித்த ஈர் ஏழன் கூட்டம்
மெய்ம்மயக்கு உடன்நிலை ர ழ ஒழித்து ஈர் எட்டு
ஆகும் இவ் இருபான் மயக்கும் மொழி இடை
மேவும் உயிர்மெய் மயக்கு அளவு இன்றே)

**இ – ள். க ச த ப ஒழித்த ஈர் ஏழன் கூட்டம் மெய்ம்மயக்கு(ஆகும்)** – க ச த ப என்னு நான்கையும் நீங்கிய பதினொரு மெய்களும் பிற மெய்களோடு கூடுங் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகும், **ர ழ ஒழித்து ஈர் எட்டு (கூட்டம்) உடன்நிலை (ஆகும்)** – ர, ழ என்னு மிரண்டனையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களுந் தம்மொடு கூடுங் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கமாகும், **இவ் இருபான் மயக்கும் மொழி இடை மேவும்** – இவ்விரு வகை மயக்கமும் ஒருமொழிக்குந் தொடர்மொழிக்கும் நடுவில் வரும், **உயிர்மெய் மயக்கு அளவு இன்று** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் மெய்யும் உயிரும் மாறி உயிரும்மெய்யும் மயங்கு மயக்கத்திற்கு வரையறை யில்லை,வேண்டியவாறே மயங்கும், **எ – று.**

மயக்கம் என்பது கூட்டம்.

இடைநிலை மயக்கம் எத்தனை வகைப்படும்?

உடனிலை மெய்ம் மயக்கம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் உயிர்மெய் மயக்கம் என மூவகைப்படும்

*உடனிலை மெய்ம்மயக்கமாவது யாது?*

தம்மொடு தாமே மயங்கும் மயக்கம்.

*வேற்றுநிலை மெய்ம்மயக்கமாவது யாது?*

தம்மொடு பிறவே மயங்கு மயக்கம்.

*தம்மோடு தாமே மயங்கு மெழுத்துக்களெவை?*

க ச த ப என்னும் நான்கும்.

**உ–ம்.:** சுக்கு, கச்சு, பத்து, செப்பு.

*தம்மோடு பிறவே மயங்கு மெழுத்துக்களெவை?*

ர ழ என்னு மிரண்டும்.

**உ–ம்.:**

சேர்தல், வாழ்தல்

தம்மொடு தாமும் பிறவு மயங்கு மெழுத்துக்களெவை?

ஒழிந்த பன்னிரண்டு மெய்களுமாம்.

**உ–ம்.:**

அங்ஙனம், அங்கு; மஞ்ஞை; மஞ்சு; வட்டம், வட்கல், வண்ணம், வண்டு; வெந்நீர், வேந்து; அம்மை, அம்பு; வெய்யர், வெய்து; வெல்லம், வெல்க; தெவ்வர், தெவ்வாது; கொள்ளல், கொள்க; கற்றல், கற்பு; அன்னை, அன்பு என வரும்.

உயிர்மெய்ம் மயக்க மெப்படி வரும்?

நியதி யின்றி வேண்டியவாறே மயங்கும்.

இச் சூத்திரத்தால் பெறப்படும் பொருள் யாது?

பதினெட்டு மெய்களுள்ளே, க ச த ப வென்னு நான்கும் தம்மொடு தாமே யன்றிப் பிறமெய்யோடு கூடாவென்பதும், ர ழ வென்னும் இரண்டும் தம்மொடு கூடாவென்பதும், ர ழ வொழிந்த பதினாறும் தம்மோடு தாங் கூடுமென்பதும் மற்றைய பன்னிரண்டும் தம்மோடும் வேறு மெய்யோடுங் கூடுமென்பதும் உயிருடன் மெய்யும் மெய்புடன் உயிரும் நியதியின்றிக் கூடுமென்பதும் பெறப்படும் பொருளாம்.

உயிர்மெய்ம் மயக்கமென்றது மொழியிடையே நியதியின்றி உயிரும் மெய்யும் தம்முண் மாறிக் கூடி வருதலையே யாமெனக் கொள்ளுக.

**உ–ம்.:**

"ஆரூரன்" இம்மொழியை ஆர், ஊர், அன் எனப் பிரித்து இடைநின்ற உயிரும் தம்முண் மாறிக் கூடி நிற்றல் காண்க. "ஆன்" என்பதில் முதலு மீறுமே யன்றி இடைநிலை யில்லையே யெனின், 'இரண்டும் கூடும் பொருத்துவாயே இடைநிலை மயக்கமாமெனக் கொள்க.

*வேற்றுநிலை மெய்ம்மயக்க மின்னதென்பதற்குச் சூத்திரப் பிரமாணம் யாது?*

"க ச த ப வொழித்த வீரேழன் கூட்டம் மெய்ம்மயக்கு"

மெய்ம்மயக்கம் எனினும் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனினும் பொருளொன்றே.

*உடனிலை மெய்ம்மயக்க மின்னதென்பதற்குச் சூத்திரப் பிரமாணம் யாது?*

"உடனிலை ரழவொழித் தீரெட்டாகும்"

*இவ்விருவகை மயக்கமும் எங்கே வரும்?*

"இவ்விருபால் மயக்கு மொழியிடை மேவும்"

*நியதியின்றி வரும் மயக்கம் யாது?*

"இவ்விருபால் மயக்கு மொழியிடை வடிவும்"

*நியதியின்றி வரும் மயக்கம் யாது?*

"உயிர்மெய்ம் மயக்கள வின்றே"

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது**, நிறுத்தமுறையே இடைநிலை மயக்க முணர்த்துகின்றது.

**இ-ள்.: க ச த ப வொழித்த ஈரேழன் கூட்டம்** – இந்த நான்கு ஒற்றையு மொழித்து, ஒழித்த பதினான்கு மெய்களும் பிறமெய்களோடு கூடுங் கூட்டம், **மெய்மயக்கு** – பிறநிலை மெய் மயக்கமாம், **ரழ வொழித்து ஈரெட்டு** –இந்த இரண்டு ஒற்றையு மொழித்து ஒழிந்த பதினாறு மெய்களுந் தம்மோடு கூடுங் கூட்டம், **உடனிலை யாகும்** – உடனிலை மெய்ம்மயக்கமாம், **இவ்விரு பான் மயக்கும்** – இந்த இருவகை மயக்கங்களும், **மொழியிடை மேவும்** – மொழியிடையிலே வரும், **உயர்மெய் மயக்களவின்று** – (இவ்வாறன்றி) உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி மயங்கும் மயக்கத்திற்கு இந்த வரையறை யின்றி வேண்டியபடி மயங்கும், **எ – று.**

உடனிலை யென்றதினாலே பிறநிலை யெனப்பட்டது, மொழியிடை யன்றி ஒரெழுத்து மயங்குதலால் உயிருமெய்யும் மயங்குதற்கு இடங்கூறா தொழிந்தார். இச் சூத்திரத்தால் மெய்யுடன் மெய் மயங்குங்கால் க ச த ப என்கின்ற நான்குந் தம்மொடுதாமே மயங்குமெனவும், ர ழ வென்னு மிரண்டும் தம்மொடு பிறவே மயங்குமெனவும், ஒழிந்த பன்னிரண்டு ஒற்றுக்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்குமெனவும் பெறப்பட்டன. உயிரு மெய்யும் மயங்குதற்கு உதாரணம் :–

அல், வில்–எனவும்; கா, பூ–எனவும்–மொழியிடை மயங்கின.

க, ச, த–என எழுத்திடை மயங்கின.

மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம் மேல்வருஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

மயக்கம் – கூட்டம், மயங்குதல் – கூடுதல்.

ஒரு மொழி தொடர்மொழி யிரண்டையுமிங்கே மொழி யென்றது.

இனி, உயிர்மெய் மயக்கமளவின் றென்பதற்கு உயிருந் தனி மெய்யும், உயிரும் உயிர்மெய்யும், உயிர்மெய்யுந் தனிமெய்யும் உயிர்மெய்யும் உயிர்மெய்யும் மயங்குதல் வரையறையின்றெனப் பொருள் கூறுவாருமுண்டு. இவர் உயிர்மெய்யை இரண்டெழுத்தாகப் பிரித்து இலக்கணங் கூறுவாராதலால் அது பொருந்தாதென்க. கூட்டம் – மெய்மயக்கு.

உடனிலை ஈரெட்டாகும், மயக்கும், மேவும், அளவு இன்று என இச் சூத்திரத்தை நான்கு முடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **கசதப ஒழித்த** – க ச த ப என்னும் நான்கையும் நீக்கிய, **ஈரேழன் கூட்டம்** – (மற்றைப்) பதினான்கு மெய்களும் (பிறமெய்களோடு கூடுங்) கூட்டம், **மெய்மயக்கு ஆகும்** – (வேற்றுநிலை) மெய்மயக்கமாகும்; **ர ழ ஒழித்து** – ர ழ என்னும் இரண்டனையும் நீக்கி, **ஈரெட்டு** (கூட்டம்) (மற்றைப்) பதினாறு மெய்களும் (தம் மெய்யோடு கூடுங்) கூட்டம், **உடனிலை** (மெய்மயக்கு) **ஆகும்** – உடனிலை மெய்மயக்கமாகும்; **இ இருபால் மயக்கும்** – இவ்விருவகை மயக்கமும், **மொழியிடை மேவும்** – ஒரு மொழிக்குந் தொடர்மொழிக்கும் நடுவில் வரும்; **உயிர்மெய் மயக்கு** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும்மாறி மயங்கும் மயக்கத்திற்கு, **அளவு இன்று** – அளவில்லை (வேண்டியவாறே மயங்கும் என்றதாம்)

குறிப்பு :–

'கூட்டம்' 'மயக்கம்' என்பன ஒரு பொருளன. பின் **உடனிலை** என்றதனால் முன் **வேற்று நிலை** என்பது

கொள்ளப்பட்டது. இங்கே 'மொழி' என்றது, ஒருமொழி தொடர்மொழி என்னு மிரண்டையும் எனக் கொள்க.

உயிரும் மெய்யும் மயங்குதற்கு உதாரணம்:–

அல், புள் என உயிருடன் மெய்ம்மயங்கின.

கா, பூ என மெய்யுடன் உயிர் மயங்கின.

மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம் மேல்வருஞ் சிறப்புச் சூத்திரத்துட் காண்க. மொழியிடையன்றி ஒரெழுத்தினும் மயங்குதலால் உயிரும் மெய்யும் மயங்குதற்கு இடங் கூறாதொழிந்தார்.

இச் சூத்திரத்தால் மெய்யுடன் மெய் மயங்குங்கால் க ச த ப என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்குமென்பதும், ர ழ என்னுமிரண்டும் தம்மொடு பிறவே மயங்குமென்பதும், ஒழிந்த பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கு மென்பதும் பெறப்பட்டமை யறிக. உயிருடன் உயிர் மயங்குதலில்லை.

## ஆறுமுக நாவலர்

**இ – ள்.: க ச த ப ஒழித்த ஈரேழன் கூட்டம் மெய்ம்மயக்கு (ஆகும்)** – க ச த ப என்னு நான்கையும் நீக்கிய பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடுங் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும், **ர ழ ஒழித்து ஈரெட்டுக் (கூட்டம்) உடனிலை (மெய்ம்மயக்கு) ஆகும்** – ர ழ என்னுமிரண்டனையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களுந் தம்மோடு கூடுங் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்க மாகும், **இவ்விருபால் மயக்கும் மொழி இடை மேவும்** – இவ் விருவகை மயக்கமும் ஒருமொழிக்குந் தொடர் மொழிக்கும் நடுவில் வரும், **உயிர்மெய் மயக்கு அளவு இன்று** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி உயிருமெய்யும் மயங்கு மயக்கத்திற்கு வரையறை யில்லை வேண்டியவாறே மயங்கும், **எ – று.**

கூட்டமெனினும் மயக்கமெனினும் ஒக்கும். பின் உடனிலை என்றதனால், முன், பிறமெய் யென்பது கொள்ளப்பட்டது.

இச் சூத்திரத்தால், மெய்யுடன் மெய் மயங்கு மிடத்துக், க ச த ப என்னும் நான்குந் தம்மொடு தாமே மயங்குமெனவும், ர ழ என்னு மிரண்டுந் தம்மொடு பிறவே மயங்கு மெனவும், ஒழிந்த பன்னிரண்டு மெய்யும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கு மெனவும் பெற்றாம்.

உயிரு மெய்யு மயங்குதற்கு உதாரணம் :- அல், புள் என உயிருடன் மெய் மயங்கின.கா, பூ என மெய்யுடன் உயிர் மயங்கின.

மற்றவைகளுக்கு உதாரணம் மேல் வருஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ-ள். க ச த ப ஒழித்த ஈரேழன் கூட்டம் மெய்ம் மயக்கு** (ஆகும்) - (பதினெட்டு மெய்களிற்) க ச த ப என்னு நான்கையு நீக்கிய பதினான்கு மெய்களும் பிற மெய்களொடு கூடுங் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாம், **ர ழ ஒழித்து ஈரெட்டு** (க்கூட்டம்) **உடனிலை** (மெய்ம்மயக்கு) **ஆகும்** - (பதினெட்டு மெய்களில்) ர ழ என்னுமிரண்டனையு நீக்கி மற்றைப் பதினாறு மெய்களுந் தம்மொடு கூடுங் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கமாகும், **இவ்விருபால் மயக்கும் மொழி இடை மேவும்** - இவ்விருவகை மயக்கமுந் தனிமொழிக்கு நடுவிலுந் தொடர்மொழிக்கு நடுவிலும் வரும், **உயிர்மெய் மயக்கு அளவின்று** - உயிருடன் மெய்யும் மெய்யுடனுயிருமாய் மாறி மயங்கும் உயிர்மெய் மயக்கத்திற்கு வரையறை யில்லாது வேண்டியவாறே மயங்கும். **எ-று.**

இடைநிலை யெனினும், கூட்டமெனினும், மயக்கம் எனினும், (எழுத்துக்கள் அடுத்துநிற்றலெனினும்) ஒக்கும். இடைநிலையாவது: தனிமொழியிலும் தொடர்மொழியிலும் இரண்டெழுத்துப் பொருந்தும் பொருத்துவாயாம். வாய் என்பது இடம்.

பின் உடனிலை என்றதனால் முன்னது வேற்றுநிலை என்பது பெறப்பட்டது. உடனிலை மயக்கமாவது தன் மெய்யொடு அடுத்து நிற்பது. வேற்றுநிலை மயக்கமாவது பிறமெய்யொடு அடுத்து நிற்பது என்னுமிலக் கணங்களைச் சிறப்பு விதிகளாலறிக.

**உ-ம்.:-**

அல்லி, என லகரமெய்யும லிகரத்திலிருக்கிற லகரமெய்யும் அடுத்து நிற்றல் கண்டு உடனிலை மெய்ம்மயக்க மின்னதென்றறிக. கற்பு, நட்பு என றகர மெய்யும் புகர வுயிர்மெய்யிலிருக்கிற பகர மெய்யும் அடுத்து நிற்றலுங் கண்டு வேற்றுநிலை மெய்ம்மயக்க மின்ன தென்றறிக. அல் என்பதில் முன்னின்ற அகரவுயிருடனே பின்னின்ற லகரமெய் மயங்கினது. கா என்பதில் முன்னின்ற ஆகார வுயிருடனே ககர மெய் மயங்கி யுயிர்மெய்யாயிற்று.

இவ்விரண்டும் உயிர்மெய் மயக்கமெனப்படும் என்றுணர்க. உயிருமுயிரு மயங்குதலில்லை யென்றறிக. உயிர்மெய் மயக்களவின்றே யென்றாரேனும் சிறுபான்மை வரையறை யுண்டென்பது 'ஏழுத்தனிக் குறிலணையா' என்று பின் கூறப்படுதலாலறிக.

பதினெட்டு மெய்களுள்ளே க் ச் த் ப் என்னு நான்கு மெய்களும் உடனிலையாக மாத்திரம் மயங்குவன.

**உ–ம்.:–**

செக்கு, கச்சு, பத்து, செப்பு என வரும். ஆப்தன் என்பதில் பகர மெய் தகரமாகிய பிற மெய்யொடு மயங்கவில்லையோ வெனின், அது வடமொழி யுச்சாரணந் தோன்ற அவ்வா றெழுதப்பட்டதன்றித் தமிழ்நடையன்றென்க. தமிழில் ஆத்தனென்று வரும்.

ர் ழ் என்னுமிரண்டு மெய்களும் வேற்று நிலையாக மாத்திரம் மயங்குவன.

**உ–ம்.:–**

சேர்தல், வாழ்தல் என வரும்.

ங் ஞ் ட் ண் ந் ம் ய் ல் வ் ள் ற் ன் என்னுமிப் பன்னிரண்டு மெய்களும் உடனிலையாகவு மயங்குவன; வேற்று நிலையாகவு மயங்குவனவாம்.

**உ–ம்.:–**

அங்ஙனம், அங்கு; மஞ்ஞை, மஞ்சு; வட்டம், வட்கல்; வண்ணம், வண்டு; வெந்நீர், வேந்து; அம்மை, அம்பு; வெய்யர், வெய்து; வெல்லம், வெல்க; தெவ்வர், தெவ்யாது; கொள்ளல், கொள்க; கற்றல், கற்பு; அன்னை, அன்பு என வரும்.

ஆகவே, க் ச் த் ப் ங் ஞ் ட் ண் ந் ம் ய் ல் வ் ள் ற் ன் என்னும் பதினாறு மெய்களும் உடனிலை மயக்கத்தில் வரும் எனவும், ர் ழ் ங் ஞ் ட் ண் ந் ம் ய் ல் வ் ள் ற் ன் என்னும் பதினான்கு மெய்களும் வேற்று நிலை மயக்கத்தில் வருமெனவும் உய்த்துணர்க. பிறமெய்களில் எவ்வெவற்றோடு மயங்குமென்னும் வரையறை பின் கூறப்படும்.உடனிலை வேற்றுநிலை மயக்கங்களுக்கு உதாரணங்கள் பின் வருமாயினும் அவற்றின் விளக்கம் இச் சூத்திரத்திலமைதற் பொருட்டு இங்கே வேண்டிய அளவிற் கூறப்பட்டன.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: க ச த ப ஒழித்த** – (பதினெட்டு மெய்களிற்) க ச த ப என்னும் நான்கையும் நீக்கிய, **ஈரேழன் கூட்டம்** – (மற்றைப்) பதினான்கு மெய்களும் (பிற மெய்களோடு கூடுங்) கூட்டம், **மெய்மயக்கு** – (வேற்றுநிலை) மெய்ம்மயக்க மாகும்: **ர ழ ஒழித்து** – ர ழ என்னும் இரண்டையும் நீக்கி, **ஈரெட்டு** – (மற்றைப்) பதினாறு மெய்களும் (தம்மோடு கூடுங் கூட்டம்), **உடன் நிலை ஆகும்**– உடனிலைமெய்ம் மயக்க மாகும்; **இ இரு பால் மயக்கும்** – இவ்விரண்டு வகை மயக்கமும், **மொழி இடை மேவும்** – ஒருமொழிக்கு நடுவிலும் தொடர்மொழிக்கு நடுவிலும் வரும்; **உயிர்மெய் மயக்கு** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி மயங்கும் மயக்கத்திற்கு, **அளவு இன்று** – அளவில்லை; (வேண்டியவாறே மயங்கும் என்றபடி); எ–று.

'கூட்டம்', 'மயக்கம்' என்பன ஒருபொருட் சொற்கள். பின் 'உடனிலை' என்றதனால், முன் 'வேற்றுநிலை' என்பது கொள்ளப்பட்டது.

மொழியிடை யின்றி ஒரெழுத்திலும் மயங்குதலால், மெய்யும் உயிரும் மயங்குதற்கு இடங் கூறாது விட்டார்.

இச் சூத்திரத்தால், மெய்யுடன் மெய் மயங்கும் பொழுது, க ச த ப என்னும் நான்கும் பிற மெய்யோடு மயங்காவாய்த் தம்மொடு தாமே மயங்குமென்பதும், ர ழ என்னும் இரண்டும் தம்மொடு தாம் மயங்காவாய்த் தம்மொடு பிறவே மயங்கு மென்பதும், மற்றைப் பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்குமென்பதும் பெறப்பட்டன என அறிக.

உயிரும் மெய்யும் மயங்குதற்கு உதாரணம்:–

அல், புள் என உயிருடன் மெய் மயங்கின;

கா, பூ என மெய்யுடன் உயிர் மயங்கின.

மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம், மேல் வருஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

உயிருடன் உயிர் மயங்குதல் அருமையாதலின் கூறப்படவில்லை.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். க ச த ப ஒழித்த ஈரேழன் கூட்டம் மெய்ம்மயக்கு** (ஆகும்) **–** க ச த ப என்னும் நான்கையும் நீக்கிய பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடுங் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும். **ர ழ ஒழித்து ஈரெட்டுக்** (கூட்டம) **உடனிலை** (மெய்ம்மயக்கு) **ஆகும்** – (ரழ என்னும் இரண்டனையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களுந் தம்மோடு கூடுங் கூட்டம் உடனிலை மெய்ம் மயக்கமாகும். **இவ்விரு பால் மயக்கும் மொழி இடை மேவும்** – இவ் விருவகை மயக்கமும் ஒரு மெழிக்கும் தொடர் மொழிக்கும் நடுவில் வரும், **உயிர்மெய் மயக்கு அளவு இன்று** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி உயிரும் மாறி உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறையில்லை வேண்டியவாறே மயங்கும், **எ—று.**

கூட்டமெனினும் மயக்கமெனினும் ஒக்கும்.

பின் உடனிலை என்றதனால், முன் வேற்றுநிலை யென்பது கொள்ளப்பட்டது.

இச் சூத்திரத்தால், மெய்யுடன் மெய் மயங்குமிடத்துக், க ச த ப என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்குமெனவும், ரழ ன்னும் இரண்டும் தம்மொடு பிறவே மயங்குமெனவும், ஒழிந்த பன்னிரண்டும் மெய்யும் தம்மொடு தாமும் பிறவும் மயங்குமெனவும் பெற்றாம்.

**உ—ம்.:—**

அல், புள் – உயிருடன் மெய் மயங்கின.

கா, பூ – மெய்யுடன் உயிர் மயங்கின.

மற்றவைகளுக்கு உதாரணம் மேல் வருஞ் சிறப்புச் சூத்திரங்களிற் காண்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள்.:— க ச த ப ஒழித்த** – க ச த ப என்னும் நான்கையும் நீக்கிய, **ஈரேழன் கூட்டம்** – (மற்றைப்) பதினான்கு மெய்களம் (பிற மெய்களோடு கூடும்) கூட்டம், **மெய்ம்மயக்கு** (ஆகும்) – (வேற்றுநிலை) மெய்ம்மயக்கமாகும்; **ர ழ ஒழித்து** – ர ழ என்னும் இரண்டனையும் நீக்கி, **ஈரெட்டு** (கூட்டம்) – (மற்றைப்) பதினாறு மெய்களும் (தம்மோடு கூடும்) கூட்டம், **உடனிலை** (மெய்ம்மயக்கு) **ஆகும்** – உடனிலை மெய்ம் மயக்கமாகும்; **இ இருபால் மயக்கும்** – இவ்விரண்டுவகை மயக்கமும், **மொழியிடை மேவும்** – ஒரு மொழிக்கும்

தொடர்மொழிக்கும் நடுவில் வரும்; **உயிர் மெய் மயக்கு** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி மயங்கும் மயக்கத்திற்கு, **அளவு இன்று** – அளவில்லை; (வேண்டியவாறே மயங்கும் என்றபடி). **எ–று.**

**பொ–ரை.:**

க ச த ப என்னும் நான்கையும் நீக்கிய (மற்றைப்) பதினான்கு மெய்களும் (பிறமெய்களோடு கூடும்) கூட்டம் (வேற்று நிலை) மெய்ம் மயக்கமாகும்; ர ழ என்னும் இரண்டனையும் நீக்கி (மற்றைப்) பதினாறு மெய்களும் (தம்மோடு கூடும்) கூட்டம் உடனிலை மெய்ம்மயக்க மாகும்; இவ் விருவகை மயக்கமும் ஒரு மொழிக்கும் தொடர்மொழிக்கும் நடுவில் வரும்; உயிருடன் மெய்யும், மெய்யுடன் உயிரும் மாறிமாறி மயங்கும் மயக்கத்திற்கு அளவில்லை; (வேண்டியவாறே மயங்கும் என்றபடி).

உயிரும் மெய்யும் மயங்குதற்கு உதாரணம்:–

அல், வில்.

மெய்யுடன் உயிர் மயங்குதற்கு உதாரணம்: –

கா, பூ.

இவை மொழியிடை மயங்கின; க, ச, த என எழுத்தில் மயங்கின.

மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம் பின் வரும் சிறப்புச் சூத்திரங்களுட் காண்க.

இங்கே மொழி என்றது ஒரு மொழி, தொடர்மொழி இரண்டனையும்.

மொழியிடை யன்றி ஒரெழுத்தினும் மயங்குதலால் உயிமெய்யும் மயங்குதற்கு இடங்கூறா தொழிந்தார். இச் சூத்திரத்தில் மெய்யுடன் மெய் மயங்குங்கால் க ச த ப என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்கு மெனவும், ர ழ என்னு மிரண்டும் தம் பிறவே மயங்கு மெனவும், ஒழிந்த பன்னிரண்டு மெய்கள் தம்மொடு தாமும் பிறவும் மயங்குமெனவும் பெறப்பட்டன.

கூட்டம் – மயக்கம்.

## கா. நமச்சிவாய முதலியார்

**க ச த ப ஒழித்த** – க ச த ப என்னும் நான்கையும் நீக்கிய, **ஈரேழன் கூட்டம்** (மற்றைப்) பதினான்கு மெய்களும் (பிற மெய்களோடு கூடும்) கூட்டம், **மெய்ம்மயக்கு** (ஆகும்) – (வேற்றுநிலை) மெய்ம் மயக்கமாகும்; **ர ழ ஒழித்து** –

ர ழ என்னும் இரண்டனையும் நீக்கி, **ஈரெட்டு** (கூட்டம்) – (மற்றைப்) பனினாறு மெய்களும் (தம்மோடு கூடும்) கூட்டம், **உடனிலை** (மெய்ம்மயக்கு) **ஆகும்** – உடனிலை மெய்ம் மயக்கமாகும்; **இ இருபால் மயக்கும்** – இவ்விருவகை மயக்கமும், **மொழி இடை மேவும்** – ஒருமொழிக்கும் தொடர்மொழிக்கும் நடுவில் வரும்; **உயிர் மெய் மயக்கு** – உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மாறி மயங்கும் மயக்கத்திற்கு, **அளவு இன்று** – அளவில்லை; (வேண்டியவாறே மயங்கும்).

**உதாரணம்.:-**

உயிரும் மெய்யும் மயங்குதல் – அல், முள் முதலியன.

மெய்யும் உயிரும் மயங்குதல் – கா, பூ முதலியன.

மெய்யுடன் மெய் மயங்குதற்கு உதாரணம் பின்னே வருஞ் சிறப்புச் சூத்திரங்களுட் காண்க.இங்கே, மொழி என்றது ஒருமொழி, தொடர்மொழி ஆகிய இரண்டனையுமாம்.

இச் சூத்திரத்தால் மெய்யுடன் மெய் மயங்குங்கால் க ச த ப என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்கும் என்பதும், ர ழ என்னும் இரண்டும் தம்மொடு பிறவே மயங்கும் என்பதும், ஒழிந்த பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கும் என்பதும் பெறப்பட்டன.

**கூட்டம், மயக்கம், யோகம்** என்பன ஒருபொருட் சொற்கள்.

## மோசகு பொன்னையா

மெய்களில் க ச த ப அல்லாதன பிறமெய்களோடு கூடி நிற்கும் மெய்ம்மயக்கும், ர ழ அல்லாதன தம்மொடு தாம் கூடி நிற்கும் உடனிலையும் பெறும். இவ்விருவகைக் கூட்டமும் மொழியிடை நிகழும். உயிரும் மெய்யும் கூடி நிற்கும் முறைமை வரையறை இல்லாததாகும், எ–று.

தனி மெய் பிற மெய்யோடு மயங்கும் அல்லது கூடி நிற்கும் நிலை மெய்ம்மயக்கு எனவும், தனிமெய் தன்னோடு தான் மயங்கும் அல்லது கூடி நிற்கும் நிலை உடனிலை எனவும் தொல்காப்பியராலும், இவ்வாசிரியராலும் குறியிட்டாளப்பட்டன. பிற்கால உரையாசிரியர்கள் அவற்றை முறையே வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றும் உடனிலை மெய்ம்மயக்கம் என்றும் வழங்கினர்.

உயிருடன் உயிருக்கு மயக்கமின்மையின் அதனை யொழித்து, மெய்யுடன் மெய் மயங்குதலையும், உயிரும் மெய்யும் மாறி மயங்குதலையும் இடைநிலை மயக்கம் எனக் கொண்டு நூற்பா வகுத்தார்.

இதனால் மெய்களில், கசதப தம்மொடு தாமே மயங்கும், ர ழ வோடு பிறவே மயங்கும், ஏனைய இருவகை மயக்கமும் பெறும் என்பதும், உயிரும் மெய்யும் வேண்டியவாறெல்லாம் மயங்கும் என்பதும் பெறப்பட்டன.

மொழிநூலார் ஒலியன்கள் வழங்கும் முறைமையை, உடனிலை மெய்ம்மயக்கு, மூக்கொலி அடைப்பு மயக்கு, வேற்றுநிலை மெய்ம்மயக்கு என மூன்றாகக் கொள்வர். பக்கம், பங்கம், பார்வை, என்பவை அவற்றிற்குக் காட்டாவன.

(55)

# மெய்ம் மயக்கம்

110. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே

ஙம் முன் கவ் ஆம் வம் முன் யவ்வே

ṅam mu_n kav ām vam mu_n yavvē

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Special rules**

ṅ is followed by 'k',—and 'v' by 'y'.

### ஒப்புமைப் பகுதி

நஞெண நமன என்னும் புள்ளி முன்னர்
தம் தம் மிசைகள் ஒத்தன நிலையே

(தொல். : 25)

ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய் பெற்றன்றே

(தொல். : 27)

ஞகாரை முன்னர்க் ககர மயங்கும்

(தொல். : 67)

**வகாரை முன்னர் யகாரை மயங்கும்**

**(தொல். : 75)**

**இயலுங் கம்முன் கவ்வும் வம்முன் யவ்வும்.....**

**(சுவாமி. : 22 : 1)**

## மயிலைநாதர்

**எ—ன்,** நகர வகர மெய்ம்மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** ஙகர முன்னர்க் ககரமும், வகர முன்னர் யகரமும் வந்து மயங்கும், **எ — று.**

**வ — று.:**

கங்கன், தெவ்யாது என் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ — **னின்,** வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் விதந்து சிறப்புவிதி **உணர்—ற்று.**

**இ—ள்.:** ஙகர முன்னர்க் ககரமும், வகர முன்னர் யகரமும் மயங்கும், **எ — று.**

**உ—ம்.:**

கங்கன், தெவ்யாது என வரும்

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** ஙகர வகர மெய்மயக்கம் கூறியது.

**இ—ள்.: ஙம்முன் கவ்வாம்** – ஙகரத்துக்கு முன்னே ககரமும், **வம்முன் யவ்வே** – வகரத்தின் முன்னர் /யகரம் வந்து மயங்கும், **எ—று.**

**உ—ம்.:**

கங்கன், தெவ்யாது என் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் விதந்து சிறப்புவிதி உணர்த்துகின்றது.

**இ—ள்.: நம்முன்**—ஙகரத்தின்முன், **க** – ககரமும், **வம் முன்** – வகரத்தின் முன், **ய** – யகரமும், **ஆம்** – மயங்கும், **எ—று.**

**உ—ம்.:**

கங்கன் எனவும், தெவ்யாது எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

'ஙகர வகரங்கள் தம்மொடு தாமே யன்றி வேறெம் மெய்களோடு மயங்கும்?

நும்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

இ—ள்.: **நம் முன் கவ் ஆம்** – ஙகரத்தின் முன் ககரம் மயங்கும், **வம்முன் யவ் (ஆம்)** – வரகத்தின் முன் யகரமும் மயங்கும்.

**உ—ம்.:**

கங்கன், எனவும். தெவ்யாது, எனவும் வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** பிறநிலை மெய்மயக்கத்துள் எடுத்துச் சிறப்புவிதி கூறுகின்றது.

**இ—ள்.:** ஙகரத்தின் முன் ககரமும் வகரத்தின் முன் யகரமும் வந்து மயங்கும், **எ – று.**

**உ—ம்.:**

கங்கன், தெவ்யாது என வரும்.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– ங முன் க** – ஙகரத்தின் முன் ககரமும், **வ முன்** – வகரத்தின் முன், **ய** – யகரமும், **ஆம்** – மயங்கும்.

**உ—ம் :—**

கங்கன் எனவும், தெவ்யாது எனவும் வரும்.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: ஙம் முன் க வம் முன் ய ஆம்** – ஙகரத்தின் முன் ககரமும், வகரத்தின் முன் யகரமும் மயங்கும், எ –று.

**உ-ம்.:**

கங்கன், எனவும்; **தெவ்யாது எனவும் வரும்.**

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். ங முன் க ஆம்** – ஙகரமெய்யின் முன் ககரம் மயங்கும், – **வ முன் யவ்வே (ஆம்)** – வகரமெய்யின் முன் யகரம் மயங்கும். எ–று.

முன் என்றது இடமுன்னாகிய வலப்பக்கத்தை.

**உ-ம்.**

கங்கன் எனவும் தெவ்யாது எனவும் வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.: ங முன் க** – ஙகர மெய்யின் முன் ககரமும், **வ முன் ய**–வகர மெய்யின் முன் யகரமும், **ஆம்** – மயங்கும்; எ – று. முன் – இடமுன்; அடுத்த ஒன்பது சூத்திரங்களிலும் இது.

**உ-ம்.:**

பங்கு, தெவ்யாது.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள். ஙம்முன் க வம்முன் ய ஆம்** – ஙகரத்தின் முன் ககரமும், வகரத்தின் முன் யகரமும், மயங்கும், எ–று.

**உ-ம்.**

கங்கன், தெவ்யாது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். ஞ ந முன்** – ஞகர நகரங்களின் முன், **தம் இனம்** – அவற்றிற்கு இனமாகிய சகர தகரங்களும், **யகரமொடு** – யகரமும், **ஆகும்** – மயங்கும். **எ—று.**

**பொ—ரை.:**

ஞகர நகரங்களின் முன் அவற்றிற்கு இனமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும்.

**உ—ம்.:—**

கஞ்சன், கந்தன் – இனம்.

உரிஞ்யாது, பொருந்யாது – யகரம்.

(இதுவுமது.)

## கா. நமச்சிவாய முதலியார்

**ங முன் க** – ஙகரத்தின் முன் ககரமும், **வ முன் ய** – வகரத்தின் முன் யகரமும், **ஆம்** – மயங்கும்.

**உதாரணம்**

கொங்கு – ங முன் க.

தெவ்யாது – வ முன் ய.

## மோசகு பொன்னையா

ஙகரத்தோடு ஞு ங்க் ஞு எனவும், வகரத்தோடு ஞு வய் ஞு எனவும், ஞகரத்தோடு ஞு ஞ்ச்,ஞ்ய் ஞு எனவும் நகரத்தோடு ஞு ந்த், ந்ய் ஞு எனவும், டகரத்தோடு ஞு ட்க் ,ஞு ட்ச்ஞு, ஞு ட்ப் ஞு எனவும் றகரத்தோடு ஞு ற்க்,ஞு ற்ச், ற்ப் ஞு எனவும், ணகரத்தோடு ஞு ண்ட்ஞு, ஞு ண்க் , ண்ச், ண்ஞ், ண்ப்,ண்ப்,ண்ம், ண்ய், ண்வ் ஞு எனவும், னகரத்தோடு ஞு ன்ற், ன்க், ன்ச் , ன்ஞ், ன்ப்,ன்ம், ன்ய், ன்வ் ஞு எனவும், மகரத்தோடு ஞு ம்ப் ஞு, ஞு ம்ய் ஞு, ஞு ம்வ் ஞு எனவும், யகரத்தோடு ஞு ய்க், ய்ச், ய்த், ய்ந், ய்ப், ய்ம், ய்வ், ய்ய், ய்ஞ், ய்ங் , எனவும், ரகரத்தோடு ஞு ர்க், ர்ச், ர்த், ர்ந், ர்ப், ர்ம், ர்வ், ர்ய், ர்ஞ், ர்ங் ஞு எனவும் ழகரத்தோடு ஞு ழ்க்,ழ்ச்,ழ்த், ழ்ந், ழ்ப்,ழ்ம்,ழ்வ்,ழ்ய்,ழ்ஞ், ழ்ங் ஞு எனவும் லகரத்தோடுஞு ல்க், ல்ச், ல்ப், ல்வ், ய்ய், ல்ய் ஞு எனவும், ளகரத்தோடு ள்க், ள்ச், ள்ப்,ள்வ்,ள்ய் ஞு எனவும் மயங்கும், **எ—று.**

எ—டு. ங் – கங்கன்.

வ் – தெவ்யா.

ஞ் – கஞ்சன், உரிஞ் யாது.

ந் – கந்தன்,பொருந் யாது.

ட் – கட்கம், கட்சி, நுட்பம்.

ற் – கற்க, கற்சிறை, கற்பு.

ண் – விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண் யாது, மண் வலிது.

ன் – புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது.

ம் – கம்பன், கலம் யாது, கலம் வலிது.

ய் – வேய் கடிது, வேய் சிறிது, வேய் தீது, வேய் நீண்டது,வேய் பெரிது, வேய் மாண்டது,வேய் வலிது, வேய் யாது, வேய் ஞான்றது, வேய்ங் குழல்.

ர் – வேர் கடிது, வேர் சிறிது, வேர் தீது, வேர் நீண்டது, வேர் பெரிது, வேர் மாண்டது, வேர் வலிது, வேர் யாது, வேர் ஞான்றது, ஆர்ங் கோடு.

ழ் – வீழ் கடிது, வீழ் சிறிது, வீழ் தீது, வீழ் நீண்டது, வீழ் பெரிது, வீழ் மாண்டது, வீழ் வலிது, வீழ் யாது, வீழ் ஞான்று, பாழ்ங் கிணறு.

ல் – வேல் கடிது, வேல் சிறிது, வேல் பெரிது, வேல் வலிது, வேல் யாது.

ள் – வாள் கடிது, வாள் சிறிது, வாள் பெரிது, வாள் வலிது, வாள் யாது.

தொல்காப்பியரும் இவ்வாசிரியரும் இடைநிலை மயக்கம் பற்றிக் கூறியன வேற்றுமை சிறிதும் இன்றி ஒன்றி யுள்ளமை தமிழ்மொழியின் ஒலி முறையின் நிலையான தன்மைக்கு எடுத்துக்காட்டாகின்றது. இவ்வகை இடைநிலை மயக்கு ஒரு மொழிக்கும் தொடர்மொழிக்கும் கொள்ளப்படுவதே மரபும் இயல்புமாகும்.

111. ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்

ஞ ந முன் தம் இனம் யகரமொடு ஆகும்

ña na mu<u>n</u> ṭam i<u>n</u>am yakaramotu ākum

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

ñ and n may be respectively followed by their kindred 'c' and 't', as well as by 'y'.

### ஒப்புமைப் பகுதி

நஞ ணந மன என்னும் புள்ளி முன்னர்
தம் தம் மிசைகள் ஒத்த நிலையே

(தொல். : 25)

ஞந மவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே

(தொல். : 27)

வருஞ்சய ஞகார முன் மருவி யென்ப

(தொல். : 68)

யகரமுந் தகரமு நகரமுன் னாகும்

(தொல். : 71)

வருஞ்சய ஞகாரமுன் மருவி யென்ப

(மு. வீ. : 68)

யகரமுந் தகரமு நகர முன் னாகும்

(மு. வீ. : 71)

........ ஞநமுன் இனமும் யவ்வும்

(சுவாமி. : 22 : 1)

### மயிலை நாதர்

**எ—ன்,** ஞகர நகர மெய்ம்மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** இவ் விரண்டு மெய்ம் முன்னரும் தமக்கினமாகிய சகர தகரங்களும் யகரமும் வந்து மயங்கும், எ — று.

வ — று.:

கஞ்சன், உரிஞ்யாது, கந்தன், வெரிந் யாது என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ – **னின்**, இதுவும் அது.

**இ–ள்.:** இவ்விரண்டு மெய் முன்னரும், தமக்கு இனமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும், **எ – று.**

**உ–ம்.:**

கஞ்சன், உரிஞ் யாது; கந்தன், பொருந் யாது என வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்**, ஞகார நகார மெய்மயக்கம் கூறியது.

**இ–ள்.:** **ஞந முன்**–ஞகாரமெய் முன்னும் நகாரத்தின் முன்னும், **தம் இனம்** – தமக்கு இனமாகிய சகரமும் தகரமும், **யகரமோடாகும்** – யகாரமும் வந்து மயங்கும், **எ–று.**

**உ–ம்.:**

கஞ்சன், உரிஞ் யாது, கந்தன், வெரிந் யாது.

## விசாகப்பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: ஞநமுன்** – ஞகர நகரங்களின் முன், **தம்மினம்** – அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும், **ய**– யகரமும், **ஆகும்** – மயங்கும், **எ–று.**

**உ–ம்.:**

கஞ்சன், உரிஞ்யாது எனவும், கந்தன், பொருந்யாது எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஞ நக்கள் தம்மொடு தாமே யன்றி வேறெம் மெய்களோடு மயங்கும்?

ஞநமுன் றம்மினம் யகரமொ டாகும்

(ஞ ந முன் தம் இனம் யகரம் ஒடு ஆகும்)

**இ–ள்.: ஞந முன்** – ஞகர நகரங்களின்முன், **தம் இனம்** – அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும், **யகரம், ஒடு ஆகும்** –யகரமும் மயங்கம், **எ–று.**

**உ–ம்.:**

கஞ்சன், உரிஞ் யாது எனவும், கந்தன், பொருந் யாது, எனவும் வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: ஞநமுன்** – இந்த இரண்டு மெய்களின் முன், **தம்மினம்** – தமக்கினமாகிய சகர தகரங்களுள், **யகரமோடாகும்** – யகரத்தோடு கூட மயங்கும், **எ– று.**

எனவே, ஒன்றுடன் இனமும் யகருமு மயங்கு மென்பதாயிற்று.

**உ–ம்.:**

கஞ்சன், உழிஞ் யாது, கந்தன், பொருந் யாது என வரும்.
இனமும் யகருமு மயங்குமென முடிக்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– ஞநமுன்** – ஞகர நகரங்களின் முன், **தம்மினம்** – அவற்றிற்கினமாகிய சகர தகரங்களும், **யகரமொழி** – யகரமும், **ஆகும்** – மயங்கும்.

**உ–ம் :–**

கஞ்சன், உரிஞ்யாது எனவும்; கந்தன், பொருந்யாது எனவும் வரும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ஞ ந முன் தம் இனம் யகரமொடு ஆகும்** – ஞகர நகரங்களின் முன் அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும், **எ – று.**

**உ – ம்.:**

கஞ்சன், உரிஞ்யாது எனவும். கந்தன், பொருந் யாது எனவும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். ஞந முன் தம்மினம் யகரமொடு ஆகும்** – ஞகர நகர மெய்களின் முன் அவற்றிற் கினமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும்.

ஞகர மெய்யின் முன் சகரமும் யகரமு மயங்கும்; நகர மெய்யின் முன் தகரமும் யகரமு மயங்கும் என்று தெளிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: ஞ ந முன்** – ஞகர நகர மெய்களின் முன், **தம் இனம்** – அவற்றுக்கு இனமாகிய சகர தகரங்களும், **யகரமொடு** – யகரமும், **ஆகும்** – மயங்கும்; **எ—று.**

ஞகர மெய்யின் முன் சகரமும் யகரமும், நகர மெய்யின் முன் தகரமும் யகரமும் மயங்கு மென்க. 113ஆஞ் சூத்திரத்திற்கும் இவ்வாறே காண்க.

**உ—ம்.:**

பஞ்சு, உரிஞ் யாது; பந்து, பொருந் யாது.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். ஞ ந முன் தம் இனம் யகரமொடு ஆகும்** – ஞகர நகரங்களின் முன் அவற்றின் இனமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும். எ—று.

**உ—ம்.:–**

கஞ்சன், உரிஞ்யாது, கந்தன், பொருந்யாது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ-ள்.:- ஞ ந முன்** - ஞகர நகரங்களின் முன், **தம் இனம்** - அவற்றிற்கு இனமாகிய சகர தகரங்களும், **யகரமொடு** - யகரமும், **ஆகும்** - மயங்கும். **எ-று.**

**பொ-ரை.:** ஞகர நகரங்களின் முன் அவற்றிற்கு இனமாகிய சகர தகரங்களும் யகரமும் மயங்கும்.

உ-ம்.:- கஞ்சன், கந்தன் - இனம்.

உரிஞ் யாது, பொருந் யாது - யகரம்.

(இதுவுமது.)

## கா. நமச்சிவாய முதலியார்

ஞ ந முன் – ஞகர நகரங்களின் முன், தம் இனம் – அவற்றிக்கு இனமாகிய சகர தகரங்கள், யகரமொடு – யகர மெய்யுடன், ஆகும் – மயங்கும்.

**உதாரணம்:–**

கஞ்சன், கந்தன் – இனம்.

உரிஞ்யாது, பொருந்யாது – யகரம்.

(57)

## 112. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

**ட ற முன் க ச ப மெய் உடன் மயங்கும்.**

ta ṛa mun̲ ka sa pa mey utan̲
mayaṅkum.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

t and ‘r’ may be followed by k, c and p.

## ஒப்புமைப் பகுதி

டறலள என்னும் புள்ளி முன்னர்
கசப என்னும் மூவெழுத் துரிய

(தொல். : 23)

கசப டகரமுற் கலந்து மயங்கும்,

(மு. வீ. : 69)

கசப றகாரைமுற் கலக்கு மென்ப

(மு. வீ. : 76)

....... டறமுன்னே கசபவுமாம்....

(சுவாமி. : 22 : 2)

## மயிலை நாதர்

எ—ன், டகர றகர மெய்ம்மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: இவ் விரண்டு மெய்ம் முன்னரும் க ச ப வென்னு மூன்று மெய்யும் மயங்கும், எ — று.

வ — று.:

கட்கம், [1]கட்சி கட்ப எனவும், கற்க, [2].கற்சிறை, கற்ப எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ — னின், இதுவும் அது.

இ—ள்.: இவ்விரண்டு மெய் முன்னரும், க ச ப என்னும் மூன்று மெய்யும் இணங்கி மயங்கும், எ — று.

உ — ம்.:

கட்கம், கட்சி, நுட்பம்; கற்க, கற்சிறார், கற்ப என வரும்.

பாட வேறுபாடு.:

1. கட்சிறார்

2. கற்சிறார்

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், டகார றகார மெய்மயக்கம் கூறியது.

இ—ள்.: டற முன் – டகாரத்தின் முன்னும் றகாரத்தின் முன்னும், க ச ப மெய்யுடன் மயங்கும் – க ச ப என்னும் மூன்று மெய்யும் மயங்கும், எ—று.

உ—ம்.:

கட்கம், கட்கிறார், தட்பம் எனவும்; கற்க, கற்கிறார், கற்பம் எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ—ள்.: டற முன் – டகர றகரங்களின் முன், க ச ப மெய் – க ச ப என்கிற மூன்று மெய்களும், உடன் மயங்கும் – இணங்கி மயங்கும், எ—று.

இணங்கி வரும்,

## ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை

*டறக்கள் தம்மொடு தாமேயன்றி வேறெம்மெய்களோடு மயங்கும்?*

டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

(டறமுன் கசப மெய்உடன் மயங்கும்)

இ—ள்.: டறமுன் – டகர றகரங்களின் முன், க ச ப மெய் உடன் மயக்கும் – க ச ப என்னு மூன்று மெய்களும் இணங்கி மயங்கும், எ—று.

உ—ம்.:

கட்கம், கட்சி, திட்பம், எனவும், கற்க, நற்சிறார், கற்ப. எனவும் வரும்.

## முகவை இராமானுசக்கவிராயர்

இதுவுமது.

இ—ள்.: டறமுன்–இவ்விரண்டின் முன், கசபமெய் – இம் மூன்று மெய்களும், உடன்மயங்கும் – கூடி மயங்கும், எ—று.

உ–ம்.: வெட்கம், வெட்சி, வெட்பூாலை எனவும், கற்க, கற்சிலை, கற்ப எனவும் வரும்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: டறமுன் க ச ப மெய் உடன் மயங்கும் – டகர றகரங்களின் முன் க ச ப என்னு மூன்று மெய்களும் இணங்கி மயங்கும், எ – று.

உ–ம்.:–

கட்கம், கட்சி, திட்பம். எ – ம்.

கற்க, கற்சிறார், கற்ப எனவும் வரும்.

## வ. குமாரசாமிப்புலவர்

இ–ள். டறமுன் – டகர றகர மெய்களின் முன், க ச ப மெய் உடன் மயங்கும் – க ச ப என்னு மூன்று மெய்களும் இணங்கி மயங்கும். எ–று.

உ–ம்.

கட்கம், கட்சி, திட்பம் எனவும். கற்க, கற்சிறார், கற்ப எனவும். வரும்.

## 113. ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.

ண ன முன் இனம் க ச ஞ ப ம ய வ வரும்.

ṇa ṉa muṉ iṉam ka sa ña pa ma ya va varum.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

ñand n, may be followed by their respective kindred (d and r) as well as by k,c,ñ,p,m,y and v.

## ஒப்புமைப் பகுதி

ஙஞண நமன என்னும் புள்ளி முன்னர்
தம் தம் மிசைகள் ஒத்தன நிலையே

(தொல். : 25)

அவற்றுள்
ணனஃகான் முன்னர்
கசஞபமயவ ஏழும் உரிய

(தொல். : 26)

ணனமுன் னினங் கசஞபமய வவ்வரும்

(மு. வீ. : 70)

.... னணமுன்னின மொடுங் கபசஞ
மய வவுமாம்....

(சுவாமி. : 22 : 2 – 3)

## மயிலை நாதர்

எ–ன், ணகர னகர மெய்ம்மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இவ் விரண்டின் முன்னர்த் தமக்கினமாகிய ட றக்களும் க ச ஞ ப ம ய வ என்னும் ஏழு மெய்யும் மயங்கும், எ – று.

வ – று.:

[1]வெண்டயிர், [2]வெண்கலம், வெண்சோறு, வெண்ஞாண், வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது எனவும், புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞாண், புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், இதுவும் அது.

இ – ள்.: இவ் விரண்டு மெய் முன்னரும், தமக்கு இனமாகிய ட றக்களும், க ச ஞ ப ம ய வ என்னும் ஏழு மெய்யும் மயங்கும், எ – று.

---

பாட வேறுபாடு.:

1.விண்டு 2.வெண்கல்

உ - ம்.:- விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது எனவும்; புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், ணகார னகார மெய்மயக்கம் கூறியது.

**இ—ள்.: ண ன முன்** – ணகார னகாரத்தின் முன்னர், **இனம்** – தனக்கு இனமாகிய டறக்களும், **க ச ஞ ப ம ய வ வரும்** – இவ்வேழு மெய்யும் வந்து மயங்கும், **எ—று.**

**உ—ம்.:—**

விண்டு எனவும்; நன்று எனவும்; வெண்கலம், வெண்சோறு, வெண்ஞாண், பண்பு, வெண்மை, மண்யாது, மண்வலிது எனவும்; புன்கண், புன்செய், புன்ஞாண், அன்பு, வன்மை, பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ—ள்.: ண ன முன்—**ணகர னகரங்களின் முன், **இனம்—**அவற்றிற் கினமாகிய டகர றகரங்களும், **க ச ஞ ப ம ய வ** – ககர முதலிய விவ்வேழு மெய்களும், **வரும்** – மயங்கும், **எ – று.**

**உ—ம்.:—**

விண்டு வெண்கலம் வெண்சோறு வெண்ஞமலி வெண்பல் வெண்மலர் மண்யாது மண்வலிது எனவும், புன்றலை புன்கண் புன்செய் புன்ஞமலி புன்பயிர் புன்மலர் பொன்யாது பொன்வலிது எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ண ன க்களின் முன்னே தாமேயன்றி வேறெம்மெய்கள் மயங்கும்?

ண னமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.

(ண ன முன் இனம் க ச ஞ ப ம ய வவ் வரும்)

**இ—ள்.: ண ன முன்** – ணகர னகரங்களின் முன், **இனம்** – அவற்றிற் கினமாகிய டகர றகரங்களும், **க ச ஞ ப ம ய வவ்வரும்** – க ச ஞ ப ம ய வ என்னும் இவ்வேழு மெய்களும் மயங்கும், **எ—று.**

**உ—ம்.:—**

விண்டு, எண்கு, வெண்சோறு, வெண்ஞமலி, பண்பு, வெண்மை, மண்யாது, மண்வலிது எனவும், கன்று, புன்கு, புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.: ண ன முன்** – இவ்விரண்டு மெய்களின் முன், **இனம்** – அவற்றிற்கு இனமாகிய டகர றகரங்களும், **க ச ஞ ப ம ய வ** – இந்த ஏழொற்றுக்களும், **வரும்** – வந்து மயங்கும், **எ — று.**

**உ—ம்.:—**

விண்டு, வெண்கலம், வெண்சுடர், வெண்ஞமலி, வெண்பா, வெண்மலர், மண்யாது, மண்வலிது எனவும், கன்று, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– ணனமுன்** – ணகர னகரங்களின் முன், **இனம்** – (அவற்றிற்கு) இனமாகிய டகரகரங்களும், **கசஞபமயவ** – ககரம் முதலிய இவ்வேழு மெய்களும், **வரும்** – மயங்கும்.

உ-ம் :- விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது எனவும்; புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: ண ன முன்** – ணகர னகரங்களின் முன், **இனம்** – அவற்றிற் கினமாகிய டகர றகரங்களும், **க ச ஞ ப ம ய வ வரும்** – ககர முதலிய இவ்வேழு மயங்கும், எ – று.

**உ-ம்.:-** விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது, எனவும்; புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிது எனவும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். ணனமுன்** – ணகர னகர மெய்களின்முன், – **இனம்** – அவற்றிற்கினமாகிய டகர றகரங்களும் – **க ச ஞ ப ம ய வ வரும்** – க ச ஞ ப ம ய வ என்னு மேழுமெய்களும் மயங்கும். **எ–று.**

ணகர மெய்யின்முன் ட க ச ஞ ப ம ய வ என்னுமெட்டும், னகரமெய்யின்முன் ற க ச ஞ ப ம ய வ என்னுமெட்டும் மயங்குமென்று தெளிக.

**உ-ம்.:-** விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பலி, கண்மலர், மண்யாது, மண்வலிது, எனவும். மன்றல், புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், பொன்மலர், பொன்யாது, பொன்விலை எனவும். வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.: ண ன முன்** – ணகர னகர மெய்களின் முன், **இனம்–** (அவற்றிற்கு) இனமாகிய டகர றகரங்களும், **க ச ஞ ப ம ய வ** – ககரம் முதலிய இவ்வேழு மெய்களும், **வரும்** – மயங்கும்; எ – று.

ணகர மெய்யின் முன் டகரமும், க ச ஞ ப ம ய வக்களும், னகர மெய்யின் முன் றகரமும் க ச ஞ ப ம ய வக்களும், மயங்கு மென்க.

**உ–ம்.:–**

விண்டு, உண்கு, வெண்சோறு, வெண்ஞமலி, பண்பு, வெண்மை, மண்யாது, மண்வலிது; கன்று, புன்கு, நன்செய், புன்ஞமலி, இன்பம், நன்மை, பொன்யாது, பொன்வலிது.

## பவானந்தம் பிள்ளை

இ–ள். ண ன முன் – ணகர னகரங்களின் முன், இனம் – அவற்றிற்கினமாகிய டகர றகரங்களும், க ச ஞ ப ம ய வ வரும் – ககர முதலிய இவ்வேழு மெக்ளும் மயங்கும். எ–று.

**உ–ம்.:–**

விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது. புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன் யாது, பொன்வலிது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– ண ன முன்** – ணகர னகரங்களின் முன், **இனம்** – (அவற்றிற்கு) இனமாகிய டகர றகரங்களும், க ச ஞ ப மய வ – ககர முதலிய இவ் வேழுமெய்களும், வரும் –மயங்கும். **எ–று.**

**பொ–ரை.:–**

ணகர னகரங்களின் முன் (அவற்றிற்கு) இனமாகிய டகர றகரங்களும் ககரமுதலிய இவ் வேழுமெய்களும் மயங்கும்.

**உ–ம்.:–**

விண்டு, புன்றலை – இனம்.

வெண்கலம், புன்கண் – ககரம்.

வெண்சோறு, புன்செய் –சகரம்.

வெண்ஞமலி, புன்ஞமலி – ஞகரம்.

வெண்பல், புன்பயிர் – பகரம்.

வெண்மலர், புன்மலர் – மகரம்.

மண்யாது, பொன்யாது – யகரம்.

மண்வலிது, பொன்வலிது – வகரம்.

## கா. நமச்சிவாய முதலியார்

**ண ன முன்** – ணகர னகரங்களின் முன், **இனம்** – (அவற்றிக்கு) இனமாகிய டகர றகரங்களும், **கசஞபமயவ** – க ச ஞ ப ம ய வ ஆகிய இவ்வேழு மெய்களும், **வரும்** – மயங்கும்.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| விண்டு | புன்றலை | – | இனம் |
| வெண்கலம் | புன்கண் | – | ககரம் |
| வெண்சோறு | புன்செய் | – | சகரம் |
| வெண்ஞமலி | புன்ஞமலி | – | ஞகரம் |
| வெண்பல் | புன்பயிர் | – | பகரம் |
| வெண்மலர் | புன்மலர் | – | மகரம் |
| மண்யாது | பொன்யாது | – | யகரம் |
| மண்வலிது | பொன்வலிது | – | வகரம் |

(59)

## 114. மம்முன் பயவ மயங்கு மென்ப

**மம் முன் ப ய வ மயங்கும் என்ப**

mam mun̲ pa ya va mayaṅkum en̲pa

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

M may be followed by p,y and v.

## ஒப்புமைப் பகுதி

ஙஞண நமன என்னும் புள்ளி முன்னர்
தத்தம் மிசைகள் ஒத்த நிலையே

(தொல். : 25)

ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய் பெற்றன்றே

(தொல்: 27)

மஃகான் புள்ளி முன் வவ்வும் தோன்றும்

(தொல். : 28)

மம்முன் பயவ மயங்கு மென்ப

(மு. வீ. : 72)

...... மம்முன்
பயவவுமாம்...

(சுவாமி. : 22 : 1 – 2)

## மயிலை நாதர்

எ–ன், மகர மெய்ம் மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: மகர மெய்ம் முன்னர்ப் பகர யகர வகரங்கள் வந்து மயங்கும், எ – று.

வ – று.:

கம்பன், [1]கலம்யாது, [2]கலம்வலிது என வரும்.

பாட வேறுபாடு :-

1.காலம் யாது 2.காலம் வலிது

## சங்கர நமச்சிவாயர்

எ – **னின்,** இதுவும் அது.

**இ–ள். :–** மகர மெய் முன்னர்ப் பகர யகர வகரங்கள் மயங்கும் என்று சொல்லுவர் புலவர், எ–று.

**உ – ம்.:–**

கம்பன், கலம் யாது, கலம் வலிது என வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** மகார மெய்மயக்கம் கூறியது.

**இ–ள். :– மம்முன்** – மகார மெய் முன்னர், **ப ய வ மயங்கு மென்ப** – தனக்கு இனமாகிய பகரமும் யகார வகாரமும் வந்து மயங்கும், **எ–று.**

**உ–ம்.:–**

கம்பன், கலம் யாது, கலம் வலிது எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.: மம்முன்** – மகரத்தின்முன், ப ய **வ** – ப ய வவென்னு மூன்று மெய்களும், **மயங்கு மென்ப** – மயங்கு மென்று சொல்லுவர் புலவர், **எ–று.**

**உ–ம்.:–**

கம்பன், கலம்யாது, கலம்வலிது என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மகரத்தின் முன்னே தானே யன்றி வேறெம் மெய்கள் மயங்கும்?

**இ–ள்.: மம்முன்** – மகரத்தின்முன், ப ய **வ மயங்கும் என்ப** – பயவ என்னு மூன்று மெய்களும் மயங்குமென்று சொல்லுவர் புலவர், **எ–று.**

**உ–ம்.:–**

கம்பன், கலம்யாது, கலம்வலிது, என வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.: மகரத்தின் முன் ப ய வ** – என்னும் மூன்று மெய்களும் இணங்குமென்று சொல்லுவர் புலவர், எ — று.

**உ—ம்.:—**

கலம்பெரிது, கலம்யாது, கலம்வலிது என வரும்.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :— ம முன்** – மகரத்தின் முன், ப ய வ – பயவ என்னும் மூன்று மெய்களும், **மயங்கும் என்ப** – மயங்கும் என்று சொல்லுவர் (புலவர்).

**உ—ம் :—**

கம்பன், கலம்யாது, கலம்வலிது எனவரும்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: மம்முன் ப ய வ மயங்கும் என்ப** – மகரத்தின் முன் ப ய வ என்னும் மூன்று மெய்களும் மயங்குமென்று சொல்லுவர் புலவர், எ — று.

**உ —ம்.:—**

கம்பன், கலம் யாது, கலம் வலிது என் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள்.:— ம முன் ப ய வ மயங்கும் என்ப** – மகர மெய்யின்முன் ப ய வ என்னு மூன்று மெய்களும் மயங்குமென்று சொல்லுவர் புலவர். எ—று.

**உ—ம்.**

கம்பன், கலம்யாது, கலம்வலிது என வரும்.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.:—** ம முன் — மகர மெய்யின் முன், ப ய வ — இம் மூன்று மெய்களும், மயங்கும் — இணங்கும், என்ப — என்று சொல்வர் (புலவர்) ; எ — று.

உ—ம்.:—

கம்பன், கலம்யாது, கலம்வலிது.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். மம்முன் பய வ மயங்கும் என்ப** — மகரத்தின் முன் ப ய வ என்னும் மூன்று மெய்களும் மயங்குமென்ற பத்து மெய்ளுட் ககர முதலாகிய இவ்வெட்டு மெய்களும் ஈரொற்றாயும் மயங்கும். **ர ழத் தனிக்குறில் அணையா** — ரகார ழகார மெய்கள் தனிக்குறிற் கீழொற்றாக மயங்கா, எ—று.

உதாரணம்.:—

(ய்) (ர்) (ழ்)

(க) வாய்க்கால் — ஈர்க்கு — வாழ்க்கை

(ச) ஆய்ச்சி — தளர்ச்சி — சூழ்ச்சி.

(த) நாய்த்தோல் — சீர்த்தி — வாழ்த்தி

(ப) வாய்ப்பு — ஆர்ப்பு — காழ்ப்பு

(ங) வேய்ங்குழல் — சூர்ங்கோடு — பாழ்ங்கிணறு.

(ஞ) மெய்ஞ்ஞானம் — கூர்ஞ்சிறை — பாழ்ஞ்சுனை.

(ந) பாய்ந்து — தேர்ந்து — வாழ்ந்து

(ம) மொய்ம்பு — ஈம்பனை — பாழ்ம்பதி.

மொழி முதன் மெக்ள் பத்தில் ஈண்டு நிக்கப்பட்டவை ய வ
ன்னும் இரண்டும் என்பதறிக.

## கா. நமச்சிவாய முதலியார்

**ம முன்** — மகரத்தின் முன், ப ய **வ** — ப ய வ என்னும் மூன்று மெய்களும், **மயங்கும் என்ப** — மயங்குமென்று சொல்லுவர் (புலவர்)

உதாரணம்

| | | |
|---|---|---|
| கம்பன் | - | பகரம் |
| கலம்யாது | - | யகரம் |
| கலம்வலிது | - | வகரம் |

(60)

## 115. யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

ய ர ழ முன்னர் மொழி முதன் மெய் வரும்.

ya ra ḷa mun̲n̲ar moḷi muṭan̲ mey varum.

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

Y, r and l may be followed by any initial consonant.

**ஒப்புமைப் பகுதி**

யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலாகு எழுத்து ஙகரமொடு தோன்றும்

(தொல். : 29)

யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்

(மு. வீ. : 73)

......... யரழவின்முன் முதன்மெய்யும்

(சுவாமி. : 22: 1)

## மயிலை நாதர்

**எ—ன்,** யகர ரகர ழகர மெய்ம்மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** இம் மூன்றன் முன்னரும் மொழிமுதலான பத்தினுள்ளும் [1]ஙகர மொழித்து ஒழிந்த ஒன்பது மெய்யும் மயங்கும், **எ — று.**

ஙகரம் ஈண்டு விலக்கிற்றில்லையாலோ வெனின், அது, [2]தன் விதிச்சூத்திரத்தினுள்ளே இன்னவிடத்து வருமென்று இடங் குறித்துச் சொன்னமையாற் [3]பிறவழி வாராதெனக் கொள்க.

**வ — று.:**

(வேய், வேர், வீழ்) + (கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது) என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ - னின்,** இதுவும் அது.

**இ-ள்.:** இம் மூன்று மெய் முன்னரும் மொழி முதற்கு விதந்துகொண்ட பத்து மெய்யும் மயங்கும். **எ - று.**

**உ—ம்.:**

வேய். வேர். வீழ்: கடிது. சிறிது. தீது. பெரிது. நீண்டது. மாண்டது. ஞான்றது. யாது. வலிது எனவும். வேய்ங்குழல். ஆர்ங்கோடு. பாழ்ங்கிணறு எனவும் வரும்.

**சுருங்கச் சொல்லல்** என்னும் வனப்பு வகையான் மொழி முதன் மெய் எனக் கூறலின். யகரத்தின் முன் யகரம் மயங்கும் உடனிலை ஈண்டுக் கொள்ளா தொழிக.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** யகார ரகார ழகார மெய்மயக்கம் கூறியது.

**இ—ள்.:** **ய ர ழ முன்னர்** — இம் மூன்று மெய் முன்னரும், **மொழிமுதன் மெய் வரும்** — ஙகாரம் ஒழித்து மொழிக்கு முதலாம் ஒன்பது எழுத்தும் வந்து மயங்கும், **எ—று.**

**உ—ம்.:—** வேய், வேர், வீழ்: கடிது, சிறிது, தீது, பெரிது, நீண்டது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ-ள்.:-** ய ர ழ **முன்னர்** - ய ர ழ வென்னு மூன்று மெய்களின் முன், **மொழிமுதன்மெய்**-மொழிக்கு முதலாக நின்ற பத்து மெய்களும், **வரும்**-மயங்கும், எ-று.

**உ-ம்.:**

வேய்கடிது வேர்கடிது வீழ்கடிது; சிறிது பெரிது தீது நீண்டது மாண்டது ஞான்றது யாது வலிது இவற்றையும் அம் மூன்றுடன் கூட்டுக; வேய்ங்குழல் ஆர்ங்கோடு பாழ்ங்கிணறு எனவரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*யகரத்தின் முன்னும், தம்முன்னே தாம் மயங்காத ர ழக்களின் முன்னும் வேறு எம் மெய்கள் மயங்கும்?*

யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

(ய ர ழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்)

**இ-ள்.:** ய ர ழ **முன்னர்** - ய ர ழ என்னு மூன்று மெய்களின் முன், **மொழிமுதன்மெய்வரும்** - மொழிக்கு முதலாக நின்ற பத்துமெய்களும்மயங்கும், எ-று.

**உ-ம்.:-**

ஆய்க, எய்சிலை, ஆய்தல், ஆய்நர், ஆய்பவை. வாய்மை தெய்வம், பாய்ஞெகிழி, வேய்ங்குழல் எனவும், ஆர்கவார்சிலை, ஆர்தல், ஆர்நர், ஆர்பவை, நேர்மை, கூர்வாள் போர்யானை, நேர்ஞெகிழி, ஆர்ங்கோடு, எனவும், ஆழ்க, வீழ்சிலை, ஆழ்தல், ஆழ்நர், ஆழ்ப, கீழ்மை, வாழ்வு, வீழ்யானை, வாழ்ஞெண்டு, பாழ்ங்கிணறு எனவும், யரழ முன்னே க ச த ந ப ம வ ய ஞ ங என்னும் மொழிமுதன் மெய் பத்தும் மயங்குதல் காண்க.

*யகரத்தின் முன்னர் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கமாதலின் அதனை வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரங்களு ளொன்றாகிய*

*இச்சூத்திரத்திற் கூறியது யாது பற்றி?*

அதனை யொழித்து ஏனைய கொள்ளுதல் ஏற்புழிக்கோடல் என்னு முத்தியாதலின் அது பற்றியாம்.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ–ள்.: யரழமுன்னர்** – இந்த மூன்று மெய்களின் முன், **மொழிமுதன் மெய்வரும்** – மொழிக்கு முதலாமென வெடுத்துக் காட்டிய பத்துமெய்களும் வந்து மயங்கும், எ – **று.**

**உ–ம்.:–**

வேய், வேர், வீழ் என நிறுத்தி கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது என வருவித்து வேய் கடிது, வேய் சிறிது ,வேய்தீது, வேய்பெரிது, வேய்ஞான்றது, வேய்நீண்டது, வேய்மாண்டது, வேய்வலிது என ஒட்டிக் கொள்க.

மற்ற வேர் வீழ் என்பனவற்றோடு மிவ்வாறே யொட்டுக.

இனி ஙகரத்திற்கு வேய்ங்குழல் ஆர்ங்கோடு பாழ்ங்கிணறு எனக் காண்க.

சுருங்கச் சொல்ல லென்னும் அழகு பற்றி இவ்வாறு கூறினாராயினும் யகரத்தின் முன் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கமாதலால் அதனை யிங்கே விலக்குக.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– யரழ முன்னர்** – யரழ என்னும் மூன்று மெய்களின் முன், **மொழிமுதல்மெய்** – மொழிக்குமுதலாக நின்ற பத்துமெய்களும், **வரும்** – மயங்கும்.

**உ–ம் :–**

வேய்+கடிது = வேய்கடிது; வேய்சிறிது; வேய் தீது; வேய் நீண்டது; வேய் பெரிது; வேய் மாண்டது; வேய் வலிது; வேய்யாது; வேய் ஞான்றது என வரும் வேர், வீழ் என்பவற்றோடும் இவ்வாறே ஒட்டிக்காண்க.

குறிப்பு:-

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு என யரழ வொற்றின்முன், தன்மெய் மயங்குதல் "யரழவொற்று" என்னும் மேலைச் சூத்திரத்தாற் பெறப்படும். ஙகரம் "சுட்டியாவெகரவினா" என்ற சூத்திரப்படி பிறசொற்களுக்கு முதலாகாமையால், யரழவொற்றின் முன் வகரம் உயிர்மெய்யாய் வந்து மயங்குதற்கு உதாரணமில்லை. **சுருங்கச் சொல்லல்** என்னும் அழகு தோன்ற 'மொழிமுதன் மெய்வரும்' எனக் கூறியிருப்பினும் 'மெய்யன்' என **யகரத்தின் முன் யகரம்** மயங்குதலை இங்கு விலக்குக; அது உடனிலை மயக்கமாக மேற்கூறப்படலால்.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.:** ய ர ழ **முன்னர்** – ய ர ழ என்னு மூன்று மெய்களின் முன், **மொழி முதல் மெய் வரும்** – மொழிக்கு முதலாக நின்ற பத்துமெய்களும் மயங்கும், எ – று.

**உ – ம்.:–**

வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது; சிறிது, பெரிது, தீது, நீண்டது, மாண்டது, ஞான்றது, யாது, வலிது இவற்றையும், அம்மூன்றுடன் கூட்டுக. வேய்ங் குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு என வரும்.

**சுருங்கச் சொல்லல்** என்னும் அழகு பற்றி மொழிமுதன் மெய்யெனக் கூறலால், யகரத்தின் முன் யகர மயங்கும் உடனிலை இங்கே கொள்ளா தொழிக.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ–ள்.** ய ர ழ **முன்னர்** – ய ர ழ என்னு மூன்று மெய்களின் முன், **மொழிமுதல் மெய் வரும்** – மொழிக்கு முதலாக நின்ற பத்து மெய்களும் மயங்கும்.

சுருங்கச் சொல்லலென்னு மழகுபற்றி மொழிமுதன் மெய்வரும் என்று கூறியதினால் யகர வொற்றின் முன் யகரம் மயங்குகிற உடனிலை மயக்கமும்

இவ்வேற்று நிலை மயக்கத்துள்ளே அகப்பட்டுக் கொண்டது. ஆதலின், யகரத்தின் முன் யகர மயங்குதலை இவ்விடத்துக் கொள்ளாது விலக்கிவிடுக.

உ-ம்.:-

வேய்கடிது, வேய்சிறிது, வேய்ஞான்றது, வேய்தீது, வேய்நீண்டது, வேய்பெரிது, வேய்மாண்டது, வேய்வலிது, வேய்ங்குழல் எனவும். வேர் கடிது, வேர் சிறிது, வேர் ஞான்றது, வேர் தீது, வேர் நீண்டது, வேர் பெரிது, வேர் மாண்டது, வேர் யாது, வேர் வலிது, ஆர்ங்கோடு எனவும். வீழ்கடிது, வீழ்சிறிது, வீழ்ஞான்றது, வீழ்தீது, வீழ்நீண்டது, வீழ்பெரிது, வீழ் மாண்டது, வீழ்யாது, வீழ்வலிது, பாழ்ங்கிணறு, எனவும் வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

இ-ள்.:- **ய ர ழ முன்னர்** - இம் மூன்று மெய்களின் முன், **மொழிமுதல் மெய்** - மொழிக்கு முதலாமென்ற பத்து மெய்களும், **வரும்**-மயங்கும்; **எ-று.**

உ-ம்.:-

பொய்கை, கொய்சகம், எய்து, செய்நர், ஆய்பு, சேய்மை, ஆய்வு,-பாய்ஞெகிழி, சேர்க, வார்சிலை, ஓர்தும், சேர்நர், மார்பு, சீர்மை, ஆர்வம், போர்யானை, நேர்ஞெகிழி, மூழ்கி, வீழ்சிலை, வாழ்தல், வாழ்நன், சூழ்ப, கீழ்மை, வாழ்வு, வீழ்யானை,வாழ்ஞெண்டு.வேய்ங்குழல், ஆர்ங் கோடு, பாழ்ங்கிணறு என ய ர ழ வொற்றின் முன் ஙகரம் தனிமெய்யாய் மயங்குதல், மேல், "யரழ வொற்று" என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

கீழ் "சுட்டியா எகரவினா" என்னும் சூத்திரத்தால் ஙகரம் பிறமொழிகளுக்கு முதலாகாமை கூறப்பட்டதனால் இவற்றின் முன் ஙகரம் உயிர்மெய்யாக வந்து மயங்குதற்கு உதாரணம் இல்லை.

**சுருங்கச் சொல்லல்** என்னும் அழகுபற்றி 'மொழிமுதன்மெய்' எனக் கூறினாராயினும், வெய்யன் என யகரத்தின் முன் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கமாதலின், அதனை இங்கு விலக்குக; இது **ஏற்புழிக்கோடலென்னும்** உத்தியின் பாற்படும்.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:- ய ர ழ முன்னர்** - இம் மூன்று மெய்களின் முன். **மொழிமுதல் மெய்** - மொழிக்கு முதலாமென்ற பத்து மெய்களும். வேர் வலிது. ஆர்ங்கோடு எனவும். வீழ்கடிது. வீழ்சிறிது. வீழ்ஞான்றது. வீழ்தீது. வீழ்நீண்டது. வீழ்பெரிது. வீழ் மாண்டது. வீழ்யாது. வீழ்வலிது. பாழ்ங்கிணறு. எனவும் வரும்.

## கா. நமச்சிவாய முதலியார்

**ய ர ழ முன்னர்** – ய ர ழ என்னும் மூன்று மெய்களின் முன், **மொழி முதல் மெய்** – மொழிக்கு முதலாகநின்ற பத்து மெய்களும், **வரும்** – மயங்கும்.

**உதாரணம்:–**

| | | | | |
|---|---|---|---|---|
| வேய் கடிது | வேர் கடிது | வீழ் கடிது | – | ககரம் |
| வேய் சிறிது | வேர் சிறிது | வீழ் சிறிது | – | சகரம் |
| வேய் தீது | வேர் தீது | வீழ் தீது | – | தகரம் |
| வேய் நீண்டது | வேர் நீண்டது | வீழ் நீண்டது | – | நகரம் |
| வேய் பெரிது | வேர் பெரிது | வீழ் பெரிது | – | பகரம் |
| வேய் மாண்டது | வேர் மாண்டது | வீழ் மாண்டது | – | மகரம் |
| வேய் வலிது | வேர் வலிது | வீழ் வலிது | – | வகரம் |
| பொய் யாது | வேர் யாது | வீழ் யாது | – | யகரம் |
| வேய் ஞான்றது | வேர் ஞான்றது | வீழ் ஞான்றது | – | ஞகரம் |

**'மொழி முதல் மெய்'** எனக் கூறினாரேனும், ஈண்டு ஏற்புழிக் கோடல் என்னும் உத்தியால், 'சுட்டி யா எகர வினாவை ஒட்டி' (சூ. 106) யன்றி முதலாகாத ஙகர முதன்மொழியை நீக்குக.

**சுருங்கச் சொல்லல்** என்னும் அழகுபற்றி இவ்வாறு கூறினாராயினும், யகரத்தின் முன் யகரம் மயங்குதல் உடனிலை மயக்க மாதல் காண்க.

## மோசசு பொன்னையா

ர்ழ் அல்லன ஞு க்க் ஞு, ஞு ங்ங் ஞு எனவிவ்வாறு தம்மொடு தாம் கூடிநிற்கும் தன்மைய, எ—று.

யர்ழ் என்னும் மூன்று மெய்களின்முன் க்ச்த்ப்ங்ஞ்ந்ம் என்னும் எட்டு மெய்களும் ஈரொற்றாகும். ர்ழ் என்பன தனிக்குறிலை அணைந்து நிற்பதில்லை. எனவே, ஓர் அல்லது ஒரு, பெரு அல்லது பேர், ஏழ் அல்லது எழு எனவிவ்வாறு உகரம் பெற்று அல்லது முதல் நீண்டே வரும், எ—று.

எ—டு.

ய் – வேய்க்குறை, வேய்ச்சிறை, வேய்த்தலை, வேய்ப்புறம், வேய்ங்குழல், காய்ந்தனம்.

ர் – வேர்க்குறை, வேர்ச்சிறை, வேர்த்தலை, வேர்ப்புறம், ஆர்ங்கோடு. நேர்ந்தனம்.

ழ் – வீழ்க்குறை, வீழ்ச்சிறை, வீழ்த்தலை, வீழ்ப்புறம், பாழ்ங்கிணறு, வாழ்ந்தனம்.

(61)

## 116. லளமுன் கசப வயவொன் றும்மே

**லளமுன் கசப வயவொன் றும்மே**

la<u>l</u>amu<u>n</u> kasapa vayavo<u>n</u> ṛummē

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

L and 1 may be followed by k,c,p,v, and y.

## ஒப்புமைப் பகுதி

டறலள என்னும் புள்ளி முன்னர்
கசப என்னும் மூவெழுத் துரிய

(தொல். : 23)

அவற்றுள்
லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்

(தொல். : 24)

லள முனர்க் கசபவய வரு மென்ப

(மு. வீ. : 74)

..... லள முன்
பகசவய வாம்....

(சுவாமி. : 22 : 2)

## மயிலை நாதர்

எ–ன், லகர ளகர மெய்ம்மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இவ்விரண்டு மெய்ம் முன்னரும் க ச ப வ ய வென்னும் ஐந்து மெய்யும் மயங்கும், எ – று.

வ – று.:

(வேல், வாள்) + (கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது) என வரும். மெய்ம்மயக்கம் முற்றும்.

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், இதுவும் அது.

இ – ள்.: இவ் விரண்டு மெய்முன்னரும், க ச ப வ ய என்னும் ஐந்து மெய்யும் மயங்கும், எ – று.

உ – ம்.:

வேல், வாள்: கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது என வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், லகார ளகார மெய்மயக்கம் கூறியது.

**இ—ள்.: ல ள முன்** – லகார ளகார மெய் முன்னர், **க ச ப வ ய ஒன்றும்மே** – க ச ப வ ய என்னும் ஐந்து மெய்யும் மயங்கும், எ—று.

**உ—ம்.:**

செல்க, வல்சி, செல்ப, செல்வம், கொல்யானை எனவும்;
கொள்க, நீள்சினை, கொள்ப, கள்வன், வெள்யாறு எனவும்
வரும்.

## விசாகப்பெருமாளையர்

இதுவுமது.

**இ—ள்.: ளமுன்** – லகர ளகரங்களின் முன், **கசப வய** – ககர முதலிய விவ் வைந்தும், **ஒன்றும்** – மயங்கும், எ—று.

**உ—ம்.:–**

வேல்கடிது, வாள்கடிது; சிறிது, பெரிது, வலிது, யாது
இவற்றையுங் கூட்டுக.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*ல ள முன் தாமே யன்றி வேறெம்மெய்கள் மயங்கும்?*

ல ள முன் கசப வயவொன்றும்மே.

(ல ள முன் க ச ப வ ய ஒன்றும் ஏ)

**இ—ள்.: ல ள முன்** – லகர ளகரங்களின் முன், **க ச ப வ ய ஒன்றும்** – நகர முதலிய விவ்வைந்தும் மயங்கும், எ—று.

**உ—ம்.:–**

செல்க, வல்சி, செல்ப, செல்வம், கொல்யானை, கொள்க,
நீள்சிலை, கொள்ப, கள்வன், வெள்யானை, எனவரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

இதுவுமது.

**இ—ள்.: லளமுன்** – இவ் விரண்டின் முன், **கசபவய ஒன்றும்**–இந்த ஐந்து ஒற்றுக்களும் வந்து மயங்கும், **எ—று.**

**உ—ம்.:—**

வேல், வாள் என நிறுத்தி கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது என வருவித்து முன்போல ஒட்டிக் காண்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– லளமுன்** – லகர ளகரங்களின்முன், **கசபவய** – ககரமுதலிய இவ்வைந்தும், **ஒன்றும்** – மயங்கும்.

**உ—ம் :—**

வேல் + கடிது = வேல்கடிது; வேல்சிறிது; வேல்பெரிது; வேல்வலிது; வேல்யாது எனவரும். வாள் என்பதனோடும் இவ்வாறே கூட்டுக.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: லளமுன் க ச ப வ ய ஒன்றும்** – லகர ளகரங்களின் முன் ககர முதலிய வில்வைந்தும் மயங்கும், **எ – று.**

**உ—ம்.:—**

வேல்கடிது, வாள்கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது இவற்றையுங் கூட்டுக.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். லளமுன் க ச ப வ ய ஒன்றும்** – லகமெய்யின் முன்னும், ளகர மெய்யின்முன்னும் க ச ப வ ய என்னுமிவ்வைந்தும் மயங்கும். **எ—று.**

உ–ம்.:–வேல்கடிது, வேல்சிறிது, வேல்பெரிது, வேல்வலிது, வேல்யாது எனவும்,. வாள்கடிது, வாள்சிறிது, வாள் பெரிது,வாள் வலிது,வாள்யாது எனவும் வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.:** **ல ள முன்** – லகர ளகர மெய்களின் முன், **க ச ப வ ய** – இவ்வைந்து மெய்களும், **ஒன்றும்** – மயங்கும்; **எ–று**

**உ–ம்.:–**

நல்கி, வல்சி, சால்பு, செல்வம், கல்யாணம், வெள்கி, நீள் சிலை, கொள்ப, கேள்வி, வெள்யானை.

## கா. நமச்சிவாய முதலியார்

**ல ள மு ன்** – லகர ளகரங்களின் முன், **க ச ப வ ய** – க ச ப வ ய ஆகிய இவ்வைந்தும், **ஒன்றும்** – மயங்கும்.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| வேல் கடிது | வாள் கடிது | – | ககரம் |
| வேல் சிறிது | வாள் சிறிது | – | சகரம் |
| வேல் பெரிது | வாள் பெரிது | – | பகரம் |
| வேல் வலிது | வாள் வலிது | – | வகரம் |
| வேல் யாது | வாள் யாது | – | யகரம் |

## பவானந்தம் பிள்ளை

**இ – ள். ல ள முன் கசதபவய ஒன்றும்** – லகர ளகரங்களின் முன் ககர முதலிய விவ்வைந்தும் மயங்கும், **எ –று.**

**உ – ம்.**

பல்கு, வல்சி, சால்பு, வெள்கு, வாள்சிறிது, வாள்பெரிது.

**மோசசு பொன்னையா**

லள என்னும் மெய்கள் செய்யுளில் திரிந்து முறையே னண வாக நிற்க, அவற்றின் முன்னர் வரும் மகரம் குறுகி அவற்றுடன், ஈரொற்றாகக் கூடி நிற்கும், எ—று.

எ—டு.:— **திசையறி மீகாமனும் போன்ம்,**

மயிலியன் மாதர் மருண்ம்.

இவ்வாறு வரும் னகர ணகரங்கள் அசைநிலை பெற்று அடுத்து வரும் மகர ஒற்றைத் தழுவலால் அதன் ஒலிநிலை மயங்குகின்றது. அதனை இவ்வாசிரியர் மகரக்குறுக்கம் என்றார்.

**(65)**

## 117. ரழவல்லன தம்முற் றாமுட னிலையும்

**ர ழ அல்லன தம் முன் தாம் உடன் நிலையும்**

ra ḷa allaṉa ṭam muṉ ṭām utaṉ nilaiyum

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

**Special rule for Doubling**

All consonants, except r and l, may be doubled.

**ஒப்புமைப் பகுதி**

**மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்**
**தம்முன் தாம் வரூஉம் ரழ அலங்கடையே**

**(தொல். : 30)**

ஏழ வல்லன வுடனிலை யென மொழிப

(மு. வீ. : 78)

..... ஏழ நீத்து
இந்திரண்டெட்டு உடநிலையாம்.....

(சுவாமி. : 21 : 4)

## மயிலை நாதர்

எ – ன், உடனிலை மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: ரகர ழகர மொழித்து ஒழிந்த பதினாறு மெய்யும் தம்முன்னர்த் தாம் வந்து [1]மயங்கும், எ – று.

வ–று.:

அருக்கன், அங்ஙனம், அச்சு, மஞ்ஞை, மட்டை, மண்ணை, வித்து, வெந்நெய், அப்பி, அம்மி, அய்யர், அல்லி, அவ்வை, கள்ளி, கற்றை, கன்னி என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், உடனிலை மெய்ம் மயக்கத்தின் சிறப்புவிதி உணர்–ற்று.

இ–ள்.: ரகார ழகாரமல்லனவாகிய வேற்றுநிலை மெய்ம் மயக்கத்துள் கூறிய பன்னிரண்டு மெய்யும், உடனிலைக்கே யுரிய க ச த ப நான்கும் தம் முன் தாம் உடனின்று மயங்கும், எ – று.

உ – ம்.:–

அங்ஙனம், அவ்வை, அஞ்ஞானம், அந்நீர், அட்டு, அற்றம், அண்ணம், அன்னை, அம்மை, அய்யம், அல்லி, அள்ளல் எனவும்; அக்கு, அச்சு, அத்து, அப்பு எனவும் வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உடனிலை மயக்கம் ஆமாறு கூறியது.

---

பாட வேறுபாடு .: 1. மயங்குவது உடனிலை மயக்கமாம்

**இ—ள்.: ஏழ அல்லன** – ரகார ழகாரம் ஒழித்து ஒழிந்த மெய் பதினாறும், **றம்முற் றாமுடனிலையும்** – தம் முன்னர்த் தாம் வந்து ஒன்றுவது உடனிலை மயக்கமாம், **எ—று.**

**உ—ம்.:—**

பக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், திட்டம்,
திண்ணை, அத்தம், வெந்நீர், தப்பு, அம்மி, அய்யர், வெல்ல,
கவ்வை, கள்ளு, குற்றம், அன்னம் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** உடனிலை மயக்கத்தின் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

**இ—ள்.: ரழ வல்லன** – ரகர ழகர மல்லாத பதினாறு மெய்களும், **தம்முன்**—தமக்கு முன், **தாம்** – தாம், **உடனிலையும்** – உடனின்று மயங்கும், **எ — று.**

**உ—ம்.:—**

அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், அட்டு,
அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யம், அல்லி,
அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*உடனிலை மெய்ம்மயக்கச் சிறப்புவிதி கூறுஞ் சூத்திரம்யாது?*

ரழ வல்லன தம்முற்றாமுட னிலையும்.

(ரழ அல்லன தம்முன் தாம் உடன் நிலையும்)

**இ—ள்.:— ர ழ அல்லன** – ரகர ழகரமல்லாத பதினாறு மெய்களும், **தம் முன் தாம் உடன் நிலையும்** – தமக்குமுன் தாம் உடனின்று மயங்கும், **எ—று.**

**உ—ம்.:—**

அக்கம், அங்ஙனம், அச்சம், இஞ்ஞானம், அட்டு,
அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யம், அல்லி,
அவ்வை, அல்லல், அற்றம், அன்னை என வரும்.

## முக்வை இராமானுசக் கவிராயர்

இது, உடனிலை மயக்கத்திற்குச் சிறப்புவிதி கூறுகின்றது.

**இ—ள்.:— ரழஅல்லன—**இந்த இரண்டும் அல்லாத பதினாறு மெய்களும், **தம்முற்றாமுடனிலையும் —** தம்முன் தாமே வந்து உடனின்று மயங்கும், **எ — று.**

**உ—ம்.:—**

அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞை, அட்டை, அண்ணை, அத்தை, அந்நிலம், அப்பம் , அம்மை, அய்யன், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை என வரும்.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

*உரை :- ரழ அல்லன - ரகர ழகரமல்லாத மற்றைப் பதினாறுமெய்களும், தம்முன் தாம் - தமக்குமுன் தாம், உடன்நிலையும் - உடன் நின்று மயங்கும்.*

*உ-ம் :-*

*அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யன், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை என வரும்.*

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.:— ர ழ அல்லன தம்முன் தாம் உடன் நிலையும் —** ரகர ழகர மல்லாத பதினாறு மெய்களுந் தமக்குமுன் தாம் உடனின்று மயங்கும், **எ — று.**

**உ—ம்.:—**

அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை என வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள்.:— ர ழ அல்லன** — ரகர ழகர மல்லாத பதினாறுமெய்களும், — **தம்முன் தாம் உடனிலையும்** — தமக்கு முன் தாம் உடனின்று மயங்கும். **எ—று.**

அந்த அந்த மெய்க்குமுன்னே அந்த அந்தமெய் இணங்கிநிற்கும் என்றறிக.

**உ—ம்.:—**

அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், பட்டம், அண்ணம், அத்தம், அந்நீர், வெப்பம், அம்மை, வெய்யர், வல்லி, தெவ்வர், வள்ளல், அற்றம், புன்னை. 'க ச த ப வொழித்த' என்னுஞ் சூத்திரத்தில், 'உடனிலைரழ–வொழித்தீரெட்டாகும்' என்றதினால் உடனிலை மெய்ம்மயக்கங் கூறப்பட்டதே பின்னுமிச் சூத்திரத்தாற் கூறிய தென்னை யெனின்; அங்கே உடனிலை மெய்ம் மயக்கத்திற் குரிய எழுத்துகளிவை யென்றார். உடனிலை மயக்கமாவது தனக்கு முன் தான் மயங்குதல் என்னு மிலக்கணம் ஈண்டே விளக்கினரென்றறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.:— ர ழ அல்லன** — ரகர ழகர மல்லாத மற்றைப் பதினாறு மெய்களும், **தம்முன் தாம்** — தமக்கு முன் தாமே வந்து, **உடன் நிலையும்** — உடன் நின்று மயங்கும், **எ—று.** மேல் 'உடனிலை ரழவொழித்து ஈரெட்டாகும்' என்றதன் விவரணம் இது. உடனிலை மயக்கமாவது — தனக்கு முன் தான் மயங்குதல் என்ற இலக்கணம் இங்கு விளக்கப்பட்டது.

**உ—ம்.:—**

சுக்கு, அங்ஙனம், அச்சம், மஞ்ஞை, பட்டு, திண்ணம், பத்து, வெந்நீர், அப்பன், அம்மை, மெய்யன், அல்லி, தெவ்வர், பள்ளம், காற்று, அன்னை.

## பவானந்தம் பிள்ளை

**இ — ள்.ர ழ அல்லன தம் முன் தாம் உடன்நிலையும்** — ரகர ழகர மல்லாத பதினாறு மெய்களும் தமக்கு முன் தாம் உடனின்று மயங்கும், **எ— று.**

உ – ம் :-அக்கம், அங்ஙனம்,அச்சம்,அஞ்ஞானம்,அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்வன.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– ர ழ அல்லன** – ரகர ழகரங்கள் அல்லாத மற்றைப் பதினாறு மெய்களும், **தம்முன் தாம்** – தமக்குமுன் தாம், **உடன் நிலையும்** – உடன் நின்று மயங்கும். **எ–று.**

**பொ–ரை.:–**

ரகர ழகரங்கள் அல்லாத மற்றைப் பதினாறு மெய்களும் தமக்கு முன் தாம் வந்து உடன் நின்று மயங்கும்.

**உ–ம்.:–**

அக்கம் – க,அத்து – த, அவ்வை –வ, அங்ஙனம் –ங. அந்நீர் –ந,அள்ளல் –ள, அச்சம் – ச,அப்பு –ப,அற்றம் – ற, அஞ்ஞானம் –ஞ, அம்மை–ம, அன்னை–ன,அட்டு – ட, அய்யம் – ய, அண்ணம் –ண, அல்லி –ல.

## கா. நமச்சிவாய முதலியார்

**ர ழ அல்லன** – ரகர ழகரம் அல்லாத மற்றைப் பதினாறு மெய்களும், **தம் முன் தாம்** – தமக்கு முன் தாம், **உடன் நிலையும்** – உடனின்று மயங்கும்.

**உதாரணம்**

அக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞான்று, அட்டு, அண்ணம், அத்து, அந்நீர், அப்பு, அம்மை, அய்யம், அல்லி, அவ்வை, அள்ளல், அற்றம், அன்னை என வரும்.

## மோசசு பொன்னையா

எழுத்துக்களின் பெயர்களைச் சொல்லிக் குறிப்பிடுங்கால் முதனிலை, இடைநிலை இறுதிநிலைகளில் விலக்கப்பட்ட எழுத்துக்களும் முதலாகவும், இறுதியாகவும், இடைமயங்கியும் வரும், **எ–று.**

எ—டு. :-அவற்றுள், லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.லகரம் முதலாயிற்று – கூன் சீர்ஈற்று ளகரத்தோடு

லகரம் மயங்கிற்று. கெப் பெரிது – எகரம் மெய்யோடுகூடி ஈறாய் வந்தது.

(66)

## 118. யரழவொற் றின்முன் கசதப ஙஞநம ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா

யரழ ஒற்றின் முன் க ச த ப ங ஞ ந ம
ஈர் ஒற்று ஆம் ர ழத் தனிக் குறில் அணையா

ya ra ḻa oṟṟiṉ muṉ ka sa ṭa pa ṅa ña na ma
īr oṟṟu ām ra ḻaṭ ṭaṉik kuṟil aṇaiyā

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Coalescing of two mute consonant**

**Consonant usual cannot coalesce**

When y, r and l are followed by k,c,t,p,n,ñ,n,m and there will also be coalescing of two mute consonants; r and l however cannot coalesce with a single Short vowel (in the middle of a word).

### ஒப்புமைப் பகுதி

யரழ என்னும் மூன்றும் முன்னொற்ற
கச தப ஙஞநம ஈர் ஒன்று ஆகும்

(தொல். : 48)

அவற்றுள்
ரகார ழகாரம் குற்றொற்று ஆகா

(தொல். : 49)

யரழ முன் கசதப ஙஞநம ஈரொற்றியல்பே

(சுவாமி : 21 : 4)

## மயிலை நாதர்

**எ—ன்,** ஈரொற்றுடனிலை யாமாறும் [1]தனிக்குறிற் கீழ் ஒற்றாகாதனவும் உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** யரழ வென்னும் மூன்று மெய்ம்முன்னும் க ச த ப ங ஞ ந ம வென்னும் இவ் வெட்டொற்றும் வந்து ஈரொற்றுடனிலையாய் நிற்கும். எவ்விடத்தும் தனிக் குறின் முன்னர் ரகர ழகரங்கள் வந்து ஒற்றாய் நில்லா, எ — று.

வ — று.:

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை; சிறை, தலை, புறம் எனவும், வேய்ங்குறை, வேர்ங்குறை, வீழ்ங்குறை; சிறை, தலை, புறம் எனவும் கசதப ஙஞநமக்கள் ஈரொற்றாய் வந்தவாறு காண்க. ஆகாதனவற்றிற்கு யாண்டும் காட்டாவன இல்லை யெனக் கொள்க.

## சங்கரநமச்சிவாயர்

**எ-னின்.** தனிமெய்யுடன் தனிமெய்யாயும் மயங்குவன இனைய என்பதூஉம். மொழிக்கு உறுப்பாக மயங்காதன இனைய என்பதூஉம் **உணர் - ற்று.**

**இ-ள்.:** யரழ என்னும் மூன்று ஒற்றும் இவற்றின் முன் மயங்குமென விதித்த பத்தொற்றுள் இங்ஙனம் கூறிய எட்டு ஒற்றும் தனிமெய்யும் உயிரூர்ந்த மெய்யுமாய் மயங்குவன வன்றி. ஈரொற்றாயும் மயங்குவனவாம்; ரகார ழகார ஒற்றும். தனிக்குறிலும் மயங்குந் தன்மைய வாயினும் மொழிக்கு உறுப்பாக வருவதும் நிற்பதுமாய் மயங்கா. **எ-று.**

---

பாட வேறுபாடு.:

1. ரகார ழகாரங்கள் தனிக்குறிற் கீழ் ஒற்றாகா தெனவும்

ஈரொற்றுமாம் என்னும் உம்மையும் மொழிக்கு உறுப்பாக என்னும் சொற்களும் எஞ்சி நின்றன.

**உ-ம்.:-**

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை; சிறை, தலை, புறம் எனவும்; வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு எனவும், காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம் எனவும் வரும். ஏனைய வந்துழிக் காண்க.

அணையா என்ற ஆகாதனவற்றிற்கு உதாரணம் காட்டலாகாமை உணர்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்,** ஈரொற்றாகும் உடனிலை மயக்கம் ஆமாறும் தனிக்குறிற் கீழ் ஒற்று வாராதெனவும் உரைத்தது.

**இ-ள்.:-** **ய ர ழ ஒற்றின் முன்** - ய ர ழ என்னும் இம் மூன்று மெய் முன்னும், **க ச த ப ங ஞ ந ம** - க ச த ப ங ஞ ந ம என்னும் இவ் வெட்டு ஒற்றுங் கூடி, **ஈரொற்றாம்** - ஈரொற்று உடனிலை மயக்கமாம், **ர ழ** - ரகார ழகாரம் என்னும் இவ் விரண்டு மெய்யும், **தனிக்குறில் அணையா**-தனிக்குறிற் கீழ் வந்து ஒற்றாய் நில்லாது, **எ-று.**

**உ-ம்.:-**

வேய்க்குறை, வேய்ச்சிறை, வேய்த்தல், வேய்ப்புறம், வேய்ங்குறை, வேய்ஞ்சிறை, வேய்ந்தல், வேய்ம்புறம் என வரும். வேர் வீழ் என்பவற்றிற்கும் இவ்வாறொட்டி க ச த ப ங ஞ ந ம க்கள் ஈரொற்றாய் வந்தன காண்க. ஆகாதன வற்றிற்கு யாண்டும் காட்ட வராவென்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** தனிமெய்யுடனே தனிமெய்யாகியும் மயங்கு மெய்கள் இத்தனை யென்றும், சொல்லுக்கு உறுப்பாக மயங்காத வெழுத்துகள் இத்தனை யென்றும், உணர்த்துகின்றது.

**இ-ள்.:-** **யரழ** - யரழ வென்கிற மூன்று மெய்களும், **முன்** - இவற்றின் முன்மயங்கு மென்ற, **ஒற்றில்** - பத்துமெய்களுள், **க ச த ப ங ஞ ந ம** - க க ர

முதலாகிய விவ்வெட்டு மெய்களும், ஈரொற்றாம் தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி மயங்குதலன்றியும் ஈரொற்றாயு மயங்கும், **ரழ** – ரகார ழகார மெய்களும், **தனிக்குறில்** – தனிக் குற்றெழுத்தும், **அணையா** – சொல்லுக்கு உறுப்பாக வருவதும் நிற்பதுமாக மயங்குவன வல்ல, **எ – று.**

**உ–ம்.:–**

வேய்க்குறை வேர்க்குறை வீழ்க்குறை எனவும்,

வேய்ச் சிறை வேர்ச்சிறை வீழ்ச்சிறை–எனவும்,
வேய்த்தலை–வேர்த்தலை, வீழ்த்தலை எனவும்,

வேய்ப்புறம் வேர்ப்புறம் வீழ்ப்புறம் – எனவும்,
வேய்ங்குழல் ஆர்ங்கோடு பாழ்ங்கிணறு–எனவும்,

காய்ந்தனம் நேர்ந்தனம் வாழ்ந்தனம் எனவும், மெய்ம்மயிர்,
மெய்ஞ்ஞானம் எனவும் வரும்.

ஞகர மகரங்கள் ரகர ழகரங்களோடு கூடி மயங்குதற்கு உதாரணம் வந்தவிடத்திலே காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

முன்னே "க ச த ப வொழித்த" வென்னுஞ் சூத்திரத்திலே, "உடனிலை ரழவொழிந் தீரெட்டாகும்" என உடனிலை மயக்கங் கூறி மீண்டும் அதனையே இங்கே கூறியது யாது பற்றி?

இன்னது இதுவென்று பொதுவிலக்கணங் கூறுமுகத்தால் ஆண்டுக் கூறி, அஃதிவ்வாறு வருமென ஈண்டுச் சிறப்பிலக் கணம் கூறுமுகத்தால் மீட்டுங் கூறினார்.

தம்மொடு தாம் மயங்காத வெழுத்துக்கள் யாவை?

"ர ழ"

ஈரொற்று உடனிலையா மிடமும், நியதியின்றி மயங்குவனவற்றுட் சிலவற்றிற்கு வரையறையுங் கூறுஞ் சூத்திரம் யாது?

யரழவொற் றின்முன் க்சதப ஙஞநம

ஈரொற் றாம்ரழத் தனிக்குறிலணையா

(யரழ வொற்றின்முன் க ச த ப ங ஞ ந ம ஈரொற்று ஆம்; ர ழ தனிக்குறில் அணையா)

**இ—ள்.: ய ர ழ ஒற்றின்முன்** – ய ர ழ என்னு மூன்று மெய்களின் முன்னரும், **க ச த ப ங ஞ நம ஈர் ஒற்று ஆம்** – க ச த ப ங ஞ ந ம என்னும் எட்டு மெய்களும் வந்து ஈரொற்றுடனிலையாம், ர ழ **தனிக்குறில் அணையா** – ரகார ழகார மெய்கள் தனிக்குறிற்கீழ் ஒற்றாக மயங்கா, **எ—று.**

**உ—ம்.:—**

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை எனவும்,

வேய்ச்சிறை, வேர்ச்சிறை, வீழ்ச்சிறை எனவும்,

வேய்த்தலை, வேர்த்தலை, வீழ்த்தலை எனவும்,

வேய்ப்புறம், வேர்ப்புறம், வீழ்ப்புறம் எனவும்,

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு எனவும்,

தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை எனவும்,

காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம் எனவும்,

வேய்ப்புறம், ஈர்ப்பனை, பாழ்ம்பதி எனவும் வரும்.

எந்தமெய்களின் முன் எந்தமெய்கள் ஈரொற்றாயும் மயங்கும்?

"ய ர ழவொற் றின்முன் கசதப ஙஞநம வீரொற்றாம்"

எந்த்மெய்கள் தனிக்குறின் முன்னர் ஒற்றாக மயங்கா?

"ரழத் தனிக்குறி லணையா"

ரழத்தனிக்குறி லணையாவெனவே இணைக்குறின் முன்னும் நெடின் முன்னும் வருமென்பதும், தனிக்குறின் முன்னே உயிர்மெய்யாய் வருமென்பதும் பெறப்படும்.

**உ—ம்.:—**

புகர், புகழ், நேர், கேழ், கரு, கழு என வரும்.

இச்சூத்திரத்திலே க ங ச ஞ த ந ப ம வென முறையிற் கூறாததென்னை?

க ச த பக்கள் ய ர ழ முன்னே, தம்மொடு தாமே மயங்கி யீரொற்றுடனிலையாமென்பதும், ங ஞ நமக்கள் தம்மினத்தோடு தாம் மயங்கி யீரொற்றுடனிலையாமென்பதுங் கொள்ள அங்ஙனங் கூறினார்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** தனிமெய்யுடன் தனி மெய்யாய் மயங்குவன இவையென்பதும், மொழிக்கு உறுப்பாக மயங்காதன இவை யென்பது முணர்த்துகின்றது.

**இ-ள்.: யரழ ஒற்றின்முன்** – இந்தமூன்று மெய்களின் முன், **க ச த ப ங ஞ ந ம** – இந்த எட்டு ஒற்றுக்களும், (தனிமெய்யும் உயிரேறிய மெய்யுமாக மயங்குதலும் அல்லாமல்) **ஈரொற்றாம்** – இரண்டு ஒற்றாகவும் மயங்கி நிற்கும், **ர ழ** – (உயிர்மெய் மயக்கத்துள்) இந்த இரண்டு மெய்களும், **தனிக் குறிலணையா** – (மொழிக்கு அவயவமாக) தனித்த குற்றெழுத்தைச் சேர்ந்து இணங்காவாம், **எ – று.**

ஈரொற்றுமாம் என்னும் உம்மையிடைச் சொல்லும், மொழிக்கு அவயவமாக என்னுஞ் சொற்களுங் குறைந்து நின்றன.

**உ–ம்.:–**

வேய் வேர் வீழ் என நிறுத்தி குறை சிறை தலை புறம் என வருவித்து, வேய்க்குறை, வேய்ச்சிறை, வேய்த்தலை, வேய்ப்புறம் என ஒட்டிக் க ச த பக்கள் ஈரொற்றாய் நின்றன எனவும், இவ்வாறு வேர் வீழ் என்பனவற்றோடு மொட்டுக.

வேய்ங்குழல் ஆர்ங்கோடு பாழ்ங்கிணறு எனவும்,

தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்கனை எனவும்

காய்ந்தது, நேர்ந்தது, வாழ்ந்தது எனவும்,

வேய்ம்புறம், ஈர்ம்பணை, பாழ்ம்பதி, எனவும்,

முறையே ங ஞ ந மக்கள் ஈரொற்றாய் நின்றன வெனவுங் காண்க.

அணையாவென்ற ரழக்களுக்கு உதாரணங் காட்டலாகாமை யுணர்க.

இனி **உரையிற்கோடலென்னும்** உத்தியால் ரகர வொற்றுத் தனிக்குறிலைச் சேர்ந்து மொழிக்கு உறுப்பாகி விகுதி யிடைச்சொல்லாய் வருமெனக் கொள்க.

**உ–ம்.:–**

வந்தனர், வாழ்ந்தனர் எனக் காண்க.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :— யரழவொற்றின் முன்** – யகரம் முதலிய இம்மூன்று மெய்களின்முன், **க ச த ப ங ஞ ந ம** – ககரம் முதலிய இவ்வெட்டு ஒற்றுக்களும் (தனிமெய்யும் உயிரேறிய மெய்யுமாக மயங்குதலும் அல்லாமல்) **ஈரொற்றாம்** – இரண்டு ஒற்றாகவும் மயங்கிநிற்கும்; **ரழ** – (உயிர்மெய்மயக்கத்துள்) ரகர ழகரங்களாகிய இரண்டுமெய்களும், **தனிக்குறிலணையா** – (மொழிக்கு தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்து இணங்காவாம்).

**உதாரணம்**

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை
வேய்ச்சிறை, வேர்ச்சிறை, வீழ்ச்சிறை

வேய்த்தலை, வேர்த்தலை, வீழ்த்தலை

வேய்ப்புறம், வேர்ப்புறம், வீழ்ப்புறம்

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு

தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை

காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம்

வேய்ப்புறம், ஈர்ப்பனை, பாழ்ம்பதி எனவும் வரும்.

**குறிப்பு :—** 'அணையா' என்ற ரழக்களுக்கு உதாரணங்கள் கிடையா. இனி, **உரையிற்கோடல்** என்னும் உத்தியால் ரகர ஒற்று தனிக்குறிலைச் சேர்ந்து மொழிக்கு உறுப்பாகி 'அர்' என விகுதியிடைச் சொல்லில் வருமெனக் கொள்க.

**உ – ம்.:—** செய்தனர்.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: ய ர ழ முன் ஒற்றின் க ச த ப ங ஞ ந ம** – ய ர ழ என்னும் மூன்று மெய்களும் இவற்றின் முன் மயங்குமென்ற பத்து மெய்களுட் ககர முதலாகிய இவ்வெட்டு மெய்களும், **ஈரொற்று ஆம்** – தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி மயங்குதலன்றியும் ஈரொற்றாயும் மயங்கும், **ர ழத் தனிக் குறில் அணையா** – ரகார ழகார மெய்கள் தனிக்குறிற் கீழொற்றாக மயங்கா, எ – று.

**உ – ம்.:**

வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை, எனவும்.
வேய்ச்சிறை, வேர்ச்சிறை, வீழ்ச்சிறை, எனவும்.

வேய்த்தலை, வேர்த்தலை, வீழ்த்தலை, எனவும். வேய்ப்புறம், வேர்ப்புறம், வீழ்ப்புறம். எனவும். வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு. எனவும். தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை. எனவும். காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம். எனவும். வேய்ம்புறம், ஈர்ம்பணை, பாழ்ம்பதி எனவும் வரும்.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ—ள். ய ர ழ ஒற்றின்முன் —** ய ர ழ என்னும் மூன்று மெய்களின் முன்னும், **க ச த ப ங ஞ ந ம —** இவ்வெட்டு மெய்களும், **ஈரொற்று ஆம் —** (தனிமெய்யும் உயிரேறிய மெய்யுமாக மயங்குதலுமல்லாமல்) இரண்டு ஒற்றாகவும் மயங்கி நிற்கும், **ர ழ —** (உயிர்மெய்மயக்கத்துள்) ரகர வொற்றும் ழகர வொற்றும், **தனிக்குறில் அணையா —** (மொழிக்கு அங்கமாக) தனித்த குற்றெழுத்தின் பின்வந்து மயங்கா. **எ—று.**

**உ—ம்.**

வேய்க்குறை, வேய்ச்சிறை, வேய்த்தலை, வேய்ப் புறம், வேய்ங்குழல், தேய்ஞ்சது, காய்ந் தது, வேய்ம் புறம் எனவும். வேர்க்குறை, வேர்ச்சிறை, வேர்த்தலை, வேர்ப்புறம், சார்ங்கம், ஈர்ஞ்சுனை, நேர்ந்தனம், கூர்ம்பகழி. எனவும். வீழ்க்குறை, வீழ்ச்சிறை, வீழ்த்தலை, வீழ்ப்புறம், பாழ்ங்கிணறு, பாழ்ஞ்சுனை, வாழ்ந்தனம், பாழ்ம்பதி எனவும் வரும்.

வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது என்பவற்றில் முறையே யகர மெய்யும் ககரவுயிர் மெய்யிலிருக்கிற ககரமெய்யுமாகவும், ரகரமெய்யும் ககர வுயிர்மெய் யிலிருக்கிற ககர மெய்யுமாகவும், ழகர மெய்யும் ககர வுயிர்மெய்யிலிருக்கிற ககர மெய்யுமாகவும் மயங்கினமை போலன்றி வேய்க்குறை என்பதில் யகர மெய்யும் ககர மெய்யும் ஆகிய இரண்டுடனே இவற்றின் பின் மூன்றாவதாக குகர வுயிர்மெய்யி லிருக்கிற ககர மெய்யும் மயங்கின. இரண்டு தனிமெய்களும் ஒரு உயிர்மெய்யுமாக மயங்கின என்றவாறாம்.

இப்படியே மற்றவைகளையு நோக்கி ஈரொற்றாய் மயங்கினமை யறிக.

ஈரொற்றுமாம் என உம்மை கொடாது சூத்திரித்தார் ய ர ழ என்னு மூன்று மெய்களின் முன்னும் ஙகரம்

ஈரொற்றாயன்றி ஓரொற்று முயிர்மெய்யுமாக மயங்குதலின்மையின் அதற்கும் பொருத்தமாதற் பொருட்டு.

ஈரொற்றாம் என்பது இறந்தததுதழீஇய எச்சவும்மை தொக்க தெனக் கொள்ளின் ஏற்புழிக்கோடலால் ஓரொற்று முயிர்மெய்யு மாய் மயங்காதனவற்றை விலக்கி ஏனையவற்றைக் கொள்க.

ரகரமெய்யும் ழகரமெய்யுந் தனிக் குற்றெழுத்தின் பின் வரப்பெற்ற மொழிகள் தமிழிலில்லாமையால் ர ழத் தனிக்குறி லணையா என்றார் என்றது, 'உயிர்மெய் மயக்களவின்றே' என்று முற்கூறப்பட்ட உயிர்மெய் மயக்கத் திற்குச் சிறிது வரை யறையுமுண்டெடன்பது உணர்த்திய வாறாம். ஆசிரியர் தொல் காப்பியரும், "ரகார ழகாரங் குற்றொற்றாகா" என்று கூறினார். கூறினரேனும், அர்த்தம், அர்க்கன், வர்க்கம், சர்க்கரை, கர்த்தபம், வர்த்தகம் என்று சில வடமொழிகள் 'ரவ்வழி யுவ்வுமாம்' என்னும் விதியால் உகரம் பெறாமலும் வடமொழி மயமாய்த் தமிழில் உலக வழக்கினுஞ் செய்யுள் வழக்கினும் பயின்று வருதல் காண்க.

உயிருமுயிரு மயங்குதலில்லையாதலின் அதனை ஒழித்து மெய்யுடன்மெய் மங்குதலை உடனிலை வேற்றுநிலை யென்றிரண்டாக வகுத்தார்.

உயிருடன் மெய் மயங்குதலையும் மெய்யுடன் உயிர் மயங்குதலையும் உயிர்மெய் மயக்க மென்றுரைத்தார். இவை களுமே யன்றி உயிருடன் ஆய்தமும் ஆய்தத்துடன் மெய்யு மயங்கு மயக்கமுமுண்டு: அது 'குறியதன் முன்னராய்தப்புள்ளி, உயிரொடு புணர்ந்தவல்லாறன் மிசைத்தே' என்று ஆய்தத் தோற்றங் கூறிய முகத்தாலுணரப் படுமாதலின் வேறாகக் கூறாதுவிட்டார்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

### சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.:- ய ர ழ ஒற்றின் முன்** – ய ர ழ என்னும் மூன்று மெய்களின் முன்னே, **க ச த ப ங ஞ ந ம** – இவ் வெட்டு மெய்களும், **ஈரொற்று ஆம்** – (கீழ்க் கூறியபடி உயிர்மெய்யாகி மயங்குதலு மல்லாமல் தாமும் மெய்யாய் நின்று)

இரண்டு ஒற்றாயும் மயங்கும், ர ழ – ரகர ழகர மெய்கள், **தனி குறில் அணையா** – (மொழிக்கு உறுப்பாகத்)தனிக் குற்றெழுத்தின் பின்னே வந்து மயங்காவாம்; எ–று.

**உ–ம்.:–**

காய்க்க,ஈர்க்கு, வாழ்க்கை; பாய்ச்சினான்,
உணர்ச்சி,சூழ்ச்சி,தேய்த்தல்,போர்த்தல்,
வாழ்த்தினான்; வாய்ப்பு,கூர்ப்பு,காழ்ப்பு;

வேய்ங் குழல்ஆர்ங்கோடு,பாழ்ங்கிணறு;

தேய்ஞ்சது,கூர்ஞ்சிறை,
பாழ்ஞ்சுனை;காய்ந்தனம்,நேர்ந்தனம்,

வாழ்ந் தனம்;மொய்ம்பு, ஈர்ம்பணை,பாழ்ம்பதி.

'அணையா' என்ற ர ழக்களுக்கு உதாரணம் காட்டலாகாமை உணர்க.

இனி, **உரையிற்கோடல்** என்னும் உத்தியால், ரகர வொற்றுத் தனிக் குறிலைச் சேர்ந்து மொழிக்கு உறுப்பாகி விகுதி இடைச்சொல்லாய் வருதலைக் கொள்வாரு முளர்:

**உ–ம்.:–**

வந்தனர் என்பதில், அர்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். யரழ முன் ஒற்றின் க ச த ப ங ஞ ந ம** – ய ர ழ என்னும் மூன்று மெய்களும் இவற்றின் முன் மயங்குமென்ற பத்து மெய்களுட் ககர முதலாகிய இவ்வெட்டு மெய்களும் **ஈறொற்று ஆம்** – தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி மயங்குத லன்றியும் ஈரொற்றாயும் மயங்கும், **ர ழ த் தனிக்குறில் அணையா** – ரகார ழகார மெய்மள் தனிம் குறிற்கீழ் ஒற்றாக மயங்கா, **எ – று.**

**உ – ம்.**

வாய்க்கால்,ஈர்க்கு, வாழ்க்கை,

ஆய்ச்சி,தளர்ச்சி, சூழ்ச்சி

நாய்த்தோல், சீர்த்தி, வாழ்த்தி

வாய்ப்பு, ஆர்ப்பு, காழ்ப்பு

வேய்ங்குழல்,கூர்ங்கோடு,பாழ்ங்கிணறு

மெய்ஞ்ஞானம்,கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை,

பாய்ந்து,தேர்ந்து, வாழ்ந்து

மொய்ம்பு, ஈர்ம்பனை, பாழ்ம்பதி

மொழிமுதன் மெய்கள் பத்தில் ஈண்டு நீக்கப்பட்டவை ய, வ என்னும் இரண்டும் என்பதறிக.

## கா. நமச்சிவாய முதலியார்

**யரழ ஒற்றின்முன்** – ய ர ழ என்னும் இம்மூன்று மெய்களின் முன்னே, **கசதபஙஞநம** – க ச த ப ங ஞ ந ம ஆகிய இவ்வெட்டு மெய்களும், **ஈரொற்றாம்** (தனிமெய்யும் உயிர் மெய்யுமாகி மயங்குதலன்றியும்) ஈரொற்றாயும் மயங்கும், **ரழ**–ரகர ழகர மெய்கள், **தனிக்குறில் அணையா** – தனிக்குறிலின்பின் வந்து மயங்கா.

**உதாரணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| வேய்க்குறை | வேர்க்குறை | வீழ்க்குறை | – | ககரம் |
| வேய்ச்சிறை | வேர்ச்சிறை | வீழ்ச்சிறை | – | சகரம் |
| வேய்த்தலை | வேர்த்தலை | வீழ்த்தலை | – | தகரம் |
| வேய்ப்புரம் | வேர்ப்புறம் | வீழ்ப்புறம் | – | பகரம் |
| வேய்ங்குழல் | ஆர்ங்கோடு | பாழ்ங்கிணறு | – | ஙகரம் |
| தேய்ஞ்சது | கூர்ஞ்சிறை | பாழ்ஞ்சுனை | – | ஞகரம் |
| சாய்ந்தது | நேர்ந்தது | வாழ்ந்தது | – | நகரம் |
| வேய்ம்புறம் | ஈர்ம்பனை | பாழ்ம்பதி | – | மகரம் |

'**அணையா**' என்ற ரகர ழகரங்களுக்கு உதாரணம் காட்ட லாகாமை அறிக.

இனி, **உரையிற் கோடல்** என்னும் உத்தியால், ரகரவொற்றுத் தனிக்குறிலைச் சேர்ந்து, மொழிக்கு உறுப்பாகி, '**அர்**' என விகுதி யிடைச்சொல்லாய் வரும் எனக் கொள்க.

வந்தனர், வாழ்ந்தனர் – அர்.

**119. லளமெய் திரிந்த னணமுன் மகாரம்**
**நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.**

லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்து ஈர் ஒற்று ஆம் செய்யு ள்உள்ஏ

laḻamey ṭirinṭa ṉaṇamuṉ makāram
nainṭu īr oṟṟu ām seyyu ḻuḻē

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Letters that change into mute consonants in poetry

When l and ! are changed respectively into n and n' and are followed by short 'm', there will be a coalescing of two mute consonants; but this (takes place only) in poetry.

## ஒப்புமைப் பகுதி

செய்யுளி றுதிப் போலும் மொழிவயின்
னகார மகாரம் ஈர் ஒற்று ஆகும்

(தொல். : 51)

லள மெய்திரிந்த னண முன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே

(மு. வீ. : 80)

## மயிலை நாதர்

எ—ன், செய்யுட்குரிய ஈரொற்றுடனிலை மயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: லகர ளகரங்கள் திரிந்த னகர ணகரங்கண் முன் மகரம் கால் மாத்திரையாய் ஈரொற்றாய் நிற்கும் செய்யுட்கண், எ — று.

வ — று.:—

"சிதையுங் கலத்தைப் பயினாற் [1]றிருத்தித், திசையறி [2]நீகானும் போன்ம்" (பரி. 10), "வெயிலியல் வெஞ்சுர மையநீ யேகின், மயிலியன் மாதர் மருண்ம்" எனவரும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ — னின்,** செய்யுட்கு உரியவாய் ஈரொற்றுடனிற்பன இனைய என்பது உணர் — ற்று.

**இ — ள்.:** லகார ளகார ஒற்றுத்திரிந்த னகார ணகாரங்கள் முன் வரும் மகர ஒற்று, முன்னர்க்கூறியவாறே குறுகி அவற்றுடன் ஈரொற்றுடனிலையாம் செய்யுளகத்து, எ — று.

**உ —ம்.:—**

**"திசையறி மீகானும் போன்ம்" எனவும்,**

**"மயிலியன் மாதர் மருண்ம்" எனவும் வரும்.**

மகாரம் நைந்து என அநுவதித்தார், மகரம் குறுகுதற்குத் தொடரும் னகர ணகரங்கள் லகர ளகரந் திரிந்தன என்பதூஉம், அக்குறுக்கமும் செய்யுட்கண்ணது என்பதூஉம் உய்த்துணர்தற்கு என்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** செய்யுட்குரிய ஈரொற்றுடனிலைமயக்கம் கூறியது.

**இ—ள்.: ல ள மெய் திரிந்த ன ண முன்** — லகாரம் திரிந்த னகாரத்தின் முன்னும் ளகாரம் திரிந்த ணகாரத்தின் முன்னும், **மகாரம் நைந்து ஈரொற்றாம்** — மகாரம் குறுகி ஈரொற்றாய் நிற்கும், **செய்யுளுள்ளே** — செய்யுளிடத்து, எ—று.

**உ—ம்.:**

**"சிதையுங் கலத்தைப் பயினாற் றிருத்தும் திசையறி மீகானும் போன்ம்"** எனவும்,

பாட வேறுபாடு :-

1. திருத்தும் 2. மீகானும்

**"வெயிலிகல் வெஞ்சுர மையநீ**
**யேகின் மயிலியன் மாதர் மருண்ம்" எனவும் வரும்.**

## விசாகப் பெருமாளையர்

இது, செய்யுளுக்கு உரிமையா யீரொற்று உடனிற்பன இத்தனை யென்று உணர்த்துகின்றது.

**இ–ள்.:– ல ள மெய் திரிந்த** – லகார ளகார வொற்றுத் திரிந்து, **ன ண முன்** – னகார ணகார முன் வரும், **மகாரம்** – மகர வொற்றானது, **நைந்து**– முன்சொன்னபடியே குறுகி, **ஈரொற்றாம்** – அந்த மெய்களுடனே யீரொற்றுடனிலையாம், **செய்யுளுள்ளே** – பாட்டினுள், **எ – று.**

**உ–ம்.:–**

"திசையறிமீகானும் போன்ம்" எனவும் "மயிலியன் மாதர் மருண்ம்" எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*செய்யுளில் எந்தமெய்முன் எந்தமெய் ஈரொற்றாய் மயங்கும்?*

லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.
(லள மெய் திரிந்த ன ண முன் மகாரம்
நைந்து, ஈரொற்று ஆம் செய்யுள் உள்ளே)

**இ–ள்.: ல ள மெய் திரிந்த ன ண முன் மகாரம்** – லகார ளகார வொற்றுத்திரிந்த னகார ணகாரங்களின் முன்வரும் மகரவொற்று, **நைந்து ஈரொற்று ஆம் செய்யுளுள்** – முன் சொன்னபடியே குறுகி அந்தமெய்களுடனே ஈரொற்றுடனிலை யாம் பாட்டினுள், **எ–று.**

**உ–ம்.:–**

***திசையறி மீகானும் போன்ம்*** எனவும்
***மயிலியன் மாதர் மருண்ம்*** எனவும்
வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது**, செய்யுளிடத்து ஈரொற்றாய் நிற்பன இவை யென்கின்றது.

**இ—ள்.: ல ள மெய்திரிந்த ன ண முன்** – இந்த இரண்டு ஒற்றுக்களுந் திரிந்த னகர ணகரங்களின் முன், **மகார நைந்து** – மகரம் மேற்சொல்லியபடியே குறுகி, **ஈரொற்றாஞ் செய்யுளுள்** – ஈரொற் றுடனிலைமயக்கமாஞ் செய்யுளிடத்து, எ—று.

**உ—ம்.:–**

*திசையறி மீகானும் போன்ம்*

*மயிலியன் மாதர் மருண்ம்* ஏன வரும்.

மேலே மக் குறுகு மெனக் கூறி இதனுள்ளும் மகர நைந்தென அநுவதித்தார் அதற்குப் பயன், லகர ளகர மெய்கள் திரிந்த னகர ணகரங்க ளென்பதும், மகரக்குறுக்கஞ் செய்யுளிடத்து வருமென்பதுந் தெரிதலாம். அநுவதித்தல்–கூறியது கூறல், இனி முன்பின் என்பன காலம் பற்றியும் இடம்பற்றியும் மாறிவரும். உதாரணம், கங என்றதில் ககரம் முன்னெழுதப்படுதலால் காலம்பற்றி முன்னாயிற்று, அதுவே தனக்கு எதிர்முகமாக ஙகர முன்னிருத்தலால் இடம்பற்றிப் பின்னுமாயிற்று எனக்காண்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– ளமெய் திரிந்த** – லகார ளகார ஒற்றுத்திரிந்த, **னண முன்** – னகார ணகாரமெய்களின் முன்வரும், **மகாரம்** – மகர ஒற்றானது, **நைந்து** – (முன் சொன்னபடியே) குறுகி, **ஈர் ஒற்று ஆம்** – (அந்தமெய்களுடனே) ஈரொற்றுடனிலையாம், **செய்யுளுள்ளே** – பாட்டினுள்.

**உ—ம் : –**

திசையறிமீகானும் போன்ம் எனவும்

மயிலியன் மாதர் மருண்ம் எனவும் வரும்.

குறிப்பு :–

'முன்' 'பின்' என்பன காலம்பற்றியும் இடம்பற்றியும் வரும். இங்குமுன் – இடமுன், மேல் 'கீழ்' எனவரு மிடங்களிலும் இஃது பொருந்தும். 'செய்யுளுள்ளே' என்றதனால் முன்புகூறியவற்றை வழக்கு செய்யுள் இரண்டிடத்துங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: ல ள மெய் திரிந்த ன ண முன் மகாரம்**–லகார ளகார வொற்றுத் திரிந்த னகார ணகார முன்வரும் மகரவொற்று, **நைந்து ஈரொற்று ஆம் செய்யுளுள்** – முன் சொன்னபடியே குறுகி அந்த மெய்களுடனே ஈரொற்றுடனிலையாம் பாட்டினுள், **எ – று.**

**உ – ம்.:–**

***திசையறி மீகானும் போன்ம்*** எனவும்.

***மயிலியன் மாதர் மருண்ம்*** எனவும் வரும்.

**வ. குமாரசாமிப் புலவர்**

**இ–ள். ல ள மெய் திரிந்த ன ண முன் மகாரம்** – லகார ளகார வொற்றுத் திரிந்த னகார ணகாரங்களின் முன்வரும் மகர வொற்று, – **நைந்து ஈரொற்று ஆம் செய்யுளுள்** – (முன்சொன்னபடி) குறுகி அந்த மெய்யொடு ஈரொற்றுடனிலையாம் பாட்டினுள். **எ–று.**

**உ–ம்.:–**

***திசையறு மீகானும் போன்ம்*** எனவும்,
***மயிலியன் மாதர் மருண்ம்*** எனவும் வரும்

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: செய்யுளுள்ளே** – பாட்டினுள், **ல ள மெய் திரிந்த** – லகார ளகார மெய்கள் திரிந்த, **ன ண முன்** – னகார ணகார மெய்களின் முன்

வருகின்ற, **மகாரம்** – மகர மெய்யானது, **நைந்து** – (முன் சொன்னபடியே) குறுகி, **ஈரொற்று ஆம்** –(அந்த மெய்களுடனே) ஈரொற்று மயக்கமாம்; **எ–று.**

**உ–ம்.:–**

"திசையறிமீகானும் போன்**ம்**,"

"மயிலியன்மாதர் மரு**ண்ம்.**"

இங்கே, முன்– இடமுன்.

இங்கு 'செய்யுளுள்ளே' என்றதனால், முன்பு கூறியவை வழக்குச் செய்யுள் இரண்டிலும் வருவன என்று அறிக.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள். ல ள மெய் திரிந்த ன ண முன் மகாரம்** – லகார ளகார வொற்றுத் திரிந்த னகார ணகார முன் வரும் மகரவொற்று, **நைந்து ஈரொற்று ஆம் செய்யுளுள்** – (முன் 96–வது சூத்திரத்திற் சொன்ன படியே) குறுகி அந்த மெய்களுடனே ஈரொற்றுடனிலையாம் பாட்டினுள். **எ–று.**

உ–ம்.:–

"திசையறி மீகானும் போன்ம்".

"மயிலியன் மாதர் மருண்ம்".

## கா. நமச்சிவாய முதலியார்

**ல ள மெய் திரிந்த** – லகார ளகார வொற்றுத் திரிந்த, **ன ண முன்** – னகார ணகாரங்களின் முன் வரும், **மகாரம்** – மகர வொற்று, **நைந்து** – (முன் சொன்னபடியே) குறுகி, **செய்யுளுள்ளே** – பாட்டினுள், **ஈரொற்றாம்** (அந்த மெய்களுடனே) ஈரொற்றாய் மயங்கும்.

**உதாரணம்**

*'திசையறிமீகானும்போன்ம்.'*

*மயிலியல் மாதர் மருண்ம்.'*

மேலே, **'மக் குறுக்கும்'** (சூ–96) எனக் கூறி, இச் சூத்திரத்தினுள்ளும், **'மகாரம் நைந்து'** என அநுவதித்தார். அதற்குப் பயன் லகர ளகர மெய்கள் திரிந்த

னகர ணகரங்கள் என்பதும், மகரக் குறுக்கம் செய்யுளிடத்து வரும் என்பதும் தெரிதலாம்.

**அநுவதித்தல்** என்பது, முன் சொன்னதையே வற்புறுத்தும் பொருட்டு மீண்டுங் கூறுதல்.

**'செய்யுளுள்ளே'** என்றமையால், முன்னர்க் கூறிய மயக்கம், வழக்கு செய்யுள் ஆகிய இரண்டினும் என அறிக.

## மோசகு பொன்னையா

லள என்னும் மெய்கள் செய்யுளில் திரிந்து முறையே னண வாக நிற்க, அவற்றின் முன்னர் வரும் மகரம் குறுகி அவற்றுடன், ஈரொற்றாகக் கூடி நிற்கும், எ—று.

எ—டு.

*திசையறி மீகாமனும் போன்ம்,*

*மயிலியன் மாதர் மருண்ம்.*

இவ்வாறு வரும் னகர ணகரங்கள் அசைநிலை பெற்று அடுத்து வரும் மகர ஒற்றைத் தழுவலால் அதன் ஒலிநிலை மயங்குகின்றது. அதனை இவ்வாசிரியர் மகரக்குறுக்கம் என்றார்.

(65)

## 120. தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும் இம்முறை மாறியு மியலு மென்ப.

**தம் பெயர் மொழியின் முதலும் மயக்கமும்**
**இம் முறை மாறியும் இயலும் என்ப.**

ṭam peyar moḻiyiṉ muṭalum
mayakkamum
im muṟai māṟiyum iyalum eṉpa.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Exceptional to the initial, medial, finals in words**

When letters express their own names, they (may or) may not follow the rules respecting Initial, and Coalescing letters.

## ஒப்புமைப் பகுதி

தம் பெயர் மொழியின் முதலு மயக்கமும்
இம்முறை மாறியு மியலு மென்ப

(மு. வீ. : 81)

## மயிலை நாதர்

**எ-ன்,** முதனிலை இடைநிலைகட்கு உரியதோர் வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**இ-ள்.:** எழுத்துக்கள் தம் பெயர்களை மொழியுமிடத்து ஈண்டுச் சொன்ன முறையன்றி முதலாகாதன முதலாகியும் மயங்காதன மயங்கியும் வரப்பெறும், எ - று.

**வ -று.:-**

**அவற்றுள்**

**ளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்**

என்பதனுள், ளகர மெய்ம் முன்னர் லகரம் மயங்கினவாறும், லகரம் மொழிக்கு முதலானவாறுங் காண்க.

## சங்கர நமச்சிவாயர்

எ - **னின்,** மொழி முதல் ஈறு இடைநிலைகட்கு ஆவதோர் புறனடை **உணர் - ற்று.**

**இ - ள்.:-** எழுத்துக்கள் தம் பெயர்களை மொழிந்து நிலைமொழி வருமொழியாகப் புணர்க்குமிடத்து எல்லா மொழி முதற்கும் இங்ஙனம் விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா எழுத்தும் முதலாம்; மயக்கத்திற்கு

இங்ஙனம் விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா எழுத்தும் மயங்கும் என்று சொல்லுவர் புலவர், **எ – று.**

இங்ஙனம் எல்லா எழுத்தும் தனித்தனி அதற்கு அதுவே முதலாக வரும். எனவே, ஈற்றிற்கு விதித்தனவும், விலக்கியனவுமாகிய எல்லா எழுத்தும் தனித்தனி அதற்கு அதுவே ஈறாக வரும் எனச் சொல்லாதே **அருத்தாபத்தியான்** அமைதலின் ஈறும் என மிகைபடக் கூறாதொழிந்தார்.

**உ–ம்.:**

**"அவற்றுள்,**
**லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்"**

என்புழி லகரம் முதலாகியும், கூனிறுதி ளகர ஒற்றோடு மயங்கியும் நின்றது. கெப்பரிது என்புழி, எகரம் மெய்யோடு ஈறாய் நின்றது. பிறவும் வரையறையின்றி வருதல் காண்க.

ஆய்தத்திற்குப் பிறப்பதிகாரத்துள் வருவாய் கூறியவழி மயக்கவிதி அமைந்து கிடந்தமையானும், தன்பெயர் மொழிய வாராமையானும் கூறாதொழிந்தார்.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** முதனிலை இடைநிலைக்குரியதோர் வழுவமைப்புக் கூறியது.

**இ–ள்.: தம் பெயர் மொழியின்** – எழுத்துக்கள் தம் பெயர்களை மொழியு மிடத்து, **முதலு மயக்கமும்** – மொழிக்கு முதலாய் நின்றதும் மொழிக்கு இடையே நிற்பனவும், இம்முறை மாறியும், ஈண்டுச் சொன்ன முறையே யன்றி முதலாகாதன முதலாகியும் மயங்காதன மயங்கியும், **இயலுமென்ப** – வரப்பெறு மென்றும் சொல்லுவர் புலவர், **எ–று.**

**உ–ம்.:**

அவற்றுள்

லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்

என்பதனுள் ளகாரமெய் முன்னர் லகாரம் மயங்கின வாறும் லகாரம் மொழிக்கு முதலாயினவாறும் காண்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முதனிலை யிறுதிநிலை யிடைநிலைகளுக்கு ஆவதோர் புறனடை உணர்த்துகின்றது,

**இ—ள்.: தம்பெயர்** — தம்முடைய பெயர்களை, **மொழியின்** — சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்குமிடத்து, **முதலும்** — மொழி முதலுக்கும், **மயக்கமும்**—இடைநிலை மயக்கத்திற்கும், **இம் முறை** — இப்படி விதிக்கப் பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லா வெழுத்துக்களும், **மாறியுமியலும்** — முதலாகியும் மயங்கியும் வரும், **என்ப**—என்று சொல்லுவர் புலவர், **எ — று.**

இப்படி யெல்லா வெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே முதலாமெனவே, ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப் பட்டனவுமாகிய எல்லா வெழுத்துகளும் தனித்தனி அதற்கதுவே ஈறாமெனத் தானே விளங்குதலால், ஈறுமென மிகைபடக் கூறாமல் விட்டார்.

**உ—ம்.:—**

***அவற்றுள்***

***லளஃகான் முன்னர் யவ்வுந் தோன்றும்.***

இதிலே லகரமானது முதலாகியும், ளகர மெய்யோடு மயங்கியும் வந்தது. 'கெப்பெரிது' இதில் எகரமானது மெய்யோ டீறாய் வந்தது. பிறவுமிப்படியே வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*மொழிக்கு முதலாகா வெழுத்துக்கள் முதலாதலும் ஈறாகா வெழுத்துக்க ளீறாதலும் மயங்கா வெழுத்துக்கள் மயங்குதலு மொரோ வழியுண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?*

தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்

இம்முறை மாறியு மியலுமென்ப.

(தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும் என்ப)

**இ—ள்.: தம்பெயர் மொழியின்** — எழுத்துக்கள் தம்பெயர்களாகிய மொழியின் கண்ணே, **முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும்** — முதனிலையும் இடைநிலையும் (இறுதிநிலையும்) ஆகிய இவ்விதிகளைத் தழுவாமலும் வரும், **எ—று.**

உ—ம்.:-

*அவற்றுள்*

***லஃகான் முன்னர் யவ்வுந் தோன்றும்***

இதிலே லகரம், முதலாகியும், கூனிறுதி லகரமெய்யோடு மயங்கியும் வந்தது. கெப்பெரிது; இதில் மெய்யோடீறாகாத எகரம் மெய்யோடீறாய் வந்தது.

*இச்சூத்திரத்தில் முதனிலையும் இடைநிலையுங் கூறி இறுதிநிலை கூறாது விடுத்ததென்னை?*

இரண்டுங் கூறவே எஞ்சிய விறுதிநிலைதானே போதருதலின்.

*இஃது எவைகளுக்குப் புறனடைச் சூத்திரம்?*

முதலீ றிடைநிலைகளுக்குப் புறனடை.

மொழிப்போலி

மொழிப்போலி, முதலிடை கடைகளிலே நிற்றற்குரிய சிலவெழுத்துக்கீடாக வேறுசில வெழுத்து நின்றிசைப்பினும் தம் பொருள் வேறுபடா மொழிகளாம்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** மொழி முதலீறிடைநிலை யென்னு மூன்றிற்கும் புறனடை யுணர்த்திற்று.

**இ—ள்.: தம் பெயர் மொழியின்** – எழுத்துக்களின் பெயரைச் சொல்ல வருங் காலத்தில், **முதலு மயக்கமும்** – மொழி முதலுக்கும், இடைநிலை மயக்கத்திற்குஞ் (சொன்ன) **இம்முறை மாறியும்** – இந்த இலக்கணம் பிறழ்ந்தும், **இயலுமென்ப** – நடக்குமென்று சொல்லுவர் புலவர், **எ – று.**

எனவே மொழிமுதற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா வெழுத்துக்களும் முதலாமென்பதும், இடைநிலை மயக்கத்திற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா வெழுத்துக்களும் இடைநின்று மயுங்கு மென்பதுமாயிற்று. இவ்வாறே எல்லாவெழுத்துந் தனித்தனி அதற்கு அதுவே முதலாக வருமெனவே ஈற்றிற்கு விதித்தனவும் விலக்கியனவு மாகிய எல்லா வெழுத்துக்களுந் தனித்தனி அதற்கதுவே ஈறாக வருமென்பது **அருத்தாபத்தியால்** அமைதலால் ஈறுமென மிகைபடச் சொல்லா தொழிந்தார்.

உ—ம்:—

*அவற்றுள்*

*லளஃகான் முன்னர் யவ்வுந் தோன்றும்*

என்றதில் லகரம் மொழிக்கு முதலாகியும், அவற்றுள் என்ற கூன் இறுதியிலே நின்ற ளகர ஒற்றொடும் மயங்கியும் நின்றது, கெப்பெரிது என்னும் புணர்மொழியில் எகரம் மெய்யொடு கூடி யீறாகி நின்றது, பிறவு மிவ்வாறு கண்டுகொள்க. ஆய்தத்திற்கு முன்னே பிறப்பிலக்கணஞ் சொன்ன இடத்து மயக்கவிதி அமைந்திருத்தலாலும், தன் பெயர் கூறவாராததினாலும் சொல்லா தொழிந்தார். இச் சூத்திரத்திற் புலவரென்னும் பயனிலை குறைந்து நின்றது. இடைநிலை யிலக்கண முற்றிற்று.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :— தம்பெயர்மொழியின்** — எழுத்துக்களின் பெயர்களைச் சொல்லி (நிலைமொழி வருமொழியாகப்) புணர்க்குமிடத்து, **முதலும் மயக்கமும்** — மொழிமுதலுக்கும் இடைநிலை மயக்கத்திற்கும் (சொன்ன), **இ முறை** — இவ்விலக்கணம், **மாறியும் இயலும்** — பிறழ்ந்தும் வரும், என்ப — என்று சொல்லுவர் (புலவர்)

**குறிப்பு :—**

என்றலின், எழுத்துக்கள் தம்பெயர்களை மொழிந்து நிலைமொழி வருமொழிகளாகப் புணருமிடத்து மொழிமுதற்கு விதித் தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் முதலாமென்பதும், இடைநிலை மயக்கத்திற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லாவெழுத்தும் தனித்தனி அதற்கதுவே முதலாமென்பதும் பெறப்பட்டமையறிக. ஈற்றிற்கு விதிக்கப் பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லாவெழுத்தும் தனித்தனி அதற்கதுவே ஈறாமெனத் தானே விளங்குதலால் 'ஈறும்' என மிகைபடக் கூறாதொழிந்தார்.

உ—ம்:—

அவற்றுள்

லளஃகான் முன்னர் யவ்வுந்தோன்றும்

இதில் லகரம் முதலாகியும், 'அவற்றுள்' என்றதனிறுதியிலே நின்ற ளகரமெய்யோடு மயங்கியும் வந்தது. 'கெப்பெரிது' இதில் எகரம் மெய்யோடு ஈறாய்வந்தது. பிறவும் இவ்வாறே.

## ஆறுமுகநாவலர்

**இ-ள்.: தம் பெயர் மொழியின்** – தம்முடைய பெயர்களைச் சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்குமிடத்து, **முதலும் மயக்கமும்** – மொழி முதலுக்கும் இடைநிலை மயக்கத்திற்கும், **இம்முறை மாறியும் இயலும்** – இப்படி விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் முதலாகியும் மயங்கியும் வரும், **என்ப**– என்று சொல்லுவர் புலவர், **எ–று.**

இப்படி யெல்லா வெழுத்துக்களுந் தனித்தனி அதற்கதுவே முதலாமெனவே, ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப் பட்டனவுமாகிய எல்லா வெழுத்துக்களுந் தனித்தனி அதற்கதுவே ஈறாமெனத் தானே விளங்குதலால், ஈறுமென மிகைபடக் கூறாதொழிந்தார்.

**உ–ம்.:–**

**அவற்றுள்,**

**லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்**

இதிலே லகரம் முதலாகியும், கூனிறுதி ளகர மெய்யோடு மயங்கியும், வந்தது. 'கெப்பெரிது' இதில் எகரம் மெய்யோ டீறாய் வந்தது.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். தம் பெயர் மொழியின்** – எழுத்துக்கள் தம்முடைய பெயரைச் சொல்ல வருங்காலத்தில், – **முதலும் மயக்கமும்** – முதனிற்றலும் இடை நிற்றலும், – **இம்முறை மாறியும் இயலும் என்ப** – (முன்விதித்தனவும் விலக்கியனவுமாகிய) இந்தக் கிரமந்தவறுற்றும் நடைபெறும். **எ–று.**

முதலிறிடை நிலைகளுக்கு முன்விதிக்கப் பட்டனவும், விலக்கப் பட்டனவும் மொழியின்கண் வருமெழுத்து களுக்காதலின், எழுத்துக்களுடைய பெயரை உச்சாரணத்தாற் கூறின் அப்பொழுது, (மொழிக்கு முதலாகுமென்ற எழுத்துக்களே யன்றி) முதலாகாத எழுத்துக்களும் முதலாகும். அவற்றை நிலைமொழி வருமொழியாகப் புணர்க்குமிடத்து (இன்னதோடு இன்னது

மயங்குமெனப்பட்ட எழுத்துக்களுமன்றி) விலக்கப்பட்ட எழுத்துக்களும் மயங்கும் என்று தெளிக.

இப்படியே விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா வெழுத்துக்களும் முதலாகும் இடைநிற்றலாகுமெனவே ஈற்றிற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எழுத்துக்கள் ஈறாகியும் வருமென்பது அருத்தாபத்தியால் அமைதலால் ஈறுமென மிகைபடக் கூறாதுவிட்டார், சிறுபான்மையவாதலின்.

**வ—று.:—**

***அவற்றுள்,***

***ல ளகான் முன்னர் யவவுந்தோன்றும்***

என்றதில் லகரம் முதலாகியும், 'அவற்றுள் என்னுங் கூனிறுதி ளகரமெய்யொடு மயங்கியும் நின்றது. கெப்பெரிது என்பதில் எகரம் மெய்யொடு கூடி யீறாகி நின்றது.'

எழுத்தை எடுத்து மொழிந்தமையால் முதலாகாதது முதலாகியும், மங்காதது மயங்கியும், ஈறாகாதது ஈறாகியும் வந்தன.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: தம்பெயர் மொழியின்** – எழுத்துக்களின் பெயர்களைச் சொல்லுமிடத்து, **முதலும் மயக்கமும்**—மொழிமுதலில் நிற்றலும் மொழியிடையே நிற்றலும், **இ முறை மாறியும் இயலும்** – கீழ்ச்சொன்ன இவ்விலக்கணம் பிறழ்ந்தும் வரும், **என்ப**—என்று சொல்வர், (அறிவுடையோர்); **எ—று.**

எனவே, எழுத்துக்கள் வேறுபொருள் குறியாமல் தம்மையே குறித்து நிலைமொழிகளாகப் புணருமிடத்து, மொழிமுதற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா வெழுத்துக்களும் முதலா மென்பதும், இடைநிலை மயக்கத்திற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய எல்லா வெழுத்துக்களும் இடைநின்று மயங்குமென்பதும் ஆயிற்று; இப்படி எல்லா வெழுத்துக்களும் தனித்தனி அதற்கு அதுவே முதலா மெனவே, ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் தனித்தனி அதற்கு அதுவே ஈறாமெனத் தானே விளங்குதலின், 'ஈறும்' என மிகைபடக் கூறாமல் விட்டார்.

உ—ம்.:—

*அவற்றுள்*

***லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்***

இதில் லகரமானது, முதலாகியும், 'அவற்றுள்' என்றதன் இறுதியிலே நின்ற ளகர மெய்யோடு மயங்கியும் வந்தது. 'கெப் பெரிது' இதில், எகரம் மெய்யோடு ஈறாய் வந்தது. பிறவும் இப்படியே.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். தம் பெயர் மொழியின்** — (எழுத்துக்கள்) தம்முடைய பெயர்களைச் சொல்லி நிலைமொழி வருமொழிகளாகப் புணர்க்குமிடத்து, **முதலும் மயக்கமும்** — மொழி முதலுக்கும் இடைநிலை மயக்கத்திற்கும், **இம்முறை மாறியும் இயலும்** — இப்படி விதிக்கப்பட்டனவும் விலக்கப் பட்டனவுமாகிய எல்லா வெழுத்துக்களும் முதலாகியும் மயங்கியும் வரும், **என்ப** — என்று சொல்லுவர் புலவர், **எ—று.**

இப்படி எல்லா எழுத்துக்களும் தனித்தனி அதற்கதுவே முதலாமெனவே, ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப் பட்டனவுமாகிய எல்லா எழுத்துக்களுந் தனித்தனி அதற்கதுவே ஈறாமெனத் தானே விளங்குதலால், ஈறுமென மிகைபடக் கூறாதொழிந்தார்.

உ—ம்.:—

*அவற்றுள்*

***லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்***

இதிலே லகரம் முதலாகியும், 'அவற்றுள்' என்பதிலுள்ள ளகர மெய்யோடு மயங்கியும், வந்தது. 'கெப்பெரிது' இதில் எகரம் மெய்யோடீறாய் வந்தது.

## கா. நமச்சிவாய முதலியார்

**தம் பெயர்** — (முதலாகாதனவும் மயங்காதனவுமாகிய எழுத்துக்கள்) தம் பெயர்களை, **மொழியின்** — (நிலைமொழி வருமொழிகளாகப் புணர்த்துக்) கூறுமிடத்து, **முதலும்** — மொழி முதலும், **மயக்கமும்** — இடைநிலை மயக்கமும் (விதிக்கப்பெற்ற), **இம் முறை** — (மேற்கூறிய) இம் முறைமை, **மாறியும் இயலும்** — பிறழ்ந்தும் (முதலாகாதன முதலாகியும் மயங்காதன மயங்கியும்) வரும், **என்ப** — என்று சொல்லுவர் (புலவர்).

இப்படி எல்லாவெழுத்துக்களும் தனித்தனி அதற்கதுவே முதலாம் எனவே ஈற்றிற்கு விதிக்கப்பட்டனவும் விலக்கப் பட்டனவுமாகிய எல்லாவெழுத்துக்களும் தனித்தனி அதற்கதுவே ஈறாமெனத் தானே விளங்குதலால் ஈறும் என மிகைபடக் கூறாமல் விட்டார்.

*அவற்றுள்*

***லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்***

(தொல்.எழு. 24)

என்பதில், லகரமானது முதலாகியும் ளகர மெய்போடு மயங்கியும் வந்தது.

கெப் பெரிது (கெ என்னும் எழுத்துப் பெரிது) என்பதில், எகரம் மெய்யோடு ஈறாய் வந்தது; பிறவும் இப்படியே வரும்.

## மோசசு பொன்னையா

எழுத்துக்களின் பெயர்களைச் சொல்லிக் குறிப்பிடுங்கால் முதனிலை, இடைநிலை இறுதிநிலைகளில் விலக்கப்பட்ட எழுத்துக்களும் முதலாகவும், இறுதியாகவும், இடைமயங்கியும் வரும், **எ–று.**

**எ–டு.**

1. அவற்றுள், லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.

   லகரம் முதலாயிற்று – கூன் சீர்ஈற்று ளகரத்தோடு

   லகரம் மயங்கிற்று.

2. கெப் பெரிது – எகரம் மெய்யோடுகூடி ஈறாய் வந்தது.

**(66)**

## 121. மகர விறுதி யஃறிணைப் பெயரின் னகரமோ டுறழா நடப்பன வுளவே.

மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரம் ஒடு உறழா நடப்பன உளவே

makara iṟuti akhṟiṇaip peyarin̲
n̲akaram ōtu uṟaḻā natappan̲a uḷavē

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**SUBSTITUTES**

**substitute in the end**

A few Impersonal Nouns ending in ‘m’, may change the m into N.

### ஒப்புமைப் பகுதி

**அஃறிணைப் பெயர்ச்சொ லிறுதி மகாரம்**
**னகரமா மொராவழி நாடுங் காலே**

**(மு. வீ. : 114)**

### மயிலை நாதர்

எ—ன், இதுவும் ஓர் மயக்கவகை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: மகர வீறான அஃறிணைப் பெயர்களுட் சில னகரத்தோடு உறழ்ந்து வருவன உள, எ — று.

வ — று.:–

நிலம், நிலன்; புலம், புலன்; கலம், கலன்; வலம், வலன்; முகம், முகன்; அகம், அகன் என்றற் றொடக்கத்தன உறழ்ந்தன; ’உறழா நடப்பனவுள’ எனவே, உறழாதன

பெரும் பான்மையவா மெனக் கொள்க. அவை: வட்டம், பட்டம், குட்டம், மாடம், கூடம், கடாம், படாம், கடகம், [1]சடகம், நுகம், மகம், ஆரம், பூரம், உத்தரம், [2]வீக்கம், நோக்கம், [3]ஊக்கம் என்றற் றொடக்கத்தன. இனி, இவ்விதி இவ்வாறன்றி,

*மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த*

*னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப*

*புகரறக் கிளந்த வஃறிணை மேன*

என்று எகின், செகின், எயின், வயின், குயின், [4]அழன், புழன், [5]புலான், கடான் எனவரும் ஒன்பதும் மயங்காதனவெனக் கொள்ளின், [6]பலியன் [7]வலியன், வயான், [8]கயான், அலவன், [9]கலவன், கலுழன், மறையன், செகிலன் முதலாயினவும் மயங்கப்பெறாவென மறுக்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** நிறுத்தமுறையானே போலியாமாறு உணர்த்துவான் தொடங்கி மொழியிறுதிப்போலி **உணர்—ற்று.**

**இ—ள்.:** பால்பகா அஃறிணைப்பெயர்களினிடத்து இறுதி மகரம், னகரத்தோடு ஒத்து நடப்பன உளவாம், எ — று.

மகர இறுதி என்றதனால் பால்பகா அஃறிணைப் பெயர் என்பது பெற்றாம். மகரம் னகரத்தோடு ஒத்தலாவது, பெயர் இறுதிக்கண் மகரம்நின்ற நிலைக்களத்து னகரம் நிற்பினும் வேற்றுமையின்றி ஒத்தல்.

உ — ம்.:—

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்"

---

பாட வேறுபாடு :- 1. சகடம் 2. விசாகம் 3. ஒக்கம்
4. அழான், புழான் 5. வயான்
6. பயின் 7. (1) வயின். (2) வலியான்
8. கழான் 9. இகலன்

இதனுள் அகம் – அகன், முகம் – முகன் எனவும்; தலம் – தலன், நிலம் – நிலன், கலம் – கலன், நலம் – நலன், வலம் – வலன் எனவும் வரும். பிறவும் அன்ன.

உறழா நடப்பனவுள என்னும் சொல்லாற்றலான், உறழாதன பெரும்பால என்க. அவை வட்டம், குட்டம், மாடம், கூடம் முதலாயின.

பால்பகா அஃறிணைப் பெயர்களிடத்து இயல்பாய மகர இறுதி நிலையின் னகரம் போலியாய் வரும் எனவே, அகன் முகன் முதலிய சொற்களைப் பால்பகுத்த ஆடூஉ வறிசொல் எனக் கொள்ளற்க என்பதூஉம், எகின் பயின் குயின் வயின் முதலிய னகர வீற்றுப் பெயர்க்கு இவ் வையப்பாடு இல்லை என்பதூஉம் பெற்றாம். இனி, இவ் விறுதிப்போலியை முற் கூறியவதனால் சுரும்பு – சுரும்பர், அரும்பு – அரும்பர், சாம்பல் – சாம்பர், பந்தல் – பந்தர் முதலியனவும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்**, மகர மெய்மயக்கம் உரைத்தது.

**இ—ள்.: மகர விறுதி** – மகர விறுதியாகிய சொற்களுள், **அஃறிணைப் பெயரின்** – அஃறிணைப் பெயர்களுட் சிலவிடத்து ஈற்றினின்ற மகரம், **னகரமோடு உறழா நடப்பன உளவே** – னகரத்துடனே பொருந்தி வருவனவும் உள, **எ—று.**

**உ—ம்:-**

நிலம், நிலன்; புலம், புலன்; வலம், வலன்; முகம், முகன்; அகம், அகன் எனவும் வரும். 'உறழா நடப்பன உள' எனவே உறழாதன பெரும்பான்மையவாம் என்க. அவை விட்டம், பட்டம், குடம் எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது**, நிறுத்த முறையினாலே போலியாமாறு உணர்த்தும் படியாகத் தொடங்கி மொழியிறுதிப் போலி உணர்த்துகின்றது,

**இ—ள்.: அஃயிணைப் பெயரின்** – பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து, **இறுதி** – ஈற்றிலே நின்ற, **மகரம்** – மகர மெய்யானது, **னகரமோடு** – னகர மெய்யோடு, **உறழா** – ஒத்து, **நடப்பன** – நடப்பவை, **உள** – உண்டு, **எ—று.**

மகரம் னகரத்தோ டொத்தலாவது பெயரினிறுதியிலே மகரமிருந்தவிடத்து னகரம் வந்திருந்தாலும் வேறுபடாம லொத்தலாம், இம் மகரம் குறிலிணையைச் சேர்ந்து வருவ தென்றறிக

**உ—ம்.:—**

அகம் அகன் நிலம் நிலன் என வரும்,

இவ் விறுதிப்போலியை முன்னே சொல்லுதலால் சுரும்பு—சுரும்பர், வண்டு—வண்டர் என மென்றொடர் குற்றியலுகரப் பெயரிறுதி யுகரம் "அர்" என்பதனோ டொத்து வருதலும், பந்தல் பந்தர் சாம்பல் சாம்பர் எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரினிறுதி லகரமெய் ரகர மெய்யோ டொத்து வருதலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*ஓரீறு ஓரீற்றோடு மங்குதலுமுண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?*

மகர விறுதி யஃறிணைப் பெயரின்

னகரமோ டுறழா நடப்பன உளவே

(மகர இறுதி அஃறிணைப் பெயரின்

னகரமோடு உறழா நடப்பன வுளவே)

**இ—ள்.: அஃறிணைப் பெயரின் இறுதி மகரம்** – பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகரமெய் **னகரமோடு உறழா நடப்பன உள**— னகர மெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு,**எ—று.**

**உ—ம்.:—**

அகம்— அகன்; நிலம்—நிலன்; கலம்—கலன், எனவரும்.

**'உறழா நடப்பன வுள'**வெனவே, நடவாதனவு முளவென்றா ராயிற்று.

உ–ம்.:–

வட்டம், குட்டம் இவற்றின் மகரவீறுகள் னகரமாகா.

*இவ் வகை யீறுகள் வேறுமுளவோ?*

சுரும்பு –சுரும்பர், அரும்பு–அரும்பர், வண்டு–வண்டர் என மென்றொடர்க் குற்றியலுகரம் அர் என்பதனோ டொத்து வருதலும், பந்தல் – பந்தர், சாம்பல் – சாம்பர், மதில்–மதிள், எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரிறுதி லகரம், ரகர ளகர மெய்யோ டொத்து வருதலுமுண்டு.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது,** நிறுத்தமுறையே போலியிலக்கணஞ் சொல்லத் தொடங்கி மொழியிறுதிப் போலி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: மகர விறுதி யஃறிணைப் பெயரின்** – பால்பகா அஃறிணைப் பெயர்களின் இறுதி மகரமானது, **னகரமோடுறழா** – னகரத்தோடு ஒத்து, **நடப்பனவுள** – நடப்பனவுஞ்சில உளவாம், **எ – று.**

மகரம் னகரத்தோடு ஒத்தலாவது, மகரம் நின்ற இடத்தில் னகரம் வந்து நிற்பினும் வேற்றுமை யில்லாதிருத்தல்.

உ–ம்.:–

***அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து***

***நல்விருந் தோம்புவா னில்***

இதனுள் அகம் அகன், முகம் முகன், என வருதலும், இன்னும் அறம் அறன், நிலம் நிலன் கலம் கலன், வலம் வலன், நலம் நலன் எனச் செய்யுளிடத்து வருவனவுங் காண்க, பிறவுமிப்படியே. உறழா நடப்பனவுள என்றது உறழாது நடப்பனவுள வெனப்பொருள்படுதலால் அவ்வாறு வருதல் பெரும்பாலவெனக் கொள்க. அவை வருமாறு: வட்டம் குட்டம் மாடம் கூடம் என்றாற் போல்வன.

இனி இவ்விறுதிப்போலியை முன்சொன்ன தலைதடு மாற்றத்தால் சுரும்பு சுரும்பர், அரும்பு அரும்பர், சாம்பல் சாம்பர், பந்தல் பந்தர், குடல் குடர், மதில் மதிள், குறல் குறள் முதலியனவுங் கொள்க. இவ்வாறு கூறுதல் **தலைதடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்தலென்னுந்** தந்திர உத்தி.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :- அஃறிணைப் பெயரின்** – பால்பகாவஃறிணைப் பெயர்களிடத்து, **இறுதிமகரம்** – ஈற்றிலேநின்ற மகரமெய்யானது, **னகரமோடு உறழா** – னகரமெய்யோடு ஒத்து, **நடப்பனஉள** – நடப்பவை உண்டு.

**குறிப்பு:–** இம்மகரம் இரண்டு குறிலாலாகிய பால்பகாவஃறிணைப் பெயரின் இறுதியிலுள்ள மகரமென்றறிக.

**உ–ம் :–**

மரம் – மரன்; நிலம் – நிலன் எனவரும்.

முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என்னும் மூன்றனுள் இறுதிக்கண் சொல்லவேண்டிய இவ்விறுதிப் போலியை முன்னே சொன்னதனால், சுரும்பு – சுரும்பர்; வண்டு – வண்டர்; சிறகு – சிறகர் எனச் சில குற்றுகரப் பெயரின் இறுதி உகரம் 'அர்' என்பதனோடொத்து வருதலும்;

பந்தல் – பந்தர், சாம்பல் – சாம்பர் எனச்சில பெயரின் இறுதி லகர மெய், ரகரமெய்யோடு ஒத்துவருதலும்; மதில் – மதிள் என ஒரோவிடத்து லகரத்துக்கு ளகரம் போலியாய் வருதலுங்கொள்க. போலியை **'அபேதம்'** என்பர் வடநூலார்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: அஃறிணைப் பெயரின் இறுதி மகரம்** – பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகரமெய், **னகரமோடு உறழா நடப்பன உள** – னகர மெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு, எ – று.

மகரம் னகரத்தோ டொத்தலாவது, பெயரி னிறுதியிலே மகர நின்ற விடத்து னகரம் வந்து நிற்பினும் வேற்றுமை யின்றி யொத்தலாம். இம்மகரங் குறிலிணைக்கீழ் மகரமென் றறிக.

**உ–ம்.:–**

அகம் – அகன்; நிலம் – நிலன் என வரும்.

இவ்விறுதிப் போலியை முற்கூறியதனால், சுரும்பு–சுரும்பர்; வண்டு–வண்டர் என மென்றொடர்க் குற்றியலுகரப் பெயரிறுதி யுகரம், அர் என்பதனோ டொத்து வருதலும்,

பந்தல் – பந்தர்; சாம்பல் – சாம்பர் எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரினிறுதி லகர மெய் ரகரமெய்யோடொத்து வருதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். அஃறிணைப் பெயரின் இறுதி மகரம்** – பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகரமெய், **னகரமோடு உறழா நடப்பன உள** – னகரமெய்யொடு ஒத்து நடப்பனவுஞ் சிலவுளய, **எ–று.**

மகரம் னகரத்தோடொத்தலாவது பெயரினிறுதியிலே மகரமெய் நின்றவிடத்து னகரமெய் வந்து நிற்பினும் பொருள் வேற்றுமையின்றி யொத்தலாம். இம்மகரம் குறிலிணைக் கீழ் மகரமென்றறிக.

**உ–ம்.:–**

அகம் = அகன் ; நிலம் = நிலன்; பலம் = பலன்;

கலம் = கலன்; அறம் = அறன் என வரும்.

அஃறிணைப் பெயரினிறுதி மகரம் னகரத்துடனொத்து நடவாதன பலவுளவாதலின் உறழாது நடப்பன என்னுந் தொடரும் நிலைமொழியீறு குறைந்து உறழா நடப்பன என்று நிற்குமாதலின் அது அவ்விருபொருட்கு மியைய அவ்வாறு கூறினார்.

**ஒவ்வாது வருதற்கு உதாரணம்:–**

வட்டம், குட்டம், மாடம், கூடம், பாடம் என்பனவாம். இவை வட்டன், குட்டன், மாடன், கூடன், பாடன் என்று வரமாட்டா. அகலம், படம், கமலம் என்று குறிலிணையைச் சார்ந்து வந்தும் னகர வொற்றொடு ஒவ்வாது வந்த மகரங்களுமுண்டு. இவ்வாறே பிறவுங் கண்டாராய்க.

தலைதடுமாற்றமாக இவ்விறுதிப் போலியை முற்கூறியதினால், சுரும்பு = சுரும்பர்; வண்டு = வண்டர் எனச் சில மென்றொடர்க் குற்றியலுகரப் பெயரிறுதி உகரம் அர் என்பதனோடொத்து வருதலும், பந்தல் = பந்தர், சாம்பல் = சாம்பர், குடல் = குடர் எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரினிறுதி லகரமெய் ரகர மெய்யோடொத்து வருதலுங் கொள்க.

தலை தடுமாற்ற வகை பற்றிக் கொள்ளப்பட்ட இந்த மகரங்களும், பலவெழுத்தின் பின் வந்தனவே என்றும் அவற்றுள்ளும் சிலவே யாகுமன்றி அனைத்துமாவன வல்லவெனவும் கண்டுணர்க.

## வை.மு. சடகோபராமாநுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: அஃறிணைப் பெயரின்** – பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து, **இறுதி மகரம்** – ஈற்றிலே நின்ற மகரமெய், **னகரமோடு உறழா** – னகர மெய்யயோடு ஒத்து, **நடப்பன** – நடப்பவை, **உள** – உண்டு; **எ—று.** அது, போலி யெனப்படும். இம் மகரம் குறிலிணைக்கீழ் வருவ தென்று **உரையிற் கோடலென்னும்** உத்தியாற் கொள்க.

உரையிற் கோடல்–சூத்திரத்திற் சொல்லப்படாத பொருளை அதன் உரையினால் அமைத்துக்கொள்ளுதல்.

**உ—ம்:—**

அகம் = அகன், கலம் = கலன், நிலம் = நிலன்.

போலியாவது, ஒருசொல்லில் ஓர் எழுத்து உள்ளவிடத்தில் அவ்வெழுத்துக்கு ஈடாக வேறோர் எழுத்து நின்றாலும் பொருள்வேறுபடாமல் ஒத்திருப்பது; போலி – போல நிற்பது. அது, மொழியின் முதல் இடை கடைகளால் மூன்று வகைப்படும்.

முதற்போலி இடைப்போலிகளின் பின் முறையே சொல்ல வேண்டிய இவ்விறுதிப் போலியை முன்னே சொன்னதனால், சுரும்பு = சுரும்பர், வண்டு = வண்டர், சிறகு = சிறகர், இடக்கு = இடக்கர், வெற்பு = வெற்பர் எனச் சில குற்றியலுகரப் பெயரினிறுதி உகரத்துக்கு 'அர்' என்பது போலியாக வருதலும்; பந்தல் = பந்தர், சாம்பல் = சாம்பர், குடல் = குடர் எனச் சில பெயரினிறுதி லகர மெய்க்கு ரகர மெய் போலியாக வருதலும்; திறம் = திறல், மறம் = மறல், பக்கம் = பக்கல், கூவம் = கூவல் எனச் சில பெயரினிறுதி மகரமெய்க்கு லகர மெய் போலியாக வருதலும்; மதில் = மதிள் எனச் சிறுபான்மை லகரத்துக்கு ளகரம் போலியாக வருதலும் முதலியன கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ—ள். அஃறிணைப் பெயரின் இறுதி மகரம் – பால்பகாவஃறிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகர மெய், னகரமோடு உறாா நடப்பன உள – னகர மெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு. எ—று.

போலியாவது, ஒரு சொல்லி லஓர் எழுத்து உள்ள இடத்தில் அவ்வெழுத்துக்குப் பதிலாக வேறோர் எழுத்து வந்து நின்றாலும் பொருள் மாறாம லிருப்பதாம்.

மகரம் னகரத்தோ டொத்தலாவது, பெயரினிறுதியிலே மகரம் நின்ற விடத்து னகரம் வந்து நிற்பினும் வேற்றுமையின்றி யொத்தலாம். இம்மகரங் குறிலிணைக் கீழ் மகரமென்றறிக.

உ—ம். அகம் – அகன்; நிலம் – நிலன்; பலம் – பலன்.

இவ்விறுதிப் போலியை முற்குறியதனால், சுரும்பு –சுரும்பர், வண்டு – வண்டர், சிறகு – சிறகர், மாது– மாதர், இடக்கு – இடக்கர், எனச் சில குற்றியலுகரப் பெயரிறுதி யுகரம் அர் என்பதனோ டொத்து வருதலும், பந்தல்– பந்தர், சாம்பல் – சாம்பர் எனச் சில லகர மெய்யீற்றுப் பெயரி னிறுதி மெய் ரகர மெய்யோடொத்து வருதலுங் கொள்க.

## கோவிராமலிங்கத்தம்பிரான்

**இ—ள்.:– அஃறிணைப் பெயரின்** – பால் பகர அஃறிணைப் பெயர்களிடத்து, இறுதி மகரம்—ஈற்றிலே நின்ற மகரமெய்யானது, னகர மோடு உறழா – னகர மெய்யோடு ஒத்து, நடப்பன உள—நடப்பவை உண்டு. **எ—று.**

**பொ—ரை.:–**

பால் பகர அஃறிணைப் பெயர்களில் இறுதியில் நின்ற மகர மெய்யானது, னகரமெய்யோடு ஒத்து நடப்பனவும் சில உண்டு.

**உ—ம்.:–**

அகம் = அகன்.

நிலம் = நிலன்.

போலியாவது—ஒரு சொல்லில் ஓர் எழுத்து உள்ள இடத்தில் அவ்வெழுத்துக்கு ஈடாக வேறோர் எழுத்து நின்றாலும் பொருள் வேறுபடாமல் ஒத்திருப்பது, போலி—போல நிற்பது,

அது மொழிமுதல் இடை கடைகளால் மூன்றுவகைப்படும்.

மகரம் னகாரத்தோடு ஒத்தலாவது, பெயரின் இறுதியிலே மகரம் இருந்த இடத்து னகரம் வந்திருந்தாலும் பொருள் வேறு படாமல் ஒத்தலாம். இம் மகரம் இரண்டு குறிற் கீழ்ச் சேர்ந்து வருவதென்று உரையிற்கோட லென்னு முத்தியால் அறிக. (உரையிற் கோடல் – சூத்திரத்திற் சொல்லப்படாத பொருளை அதன் உரையினா லமைத்துக் கொள்ளுதல்.) இவ்விறுதிப் போலியை முன்னே சொல்லுதலால் மென்றொடர்க் குற்றியலுகரப் பெயரிறுதி உகரம் 'அர்' என்பதனோடு ஒத்து வருதலும், சில லகர மெய்யீற்றுப் பெயரினிறுதி லகர மெய் ரகரமெய்யோடு ஒத்து வருதலுங் கொள்க.

**உ–ம்:–**

| | | |
|---|---|---|
| சுரும்பு | = | சுரும்பர். |
| வண்டு | = | வண்டர். |
| சிறகு | = | சிறகர். |
| இடக்கு | = | இடக்கர். |
| வெற்பு | = | வெற்பர். |

எனச் சில குற்றியலுகரப் பெயரி னிறுதி உகரத்துக்கு அர் என்பது போலியாக வருதலும்; பந்தல் = பந்தர், சாம்பல் = சாம்பர், குடல் = குடர் எனச் சில பெயரினிறுதி லகரமெய்க்கு ரகரமெய் போலியாக வருதலும்; திறம் = திறல், மறம் = மறல், பக்கம் = பக்கல், கூவம் = கூவல் எனச் சில பெயரினிறுதி மகரமெய்க்கு லகர மெய் போலியாய் வருதலும்; மதில் = மதிள் என லகரத்திற்கு ளகரம் போலியாய் வருதலும் முதலியன கொள்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**அஃறிணைப் பெயரின்** – பால்பகா அஃறிணைப் பெயர்களில், **மகர இறுதி**–ஈற்றில் நின்ற மகரமெய், **னகரமோடு** – னகரமெய்யோடு, **உறழா**–ஒத்து, **நடப்பன** – நடப்பவை, **உள** – உண்டு.

போலியாவது, ஒருமொழியில் ஓர் எழுத்து நிற்குமிடத்தில் அந்த எழுத்துக்கு ஈடாக வேறோர் எழுத்து வந்தாலும் பொருள் வேறுபடாமல் இருப்பது;

போலி – போன்றிருப்பது. அஃது இடவகையால் – முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என மூவகைப்படும்.

இங்கு மகரம் குறிலிணையைச் சேர்ந்து வருவது என்றறிக.

**உதாரணம்**

அகம் – அகன், நிலம் – நிலன்.

இவ்விறுதிப்போலியை முன்னே சொல்லுதலால்,

| | | |
|---|---|---|
| சுரும்பு | – | சுரும்பர் |
| வண்டு | – | வண்டர் |
| சிறகு | – | சிறகர் |
| இடக்கு | – | இடக்கர் |

எனச் சில பெயர்களின் இறுதியிலுள்ள குற்றியலுகரம் அர் என்பதனோடு ஒத்து வருதலும்,

பந்தல் – பந்தர்

சாம்பல் – சாம்பர்

எனச் சில பெயர்களின் இறுதியிலுள்ள லகரமெய் ரகரமெய்யோடு ஒத்து வருதலுங் கொள்க.

## மோசகு பொன்னையா

மகர வீற்று அஃறிணைப் பெயர்களுள் னகர வீற்றவாக வழங்குவனவும் உண்டு, எ–று.

குறிலிணை முன்னர் வரும் மகர ஒற்றே இவ்வாறு மயங்கி வரும் எனக் கொள்க.

எ–டு.

அகம் –அகன்; முகன் – முகன்; நிலம் –நிலன்; கலம் – கலன்; வலம் – வலன்.

இவ்வாறு மயங்குதல் தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்ட வழக்கு என்பது,

**மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**

**னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப**

**புகரறக் கிளந்த அஃறிணை மேன,**

என்னும் நூற்பாவால் விளங்கும். னகர ஈறு மகர ஈறாகின்றது என்பது தொல்காப்பியர் கருத்தாக இருக்க, இவ்வாசிரியர் மகர ஈறு னகர ஈறாக மாறுகின்றது என்று கூறினார்.இவ்வாசிரியர் கொள்கையை ஏற்காத இலக்கண விளக்க முடையார்,

***னகர விறுதி அஃறிணைப் பெயருள்***

***மகரமொடு மயங்கி வருநவும் உளவே,***

எனக் கூறினார். இலக்கண விளக்கச் சூறாவளியில் அவர் கொள்கை மறுக்கப்படாமையின், சிவஞான முனிவருக்கும் நன்னூலார் கொள்கை உடன்பாடன்று என்பது ஒருதலை.

ஈற்றுநிலை எழுத்துக்களில், இவை மபங்கும் என்றாராக, சுரும்பு – சுரும்பர்; சாம்பல் – சாம்பர் எனவிவ்வாறு விகுதிமேல் விகுதி பெற்றும், வேறு விகுதி பெற்றும் வரும் சொற்களையும் எடுத்துக்காட்டி உரைப்பதன் பொருந்தாமையை உணர்க. இவற்றுள் முன்னதன் சுட்டில்லா மாற்றொலியாகப் பின்னதைக் கொள்க.

(67)

## 122. அஐ முதலிடை யொக்குஞ் சஞய முன்.

அ ஐ முதல் இடை ஒக்கும் ச ஞ ய முன்.

a ai muṭal itai okkum sa ña ya mun̲.

### இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Substitute in the beginning and in the middle**

A and 'ai' may be interchanged in the beginning and middle of words, when followed by c, and ñ y.

### ஒப்புமைப் பகுதி

சஞய முன் அஐ யாகு முதலிடை

(மு. வீ. : 112)

### மயிலை நாதர்

இதுவுமது.

**இ–ள்.:** மொழிக்கு முதலினும் இடையினுநின்ற அகர ஐகாரங்கள் தம்மில் வேறுபாடின்றி ஒக்கும், சகர ஞகர யகரங்கள் முன்வரின், எ – று.

ஈண்டு முன்னென்றது காலமுன் எனக் கொள்க.

வ – று.:

பசல், பைசல்; மஞ்சு, மைஞ்சு; [1]மயல், மையல்; எனவும், அரசு, அரைசு, முரஞ்சு, முரைஞ்சு, அரயர், அரையர் எனவும் வரும்.

---

பாட வேறுபாடு :-

1. அயர், ஐயர்

## சங்கர நமச்சிவாயர்

**எ - னின்.** மொழிமுதற் போலியும் மொழியிடைப் போலியும் **உணர் - ற்று.**

**இ-ள்.:** மொழிமுதலினும் இடையினும் அகர ஐகாரங்கள் வேற்றுமையின்றி ஒத்து நடப்பனவாம், சகர ஞகர யகரங்கட்கு முன்னர் வருமாயின். **எ-று.**

ஈண்டு முன் என்றது காலமுன் எனக் கொள்க.

**உ - ம்.:-**

பசல் - பைசல். மஞ்சு - மைஞ்சு. மயல் - மையல். எனவும்;
அமச்சு - அமைச்சு. இலஞ்சி - இலைஞ்சி. அரயர் - அரையர்
எனவும் வரும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** அகரமும் ஐகாரமும் ஒரோவிடத்துத் தம்மில் வேறுபாடில்லை என உரைத்தது.

**இ–ள்.:– அ ஐ முதலிடை –** அகரமும் ஐகாரமும் மொழிக்கு முதலினும் மொழிக்கு இடையினும், **ஒக்கும் –** தம்மில் வேறுபாடின்றி ஒத்து நடக்கும், **ச ஞ ய முன் –** சகர ஞகர யகரங்கள் முன்னாக வந்த விடத்து, **எ–று.**

**உ–ம்.:–**

பசல், பைசல், மஞ்சு, மைஞ்சு, முரஞ்சு, முரைஞ்சு; அரயர்,
அரையர் எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

**இது,** மொழிமுதற் போலியும் இடைப்போலியும் உணர்த்துகின்றது.

**இ–ள்.: அஐ –** அகரமும் ஐகாரமும், **முதல் –** சொல்லுக்கு முதலிலும், **இடை –** நடுவிலும், **ஒக்கும் –** வேறுபாடில்லாம லொத்து நடக்கும், **சஞயமுன் –** சகர ஞகர யகரங்களுக்கு முன் வந்தால், **எ – று.**

**உ–ம்.:–**

பசல் – பைசல், மஞ்சு – மைஞ்சு, மயல்– மையல் எனவும்,
அமச்சு–அமைச்சு, இலஞ்சி – இலைஞ்சி, அரயர்–அரையர்
எனவும், வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*அகரவுயிர் எங்கேநின்றவிடத்து எவ்வுயிர்வந்து ஒத்துநடக்கும்?*

அஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்

(அஐ முதலிடை ஒக்குஞ் ச ஞ ய முன்.)

**இ—ள்.:— முதல் இடை—** சொல்லுக்கு முதலிலும் நடுவிலும், **அ ஐ ஒக்கும் ச ஞ ய முன் —** அகரமுன் ஐகாரமும் வேறுபாடின்றி ஒத்துநடக்கும். சகர ஞகர யகரங்களுக்கும் முன்வருமாயின், **எ—று.**

**உ—ம்.:—**

பசல்—பைசல், மஞ்சு— மைஞ்சு, மயல் —மையல் எனவும், அமச்சு —அமைச்சு; இலஞ்சி — இலைஞ்சி; அரயர்— அரையர் எனவும் வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

இது, மொழிமுதற் போலியும் மொழியிடைப் போலியு முணர்த்துகின்றது.

**இ—ள்.: அ ஐ முதலிடையொக்கும் —** அகர ஐகாரங்கள் மொழிமுதலிலும் மொழியிடையிலும் (வேற்றுமையின்றி) ஒத்து நடக்கும், **ச ஞ ய முன் —** சகர ஞகர யகரங்களுக்கு முன் வருமாயின், **எ — று.**

இங்கே முன்னென்றது காலமுன் எனக் காண்க. எவ்வாறெனின், இறந்த காலம் பட அகர ஐகாரங்களானவை அம் மூன்றிற்கும் முன்னிற்குமாயினென்க.

**உ—ம்.:—**

பசல் பைசல், மஞ்சு மைஞ்சு, மயல் மையல் என வருமிவை மொழிமுதற் போலி. அமச்சன் அமைச்சன், இலஞ்சி இலைஞ்சி, அரயன் அரையன் என வருமிவை மொழியிடைப் போலி, பிறவுமன்ன.ஒக்கும் என்பதை யொத்து நடக்குமென விரித்து அகர ஐகாரங்களை யெழுவாயாக்கி முடித்துக் கொள்க.

இனி இச்சூத்திரத்தில் அகரத்தை முன் வைத்ததினாலும், பசல் மஞ்சு மயல் அரசன் என்பன வழக்காதலாலும், அகரம் இயற்கை யெனவும் ஐகாரம் போலி யெனவும் காண வேண்டுதலால் அகரமானது ஐகாரத்தை யொத்து நடக்கு மென்பதே தெளிவு.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :– முதல் இடை** – (சொல்லுக்கு) முதலிலும் நடுவிலும், **அ ஐ** – அகரமும் ஐகாரமும், **ச ஞ ய முன்** – சகர ஞகரயங்களுக்கு முன் (வந்தால்), **ஒக்கும்** – வேறுபாடின்றி ஒத்து நடக்கும்.

**குறிப்பு** :– இங்கு முன் – காலமுன்.

**உதாரணம் :–**

**முதற்போலி :–** பசல் – பைசல்; மஞ்சு – மைஞ்சு; மயல் – மையல்.

**இடைப்போலி :–** அமச்சு – அமைச்சு; இலஞ்சி – இலைஞ்சி; அரயர் – அரையர்.

'அ ஐ ஒக்கும்' எனப் பொதுப்படக் கூறியதனால், வைச்ச – வச்ச; ஐஞ்சு – அஞ்சு; பைய – பய என ஐகாரத்துக்கு அகரம் போலியாதலும், சிறுபான்மை பழைமை – பழமை; இளைமை – இளமை எனப் பிற எழுத்தின் முன் இவ்வாறு வருதலுங் கொள்க.இனி இச் சூத்திரத்தில், அகரத்தை முன்வைத்ததனாலும், 'அரயன்', 'மயல்' என்றே வழங்குதலாலும், அகரம் இயற்கை என்பதும் ஐகாரம் போலி என்பதும் தெளிவென்க.

## ஆறுமுக நாவலர்

**இ – ள்.: முதல் இடை**– சொல்லுக்கு முதலிலும் நடுவிலும், **அஐ ஒக்கும்**– அகரமும் ஐகாரமும் வேறுபாடின்றி ஒத்து நடக்கும், **ச ஞ ய முன்** – சகர ஞகர யகரங்களுக்கு முன் வருமாயின், **எ – று**.

இங்கே முன் என்றது காலமுன் எனக்கொள்க.

**உ–ம்.:–**

பசல் – பைசல்; மஞ்சு – மைஞ்சு; மயல் – மையல். எ –ம். அமச்சு – அமைச்சு; இலஞ்சி – இலைஞ்சி, அரயர் – அரையர். எ – ம். வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். முதல் இடை** – சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் – **அ ஐ ஒக்கும்** – அகரமும் ஐகாரமும் வேறுபாடின்றி ஒத்து நடக்கும், **ச ஞ ய முன்** – சகர ஞகர யகரங்களுக்கு முன்வருமாயின். **எ–று**.

இங்கே முன் என்றது கால முன்னை.

உ-ம்.:-

பசல்—பைசல்; மஞ்சு — மைஞ்சு; மயல்—மையல் என முதலில் ஒத்து வந்தன. அமச்சு — அமைச்சு; இலஞ்சி — இலைஞ்சி; அரயர் — அரையர் என இடையில் ஒத்து வந்தன. இயற்கை அகரத்துக்கு ஐகாரம் போலியாய் வந்ததன்றி ஐகாரத்துக்கு அகரம் போலியாய் வந்ததன்று என்றறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ-ள்.: அ ஐ** - அகரமும் ஐகாரமும், **முதல் இடை**-(சொல்லுக்கு) முதலிலும் நடுவிலும். **ச ஞ ய முன்** - சகர ஞகர யகரங்களுக்கு முன், **ஒக்கும்** - (தம்முள் வேறுபாடில்லாமல்) போலியாக வரும்; **எ-று.**

இங்கு 'முன்' என்றது, காலமுன் எனக் கொள்க. *(இவ்வியலில்35,41,56,65 - இச் சூத்திரங்களில் 'முன்' என்றதற்கும், இச் சூத்திரத்தில் 'முன்' என்றதற்கும் உள்ள பொருள்வேறுபாடு நுட்பமாக நோக்கத் தக்கது.)

உ-ம்.:-

| **முதற்போலி** | **இடைப்போலி** |
|---|---|
| பசல் = பைசல் | அரசு = அரைசு |
| மஞ்சு = மைஞ்சு | இலஞ்சி = இலைஞ்சி |
| மயல் = மையல் | அரயர் = அரையர். |

'அ ஐ ஒக்கும்' எனப் பொதுப்படக் கூறியதனால், வைச்ச-வச்ச, ஐஞ்சு-அஞ்சு, பைய-பய எனச் சகர ஞகர யகரங்களின் முன் ஐகாரத்துக்கு அகரம் போலியாக வருதலும் கொள்க. இனி, சிறுபான்மை பழமை - பழைமை, இளமை - இளைமை எனப் பிற எழுத்தின் முன்னும் இவ்வாறு வரும்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். முதல் இடை** — சொல்லுக்கு முதலிலும் நடுவிலும், **அ ஐ ஒக்கும்** — அகரமும் ஐகாரமும் வேறுபாடின்றி ஒத்து நடக்கும், **ச ஞ ய முன்** — சகர ஞகர யகரங்களுக்கு முன வருமாயின், **எ—று.**

இங்கே முன் என்றது காலமுன் எனக் கொள்க.

உ–ம்.:–

| முதற்போலி | | | இடைப்போலி | | |
|---|---|---|---|---|---|
| பசல் | – | பைசல் | அமச்சன் | – | அமைச்சன் |
| மஞ்சு | – | மைஞ்சு | இலஞ்சி | – | இலைஞ்சி |
| மயல் | – | மையல் | அரயன் | – | அரையன் |

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:–** அ ஐ – அகரமும் ஐகாரமும், **முதல் இடை** – (சொல்லுக்கு) முதலிலும் நடுவிலும், **ச ஞ ய முன்** – சகர ஞகர யகரங்களுக்கு முன் வந்தால், **ஒக்கும்** – (வேறுபாடில்லாமல்) ஒத்து நடக்கும், **எ–று.**

**பொ–ரை.:–**

அகரமும் ஐகாரமும் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் சகர, ஞகர, யகரங்களின் முன் வந்தால் ஒத்து நடக்கும்.

உ–ம்.:–

பசல் = பைசல்.

மஞ்சு = மைஞ்சு.

மயல் = மையல்.

அமச்சு = அமைச்சு.

இலஞ்சி = இலைஞ்சி.

அரயர் = அரையர்.

இங்கே முன் என்றது காலமுன் எனக் கொள்க. அ ஐ ஒக்கும் எனப் பொதுப்படக் கூறியதனால், வைச்ச – வச்ச, ஐஞ்சு – அஞ்சு, பைய – பய எனச் சகர ஞகர யகரங்களின் முன் ஐகாரத்துக்கு அகரம் போலியாக வருமெனக் கூறுவாரு முளர். இச் சூத்திரத்தில் அகரத்தை முன் வைத்ததினாலும் பசல், மஞ்சு, மயல், அரசன் என்பன வழக்காதலாலும் அகரம் இயற்கை யெனவும், ஐகாரம் போலியெனவும் காணவேண்டுதலால் அகரமானது ஐகாரத்தை ஒத்து நடக்குமென்பதே துணிபு.

இனி, சிறுபான்மை பழமை – பழைமை, இளமை – இளைமை என பிற எழுத்தின் முன்னும் இங்ஙனம் வரும்.

## கா. நமச்சிவாய முதலியார்

**அ ஐ** – அகரமும், ஐகாரமும், **முதல்** – (சொல்லுக்கு) முதலிலும், **இடை** – நடுவிலும், **சஞயமுன்** – சகர ஞகர யகரங்களுக்கு முன்வந்தால், **ஒக்கும்** – (வேறுபாடில்லாமல்) ஒத்து நடக்கும்.

**உதாரணம்**

| முதல்: | இடை: |
|---|---|
| பசல் – பைசல், | அமச்சு – அமைச்சு, |
| மஞ்சு – மைஞ்சு, | இலஞ்சி – இலைஞ்சி, |
| மயல் – மையல், | அரயர் – அரையர். |

## மோசசு பொன்னையா

மொழி முதல் இடைகளில் சஞய என்னும் மெய்களின் முன்னர் வரும் அகரமும் ஐகாரமும் தம்முள் மயங்கி நடக்கும், எ–று.

**எ–டு. :–**

பசல் – பைசல், மஞ்சு – மைஞ்சு, மயல் – மையல், அமச்சு – அமைச்சு, இலஞ்சி – இலைஞ்சி, அரயர் – அரையர்.

ஐகாரம் சொற்களுள் ஒரு மாத்திரையாகவும் ஒலிக்கும் என்பர் தொல்காப்பியரும் இந்நூலாசிரியரும். ஐகாரம் அகரம் போல் ஒலித்தலையே அவர்கள் குறிப்பிடுகின்றனர். ஒலிக்கேற்ப எழுத்து வடிவம் பெற்று ஐகாரம் இவ்வாறு அகரமாக எழுதப் படுகிறது என்று கொள்ளுதலே பொருந்தும். கல்வெட்டுக் களில் அம்பத்தொன்றாவது புடவை, அஞ்ஞூறு, அஞ்சு என்ற சொற்கள் பயின்று வருகின்றன. 95ஆம் நூற்பா உரை பார்க்க.

**(68)**

123. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே

ஐகான் யவ் வழி நவ்வொடு சில் வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே

aikā̲n yav vaḻi navvotu sil vaḻi
ñakhkā̲n uṟaḻum e̲nmarum uḷarē

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

### Substitute in the middle

There are also those who say that in a few cases 'n' and ñ' may be interchanged after 'ai' and 'y'.

## ஒப்புமைப் பகுதி

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மனார் புலவர் (தொல்)

## மயிலைநாதர்

இதுவுமது.

இ-ள்.: ஐகாரமே யகரமே யென்றிவற்றின் வழியே வரும் நகரத்துடன் ஞகரம் சில விடங்களில் உறழ்ந்து வரப்பெறு மென்பாரும் உளர். எ-று.

உம்மையான் உறழா தென்பாரும் பெரும்பாலாரெனக் கொள்க.

வ - று.:-

ஐஞ்நூறு, மைஞ்லம், பைஞ்ஞன்று, கைஞ்ட்சி எனவும்.
[1]செய்ஞ்ஞன்றி, மெய்ஞ்ஞன்று, பொய்ஞ்ன்றான்

பாட வேறுபாடு.:- 1.செய்ஞ்ஞான்றது.

செய்ஞ்ன்டது காய்ண்டது எனவும் வரும். உறழ்ச்சியான்,

ஐந்நூறு. மைந்நீலம், செய்ந்நன்றி, மெய்ந்நன்று என்றற் றொடக்கத்தனவும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், இதுவும் மொழியிடைப்போலி, உணர்–ற்று.

இ—ள்.: மொழியிடைக்கண் சிலவிடத்து ஐகாரத்தின் பின்னும் யகர ஒற்றின் பின்னும் இயல்பாய் வரும் நகரத்தோடு ஞகரம் உறழும் என்று சொல்லுவாரும் உளர், எ — று.

இப் போலி அருகி வருதலின் சில்வழி என்றும், எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததன்றாகலின் என்மரும் என்றும் கூறினார்.

உ—ம்.:—

*செய்ஞ்ன்ற நீல மலர்கின்ற*
*தில்லைச்சிற் றம்பலவன்*
*மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள்*
*கண்டு மகிழ்ந்துநிற்க*
*நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த*
*நீல மணிமிடற்றான்*
*கைஞ்ன்ற ஆடல் கண்டால் பின்னைக்*
*கண்கொண்டு*

காண்பதென்னே எனவும், ஐஞ்ஞூறு எனவும் வரும். இச் சூத்திரம் பிறன்கோட் கூறல் என்னும் உத்தி.

*"மண் யாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே"*

*"மண் ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே"*

எனவும்,

*"பொன் யாத்த தாரப் புரவி பரிக்குமே"*

*"பொன் ஞாத்த தாரப் புரவி பரிக்குமே"*

எனவும் வருமொழி வினைக்கு முன்னர் யா நின்ற

நிலைக்களத்து ஞா நிற்பினும் ஒக்கும் போலிக்கு, ஆசிரியர் தொல்காப்பியர்,

***"ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும் வினையோ ரனைய என்மனார் புலவர்"***

எனச் சூத்திரஞ் செய்தவாறு, இவ்வாசிரியரும் சூத்திரம் செய்யாதொழிதல் இறந்தது விலக்கல் என்னும் உத்தி. பிறவும் அன்ன.

இம் மூன்று சூத்திரத்தானும் கூறிய போலிகளை இடைநிலை மயக்கத்தின்பாற்படுத்துப் பொருள் கூறுவாரும் உளர்.

இங்ஙனங் கூறிய எழுத்துக்கள் மொழிக்கு உறுப்பாகி, ஒன்று நின்ற நிலைக்களத்து மற்றொன்று அதுபோல மொழி நிரப்ப நிற்ப தன்றி, ஒன்றோடொன்று மயங்கி இரண்டெழுத்தும் உடன்நிற்பது இன்மையானும், முதலீறிடைநிலைகட்குப் புறனடையும் கூறிக் குறைவறுத்தமையானும் '***உறழா நடப்பன***' என்றும், '***ஒக்கும்***' என்றும், '***உறழும்***' என்றும் உவமவுருபு கொடுத்து இம் மூன்று சூத்திரத்தும் கூறுதலானும் அது பொருந்தாதென்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவும் ஒரோ மயக்கம் கூறியது.

**இ–ள்.: ஐகரன் யவ்வழி** – ஐகாரத்தின் பின்னும் யகாரத்தின் பின்னும் வரும், **நவ்வொடு சில்வழி** – நகரத்துடனே சில இடங்களில், **ஞஃகானுறழும்** – ஞகாரம் பொருந்தி வரப் பெறும், **என்மரும் உளரே** – என்று சொல்லுவாரும் உளர், எ–று.

**உ–ம்.:–**

***செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்***

***மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க***

*நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல*

*மணிமிடற்றான்*

*கைஞ்ஞின்ற ஆடல்கண்டாற் பின்னைக்*

*கண்கொண்டு காண்பதென்னே*

எனவும், உறழ்ச்சியான் மை நீலம், மெய் நானம் எனவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** மொழியிடைப்போலி உணர்த்துகின்றது,

**இ—ள்.: சில்வழி**—சொல்லுக்கு நடுவே சிலவிடத்து, **ஐகான் வழி** — ஐகாரத்தின்பின்னும், **யவ்வழி**—யகரமெய்யின் பின்னும், **நவ்வொடு** — இயல்பாய் வரும் நகர மெய்யினோடு, **ஞஃகான்**—ஞகரமெய்யானது, **உறழும்**—ஒத்து நடக்கும், **என்மரும்** — என்று சொல்லுவாரும், **உளர்**—சிலருண்டு, எ—று.

உ—ம்.:

*செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற்*

*றம்பலவன்*

*மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு*

*மகிழ்ந்துநிற்க*

*நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல*

*மணிமிடற்றான்*

*கைஞ்ஞின்ற ஆடல்கண்டால் பின்னைக்*

*கண்கொண்டு காண்பதென்னே*

எனவும்,ஐஞ்ஞூறு எனவும் வரும். மண்யாத்த—மண்ஞாத்த, பொன்யாத்த பொன்ஞாத்த என வரும். போலிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கணஞ் சொன்னபடி இந்நூலாசிரியர் சொல்லாமல் விட்டது **"இறந்தது விலக்கல்"** என்னுமுத்தி.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*நகரமெய் எங்கே நின்ற விடத்து எந்த மெய் வந்து ஒத்து நடக்கும்?*

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி

ஞஃகா னுறழு மென்மரு முளரே

(ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி

ஞஃகான் உறழும் என்மரும் உளரே)

**இ–ள்.: சில்வழி** – சொல்லுக்கு நடுவே சிலவிடத்து, **ஐகான்வழி யவ்வழி** – ஐகாரத்தின் பின்னும் யகரமெய்யின் பின்னும், **நவ்வொடு ஞஃகான் உறழும் என்மரும் உளர்** – இயல்பாய் வரும் நகர மெய்யினோடு ஞகர மெய் ஒத்துநடக்கும் என்று சொல்வாருஞ் சிலருண்டு, **எ–று.**

**உம்.:–**

" செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன் மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான் – கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே"

எனவும், சேய்நலூர் – சேஞ்லூர், ஐந்நூறு – **ஐஞ்ஞூறு** எனவும் வரும்.

இப்படி வருவன வேறுமுளவோ?

ணகர னகர மெய்களின்முன் வருமொழி வினைச்சொல்லின் முதலிலே யா நினறவிடத்து ஞா வந்துநிற்பினு மொக்கும்.

**உ – ம்.:–**

மண்யாத்த மண்ஞாத்த, பொன்யாத்த – பொன்ஞாத்த என வரும்.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இந்நூ** மொழியிடைப் போலி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: சில்வழி** – (மொழியிடையிலே) சிலஇடத்து, **ஐகான்யவ் வழி** – ஐகரத்தின் பின்னும் யகரத்தின் பின்னும், **நவ்வொடு** – இயல்பாய் வருகின்ற நகரத்தோடு, **ஞஃகான்** – ஞகரமானது, **உறழுமென்மரு முளர்** – ஒத்து நடக்குமென்று சொல்வாரு முண்டு, **எ – று.**

**உ –ம்.:–**

மைந்நின்ற **மைஞ்ஞின்ற,** கைந்நின்ற **கைஞ்ஞிஞின்ற,** செய்ந்நின்ற **செய்ஞ்ஞின்ற,** நெய்ந்நின்ற **நெய்ஞ்ஞின்ற**

என இவை செய்யுளிடத்து வந்தன. ஐந்நூறு ஐஞ்ஞூறு இதுவழக்கிடம், இச்சூத்திரம் **பிறன்கோட்கூறலென்னும்** உத்தி, மண்யாத்தகோட்டமழகளிறு மண்ஞாத்தகோட்ட மழகளிறு, பொன்யாத்ததார் பொன்ஞாத்ததார்' என யா நின்ற இடத்து ஞா நிற்பினும் அமையுமெனத் தொல்காப்பியனார்,

*ணனவென் புள்ளி முன்யாவு ஞாவும்*

*வினையோ ரனைய வென்மனார் புலவர்*

எனச் சூத்தரஞ் செய்தவாறு இவர்செய்யாதொழிந்தது **இறந்ததுவிலக்கலென்னும்** உத்தி. **இனியுரையிற்கோடலென்னும்** உத்தியால் நண்டு ஞண்டு, ஞெண்டு, நயம் ஞயம், நாயிறு ஞாயிறு, நாஞ்சில் ஞாஞ்சில், நேயம் ஞேயம் என நகரத்திற்கு ஞகரம் வரும் மொழிமுதற் போலியும், ஆடு – யாடு, ஆறு – யாறு, ஆமை – யாமை, ஆனை – யானை என ஆகாரத்திற்கு யகரம் வரும் மொழிமுதற் போலியுங் கொள்க.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

**உரை :– சில்வழி** – (சொல்லுக்கு நடுவே) சிலவிடத்து, **ஐகான் (வழி)** – ஐகாரத்தின்பின்னும், **ய வழி** – யகரமெய்யின்பின்னும், **நவ்வொடு** – நகரமெய்யொடு, **ஞஃகான்** – ஞகரமெய்யானது, **உறழும்** – ஒத்து நடக்கும், **என்மரும்** – என்று சொல்வாரும், **உளர்** – சிலர் உண்டு.

**உ–ம் :–**

செய்ந்நின்ற – **செய்ஞ்ஞின்ற**, மைந்நின்ற – **மைஞ்ஞின்ற** எனச் செய்யுளிலும், ஐந்நூறு – **ஐஞ்ஞூறு** எனவழக்கிலும் வரும். இது பெரும்பாலும் தொடர்மொழிக்கென்று கொள்க. இச்சூத்திரம் **பிறன் கோட் கூறல்** என்னும் உத்தி.

**குறிப்பு:–**

மண்யாத்த – மண்ஞாத்த, பொன்யாத்த – பொன்ஞாத்த என்னும் போலிக்கு ஆசிரியர் **தொல்காப்பியர்** சூத்திரம் செய்தபடி இவ்வாசிரியர் செய்யாதது **இறந்துவிலக்கல்** என்னும் உத்தி.

இனி உரையிற்கோடல் என்னும் உத்தியால், நயம் –

ஞயம் என மொழிமுதல் நகரத்திற்கு **ஞகரமும், ஞண்டு – ஞெண்டு** என மொழிமுதல் அகரத்திற்கு எகரமும் போலியாதலும் கொள்க. இன்னும் ஐந்து – ஐஞ்சு, உய்ந்தனன் – உய்ஞ்சனன் என நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் போலியாதலும், பித்து – பிச்சு, வைத்த – வைச்ச எனத் நகரத்திற்குச் சகரம் போலி யாதலும், நேயம், நேசம் என யகரத்திற்குச் சகரம் போலியாதலும் அடங்குமாறு அறிந்து அமைத்துக் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: சில்வழி** - சொல்லுக்கு நடுவே சிலவிடத்து. **ஐகான் (வழி) யவ்வழி** - ஐகாரத்தின் பின்னும் யகர மெய்யின் பின்னும், **நவ்வொடு ஞகான் உறழும்** - இயல்பாய் வரும் நகர மெய்யினோடு ஞகர மெய் ஒத்து நடக்கும், **என் மரும்உளர்** - என்று சொல்வாருஞ் சிலருண்டு, **எ- று.**

**உ-ம்.:-**

***" செய்ஞ் ன்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற்***
***றம்பலவன்***
***மைஞ் ன்ற ஒண்கண் மலைமகள் கண்டு***
***மகிழ்ந்துநிற்க***
***நெஞ் ன் றெரியும் விளக்கொத்த நீல***
***மணிமிடற்றான்***
***கைஞ் ன்ற வாடல்கண்டால் பின்னைக்***
***கண்கொண்டு காண்பதென்னே"***

எனவும்,

**சேய்நலூர்-சேய்ஞலூர், ஐந்நூறு-ஐஞ் று**

எனவும் வரும்.

மண்யாத்த கோட்ட மழகளிறு - 'மண்ஞாத்த கோட்ட மழகளிறு' எனவும்,

பொன் யாத்த தார் - 'பொன்ஞாத்த தார்'

எனவும் ணகர னகர மெய்களின் முன் வருமொழி வினைச்சொல்லின் முதலிலே யா நின்றவிடத்து ஞா நிற்பினும் ஒக்கும். போலிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் சூத்திரஞ் செய்தபடி இவ்வாசிரியர் கூறாதொழிந்தது இறந்தது விலக்கலென்னும் உத்தி.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ—ள். சில் வழி** – சொல்லுக்கு நடுவே சிலவிடத்து, – **ஐகான்** (வழி) – ஐகாரத்தின் பின்னும், – **யவ் வழி** – யகர மெய்யின் பின்னும், – **நவ்வொடு ஞஃகான் உறழும்** – இயல்பாய்வரும் நகரமெய்யினோடு ஞகரமெய் ஒத்துநடக்கும், – **என்மரும் உளர்** – என்று சொல்வாருஞ் சிலருண்டு. எ—று.

உ—ம்.

"செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற்றம்பலவன், மைஞ்ஞின் றவொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க, நெய்ஞ்ஞின்றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான், கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே." என்னுங்கவியில் செய்ந்நின்ற, நெய்ந்நின்றெரியும் என யகரவொற்றின் பின்னின்ற இயல்பான நகரத்திற்கு ஞகரம் போலியாய் வந்ததும்; மைந்நின்ற, கைந்நின்ற என்பவைகளில் ஐகாரத்தின் பின்னின்ற இயல்பான நகரத்திற்கு ஞகரம் போலியாய் வந்ததுங் காண்க. சேய்நலூர் – சேய்ஞலூர்; ஐந்நூறு – **ஐஞ்ஞூறு** என்பனவும் யகரமெய்யின்பின் வந்த நகரத்திற்கு ஞகரம்போலியானதற்கும் ஐகாரத்தின் பின்னின்ற நகரத்திற்கு ஞகரம் போலியானதற்கும் முறையே உதாரணமாம்.

மண்யாத்தகோட்ட மழகளிறு, "மண்ஞாத்த கோட்ட மழகளிறு தாங்குமே." எனவும். பொன்யாத்த – "பொன்யாத்த தார்ப்புரவி பரிக்குமே" எனவும் ணகர மெய்யின் முன்னும், னகர மெய்யின் முன்னும் வருமொழி வினைச்சொல்லின் முதலிலே யா நின்றவிடத்து ஞா நிற்பினும் ஒக்கும் போலிக்கு. ஆசிரியர் தொல்காப்பியர்,

*ணனவென் புள்ளிமுன் யாவு ஞாவும்*

*வினையோரனைய வென்மனார் புலவர்*

ஏனச் சூத்திரஞ்செய்தபடி இவ்வாசிரியர் செய்யாதுவிட்டது இறந்தது விலக்கலென்னும் உத்தி.

## வை.மு. சடகோபராமானுசாசாரி
## சே. கிருஷ்ணமாசாரி

**இ–ள்.: சில் வழி** – (சொல்லுக்கு நடுவிற்) சிலவிடத்து, **ஐகான் ய வழி** – ஐகாரத்தின் பின்னும் யகர மெய்யின் பின்னும், **நவ்வொடு** – (வருகின்ற) நகர மெய்யோடு, **ஞஃகான்** – ஞகர மெய், **உறழும்** – போலியாக வரும், **என்மரும்**– என்று சொல்பவரும், **உளர்** – (சிலர்) உண்டு; **எ – று.**

**உ–ம்.:**

மைந்நின்ற = 'மைஞ்ஞின்ற' செய்ந்நின்ற = 'செய்ஞ்ஞின்ற'

கைந்நின்ற = 'கைஞ்ஞின்ற' நெய்ந்நின்று நெய்ஞ்ஞின்று,

ஐந்நூறு = ஐஞ்ஞூறு, சேய்நலூர்= சேய்ஞலூர்; வழக்கு.

இங்குக் கூறிய நகரம் பெரும்பாலும் தொடர்மொழியில் நிற்பதென அறிக. இச்சூத்திரம், **பிறன்கோட்கூறல்** என்னும் உத்தி.

(பிறன் கோள்கூறல்–பிறன்கொண்ட கொள்கையைத் தன்நூலிற் சொல்லுதல்) 'உம்மையான், உறழாதென்பார் பெரும்பால ரென்க' என்பது, பழையவுரை.

இனி, **உரையிற்கோடல்** என்னும் உத்தியால், நயம்=ஞயம், நாஞ்சில்=ஞாஞ்சில், நேயம் = ஞேயம், என மொழிமுதல் அகரத்துக்கு ஞகரமும், ஞண்டு=ஞெண்டு என மொழிமுதல் அகரத்துக்கு எகரமும் போலியாகவும் வரும்.

ஐந்து = அஞ்சு, உய்ந்தனன் = உய்ஞ்சனன் என நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் முறையே போலியாக வருதலும்; பித்து = பிச்சு, வைத்த=வைச்ச எனத் தகரத்துக்குச் சகரம் போலியாக வருதலும்; நேயம் = நேசம், கயம் = கசம் என யகரத்துக்குச் சகரம் போலியாக வருதலும் முதலியவற்றையும் அடங்கும் வழியறிந்து அமைத்துக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ—ள். **சில்வழி** — சொல்லுக்கு நடுவே சிலவிடத்து, ஐகான் (வழி) யவ்வழி — ஐகாரத்தின் பின்னும் யகர மெய்யின் பின்னும், நவ்வொடு **ஞஃகான் உறழும்** — இயல்பாய் வரும் நகரமெய்யினோடு ஞகர மெய் ஒத்து நடக்கும், **என்மரும் உளர்** — என்று சொல்வாரும் சிலருண்டு. எ—று.

உ—ம்.

**"செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற்**
**றம்பலவன்**
**மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு**
**மகிழ்ந்துநிற்க**
**நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல**
**மணிமிடற்றான்**
**கைஞ்ஞின்ற வாடல்கண்டாற் பின்னைக்**
**கண்கொண்டு காண்பதென்னே."**

**சேய்நலூர் — சேய்லூர்; ஐந்நூறு — ஐஞ்ஞூறு.**

மண்யாத்த கோட்ட மழகளிறு – "மண்ஞாத்த கோட்ட மழ களிறு." பொன் யாத்த தார் – "பொன்ஞாத்த தார்." என ணகர னகர மெய்களின் முன் வருமொழி வினைச்சொல்லின் முதலிலே யா நின்ற விடத்து ஞா நிற்பினும் ஒக்கும் போலிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் சூத்திரஞ் செய்தபடி இவ்வாசிரியர் கூறாதொழிந்தது 'இறந்தது விலக்கல்' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள். **சில்வழி** – (சொல்லுக்கு நடுவே) சில விடத்து, **ஐகான்** (வழி)– ஐகாரத்தின் பின்னும், **யவ் வழி**—யகர மெய்யின் பின்னும், **நவ்வொடு**—(இயல்பாய் வரும்) நகர மெய்யினோடு, **ஞஃகான்**—ஞகர, மெய்யானது, **உறழும்** – ஒத்து நடக்கும், **என்மரும்**—என்று சொல்வாரும், **உளர்**—சிலருண்டு. எ—று.

பொ—ரை.:

ஐகாரத்தின் பின்னும் யகர ஒற்றின் பின்னும் இயல்பாய் வரும் நகர ஒற்றொடு சில இடங்களில் ஞகர ஒற்று ஒத்து நடக்கும் என்று சொல்லுவாரும் உண்டு.

உ—ம்

மைந்நின்ற=மைஞ்ஞன்ற.— இவை செய்யுளிடத்து வந்தன.

கைந்நின்ற=மைகஞ்ஞன்ற.

செய்ந்நின்ற=செய்ஞ்ஞன்ற.

நெய்ந்நின்று=நெய்ஞ்ஞன்று

ஐந்நூறு=ஐஞ்ஞூறு, சேய் நலூர்=சேய்ஞலூர் இவை வழக்கிடம்.

"செய்ஞ்ஞன்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்

மைஞ்ஞன்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க

நெய்ஞ்ஞன் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்

கைஞ்ஞன்றவாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்ப தென்றே."

என்னும் இச்செய்யுளானு முணர்க.

இச்சூத்திரம் பிறன்கோட் கூறலென்னும் உததி. (பிறன் கோள் கூறல்0தன்னூவில் பிறனது கோட்பாட்டைச் சொல்லுதல்.)

மண்யாத்த=மண்ஞாத்த, பொன்யாத்த=பொன்ஞாத்த, என ணகர னகரங்களின் முன் வருமொழி வினைச்சொல்லின் முதலெழுத்து யா ஆக நின்றவிடத்து ஞா போலியாத வருதற்கு ஆசிரியர் தொல்காப்பியர் 'ணனவென் புள்ளி முன் யாவு ஞாவும் வினையோரனைய வென்மனார்புலவர்' என இலக்கணஞ் சொன்னபடி இந்நூலாசிரியர் சொல்லாமல் விட்டது இறந்தது விலக்கலென்னும் உத்தி. (இறந்தது விலக்கல்— முற்காலத்து வழங்கிய இலக்கணங்களில் பிற்காலத்து வழங்காததை விலக்குதல்.)

இனி, உரையிற்கோடலென்னும் உத்தியால் நண்டு-ஞண்டு; ஞெண்டு, நயம்-ஞயம், நாயிறு-ஞாயிறு, நாஞ்சில்-ஞாஞ்சில், நேயும்-ஞேயம் என நகரத்துக்கு ஞகரமும், ஞண்டு-ஞெண்டு என மொழி முதல அகரத்துக்கு எகரமும் போலியாகவும் வரும். ஐந்து-அஞ்சு, உய்ந்தனன்-உய்ஞ்சனன் என நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் முறையே போலியாக வருதலும்; பித்து-பிச்சு, வைத்த-வைச்ச எனத் தகரத்துக்குச் சகரம் போலியாக வருதலும் முதலியவற்றையும் அடக்கும்விழ யறிந்து அமைத்துக்கொள்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**சில்வழி** - (சொல்லுக்கு நடுவே) சிலவிடத்து, **ஐகான்** (வழி) - ஐகாரத்தின் பின்னும், **யவ்வழி** - யகரமெய்யின் பின்னும், **நவ்வொடு** - (இயல்பாய்வரும்) நகரமெய்யினோடு, **ஞஃகான்** - ஞகர மெய்யானது, **உறழும்**- ஒத்து நடக்கும், **என்மரும்** - என்று சொல்லுவாரும், **உளர்** - (சிலர்) உண்டு.

**உதாரணம்**

'செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள்
கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும் விளக்கொத்த மணிமிடற்றான்
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக்
கண்கொண்டுகாண்பதென்னே'

ஐந்நூறு-ஐஞ்ஞூறு என வரும்.

போலிக்கு, ஆசிரியர் **தொல்காப்பியர்** இலக்கணம் கூறியவாறு இந்நூலாசிரியர் கூறாமல் விட்டது, **இறந்தது விலக்கல்** என்னும் உத்தி.

இனி, **உரையிற்கோடல்** என்னும் உத்தியால்,

மண்யாத்த - மண்ஞாத்த, பொன்யாத்த - பொன்ஞாத்த என, ணகர னகர மெய்களின் முன் யகரத்துக்கு ஞகரம் ஒத்து வருதலும்.

ஈண்டு - ஞண்டு, ஞெண்டு,

நயம் - ஞயம்,

நாயிறு – ஞாயிறு,

நமன் – ஞமன்

எனத் தனிமொழிமுதல் நகரத்திற்கு ஞகரம் ஒத்து வருதலும்,

ஐந்து – ஐஞ்சு,

உய்ந்தனன் – உய்ஞ்சனன்

எனநகர தகரங்கட்கு ஞகர சகரங்கள் ஒத்து வருதலும்,

பித்து – பிச்சு,

வைத்த – வைச்ச,

தைத்த – தைச்சு

எனத் தகரத்திற்குச் சகரம் ஒத்து வருதலும் கொள்க.

## மோசசு பொன்னையா

ஐகாரத்தின் பின்னும், யகரஒற்றின் பின்னும், நகரமெய் ஞகரமெய்யாக மயங்கி அருகி வழங்குவதுமுண்டு எனக் கூறுவாரு முளர்,

எ–று.

எ–டு.

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து
நிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு
காண்பதென்னே.

ஐந்நூறு – **ஐஞ்ஞூறு**. இதனை அண்ணச் சாயல் பெறுதல் என்பர் மொழியியலார். இவ்வாறு பேச்சு வழக்கில் கிழிந்த – கிழிஞ்ச, ஒழிந்த – ஒழிஞ்ச என இகரத்தின் முன்னரும் அண்ணச் சாயல் பெறுதல் நோக்கத்தக்கது. என்மருமுளரே என்றதனால் இஃது அருகிய வழக்கு எனக் கொள்க.

## போலி

124. அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தினையொத்திசைக்குமவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

அம்முன் இகரம் யகரம் என்று இவை
எய்தின் ஐ ஒத்து இசைக்கும் அவ் ஓடு
உவ்உம் வவ்உம் ஔ ஓர் அன்ன.

am mun̲ ikaram yakaram en̲ṟu ivai
eyṭin̲ ai oṭṭu isaikkum av ōtu
uvavvum vavavvum au ōr an̲n̲a.

இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**Substitute of letters**

`A' followed (singly) by 'i' or 'y' is equivalent to (the sound of ) 'ai' but when followed (thus) by 'u' or 'v' it is equivalent to (the sound of) 'au'.

ஒப்புமைப் பகுதி

அகர இகரம் ஐகார மாகும்

(தொல்: 54)

அகர உகரம் ஔகார மாகும்

(தொல்: 55)

அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

(தொல். : 56)

அஐ முதலிடை ஒக்கும் ஒரோவழி

(அவிநயம்)

ஆதியுயிர் வவ்வியையின் ஒளவாம் அஃதன்றி
நீதியினால் யவ்வியையின் ஐயாகும் – ஏதமிலா,
எஒமெய் புள்ளிபெறும் என்ப சஞுய முன்
அஐயாம் ஆதி யிடை

(நேமி. : 9)

அகரம் வகரத்தி னோடியைந் தௌவாம் யகரத்தினோ
டகர மியைந்தைய தாகும்

(வீர. : 3: 1–2)

இகரமும் யகரமும் மிறுதியில் விரவும்

(மு. வீ. : 106)

அகரமு மிகரமு மைகார மாகும்

(மு. வீ. : 107)

அகரமு முகரமு மௌகார மாகும்

(மு. வீ. : 108)

## மயிலைநாதர்

**எ–ன்,** நிறுத்தமுறையானே போலி யெழுத்தாமாறு உணர்த்துல் நுதலிற்று.

**இ–ள்.:** அகர முன் இகரமும் யகரமும் வரின் ஐகார ஒசை போல இசைக்கும்; அகரத்தின் முன் உகரமும் வகரமும் வரின் ஔகார ஓசைபோல இசைச்கும், **எ – று.**

போலவிசைக்கு மெனவே அவை ஆகா; போலியாமெனக் கொள்க.

**வ – று.:**

அஇவனம், அய்வனம் – ஐவனம்; மஉவல், மவ்வல் – மௌவல் என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

**எ – னின்,** வடநூலார் சந்தியக்கரம் என்பவற்றுள் ஐ ஔ என்னும் நெட்டெழுத்துக்களின் வடிவு புலப்படுத்தல் **உணர்–ற்று.**

**இ–ள்.:** அகரத்தின் முன்னர் இகரமும் யகரமும் தம்முளொத்தெய்தின், ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்; அகரத்தோடு உகரமும் வகரமும் தம்முளொத்து ஒருதன்மைய வாக எய்தின், ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும், **எ – று.**

மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் **மொழியாததனையும் முட்டின்று முடித்தல்** என்னும் உத்தியான், அகரக்கூறும் இகரக் கூறும் தம்முளொத்து

எகரம் ஒலிக்கும்; அகரக் கூறும் உகரக் கூறும் தம்முளொத்து ஒகரம் ஒலிக்கும் எனக் கொள்க.

இனி, இச் சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது தமிழ்நூற்பயிற்சி ஒன்றுமேயுடையார், எழுத்துப்போலி உணர்த் திற்றென்று பொருள்கொண்டு, அ இ ஐ; அய், ஐ; க இ, கை; கய், கை; அ உ , ஔ; அவ், ஔ; க உ, கௌ; க வ், கௌ என உதாரணம் காட்டுவர். அவ்வாறு பொருள்கொண்டு உதாரணம் காட்டு மாற்றால் பெரும்பயன் இன்மையானும், வடநூலோடு மாறுபடுமாதலானும் அது பொருந்தா தென்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்**, நிறுத்தமுறையானே போலியெழுத்து ஆமாறு கூறியது.

**இ-ள்.: அம்முன் இகரம் யகரம் என்றிவை எய்தின்** – அகரத்தின் முன்னர் இகரமும் யகரமும் வந்து பொருந்தின், **ஐயொத்து இசைக்கும்** – ஐகார ஓசை போல இசைக்குமென்ப; **அவ்வோடு உவ்வும் வவ்வும்** – அகரத்தின் முன்னர் உகரமும் வகரமும் வந்து பொருந்தின், **ஔவோரான்ன** – ஔகார ஓசைபோல இசைக்கும், **எ-று.**

**உ-ம்.:**

ஐவனம், அய்வனம் எனவும்; மௌவல், மஉவல் எனவும் வரும்.

அவை ஐகார . . . . . . போலியாம் என்க.

## விசாகப் பெருமாளையர்

**இது**, வடநூலார் சந்தியக்கர மென்பவற்றுள் ஐ ஔ என்கிற நெட்டெழுத்துகளின் வடிவு தோன்றுதலை உணர்த்துகின்றது.

**இ-ள்.: அம்முன்** – அகரத்தின் முன், **இகரம்**–இகரமும், **யகரம்** – யகர மெய்யும், **என்றிவை**–என்று சொல்லப்பட்டவிவை, **ஒத்து**–தம்முளொத்து, **எய்தின்**–பொருந்தினால், **ஐயிசைக்கும்**–ஐயென்கிற நெட்டெழுத்து ஒலிக்கும், **அவ்வோடு** – அகரத்தோடு, **உவ்வும்** – உகரமும், **வவ்வும்** – வகர மெய்யும், **(ஒத்து)** – தம்முளொத்து, **ஓரன்ன** – ஒரு தன்மையனவாக, **(எய்தின்)** – பொருந்தினால், **ஔ (விசைக்கும்)** – ஔவென்கிற நெட்டெழுத்து ஒலிக்கும், **எ – று.**

யகர வகர மெய்கள் நடுவிலே கலக்குமெனக் கொள்க. **மொழிந்த பொருளோ டொன்றவ்வயின், மொழியா ததனையு முட்டின்று முடித்தல்**, என்னு முத்தியால் அகரக் கூறும் இகரக் கூறும் தம்முளொத்து எகர மொலிக்கும்,

அகரக் கூறும் உகரக் கூறும் தம்முளொத்து, ஒகர மொலிக்கும், எனக் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

*எவ்வெழுத்துக்கள் கூடி எவ்வெழுத்துப்போல இசைக்கும்?*

அம்மு னிகரம் யகர மென்றிவை

எய்தி னையொத் திசைக்கு மவ்வோ

டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

(அம்முன் இகரம் யகரம் என்ற இவை எய்தின் ஐ ஒத்து இசைக்கும் அவ்வோடு உவ்வும் வவ்வும் ஔ ஓரன்ன).

**இ–ள்.:– அம்முன் இகரம் யகரம் என்ற இவை எய்தின் ஐ ஒத்து இசைக்கும்** – அகரத்தின் முன் இகரமும் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தனித்தனி வருமிடத்து ஐகாரம் போல ஒலிக்கும், **அவ்வோடு உவ்வும் வவ்வும் ஔ ஓரன்ன** – அகரத்தோடு உகரமும் வகரமெய்யும் தனித் தனிக் கூடி யொலிக்குமிடத்து சுவையும் ஒலி காரத்தை ஒருவாறு ஒப்பனவாம், **எ–று.**

எவ்வெழுத்துக்கள் கூடி ஐகாரமொலிக்கும்?

"அம்மு னிகரம் யகர மென் றிவை யெய்தின் ஐயொத் திசைக்கும்"

**உ – ம்.**

அ–இ= ஐ. அ–ய்=ஐ ஐவனம் என்பதை அஇவனம் எனவும்
அய்வனம் எனவும் வழங்குதல் கூடுமாயிலும்
அவ்வழக்குப் பொலியேயன்றி இலக்கணமன்று.

எவ்வெழுத்துக்கள் கூடி ஔகாரமொலிக்கும்?

"அவ்வோ டுவ்வும் வவ்வும் ஔ ஓரன்ன"

**உ –ம்.**

அ – உ– ஔ, அ – வ்– ஔ, ஔவை என்பது அஉவை
அவ்வை எனவரும் இவ்வழக்கும் இலக்கணமன்றாம்.

எழுத்துப்போலியென்பது எழுத்துப் போல்வதொன்றன்றி எழுத்தன்று. போலி, மொழிப்போலி எழுத்துப்போலி யென இருவகைப்படும். அய்–எழுத்துப்போலி, மரன் மொழிப்போலி.

உயிரெழுத்துக்கள் ஒரெழுத்தாகிய எகாக்கரமென்றும் ஈரெழுத்தாகிய சந்தியக்கரமென்றும் தோற்றத்தா லிருவகைப்படும் அ ஆ முதலியன எகாக்கரம், ஐ ஔ சந்தியக்கரம் ஐகாரமும் ஔகாரமும் முறையே அகர இகரமும் அகர உகரமும் கூடிப்பிறப்பனவாதலின் சந்தியக் கரமெனப்பட்டன (சந்தி – கூட்டம். அக்கரம் – எழுத்து) எழுத்துக்களினது கூறுகளை ஆராயுமிடத்துச் சந்தியக்கரங் கொள்வதன்றி மொழியாக்கத்துக்கண் அவை கொள்ளப்படா. கொள்ளப்படுமாயின் காடு என்பது "க்ஆட்உ" என வழங்குதலும் முறையாமன்றோ.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது**, எழுத்துப்போலி யுணர்த்துகின்றது.

**இ–ள்.: அம்முன் இகரம் யகர மென்றிவை யெய்தின்** – அகரத்தின் முன் இகரமும் யகர ஒற்றுமாகிய இவை தனித்தனி வருமாயின், **ஐ யொத்திசைக்கும்** – ஐகாரத்தை ஒத்து ஒலிக்கும், **அவ்வோடு உவ்வும் வவ்வுமெய்தின்**–அகரத்தோடு உகரமும் வகர ஒற்றுமாகிய இவை தனித்தனி வருமாயின், **ஔவோரன்ன** – ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும், எ – று.

ஓர் என்பது – இடைச்சொல்,

**உ–ம்.:**

அஇ–ஐ, அய் – ஐ, எனவும்; அஉ–ஔ, அவ்–ஔ, எனவும்.
கஇ–கை, கய் – கை, கஉ–கௌ, கவ்–கௌ, எனவும்,

***'கய்வேல் களிற்றொடு போக்கி வருபவன்***

***மெய்வேல் பறியா நகும்'***

எனவும்,

***'அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்***
***கேடு நினைக்கப் படும்'***

எனவும் இவை செய்யுளிலேதொடை நோக்கி ஐகார

ஔகாரங்கள் நின்ற இடத்துப் போலி வந்தவாறு காண்க.

இனி, இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியனார்,

*அகர இகர மைகார மாகும்*

*அகர உகர மௌகார மாகும்*

*அகரத் திம்பர் யகரப் புள்ளியு*

*மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்*

எனக் கூறியதறிந்தும், அய் இ – இந்த மூன்றுங்கூடி ஐகாரமாயிற்று எனவும், அவ்உ–இந்தமூன்றுங்கூடி ஔகார மாயிற்று எனவும், பொருள் கூறுவாருமுளர்; அது போலியிலக் கண மாகாமை யுணர்க. அம்முன்னிவை ஐயொத் தொலிக்கும், அதன் முன்னிலை ஔவன்ன என இரு முடிபாக்குக. போலி யிலக்கண முற்றிற்று.

## கா. கோபாலாசாரி –தி.கோ.ரங்காசாரி

முதலெழுத்துக்களுள் அடக்கிக் கூறப்பட்ட ஐகார ஔகார, எகர, ஒகரங்கள் சில எழுத்துக்கள் கூடிப்பிறக்கும் என்றலின் இது புறனடையாயிற்று.

**உரை :– அம்முன்** – அகரத்தின் முன், **இகரம்** – இகரமும், யகரம் – யகரமெய்யும், **என்ற இவை** – என்று சொல்லப்பட்ட இவை, **ஒத்து எய்தின்** – தம்முளொத்துப் பொருந்தினால், **ஐ இசைக்கும்** – ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்; **அவ்வோடு** – அகரத்தோடு, **உவ்வும்** – உகரமும், **வவ்வும்** – வகரமெய்யும், (ஒத்து) – தம்முளொத்து, **ஓர் அன்ன** (எய்தின்) ஒரு தன்மையனவாகப் பொருந்தினால், **ஔ** (இசைக்கும்) – ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

**உ–ம்:–**

அய்இ – ஐ; அவ்உ – ஔ.

குறிப்பு :–

வகரயகர மெய்கள் நடுவிலே கலக்கு மெனக் கொள்க. **'மொழிந்தபொருளோடொன்றவவ்வயின் மொழியாத தனையும் முட்டின்று முடித்தல்'** என்னுமுத்தியால் அகரக்கூறும் இகரக்கூறும் தம்முளொத்து எகரமொலிக்கும்; அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத்து ஒகரமொலிக்கும் என்பகையும் கொள்க.

இனி, இச்சூத்திரம் எழுத்துப்போலி உணர்த்துவதாகக் கொண்டு பொருளுரைப்பர் **இராமநுசகவிராயர்**. அது வருமாறு;- **அ முன் இகரம் யகரம் என்ற இவை** - அகரத்தின் முன் இகரமும் யகரமெய்யும் ஆகிய இவை, **எய்தின்** - வருமாயின், ஐ **ஒத்திசைக்கும்** - ஐகாரத்தை ஒத்தொலிக்கும்; **அவ்வொடு உவ்வும் வவ்வும் எய்தின்** - அகரத்தோடு உகரமும் வகர மெய்யுமாகிய இவை வருமாயின், **ஔ ஓர் அன்ன** - ஔகாரத்தை ஒத்தொலிக்கும்.

**குறிப்பு:-**

ஓர் - இடைச்சொல். யகரவகரங்கள் தனித்துவரும் என்க.

**உ-ம்:-**

வைத்தியன் - வயித்தியன், வையம் - வய்யம், பௌத்தர் - பவுத்தர், ஔவை - அவ்வை.

அஇ - ஐ, அய்-ஐ, அஉ-ஔ, அவ்-ஔ;

கஇ - கை, கய் - கை, கஉ-கௌ, கவ் - கௌ என்பனவும் காண்க.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: அம்முன் இகரம் யகரம் என்ற இவை ஒத்து எய்தின்ஐ இசைக்கும்** - அகரத்தின் முன் இகரமும் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தம்முளொத்துப் பொருந்தினால் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும், **அவ்வோடு உவ்வும் வவ்வும் (ஒத்து) ஓரன்ன(எய்தின்) ஔ (இசைக்கும்)** - அகரத்தோடு உகரமும் வகர மெய்யுந் தம்முளொத்து ஒரு தன்மையனவாகப் பொருந்தினால் ஔ என்னு நெட்டெழுத்து ஒலிக்கும், **எ - று.**

யகர வகரமெய்கள் நடுவிலே கலக்குமெனக் கொள்க.

மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் **மொழியாததனையு முட்டின்று முடித்தல்** என்னு முத்தியால், அகரக் கூறும் இகரக் கூறுந் தம்முளொத்து ஏகர மொலிக்கும்; அகரக் கூறும் உகரக் கூறுந் தம்முளொத்து ஓகர மொலிக்கும் எனக் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். அம்முன் இகரம்** யகரம் என்று **இவை ஒத்து எய்தின்** – அகரத்தின் முன் இகரமும் யகரமுமாகிய இவை தம்முள் ஒத்துப்பொருந்தினால், **– ஐ இசைக்கும்** – ஐ என்னு நெட்டெழுத்து ஒலிக்கும், **– அவ்வோடு உவ்வும் வவ்வும் (ஒத்து) ஓரன்ன எய்தின்** – அகரத்தோடு உகரமும்வகரமெய்யுந் தம்முளொத்து ஒரு தன்மையனவாகப் பொருந்தினால், **– ஔ** (இசைக்கும்) – ஔ என்னு நெட்டெழுத்து ஒலிக்கும். **எ—று.**

யகர வகரமெய்கள் நடுவிலே கலக்குமெனக் கொள்க.

"ஏ ஐ ஓ ஔ சந்தியாக்ஷராணி" என்று சாரஸ்வத வியாகரணங் கூறுதலுங் காண்க. மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தல் என்னு முத்தியால் அகரக் கூறும் இகரக் கூறுந் தம்முளொத்து எகரமொலிக்கும்; அகரக்கூறும் உகரக்கூறுந் தம்முளொத்து ஒகரமொலிக்குமெனக் கொள்க.

**பிறிதோருரை:** (எழுத்துப்போலி யுணர்த்துகின்றது)

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: அ முன்** – அகரத்தின் முன், **இகரம்**— இகரமும், **யகரம்** – யகர மெய்யும், **என்ற இவை** – என்று சொல்லப்பட்ட இவை, **ஒத்து எய்தின்** – தம்முள் ஒத்துப் பொருந்தினால், **ஐஇசைக்கும்** – ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்; **அவ்வோடு** – அகரத்தோடு, **உவ்வும்** – உகரமும், **வவ்வும்** – வகர மெய்யும், **ஓர் அன்ன** – (தம்முள் ஒத்து) ஒருதன்மையனவாக (ப் பொருந்தினால்) **ஔ** – ஔ என்னும் நெட்டெழுத்து, (ஒலிக்கும்) **எ – று.**

யகர வகர மெய் நடுவிற் கலக்குமெனக் கொள்க. அய்இ = ஐ; அவ்உ = ஔ. சில எழுத்துக்கள் கூடி வேறோரெழுத்துப் போன்று ஒலித்த லாதலால், இதனைப் போலியைச் சார வைத்தார்.

இனி, இச் சூத்திரத்தை எழுத்துப்போலி உணர்த்தியதாகவே கொண்டு வேறும் ஒருபொருள் உரைக்கப்படும்; அது வருமாறு:

**அ முன்** – அகரத்தின் முன், **இகரம் யகரம் என்ற இவை**

– இகரமும் யகரமெய்யும் என்கின்ற இவ்வெழுத்துக்கள், எய்தின் – வருமாயின், **ஐஒத்து இசைக்கும்** – ஐகாரத்தை ஒத்து நடக்கும்; **அவ்வோடு** – அகரத்தின் முன், **உவ்வும் வவ்வும்** – உகரமும் வகர மெய்யும் (வருமாயின்), **ஔ அன்ன** – ஔகாரத்தை ஒத்து நடக்கும்; **எ–று.** ஓர் – அசைநிலை யிடைச்சொல்.

யகர வகரங்கள் தனித்தும் வரும்.

**உ–ம்.:**

வைத்தியன் = வயித்தியன் , கைடபன் = கயிடபன் எனவும், வையம் = வய்யம், ஐவனம் = அய்வனம் எனவும், பௌத்தர் = பவுத்தர், கௌரி = கவுரி எனவும், ஔவை = அவ்வை, வௌவுதல் = வவ்வுதல் எனவும் வரும்.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள். அம்முன் இகரம் யகரம் என்ற இவை எய்தின் ஐ ஒத்து இசைக்கும்** - அகரத்தின் முன் இகரமும் யகரமும் என்று சொல்லப்பட்ட இவை தனித்தனி வருமாயின் ஐ என்னும் நெட்டெழுத்தைப் போல ஒலிக்கும். **அவ்வோடு உவ்வும் வவ்வும் (எய்தின்) ஔ ஓரன்ன** - அகரத்தோடு உகரமும் வகரமெய்யுந் தனித்தனி வருமானால் ஔ என்னும் நெட்டெழுத்தைப் போல ஒலிக்கும். **எ-று.**

அஇ = ஐ: அய் = ஐ. அஉ = ஔ: அவ் = ஔ.

இனி இச் சூத்திரத்தைச் சந்தியக்கரம் உணர்த்துவதாகக் கூறி அய்இ இந்த மூன்றும் கூடி ஐகாரமொத்தொலிக்கும் எனவும். அவ்உ இந்த மூனஸறம் கூடி ஔகாரம் ஒத்தொலிக்கும் எனவும் பொருள் கூறுவாரு முளர்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள். அம் முன்** – அகரத்தின்முன், **இகரம்** – இகரமும், **யகரம்** –யகர மெய்யும்; **என்ற இவை** – என்று சொல்லப்பட்ட இவை, **ஒத்து எய்தின்** – தம்முளொத்துப் பொருந்தினால், **ஐ இசைக்கும்** – ஐ என்கிற நெட்டெழுத்து ஒலிக்கும்; **அவ் வோடு** – அகரத்தோடு, **உவ்வும்** – உகரமும், **வவ்வும்** –

வகரமெய்யும், (ஒத்து – தம்முளொத்து, **ஓர் அன்ன** (எய்தின்) – ஒரு தன்மையனவாகப் பொருந்தினால், **ஔ** (இசைக்கும்) – ஔ அகரத்தின்பின் இகரமும் யகரமெய்யும் (தம் முள்ளொத்துப்) பொருந்தினால், ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்; அகரத்தோடு உகரமும் வகர மெய்யும் (தம்முள்ளொத்து ஒரு தன்மையனவாகப் பொருந்தினால்) ஔ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்.

யகர வகர மெய்கள் நடுவிலே கலக்குமெனக் கொள்க.

**உ–ம்.**

அய் இ=ஐ; அவ் உ=ஔ.

வயித்தியன் = வைத்தியன், கயிடபன் = கைடபன், பவுத்தர் = பௌத்தர், கவுரி = கௌரி.

மொழிந்த பொருளோடடோன்ற அவ்வயின் மொழியாததனையுமுட்டின்று முடித்தல் என்னும் உத்தியால் அகரக்கூறும் இகரக்கூறும் தம்முள்ளொத்து எகரம் ஒலிக்கும்; அகரக்கூறும் உகரக் கூறும் தம்முள் ளொத்து ஒகரம் ஒலிக்கும் எனக் கொள்க.(மொழிந்த பொருளோடு–சொன்ன பொருளோடு, ஒன்ற–பொருந்த,அவ்வயின்–அவ்விடத்து, மொழியாததனையும்–சொல்லாததனையும், முட்டின்று முடித்தல்–குறைபாடில்லாது முடித்தல்.)

இனி, இச் சூத்திரத்தை எழுத்துப்போலி யுணர்த்தியதாகவே கொண்டு வேறும் ஒரு பொருள் உரைக்கப்படும்; அது வருமாறு:–

அம்முன்–அகரத்தின் முன், இகரம் யகரம் என்ற இவை, இகரமும் யகர ஒற்றுமாகிய இவை, எய்தின்–தனித்தனி வருமாயின், ஐ ஒத்து இசைக்கம்–ஐகாரத்தை ஒத்து ஒலிக்கும்; அவ்வோடு உவ்வும் வவ்வும்–அகரத்தோடு உகரமும் வகர ஒற்றுமாகிய இவை, எய்தின்–தனித்தனி வருமாயின், ஔ ஓர் அன்ன–ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும். **எ–று.**

ஓர் என்பது இடைச்சொல்.

**உ–ம்**

அஇ=ஐ, அய்=ஐ; அஉ=ஔ, அவ்=ஔ; கஇகை, கய்=கை; கஉ=கௌஇ கவ்=கௌ; அய்வனம்=ஐவனம், வய்யம்=வையம், அவ்வை=ஔவை; மற்றைப் போலி எழுத்துக்களை வந்துழிக் காண்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**அம் முன்** – அகரத்தின் முன், **இகரம்** – இகரமும், **யகரம்** – யகரமெய்யும், **என்ற இவை** – என்று சொல்லப்பட்ட இவை, **எய்தின்** – பொருந்தினால், **ஐ ஒத்து இசைக்கும்** – ஐகாரத்தை ஒத்து ஒலிக்கும், **அவ்வோடு** – அகரத்தோடு, **உவ்வும்** – உகரமும், **வவ்வும்** – வகர மெய்யும், **(எய்தின்** – பொருந்தினால்), **ஔ ஓரன்ன** – ஔகாரத்தோடு ஒரு தன்மையனவாம் (ஒத்து ஒலிக்கும்).

அங்ஙனம் இசைக்குங்கால் யகரவகர மெய்கள் நடுவிலே கலக்குமெனக் கொள்க. **மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியா ததனையும் முட்டின்று முடித்தல்** என்னும் உத்தியால், அகரக்கூறும் இகரக்கூறும் தம்முளொத்து எகரமொலிக்கும்; அகரக் கூறும் உகரக்கூறும் தம்முளொத்து ஒகரமொலிக்கும் எனக்கொள்க.

இனி, இச்சூத்திரம் எழுத்துப்போலி யுணர்த்துவதாகக் கொண்டு,

வைத்தியன் – வயித்தியன், ஔவை – அவ்வை என உதாரணம் காட்டுவாரும் உளர்.

## மோசகூ பொன்னையா

அகரத்தின் முன்னர்இகரமும், யகரமும் முறையே ஞு அ+இ, ஞு அய் ஞு என்றிவ்வாறு நிற்பின், ஓர் ஐகாரம் போன்று ஒலிக்கும், அவ்வாறு உகரமும் வகரமும் முறையே ஞு அஉ ஞு, ஞு அவ் ஞு என்றிவ்வாறு நிற்பின், ஓர் ஔகாரம் போன்று ஒலிக்கும்.

எ–டு.:– **அ இ – அ ய் – ஐ.**

கஇ – கய் – கை.

அஉ – அவ் – ஔ.

கஉ – கவ் –கௌ.

தொல்காப்பியர் 'அகர இகரம் ஐகார மாகும்' என்றும், 'அகர உகரம் ஔகாரமாகும்' என்றும், அகரத்தை அடுத்து 'யகரஒற்று நின்று ஐகாரத்தை ஒத்து ஒலிப்பதுண்டு' என்றும், 'இகர யகரம் இறுதி விரவும்' என்றும் கூறிய கேள்வி ஒலியியல் இலக்கண நூற்பாக்களைப் போலி

இலக்கண நூற்பாக்களெனக் கொண்ட உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர், 'அது கொள்ளற்க' என எழுதிச் சென்றனர். இவ்வாசிரியரும் அவர் இருவர்வழி நின்று, இவ்வாறு போலி இலக்கணம் வகுத்தார் எனக் கொள்க. அவற்றுள் 'இகர யகரம் இறுதிவிரவும்' என்பதை இவ்வாசிரியர் பழையன கழிதலாகக் கொண்டு, கூறாது விடுத்தார்.

*கய்யி னாற்சொலக் கண்ணினிற் கேட்டிடு*

*மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேம்*

எனவும்,

*கய்யறு நெஞ்சங் கடியல் வேண்டும்*

*பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி*

எனவும்,

*கவ்வையுங் கடும்புன லொலியுங் காப்பவர்*

*செவ்வனூ றாயிரஞ் சிலைக்கும் பம்பையு*

*மெவ்வெலாத் திசைதொறு மீண்டிக் காரொடும்*

*பவ்வநின் றியம்பு வொத்த வென்பவே.*

எனவும்,

*அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்*

*கேடு நினைக்கப் படும்.*

எனவும், ஐகார ஔகாரங்கள் முறையே அய், அவ் எனக் கேள்வி ஒலி முறையே கொள்ளப்பட்டுச் செய்யுளில் எதுகை மோனைத்தொடை நிரப்பி நிற்பதால், அவற்றை இயல் இலக்கிய வழக்குப் போலி எனக் கோடல் ஏற்புடைத்தே யாகும். அம்முன் இகரமும், அவ்வோடு உவ்வும் நின்று முறையே ஐகார ஔகாரங்களாக மாறாடுதல் இக்கால வழக்கில் இல்லை.

வடமொழி மரபு பற்றி இந்நூற்பா சந்தியக்கர இலக்கணங் கூறுகிறது எனக் கொண்டு, அ்இ = ஐ, அ்உ = ஔ எனவும் கூறுவர். அதனோடும் அமையாமல், அஇ=எ என்றும், அஉ=ஒ என்றும் கூறித் தமிழில் நான்கு எழுத்துக்கள் சந்தியக்கரங்கள் உள எனக் கொண்டு தமிழ்

எழுத்துக்கள் வடமொழி எழுத்துக்களிலிருந்து பெறப்பட்டனவே என்ற தம் முடிவுக்கு ஆதரவு தேடுவாரும் உளர். அவர் உரை பொருந்தாது என்பது தமிழ் ஒலி முறைப்படியே உச்சரித்துக் காண்பார்க்கு எளிதிற் புலனாகும். அன்றியும், இவ்வாசிரியர் எழுத்துக்களை,

*எண்பெயர் முறைபிறப் புருவம்மாத்திரை*
*முதலீ றிடைநிலை போலி யென்றா*
*பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே*

எனத் தொகுத்துச்சுட்டி, அவற்றின் இலக்கணத்தை முறையாக வகுத்துக்காட்டி வருகின்றாராதலின், சந்தியக்கரம் என ஒன்றை எண்ணினாரல்லர் என்பதும் தெளிவுறும். அகரத்தோடு வகர ஒற்றுக் கூடிநின்று ஔ ஒத்து ஒலிக்கும் என்று தொல்காப்பியர் கூறவில்லை. 95ஆம் நூற்பா உரை பார்க்க.

(70)

## எழுத்தின் சாரியை

**125. மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்**
**[1]ஐஔ கானு மிருமைக் குறிலிவ்**
**விரண்டொடு கரமுமாஞ் சாரியை**
**பெறும்பிற.**

மெய்கள் அகரமும் நெட்டு உயிர் காரமும்
ஐ ஔகானும் இருமைக் குறில் இவ்
இரண்டொடு கரமும் ஆம் சாரியை பெறும் பிற.

பாட வேறுபாடு.:-

1. ஐ ஔக்கானும்

meykaḻ akaramum nettu uyir kāṟamum
ai aukāṉum irumaik kuṟil iv
iraṇtotu karamum ām sāriyai peṟum
piṟa.

## இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )

**The increment assumed by letter**

Mute Consonant take the increment agaram; long vowels take *karam*; 'ai' and 'au' take also *kan*; while short vowels and short vowel consonant take *karam* in addition to the above two (increments).

## ஒப்புமைப் பகுதி

காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை

(தொல். : 135)

அவற்றுள்,
கரமும் கானும் நெட்டெழுத் திலவே (தொல். : 136)
வரன்முறை மூன்றும் குற்றெழுத் துடைய

(தொல். : 137)

ஐகார ஔகாரம் கனொடும் தோன்றும்

(தொல். : 138)

நெட்டெழுத் தெல்லாங் காரமொடு நிலையும்

(தொல். : 109)

அவற்றுள், ஐஔக் கானு மடையவும் பெறுமே

(தொல். : 110)

காரங் கான்காரம் பெறுமிரு மைக்குறில்

(தொல். : 111)

## மயிலை நாதர்

**எ—ன்,** அதிகரித்த முறையானே எழுத்தின் பகுதியான எண் முதற் பத்து முணர்த்தி அவ்வெழுத்து வழங்குதற்கு வரும் சாரியை உணர்த்துதல் நுதலிற்று.

**இ—ள்.:** மெய் பதினெட்டும் அகரத்தையும், நெட்டுயி ரேழும் காரத்தையும், ஐகார ஔகாரங்கள் காரத்துடனே கானையும், உயிரும் உயிர்மெய்யுமான குற்றெழுத்தைந்தும் காரம் கான்களுடனே கரமென்பதையும் சாரியையாகச் சார்ந்து நடக்கும், எ — று.

**வ — று.:**

க ங ச ஞ றன; ஆகாரம் ஈகாரம் ஊகாரம் ஏகாரம் ஐகாரம் ஓகாரம் ஔகாரம்; ஐகான் ஔகான்; அகாரம் இகாரம் உகாரம் எகாரம் ஒகாரம் ககாரம் ஙகாரம் றகாரம் னகாரம், அஃகான் னஃகான், அகரம் இகரம் உகரம் எகரம் ஒகரம் ககரம் னகரம் என வரும். 'பிற' என்ற மிகையானே கான் வருங்காலை ஆய்தமும், [1]ஆன ஏன முதலானவுங் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ—னின்,** மேல் எழுத்திலக்கணம் கூறிய முகத்தாற்போந்த எழுத்தின் சாரியைகளைத் தொகுத்து இனம் அடைத்தல் நுதலிற்று.

**இ—ள்.:** மெய்கள் அகரச் சாரியையும், நெட்டுயிர்கள் காரச் சாரியையும், அவற்றுள் ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையுடனே கான் சாரியையும், உயிர்க் குறிலும் உயிர்மெய்க் குறிலும் காரம் கான் என்னும் இவ்விரண்டுடனே கரச் சாரியையும் பெறும், எ — று.

மெய்களை முற்கூறினார், அவற்றிற்கு அகரச் சாரியை இன்றியமையாமையின். மெய்கள் அவ்வுமென்னாது அகரமும் என்றார், அங்ஙனம் கரம் காரம் கான்கள், வரின், சாரியை அகரத்தினது சாரியை என்று கோடற்கு. ஆம்சாரியை என்றார், காரம் முதலிய சாரியைகளை ஏற்ற பெற்றி கோடற்கு.

---

பாட வேறுபாடு.: **(1) ஆனும் ஏனும் ஒனும் அம்**

**(2) ஆனும் ஏனவும் அம்முதலானவும்**

**(3) ஆனும் ஏனவும் ஆன முதலானவும்.**

**உ–ம்.:**

க, ங எனவும்; ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும்; ஐகான், ஔகான் எனவும், அகாரம், அஃகான், அகரம்; மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும். பிறவும் அன்ன.

பிற என்றமையால், குறிலோடு கான் புணருங்கால் இடையே ஆய்தத் தோற்றமும், வழங்கும் பிற சாரியைகளும் கொள்க. உயிர்மெய்நெடிலும் ஆய்தமும் கூறாதொழிந்தார். உயிர்மெய்நெடில் இங்ஙனம் கூறிய மூன்று சாரியையும் ஏலாமையானும், ஆய்தம் பிறவழி வாராமையின் மொழியிடைப்படுத்து அம் மொழியிறுதிக்கண் பிற சாரியை தந்து உயிர்வருக்கத்து இறுதிக்கண்ணே வழங்குதலானும் என்க.

**விகற்பத்தின் முடித்தல்** என்னும் உத்தியான் மேல் விரிந்து முடிந்து கிடந்தனவற்றைப் புலப்படவேண்டி ஈண்டுத் தொகுத்து முடித்தலான், இச்சூத்திரம் **முடிந்தது முடித்தல்** என்னும் உத்தி.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்**, எழுத்துக்கு வரும் சாரியை இன்னதென உரைத்தது.

**இ–ள்.: மெய்கள் அகரமும்** – மெய்கள் பதினெட்டும் அகரச் சாரியையும், **நெட்டுயிர் காரமும்** – நெட்டுயிர் ஏழும் காரச் சாரியையும், **ஐ ஔக் கானும்** – ஐகார ஔகாரங்கள் காரத்துடனே கான் சாரியையும், **இருமைக் குறில்** – உயிரும் உயிர்மெய்யுமான குற்றெழுத்து இரண்டு பகுதியும், **இவ்விரண் டொடு கரமுமாம்** – காரம் கான்களுடனேயும் கரமென்னும் சாரியையும், **சாரியை பெறும்பிற** – எழுத்துச் சாரியையாகச் சார்ந்து நடக்கும், **எ–று.**

**உ–ம்.:**

க ங ச ஞ ட ண ற ன எனவும்; ஆகாரம், ஈகாரம், ஊகாரம், ஏகாரம், ஐகாரம், ஓகாரம், ஔகாரம், எனவும்; ஐகான், ஔகான் எனவும்; அகாரம், அஃகான், அகரம் எனவும்; ககாரம், கஃகான், ககரம் எனவும்; "பிற" என்றதினாலே கான் வருங்காலை ஆய்தமும், ஆன், ஒன் முதலாயினவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது மேலே சொல்லப்பட்ட எழுத்தின் சாரியைகளைத் தொகுத்து இனமடைத்தல் உணர்த்துகின்றது.

**இ—ள்.:** **மெய்கள்** – ஒற்றுகள், **அகரமும்** – அகரச் சாரியையும், **நெட்டுயிர்** – உயிர் நெடில்கள், **காரமும்** – காரச் சாரியையும், **ஐயௌ**– அவற்றுள் ஐகார ஔகாரங்கள், **கானும்** – காரச் சாரியையுடனே கான் சாரியையும், **இருமைக்குறில்**–உயிர்க் குறிலு முயிர்மெய்க்குறிலும், **இவ்விரண்டொடு** – காரம் கான் என்கிற விரண்டுடனே, **கரமும்** – கரச் சாரியையும், **ஆம்** – ஆகின்ற, **சாரியை**–சாரியைகளை, **பெறும்**–பெறும், எ – று.

'மெய்கள் அவ்வும்' என்னாது 'அகரமும்' என்றதனால் இப்படியே கரம் காரம் கான் வந்தால் சாரியை அகரத்தினது சாரியை யென்று கொள்க, மெய்கள் சாரியை பெறாமலும் உயிர் நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை.

உ—ம்.:

> க, ங எனவும்; ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும்; ஐகான், ஔகான் எனவும்; அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும். (**விகற்பத்தின் முடித்தல்,** என்னுமுத்தியால் மேல்விரிந்து கிடந்தனவற்றை விளங்க வேண்டி இங்கே தொகுத்து முடித்தலால் இச்சூத்திரம் '**முடிந்தது முடித்தல்**' என்னு முத்தி.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*எழுத்துகளுக்குச் சாரியைவிதிக்குஞ் சூத்திரம் யாது?*

மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறியில்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும் பிற.
(மெய்கள் அ கரமும் நெட்டுயிர் காரமும்
ஐ ஔக் கானும் இருமைக் குறில் இவ்
விரண்டொடு கரமும் ஆம் சாரியை பெறும்பிற)

**இ—ள்.: மெய்கள் அகரமும்** – ஒற்றுக்கள் அவ்வோடு கரச்சாரியையும், **நெட்டயிர் காரமும்** – உயிர் நெடில்கள் காரச்சாரியையும், ஐ ஔக்கானும் – அவற்றுள் ஐகார ஔகாரங்கள் காரச்சரியையுடனே கான்சாரியையும், **இருமைக்குறில் இவ்விரண்டுடொடு கரமும்** – உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் காரம் கான் என்னும் இரண்டுடனே கரச்சாரியையும், **ஆம்சாரியை பெறும்** – ஆகின்ற சாரியைகளைப் பெறும், எ—று.

**உ—ம்.:**

க ங எனவும், ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும்,
ஐகான் ஔகான் எனவும், அகாரம், அஃகான், அகரம்,
மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும்.

காரச்சரியையும் கான்சாரியையும் பெறும் நெட்டெழுத்தெவை?

"நெட்டுயிர் காரமும்" என்றதனாலும் "ஐஔகானும்"
என்றதனாலும் ஐகார ஔகாரங்கள்.

**உ—ம்.:**

ஐகான், ஔகான், ஐகாரம், ஔகாரம், எனவரும்.

காரம் கான் கரம் என்னு மூன்று சாரியையும் பெறுமெழுத்தெவை?

"இருமைக் குறில் இவ்விரண்டொடு கரமும்" என்றனால் உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும்.

**உ—ம்.**

அகாரம். அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம்.

*மெய்கள் என்ன சாரியைபெறும்?*

மெய்கள் அவ்வோடுகூடிய கரம் காரம் கான் மூன்றும் பெறுமாயினும் அவ்வோடு கூடிய கரமே பெரும்பான்மையும் பெறுமென்பர் "மெய்கள் அ கரம்" என்றாரெனக் கொள்க.

*மெய்யெழுத்துக்கள் எதனைப் பெற்றபின் மூன்று சாரியைகளையும் பெறும்?*

மெய்கள் அகரம்பெற்றே சாரியை பெறும்

சாரியைபெறா வெழுத்தெவை?

உயிர்மெய்நெடிலும் ஆய்தமும்

*பிறவென்றதனாற் பெறப்படுவன யாவை?*

மெய்யெழுத்துக்கள் கரமுதலிய சாரியையின்றி அகரம் பெற்றுக் கசதப

என்றாற்போல நிற்றலும் மற்றைய வெழுத்துக்கள் வாளா அ ஆ என நிற்றலும் உண்டென்பதும் குறிலோடு கான் புணருமிடத்து இடையே ஆய்தம் விரியும் என்பதும் ஆனம் முதலிய வேறு சாரியைகளும் பெறும் என்பதும் பெறப்படு வனவாம். ஆன முதலிய சிறப்பில் வழக்கு இக்காலத்துமுண்டு.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது**, எழுத்தின் சாரியைகளைத் தொகுத்து இனமடைத்தலை யுணர்த்திற்று.

**இ–ள்.: மெய்களகரமும்** – தனிமெய்கள் அகரச் சாரியையும், **நெட்டுயிர் காரமும்** – உயிர் நெடில்க ளெல்லாங் காரச்சாரியையும், **ஐஔக்கானும்** – ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையோடு கான் சாரியையும், **இருமைக்குறில்** – உயிர்க் குறிலும் உயிர்மெய்க் குறிலும், **இவ்விரண்டொடு** – இந்தக் காரச் சாரியை கான் சாரியையோடு, **கரமுமாஞ்சாரியை பெறும்** – கரச் சாரியையுமாகிய மூன்று சாரியையும் பெறும், **எ – று.**

**உ–ம்.:**

கஙசஞடணதநபமயரலவழளறன என வருமிவை, ஒற்றுக்கள் அகரச் சாரியை பெற்று நின்றன. ஆகாரம், ஈகாரம், ஊகாரம், ஏகாரம், ஐகாரம், ஓகாரம், ஔகாரம் என உயிர்நெடில் காரச்சாரியை பெற்றன, ஐகான், ஔகான் என இவ்விரண்டுங் கான்சாரியையும் பெற்றன. அகாரம், அஃகான், அகரம், ககாரம், கஃகான், ககரம் என இருவகைக்குறிலும் மூன்றுசாரியையும் பெற்றுநின்றன, பிறவுமிவ்வாறேகாண்க.

பிறவென்றதினாலே, குறிலொடு கான் சாரியை புணரும்போது இடையிலே ஆய்தந் தோன்றுதலும் அ – ஆன, எ – ஏன, ஒ–ஓன, ஐயன, ஔவன என, ஆன, ஏன, ஓன, அன முதலிய சாரியைகளும், அ, இ, உ, ஆ, ஈ, ஊ எனச்சாரியை பொறாது வருதலுங் கொள்க.

உயிர்மெய் நெடில் இங்கே சொல்லப்பட்ட மூன்று சாரியைகளையுங் கொள்ளாததினாலே சொல்லாதொழிந்தார். **விகற்பத்தின் முடித்தலென்னும்** உத்தியினாலே மேல் விரிந்து முடிந்து கிடந்தனவற்றைத் தெரியவேண்டி இங்கே தொகுத்து முடித்தனினாலே இது **முடிந்தது முடித்தலென்னும் உத்தி**. சாரியை யென்றதை

யெல்லாவற்றொடுங் கூட்டுக. மெய்கள் நெட்டுயிர் ஐ ஔ இருமைக்குறில் பெறுமென முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :-** **மெய்கள்** – தனிமெய்கள், **அகரமும்** – அகரச்சாரியையும், **நெட்டுயிர்** – உயிர்நெடில்கள், **காரமும்** – காரச்சாரியையும், **ஐ ஔ கானும்** – (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள் காரச்சாரியையுடனே கான் சாரியையும், **இருமைகுறில்** – உயிர்க்குறிலு முயிர்மெய்க்குறிலும், **இவ்விரண்டொடு** – (காரம் கான் என்கிற) இரண்டுடனே, **கரமும்** – கரச்சாரியையும், **ஆம்** – ஆகின்ற, **சாரியை பெறும்** – சாரியைகளைப் பெறும்.

**குறிப்பு :-**

மெய்களை முற்கூறினார் அவற்றிற்கு அச்சாரியை இன்றியமையாமையின் 'மெய்கள் அவ்வும்' என்னாது 'அகாரமும்' என்றார். இப்படியே கரம், காரம், கான் வந்தால் அவை சாரியையாகிய அகரத்தினது சாரியை எனக்கோடற்கு. மெய்கள் சாரியை பெறாமலும், உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருவதில்லை.

**உ-ம்:-**

க – ங எனவும், ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும், ஐகான், ஔகான் எனவும்; அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும்.

இவ்வாறு வருதலன்றி க்ங் என்றும் காகாரம் என்றும் வாரா. மற்றவை ஏற்றபடி பெற்றும் பெறாமலும் வரும். ஆய்தம் தனியே வாராமையால் 'கேனம்' என்னும் சாரியை பெற்று 'ஆஃகேனம்' என வழங்கும். இவை எழுத்துச்சாரியைகள். அன், ஆன் முதலியன மொழிச்சாரியைகள்.

'பிற' என்றதனால் குறிலோடு கான் சாரியை புணரும்போது இடையிலே ஆய்தம் தோன்றுமெனக் கொள்க.

விகற்பத்தின் முடித்தல் என்னுமுத்தியால் மேல்விரிந்து முடிந்து கிடந்தனவற்றை விளங்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால் இச்சூத்திரம் முடிந்தது முடித்தல்

என்னும் உத்தி.உரை :- **மெய்கள்** – தனிமெய்கள், **அகரமும்** – அகரச்சாரியையும், **நெட்டுயிர்** – உயிர்நெடில்கள், **காரமும்** – காரச்சாரியையும், **ஐ ஔ கானும்** – (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள் காரச்சாரியையுடனே கான் சாரியையும், **இருமைகுறில்** – உயிர்க்குறிலு முயிர்மெய்க்குறிலும், **இவ்விரண்டொடு** – (காரம் கான் என்கிற) இரண்டுடனே, **கரமும்** – கரச்சாரியையும், **ஆம்** – ஆகின்ற, **சாரியை பெறும்** – சாரியைகளைப் பெறும்.

**குறிப்பு :–**

மெய்களை முற்கூறினார் அவற்றிற்கு அச்சாரியை இன்றியமையாமையின் 'மெய்கள் அவ்வும்' என்னாது 'அகாரமும்' என்றார். இப்படியே கரம், காரம், கான் வந்தால் அவை சாரியையாகிய அகரத்தினது சாரியை எனக்கோடற்கு. மெய்கள் சாரியை பெறாமலும், உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருவதில்லை.

**உ–ம்:–**

க – ங எனவும், ஆகாரம், ஐகாரம், ஔகாரம் எனவும், ஐகான், ஔகான் எனவும்; அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும்.

இவ்வாறு வருதலன்றி க்ங் என்றும் காகாரம் என்றும் வாரா. மற்றவை ஏற்றபடி பெற்றும் பெறாமலும் வரும். ஆய்தம் தனியே வாராமையால் 'கேனம்' என்னும் சாரியை பெற்று 'ஆஃகேனம்' என வழங்கும். இவை எழுத்துச்சாரியைகள். அன், ஆன் முதலியன மொழிச்சாரியைகள்.

'பிற' என்றதனால் குறிலோடு கான் சாரியை புணரும்போது இடையிலே ஆய்தம் தோன்றுமெனக் கொள்க.

விகற்பத்தின் முடித்தல் என்னுமுத்தியால் மேல்விரிந்து முடிந்து கிடந்தனவற்றை விளங்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால் இச்சூத்திரம் முடிந்தது முடித்தல் என்னும் உத்தி.

## ஆறுமுகநாவலர்

**இ–ள்.: மெய்கள் அகரமும்** – ஒற்றுக்கள் அகரச் சாரியையும், **நெட்டுயிர் காரமும்** – உயிர் நெடில்கள் காரச் சாரியையும், **ஐ ஔக்கானும்** – அவற்றுள்

ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையுடனே கான்சாரியையும், **இருமைக் குறில் இவ்விரண்டொடு கரமும்** – உயிர்க் குறிலும் உயிர்மெய்க் குறிலும் காரம் கான் என்னும் இரண்டுடனே கரச் சாரியையும், **ஆம் சாரியை பெறும்** – ஆகின்ற சாரியைகளைப் பெறும், **எ – று.**

மெய்களவ்வு மென்னாது அகரமு மென்றதனால், இப்படியே கரங் காரங் கான் வரின், அவை சாரியையாகிய அகரத்தினது சாரியை யெனக் கொள்க.

குற்றெழுத்தோடு கான் சாரியை புணரும்போது இடையே ஆய்தம் விரியும்.

மெய்கள் சாரியை பெறாதும் உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை.

**உ–ம்.:**

க, ங எனவும்; ஆகாரம், ஐகாரம், ஔகாரம், எனவும். ஐகான், ஔகான். எனவும்; அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம், எனவும் வரும்.

**விகற்பத்தின் முடித்தலென்**னு முத்தியால் மேல் விரிந்து முடிந்து கிடந்தனவற்றை விளக்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால், இச்சூத்திரம் **முடிந்தது முடித்தலென்**னு முத்தி.

## வ. குமாரசாமிப்புலவர்

**இ-ள். மெய்கள் அகரமும்** - ஒற்றுக்கள் அகரச்சாரியையும். - **நெட்டுயிர் காரமும்** – உயிர் நெடில்கள் காரச் சாரியையும். - **ஐ ஔக்கானும்** - (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள் (காரச்சாரியையைப் பெறுதலுமன்றிக்) கான்சாரியையும். - **இருமைக்குறில் இவ்விரண்டொடு கரமும்** - உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் கரம்தான் என்னும் இரண்டையும் தனித்தனி பெறுதலுமன்றிக் கரச்சாரியையும் - **ஆம் சாரியை பெறும்** - ஆகின்ற சாரியைகளைப் பெறும்.

மெய்கள் அவ்வும் என்னாது (சாரியையாய் வருவதற்குஞ் சாரியை சேர்த்து) அகரமுமென்றமையால் கரம். காரம். கான்வரின் அவை மெய்யெழுத்திற்குச் சாரியையாய் வந்த அகரத்தினது சாரியை என்று கொள்க. எனவே மெய்யெழுத்துக்கள் அ என்னுஞ் சாரியையும் அதுபெற்றபின் கரம். காரம். கான் என்னு மூன்று சாரியைகளில் ஒன்றையும் உடன்பெறு மென்றறிக. குற்றெழுத்தொடு கான் சாரியை கூடும்போது இடையிலே ஆய்தம் விரியும். அகரமும். கரமும். கானும்

என்று மூன்று சாரியை சொல்லிவிட்டுப் பின்பு. இவ்விரண்டொடு என்று இகரச்சுட்டாற் குறித்தமையால் சமீபத்திலுள்ள கான், காரம் என்னு மிரண்டு சாரியையுங் கருதப்பட்டன.

உ-ம்.

க, ஙு, ச, ஞ எம், ஆகாரம், ஈகாரம், ஐகாரம், ஔகாரம், எம், ஐகான், ஔகான், எம், அகாரம், அஃகான், அகரம்; மகாரம், மஃகான், மகரம், எம், வரும். வடமொழியிலே உயிர்மெய் நெடில்கள் சாரியை பெறுவனவாயினுந் தமிழில் உயிர்மெய் நெடில்கள் சாரியைபெற மாட்டாவாதலின் உயிர்மெய் நெடில்களுக்குச் சாரியை கூறாதுவிட்டார். மெய்கள் அகரமும் என மெய்யை முதலெடுத்துக் கூறியதுமெய்கள் சாரியை பெற்றன்றித் தனித்து உச்சரிக்கப்படா உயிருமுயிர்மெய்க்குறிலுஞ் சாரியை பெறாமலும் உச்சரிக்கப்படும் என்பது விளக்குதற்காம்.

இச்சூத்திரத்திற் சாரியை என்றது உச்சாரணத்தின் பொருட்டு எழுத்துக்களோடு சேர்க்கப்படுமெழுத்தை யென்றறிக. "ஹகாராதிஷ்வகார உச்சாரணார்த்த:" என்று வடமொழி வியாகரணங் கூறுதலுமறிக.

விகற்பத்தின் முடித்தலென்னு முத்தியால் மேல் விரிந்து முடிந்து கிடந்தனவற்றை விளங்கவேண்டி இங்கே தொகுத்து முடித்தலால். இச்சூத்திரம் முடிந்தது முடித்தலென்னு முத்தி.

மேல்விரிந்து கிடந்தன சில வருமாறு:- 68ம் சூ. 'வல்லினங் க ச ட த ப ற வெனவாறே' என்பதில் அகரச்சாரியையும், கஉO-ம் சூ. 'மகாரம் நைந்தீரொற்றாம்' என்பதில் அகரச்சாரியையுடன் காரச்சாரியையும், கக-ம் சூ. 'வஃகான்மிசையுமக்குறுகும்' என்பதில் அகரச் சாயையுடன் கான்சாரியையும் மெய்யெழுத்துப் பெற்றமை காண்க. சக-ம் சூ. 'உகரமாறாறைகான்மூன்றே, ஔகானொன்றே மஃகான்மூன்றே' என்பதில் கரம் என்னுஞ் சாரியையும், கான் என்னுஞ் சாரியையும் உயிர்பெற்றமையும். 'அ இ உ எ ஒக்குறிலைந்தே' 'ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்' என உயிர் சாரியை பெறாமலும் , கஉச-ம் சூ. 'நவ்வொடுசில்வழி' என உயிர்மெய்க்குறில் சிலவிடத்துச் சாரியை பெறாமலும் வந்தமை காண்க. இவற்றையும்

இவை போல்வனவற்றையுங் கண்டு மேல்விரிந்து கிடந்தனவற்றை இச்சூத்திரந் தொகுத்து முடித்தலை வகைபட விளங்குக.

எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்து விஷயங்களுமல்லாது, எழுத்துக்களின் உச்சாரணவுபகாரமாக 'மெய்களகரமும்' என்று பிறவிடயஞ் சொல்லப்படுகின்றதே யெனின்: அ என்பதை அகரம் என்றும், அகாரம் என்றும், அஃகான் என்றும், ம என்பதை மகரம் என்றும், மகாரம் என்றும், மஃகான் என்றும், வழங்குதலும் ஒருவாற்றானோக்கின் ஓரொலியைக் குறித்தற்குப் பலவெழுத்தினொலியுமொத்து வந்த ஒருவகைப் போலியென்று கொள்ளுதற்கும் பொருந்துமாதலின் இவ்விஷயம் பிறவிடயமன்றென்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

**இ—ள்.: மெய்கள்** – தனிமெய்கள், **அகரமும்** – அ என்னும் சாரியையும், **நெடு உயிர்** – உயிர் நெடில்கள், **காரமும்**–காரம் என்னும் சாரியையும், **ஐ ஔ** – (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள், **கானும்** – (காரம் என்னும் சாரியையுடனே) கான் என்னும் சாரியையும், **இருமை குறில்** – உயிர்க் குறிலும் உயிர்மெய்க் குறிலும், **இ இரண்டொடு** – (காரம் கான் என்கிற) இவ்விரண்டுடனே, **கரமும்** – கரம் என்னும் சாரியையும், **ஆம்** – ஆகின்ற, **சாரியை** – சாரியைகளை, **பெறும்**, **எ—று**.

மெய்களை முற்கூறினார், அவற்றிற்கு அச் சாரியை இன்றியமையாமையின். 'மெய்கள் அவ்வும்' என்னாது 'அகரமும்' என்றார், இப்படியே கரம் காரம் கான் வந்தால், அவை சாரியையாகிய அகரத்தினது சாரியை யெனக் கொள்ளுதற்கு.

மெய்கள் சாரியை பெற்றேயும், உயிர்மெய் நெடில்கள் சாரியை பெறாமலேயும் வரும்; க ங என்றும், ககர ஆகாரம் என்றும் இவ்வாறு வருமே யன்றி, க் ங் என்றும், காகாரம் என்றும் நூல்களிற் பயின்று வாரா என்றபடி. மற்றவை ஏற்றபடி பெற்றும் பெறாமலும் வரும். ஆய்தம் தனியே வராமையால், அதனை இடைவைத்து முன்னே அகரவுயிரும் பின்னே கேனம் என்னும் சாரியையும் தந்து அஃகேனம் என வழங்குவ ரென்பதும் அறிக.

'பிற' என்றதனால் குறிலோடு கான் சாரியை புணரும்போது இடையிலே ஆய்தம் தோன்றுதல் கொள்க.

அன், ஆன் முதலிய மொழிச்சாரியைகள் வேறு உள்ளதனால், இவை எழுத்துச் சாரியை யென்க.

**உ—ம்.:**

க, ங எனவும்; ஆகாரம், ஐகாரம் ஔகாரம் எனவும்; ஐகான், ஔகான் எனவும்; அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம் எனவும் வரும்.

## பவானந்தம் பிள்ளை

**இ—ள். மெய்கள் அகரமும்** – ஒற்றுக்கள் அகரச் சாரியையும், **நெட்டுயிர் காரமும்** – உயிர் நெடில்கள் காரச்சாரியையும், **ஐ ஔக்கானும்** – (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையுடனே கான் சாரியையும், **இருமைக் குறில் இவ்விரண்டொடு கரமும்** – உயிர்க்குறிலும் உயிர் மெய்க்குறிலும் காரம் கான் என்னும் இரண்டுடனே கரச் சாரியையும், **ஆம் சாரியை பெறும்** – ஆகின்ற சாரியைகளைப் பெறும், **எ—று.**

மெய்களவ்வு மென்னாது அகரமு மென்றதனால், இப்படியே கரங் காரங் கான் வரின், அவை சாரியையாகிய அகரத்தினது சாரியை யெனக் கொள்க.

குற்றெழுத்தோடு கான் சாரியை புணரும் போது இடையே ஆய்தம் விரியும்.

மெய்கள் சாரியை பெறாதும் உயிர் மெய்நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை.

**உ—ம்.**

க (க்) ங (ங்) ஆகாரம் (ஆ), ஐகாரம் (ஐ), ஔகாரம் (ஔ), ஐகான் (ஐ), ஔகான் (ஔ), அகாரம், அஃகான், அகரம் (அ), மகாரம், மஃகான், மகரம் ( ம அல்லது ம்).

விகற்பத்தின் முடித்தலென்னும் உத்தியால் மேல் விரிந்து முடிந்து கிடந்தனவற்றை விளங்க வேண்டி இங்கே தொகுத்து முடித்ததால், இச்சூத்திரம் 'முடிந்தது முடித்தல்' என்னும் உத்தி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள். மெய்கள்** – ஒற்றுக்கள், **அகரமும்** – அகரச் சாரியையும், **நெட்டுயிர்** – உயிர்நெடில்கள், **காரமும்** – காரச் சாரியையும், **ஐ ஔ கானும்**– (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள் (காரச்சாரியையுடனே) கான்சாரியையும், **இருமைக் குறில்** – உயிர்க் குறிலும் உயிர் மெய்க்குறிலும், **இவ் விரண்டொடு** – (காரம் கான் என்கிற) இரண்டுடனே, **கரமும்** – கரச் சாரியையும், **ஆம்** – ஆகின்ற, **சாரியை பெறும்** – சாரியைகளைப் பெறும், எ—று.

பொ—ரை.:

மெய்கள் அகரச் சாரியையும், உயிர்நெடில்கள் காரச் சாரியையும், அவற்றுள் ஐ ஔ ஆகிய இரண்டும் காரச் சாரியையுடனே கான் சாரியையும், உயிர்க் குறிலும், உயிர்மெய்க் குறிலும், காரம் கான் என்னும் இரண்டுடனே கரம் என்னும் சாரியையும் பெறும்.

உ—ம்.

க – ங – ச – ஞ – அகரச் சாரியை.

ஆகாரம், ஐகாரம், ஔகாரம் – காரச் சாரியை.

ஐகான், ஔகான் – கான் சாரியை.

உயிர்க்குறில் – அகாரம், அஃகான், அகரம்.

உயிர்மெய்க்குறில் – மகாரம், மஃகான், மகரம்.

காரம், அஃகான், கரச் சாரியைகள்.

மெய்களை முற்கூறினார்; அவற்றிற்கு அகரச் சாரியை இன்றியமையாமையின்.

'மெய்கள் அவ்வும்' என்னாது 'அகரமும்' என்றதனால், இப்படியே கரம், காரம், கான் வந்தால் அவை அகரத்தினது சாரியை என்று கொள்க.

மெய்கள் சாரியை பெறாமலும், உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை; க ங என்றும் கக்ர ஆகாரம் என்றும் இவ்வாறு வருமே யன்றி, க் ஞ் என்றும், கா காரம் என்றும் நூல்களிற் பயின்று வாரா என்றபடி; மற்றவை ஏற்றபடி பெற்றும் பெறாமலும் வரும்.

ஆய்தம் தனியே வாராமையால், அதனை இடை வைத்து முன்னே அகரவுயிரும் பின்னே கேனம் என்னும் சாரியையும் தந்து, 'அஃகேனம்' என வழங்குவதென்பதும் அறிக.

பிற என்றதனாலே குறிலோடு கான் சாரியை புணரும்போது இடையிலே ஆய்தம் தோன்றும்.

விகற்பத்தின் முடித்தல் என்னும் உத்தியால் ,மேல் விரிந்து கிடந்தனவற்றை விளங்க வேண்டி இங்கே தொகுத்து முடித்தலால், இச் சூத்திரம் ***முடிந்தது முடித்தல்*** என்னும் உத்தி.

(மெய்யெழுத்தும் குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் தத்தமக்குரிய சாரியைகளை முன்னர்ப் பெற்றுச் சிறப்பு வாய்பாட்டான முடிந்து கிடப்பனவற்றைத் தொகுத்து இங்கே பொது வாய்பாட்டான் முடித்தலால், விகற்பத்தின் முடித்தலென்னும் உத்தி. அங்ஙனம் மேல் விரிந்து கிடந்தனவற்றை விளங்க வேண்டி இங்கே தொகுத்து முடித்தலில், முடிந்தது முடித்த லென்னும் உத்தி.)

## கா. நமச்சிவாய முதலியார்

**மெய்கள்** – ஒற்றுகள், **அகரமும்** – அகரச் சாரியையும், **நெட்டுயிர்** – உயிர் நெடில்கள், **காரமும்** – காரச் சாரியையும், **ஐ ஔ** – (அவற்றுள்) ஐகார ஔகாரங்கள், **கானும்**– (காரச் சாரியையுடனே) கான் சாரியையும், **இருமைக் குறில்** – உயிர்குறிலும் உயிர்மெய்க் குறிலும், **இவ்விரண்டொடு** – (காரம், கான் என்னும்) இரண்டுடனே, **கரமும்** – கரச் சாரியையும், **ஆம்** – ஆகின்ற, **சாரியை** – சாரியைகளை, **பெறும்** – பெறும்.

மெய்கள் அவ்வும் என்னாது அகரமும் என்பதனால், இப்படியே கரம் காரம் கான் எனச் சாரியை வருமிடத்து அவற்றைச் சாரியையாகிய அகரத்தின் சாரியை யெனக் கொள்க.

மெய்கள் சாரியை பெறாமலும் உயிர்மெய் நெடில்கள் சாரியை பெற்றும் வருதலில்லை.

**'பிற'** என்றதனால், குற்றெழுத்தோடு கான் சாரியை பெறும் போது இடையே ஆய்தம் தோன்றும் எனக் கொள்க.

**உதாரணம்**

க, ங, ச, ஞ — அகரச் சாரியை — மெய்

ஆ க ா ர ம்
ஐகாரம் — காரச் சாரியை — நெட்டுயிர்
ஔகாரம்

ஐகான்

ஔகான் கான் சாரியை — ஐ,ஔ

அகாரம் காரம்
அஃகான் கான்
அகரம் கரம் இருமைக் குறில்
மகாரம் காரம்
மஃகான் கான்
மகரம் கரம்

அஃகான்
மஃகான் — கான் சாரியை ஆய்தம் பெற்றது.

**விகற்பத்தின் முடித்தல்** என்னும் உத்தியால், மேல் விரிந்து கிடந்தனவற்றை விளக்க வேண்டி இங்கே தொகுத்து முடித்தலால், இச்சூத்திரம் **முடிந்தது முடித்தல்** என்னும் உத்தி.

## மோசகூ பொன்னையா

தனி மெய்கள் அ என்னும் சாரியையையும், உயிர் நெடில்கள் காரம் என்னும் சாரியையையும், ஐ ஔ என்னும் இரண்டும் காரத்துடன் கான் என்னுஞ் சாரியையையும், உயிர்க் குறிலும், உயிர்மெய்க்குறிலும் காரம், கான் என்ற அவ்விரண் டுடனே கரம் என்னுஞ் சாரியையையும் பெறும், எ—று.

தனிமெய்களுக்கு 'அ' சாரியை இன்றியமையாதது ஆதலின் அது முற்கூறப்பட்டது. அ என்னாது அகரம் அதன் சாரியை யாகும் என்றதனால், அகர உயிர் பெறற்குரிய சாரியை கள் அனைத்தையும் அ பெற்ற மெய்களும் பெறும் எனக் கொள்க.

பிற என்ற மிகையானே, தனியே வருதலில்லாத ஆய்தம், முன்னே அ என்னுஞ் சாரியையையும், பின்னே கேனம் என்னுஞ் சாரியையையும் பெறும் என்றும் கொள்க. அதனாலே, குற்றெழுத்துக் கான் சாரியை பெறுங்கால்

இடையில் ஆய்தம் விரியும் எனவும், மெய்கள் சாரியை பெறாமல் வருதலில்லை எனவும், உயிர்மெய் நெடில்கள் சாரியை பெறாமல் கா,கௌ எனவோ, ககர ஆகாரம், ககர ஓகாரம் எனவிவ்வாறோ வரும் எனவும் கொள்க.

எ–டு.

க, ங, ஆகாரம், ஐகாரம், ஐகான், ஔகான், அகாரம், அஃகான், அகரம், மகாரம், மஃகான், மகரம், யா, யகர ஆகாரம்.

(71)

## புறநடை

## 126. மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே

**மொழியாய்த் தொடரினும் முன் அனைத்து எழுத்தே**

**இலாசரசு ( ஆங்கில மொழிபெயர்ப்பு )**

**Exception to this chapter**

Though Letters may be formed into Words and Combinations, still they possess all the above mentioned characteristics.

**மயிலை நாதர்**

**எ–ன்,** எனைவகை யெழுத்திற்கும் இயைவதோரிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:** எழுத்துக்கள் பலவற்றையுங் கூட்டி நெருக்கி ஒரு தொடர்படக் கூறுமிடத்தும் தத்தம் வடிவும் அளவும் முதலாயின இயல்பிற் றிரியா; தனித்து நின்றாற் போலும், யாண்டும், எ – று.

**வ –று.:** மறு [1]மற்று; மறை [2]மற்றை எனவும்,

பாட வேறுபாடு.: 1.மன்று 2.மாறை

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக

எனவும் வரும். இவற்றுள் அவ்வாறாதல் காண்க.

## சங்கர நமச்சிவாயர்

**எ–னின்,** இவ் வியலுக்கு ஆவதோர் புறனடை **யுணர்–ற்று.**

**இ–ள்.:** இவ் வெழுத்துக்கள் பதமாயினும், அப் பதம் தம்மோடும் உருபோடும் புணரினும் அவற்றால் பிறழாது, முன்னர்க் கூறிய அப் பத்திலக்கணத்தையும் உடையவாம், **எ – று.**

எழுத்து, **சுண்ணத்தின்கண்** அரிசனம் முதலிய **போலாது மாலையின்கண் மலர் போல்** அவற்றில் நிற்றலின், முன்னனைத்து என்றார். எழுத்து என்பது, சாதி யொருமையாதலின் அனைத்து என்னும் ஒருமையோடு முடிந்தது. முன்னனைத்தாதல் பதவியல் முதலிய நான்கு இயலுள்ளும் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ–ம்,** எனைவகை எழுத்துக்கும் இயல்வதோர் இயல்பு கூறியது.

**இ–ள்.: மொழியாய்த் தொடரினும்** – எழுத்துக்கள் பலவற்றையும் கூட்டி நெருக்கி ஒரு தொடராய்க் கூறினாலும், **முன்னனைத் தெழுத்தே** – தம் வடிவும் அளவும் முதலான இலக்கணம் திரியாது தனித்து நின்றாற் போலுமாம் ஆண்டும், **எ–று.**

**உ–ம்.:**

மறு, மன்று; மறு, மற்றை எனவும்,

*கற்க கடசறக் கற்பலவ கற்றபின்*

*நிற்க அதற்குத் தக*

எனவும் இவற்றுள் அரிசனமும் நீறும் கூட்டிச் செவ்வண்ணமானது போல ஆகாமல் எழுத்துக்கள் கூடி நின்றவிடத்துத் தம்மியல்பு திரியாமை நின்றவாறு காண்க.

முதலாவது எழுத்தியல் முற்றும்.

## விசாகப் பெருமாளையர்

**இது**, இவ்வியலுக் காவதோர் புறனடை உணர்த்துகின்றது.

**இ-ள்.: எழுத்து** - இவ்வெழுத்துகள், **மொழியாய்** - பதமாயினும், **தொடரினும்** - அப்பதந் தம்மோடும் உருபோடும் புணர்ந்தாலும், **முன்னனைத்து** - முன் சொல்லப்பட்ட அப் பத்திலக்கணத்தையு முடையனவாகும், எ - று.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

*எழுத்துக்கள் தாம் பதமாய பொழுதும் அப்பதம் தம்மோடு முருபோடும் புணரும் பொதும் முற் கூறிய இலக்கணங்களின் வேறுபடுமா?*

மொழியாய்த்தொடரினு முன்னனைத்தெழுத்தே

(மொழியாய்த் தொடரினும் முன் அனைத்து எழுத்தே)

**இ-ள்.: எழுத்து** - இவ்வெழுத்துக்கள், **மொழியாய்த் தொடரினும்** - தான் பதமாயவிடத்தும் அப்பதம் தம்மோடும் உருபோடும் புணருமிடத்தும், **முன் அனைத்து** - தமக்குரிய முன்னை இலக்கணத்தையே யுடையனவாகும், எ-று.

> இச் சூத்திரத்திலே மொழியாய்த் தொடரினும் என்றமையான் எழுத்தாலாகும் பதங்களினது இலக்கணத்தை எடுத்துக் கூறும் பதவியலுக்கு தோற்றுவாய் செய்யப்பட்டது.

## முகவை இராமானுசக் கவிராயர்

**இது**, இந்த இயலுக்குப் புறனடை யுணர்த்துகின்றது.

**இ-ள்.: எழுத்து மொழியாய்த் தொடரினும்** - (இந்தப் பத்து இலக்கணத்தையு முடைய) எழுத்துக்களே மொழியாகி அம்மொழி நிலை மொழி வருமொழியாய்த் தொடர்ந்து வரினும், **முன்னனைத்து** - (பிறழாமலே) முன் சொல்லிய அவ்வளவை யுடைத்தாம், (முன் சொல்லிய அந்தப் பத்திலக்கணத்தையு முடை யதாம்), எ-று.

எழுத்துத் தூளிலே மஞ்சள் புகையிலை முதலிய வடிவு வேறுபடுவது போல வேறுபடாமல், மாலையினிடத்தில் மலர்போல நிற்பதினாலே முன்னனைத்

தென்றார். எழுத்தென்றது சாதியொருமை யாதலால் அனைத்தென்னும் ஒருமையோடு முடிந்தது.

## கா . கோபாலாசாரி -தி.கோ.ரங்காசாரி

**உரை :- எழுத்து** - இவ்வெழுத்துக்கள், **மொழியாய்** - பதமாயினும், **தொடரினும்** - (அப்பதந் தம்மோடும் உருபோடும்) புணர்ந்தாலும், **முன் அனைத்து** - முன் சொல்லப்பட்ட (அப் பத்திலக்கணத்தையும்) உடையனவாகும்.

குறிப்பு :-

'எழுத்து' என்பது சாதியொருமை யாதலால், 'அனைத்து' என்னும் ஒருமையோடு முடிந்தது. எழுத்து, சுண்ணத்தின்கண் மஞ்சள் முதலியவை வேறுபடுதல் போல வேறுபடாமல், மாலையினிடத்து மலர்போல நிற்கையால் 'முன்னனைத்து' என்றார். இதில் 'மொழியாய்த் தொடரினும்' என்றதனால் மேலியலுக்குத் தோற்றுவாய் செய்ததாயிற்று.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: எழுத்து** - இவ்வெழுத்துக்கள், **மொழியாய்த் தொடரினும்** - பதமாயினும் அப்பதந் தம்மோடும் உருபோடும் புணர்ந்தாலும், **முன் அனைத்து** - முன் சொல்லப்பட்ட அப் பத்திலக்கணத்தையு முடையன வாகும், எ - று.

எழுத்தென்பது சாதியொருமை யாதலால், அனைத்தென்னும் ஒருமையோடு முடிந்தது.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள். எழுத்து** - எழுத்துக்கள், **மொழியாய்த் தொடரினும்** - பதமாயினும் அப்பதம் தன்னொடும் உருபொடுந் தொடர்ந்தாலும், **முன் அனைத்து** - முன் சொல்லப்பட்ட அப் பத்திலக்கணத்தையு முடையனவாகும்.

எழுத்தென்பது சாதியொருமை யாதலால் அனைத்தென்னும் ஒருமையோடு முடிந்தது.

வ—று. :- அஃகல் – அ, எனவும், ஆல் – ஆ, எனவும், கடல் – க, எனவும் கண்டு கொள்க. இடையீறுகளில் நிற்குமெழுத்துக்களை மிவ்வாறு நோக்கியுணர்க. இவ் வுதாரணங்களில் உயிரெழுத்தும், மெய்யெழுத்தும், சார்பெழுத்தும் மொழிக்கு அங்கமாய்த் தொடர்ந்து நிற்கு நிலையினும், மொழியாகுதற்கு முன்னே தனித்து எழுத்தாகி நிற்கு நிலையினும் பெயர், பிறப்பு, உருவம், மாத்திரை முதலாயின ஒத்து விகற்பமின்றி யிருத்தல் காண்க.

*மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்து*
*வேறிசைப்பினும்*
*எழுத்திய றிரியா வென்மனார் புலவர்*

என்றார் ஆசிரியர் தொல்காப்பியரும்.

உகரம் தனியே நிற்கு நிலைதவிரச் சிலவெழுத்துக்களோடு தொடர்ந்து குற்றியலுகரமெனப்பட்டு மாத்திரை வேறுபடும். ஐகாரந் தனிநிற்கு நிலையிலன்றி மொழியாய்த் தொடர்ந்தவிடத்து மாத்திரையாற் பேதப்படும்.

இவ்வாறு சிலவெழுத்துக்கள் பேதப்படுமாயினும் பெரும்பான்மைபற்றி முன்னனைத்தென்றார்.

## வை.மு. சடகோபராமானுசாசாரி

## சே. கிருஷ்ணமாசாரி

இ—ள்.: **எழுத்து** – இவ் வெழுத்துக்கள், **மொழி ஆய்** – பதமாயினும் **தொடரினும்** – (அப்பதம் தம்மோடும் உருபோடும்) புணர்ந்தாலும், **முன் அனைத்து** – முன் சொல்லப்பட்ட அப் பத்திலக்கணத்தையும் உடையனவாம்; எ—று.

'எழுத்து' என்பது, சாதியொருமை யாதலால், 'அனைத்து' என்னும் ஒருமை முற்றோடு முடிந்தது.

## பவானந்தம் பிள்ளை

இ—ள். **எழுத்து** – இவ்வெழுத்துக்கள், **மொழியாய்த் தொடரினும்** – மொழியாயினும் (நிலைமொழி வருமொழியாய்த்) தொடர்ந்து வரினும், **முன் அனைத்து** – முன் சொல்லப்பட்ட அப் பத்திலக்கணத்தையு முடையவனவாகும். எ—று.

எழுத்தென்பது சாதியொருமை யாதலால், அனைத்தென்னும் ஒருமையோடு முடிந்தது.

## கா. நமச்சிவாய முதலியார்

**எழுத்து** - இவ்வெழுத்து, **மொழியாய்** - பதமாகி, **தொடரினும்** - (அப்பதம் தம்மோடும் உருபோடும்) புணர்ந்தாலும், **முன் அனைத்து** - முன்னே சொல்லப்பட்ட அப் பத்திலக்கணத்தையும் உடையதாகும்

## மோசசு பொன்னையா

எழுத்துக்கள் சொன்னிலைப்பட்டுத் தொடர்ந்து நின்றவிடத்தும் தமது எழுத்தாந் தன்மையினின்று வேறுபடுவதில்லை. **எ-று.**

இவ்விலக்கணம் சார்ந்து வரினல்லாது தமக்கென ஓரியல்பில்லாத குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றுமல்லாத எழுத்து முப்பதுக்குமே எனக் கொள்க.

மொழியிலிருந்து நூற்றெடுத்த எழுத்துக்கள் பற்றி நூன்மரபிற் கூறி, அவை மொழிப்பட்டு நிற்கும் இயல்பை மொழி மரபிற் கூறினார் தொல்காப்பியர். மொழிநிலையில் பொருட்குறிப்புக்குத் துணையாதற்குரிய ஒலியே ஒவ்வொரு மொழியிலும் எழுத்து எனப்படுமாதலின், எழுத்தென ஒன்றை முன்னர்க்காட்டி அது மாலையின்கண் மலர்போல் சொற்கண் நிற்கும் எனல் மொழியியல் நெறியன்று எனக் கொள்க. மலர் தனக்கு முன்னும் பின்னும் அமையும் மலர்களால் தன்மை மாற்றம் அடையாமையும், ஒலி அந்நிலையில் ஓரளவு மாற்றம் பெறுதலும் இவண் மனங்கொளற்குரிய. இந்நூற்பா, மொழியியலார் மாற்றொலியன்கள் அனைத்தும் அவ்வவ் ஒலியக் குடும்பத்து உறுப்பொலிகளே என்பதை ஒத்தது எனக் கொள்க.

**(72)**

**நன்னூல் உரைவளம்**

## எழுத்தியல் முற்றிற்று

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல் | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| Essays and Tributes on Tirukkural (1886-1986) | 100.00 |
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |

---

**680 நன்னூல் உரைவளம் – 4 (எழுத்தியல் – 2) 140.00**